வெளியீடு: 22-3-2007

Issued: 22-3-2007

768
04/07/07
4/7/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 29, 2006—தொகுதி 15—எண் 2

Tuesday the 29th August, 2006—Volume 15—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

V2 n, 31'P06.
P06.15.2
227434

[Price Rs. 3.00

## 29–8–2006

## உள்ளடக்கம்

பக்கங்கள்

1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 285-324

2. **தகவல் கோரல்—**

(அ) திண்டுக்கல், தந்தை பெரியார் சிலைக்கு இழைக்கப்பட்ட அவமரியாதை 325-329

(ஆ) பொது விநியோகத்திற்கு மத்திய அரசின் கோதுமை ஒதுக்கீடு 329-330

(இ) பாபநாசம் தாலுகா, ஆற்றில் விழுந்து இறந்த ஆதிதிராவிட மாணவியரின் குடும்பத்தினர்க்கு நிதியுதவி 330-331

3. **கவன ஈர்ப்பு—**

திருப்பதியாபுரம் கிராமத்தில் சிறுத்தை நடமாட்டத்தால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பீதி 331-336

4. **மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்**–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 22 – உள் துறை – காவல்
(ஆ) கோரிக்கை எண் 23 – உள் துறை – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்
(இ) கோரிக்கை எண் 37 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை
— 336-480

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 336-337,360, 380,392, 408-410,470

திரு. பி.கே. சேகர்பாபு 352,387, 392-397,398, 401,402,403, 404,405,407, 410-411,412, 413,414,415

53-266—1

| | பக்கங்கள் |
|---|---|
| **4. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்**–தொடர்ச்சி | |
| திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் | 415-426, 431-434 |
| திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 434-441, 446-452 |
| *திரு. சி. கோவிந்தசாமி | 354,371,385, 446,453-462 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 462-471 |
| *திரு. விஜயகாந்த் | 471-476 |
| *திரு. து. ரவிக்குமார் | 345,476-480 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**— | 481-492 |
| (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 481-482 |
| *மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 481-482 |
| (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 483-492 |
| *மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 483,485-486, 487-488,490 |
| *திரு. சி. சண்முகவேலு | 483,484-485 |
| *திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் | 484,491 |
| திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 487 |
| திரு. ஓ. பன்னீர்செல்வம் | 488,489 |
| திரு. ஆற்காடு நா. வீராசாமி | 488-489 |
| திரு. ஜி.கே. மணி | 489-490 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 491-492 |
| **6. அரசினர் தீர்மானம்**— | |
| விதி 32–ஐத் தளர்த்தல் | 492 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 493-494 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 13, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 29, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு"

அறநெறி தவறாமல், குற்றமேதும் இழைக்காமல், வீரத்துடன், மானத்துடன் ஆட்சி நடத்துபவர்களே சிறந்தவர்களாவார்கள்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**11—**

### பேருந்து வசதி

**•572—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியிலிருந்து பாண்டிச்சேரிக்கு அரசுப் பேருந்து இயக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2006 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தருமபுரி–பாண்டிச்சேரி வழித் தடமானது, புற மாநில வழித் தடமாகும். இத்தடத்தில் பேருந்து இயங்குவதுபற்றி, புற மாநில வழித் தட உடன்படிக்கை ஒப்பந்தத்தில்தான் முடிவு செய்ய இயலும். தற்போது, தருமபுரியிலிருந்து திருவண்ணாமலைக்கும், திருவண்ணாமலையிலிருந்து பாண்டிச்சேரிக்கும் கீழ்க்கண்டவாறு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன:

தடம், தருமபுரி–திருவண்ணாமலை, பேருந்துகள் எண்ணிக்கை 2, நடைகள் 12; பாண்டிச்சேரி–திருவண்ணாமலை (வழி) விழுப்புரம், பேருந்துகள் எண்ணிக்கை 2, நடைகள் 8; பாண்டிச்சேரி–திருவண்ணாமலை (வழி) திண்டிவனம், பேருந்துகள் எண்ணிக்கை 3, நடைகள் 12; பாண்டி–பெங்களூர் (வழி) திருவண்ணாமலை, பேருந்துகள் எண்ணிக்கை 2, நடைகள் 4; தருமபுரியிலிருந்து பாண்டிச்சேரிக்குச் செல்லும் பயணிகள், தருமபுரியிலிருந்து திருவண்ணாமலை வந்து, அங்கிருந்து பாண்டிக்குச் செல்வதற்கு ஏதுவாக மேற்கண்ட பேருந்து வசதிகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தினுடைய தலைநகரமாக இருக்கின்றது. தர்மபுரி நகரத்திலிருந்து புதுச்சேரிக்கு நேரடியாக இதுவரை பேருந்து இல்லாத நிலையுள்ளது. புதுச்சேரியிலுள்ள ஜிப்மர் மருத்துவமனைக்கு நிறைய நோயாளிகள் சென்று வருகிறார்கள்; ஆகவே, நேரடியாகப் பேருந்து இல்லாத நிலையில், நோயாளிகள் திருவண்ணாமலையில் இறங்கி ஏறுவதும், திண்டிவனத்திலே இறங்கி ஏறுவதும் மிகச் சிரமமான காரியம். அதோடுமட்டுமல்லாமல், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் நிறைய பேர், புதுச்சேரியிலே இருக்கின்ற கல்லூரிகளிலே படிக்கின்றார்கள். ஆகவே, நோயாளிகளுடைய நலன் கருதியும், மாணவர்களுடைய நலன் கருதியும், தருமபுரியிலிருந்து நேரடியாகப் புதுச்சேரிக்கு, அரசுப் பேருந்து விட வேண்டும் என்று வலியுறுத்தி, அதை அரசு உடனடியாக இயக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகில் இருக்கின்ற மற்ற அண்டை மாநிலங்களோடு பேச்சுவார்த்தைக் கூட்டம் இந்த மாதம் நடத்துவதற்காகத் தேதி கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அனுமதியைப் பெற்று,

227434
சென்னை-600 008
நூலகம்



2006 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்தை ஏற்கலாம் என்று கருதுகின்றேன். நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்கூட, அங்கிருந்து விடவேண்டிய அவசியத்தை என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். விரைவில் நல்ல முடிவாக எடுக்கலாம்.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

**திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி ராசிபுரத்திலேயிருந்து பெங்களூர் செல்வதற்கு அரசு bus இயக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன். புதிதாக வழித் தடம் வாங்குவதற்குக் காலதாமதம் ஏற்பட்டாலும், சேலத்திலேயிருந்து செல்கின்ற வாகனத்தைக் காலையிலும், மாலையிலும் இரண்டு முறையாவது, அங்கே ராசிபுரத்திலேயிருந்து பெங்களூர் செல்வதற்கு ஏற்பாடு செய்து தரப்படுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–35

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி அவர்கள் கேட்டபோதே சொல்லியிருக்கிறேன். பெங்களூர் வழித் தடங்கள் என்று சொன்னால், மற்ற மாநிலங்களோடு கூடிப் பேசி, அவர்களுக்கு எவ்வளவு கி.மீ., நமக்கு எவ்வளவு கி.மீ. என்று ஒப்பந்தம் ஏற்படுத்திதான், அந்தப் பேருந்துகளை விட இயலும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இப்பொழுது கூட்டம் கூடுகின்றபொழுது, ராசிபுரத்திலிருந்து நேரடியாகச் செல்வதற்குரிய வசதிபற்றியும் அந்தக் கூட்டத்திலே விவாதித்து முடிவெடுக்கலாம்.

சேலத்திலிருந்து பேருந்துகளை ராசிபுரத்திற்கு நீட்டிக்க இயலுமா என்று கேட்டிருக்கிறார். நிச்சயமாக அது முடியாது. ஏனென்றால், சேலம் District Headquarters, அங்கிருந்து செல்வதுதான் சரியாக இருக்குமே தவிர, சேலத்திலிருந்து ராசிபுரம் வந்து, அங்கிருந்து திரும்ப சேலம் வழியாகச் செல்கின்றபோது, சேலத்திலிருக்கிற பயணிகளுக்கு இடம் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஆனால், விரைவில் ராசிபுரத்திலிருந்து இயக்குவதைப்பற்றி நாம் பரிசீலிக்கலாம்.

V 21, 31/06
105.152

[2006 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அரசுக்கும் இல்லாத ஒரு சிறப்பு இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன். பொதுவாக வாக்குறுதி அளிக்கும்போது, தேதி அறிவித்து, அதன் பிரகாரம் வாக்குறுதியை நிறைவேற்றுகிற அரசாக இந்த அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது. செப்டம்பர் 15 அன்று அண்ணா பிறந்த நாளில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியும், அதேபோன்று செப்டம்பர் 17 ஆம் தேதி எங்களுடைய திருவள்ளூர் மாவட்டத்திலே இலவச நிலம் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையிலே, சென்னையிலே இருக்கின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்வண்ணம், Blue Line, Yellow Line போன்ற சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அதற்குக் காலக்கெடு நிர்ணயித்து அந்த bus-களை இயக்குவதற்குப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, tender எல்லாம் முடிவு செய்யப்பட்டு, இன்னும் இரண்டொரு நாட்களில், பேருந்துகளுக்குப் புதிய chassis வாங்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. முதலில் சென்னை மாநகரத்தில் இருக்கின்ற 500 பேருந்துகளைப் புதிதாக மாற்ற வேண்டுமென்பதற்காகத்தான், body கட்டுகின்ற 18 இடங்களிலும் கட்டுகின்ற பேருந்துகளை முழுமையாக முதலிலே சென்னை மாநகரத்திலே கட்ட வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. முதல் Chassis-ஐ அவர்களிடம் கொண்டு போய் கொடுத்து, அதை வண்டியாகத் திருப்பி வாங்குவதற்கு 25 நாட்களாகும். அந்த முதல் வண்டி வந்த பிறகு, ஒவ்வொரு நாளைக்கும் 20 வண்டிகள், 30 வண்டிகள் என்ற அளவிலே வந்துகொண்டிருக்கும். எப்படியிருந்தாலும், இன்னும் 50, 60 நாட்களுக்குள்ளாக, சென்னை மாநகரத்தில் புதிதாக அந்த 500 பேருந்துகளை விட இயலும். இப்போது தருகின்ற புதிய பேருந்துகள் அந்த Yellow line, Blue line என்ற அளவிலே அந்தச் சிறப்பு பேருந்துகளாக இருக்காது. மேலும் புதிய பேருந்துகளை வாங்கக்கூடிய முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்தப் பேருந்துகளை மாற்றிய பிறகு, புதிய பேருந்துகளை வாங்கி, எப்படியும் 2, 3 மாதக் காலத்தில் அந்த bus service-கள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 ஆகஸ்ட் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. சின்னப்பன்.

**திரு. பொ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், சாத்தூரிலிருந்து இருக்கன்குடி, புதூர், மேல அருணாசலபுரம் வழியாக இராமநாதபுரம் மாவட்டம் பரளச்சி வரை ஒரு பேருந்து, கடந்தகால ஆட்சியிலேயே இயக்குவதற்காக அது ஆய்வில் இருந்தது. அந்தப் பேருந்து இயக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரை, ஒரு மனுவாக எழுதித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அது மக்களுக்கு நிச்சயமாகப் பயன்படுவதாகவும் அதேநேரத்தில், அந்தப் பேருந்துகளின் வசூலும் சரியாக இருக்குமானால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**112—**

## பேருந்து வசதி

***9149—திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி சந்திப்புப் பேருந்து நிலையத்திற்கு, வியாபாரிகள் நலன் கருதி, சென்னை, கோயம்புத்தூர் விரைவுப் பேருந்துகளும், மதுரை, தென்காசி, கோவில்பட்டி ஆகிய ஊர்களுக்குச் செல்லும் பேருந்துகளும் வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு. போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிருவாகம், திருநெல்வேலி நகரில் போக்குவரத்து நெரிசலைச் சரிசெய்ய, புறநகர் பேருந்துகள், திருநெல்வேலி சந்திப்புப் பேருந்து நிலையத்திற்குள் செல்லாமல், புறவழிச் சாலை வழியாக இயக்க முடிவு எடுத்து நடைமுறைப்படுத்தியது. பின்னர், பொதுமக்களின் வேண்டுகோளின்படி முடிவுகளை சற்றே தளர்த்தி, சுரண்டை போன்ற ஊர்களுக்குச் செல்லும்

பேருந்துகள், 1-03-2004 முதல் திருநெல்வேலி சந்திப்புப் பேருந்து நிலையம் வழியாக அனுமதிக்கப்பட்டு, தற்சமயம் இயக்கப்பட்டு வருகிறது. மதுரை, கோவில்பட்டி செல்லும் பேருந்துகள் திருநெல்வேலி சந்திப்புப் பேருந்து நிலையம் வழியே சென்றால், போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்ற அடிப்படையில், மாவட்ட நிர்வாக உத்தரவின்படி புறவழிச் சாலை வழியே இயக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், தற்போது எழுந்துள்ள இக்கோரிக்கை, திருநெல்வேலி மாநகர எல்லைக்குள் செய்யப்பட வேண்டிய போக்குவரத்து மாற்றம் பற்றியதாக உள்ளதால், மாவட்ட போக்குவரத்து ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், Traffic Advisory Committee Meeting-ல் இதுகுறித்து விவாதிக்கலாம்.

*முற்பகல் 9-40*

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாநகரத்திலே இயங்கிவந்த அந்தச் சந்திப்பு bus-நிலையத்திற்கு வந்து சென்றுகொண்டிருந்த பேருந்துகள் அனைத்தையும், கடந்த ஆட்சிக் காலத்திலே பாளையங்கோட்டை பெரிய பேருந்து நிலையத்திற்கு மாற்றம் செய்துவிட்டார்கள். இந்தப் பழைய பேருந்து நிலையம் என்பது செல்லபாண்டியன் சிலையிலிருந்து, சுமார் ஒரு 1/2 கிலோ மீட்டர் தூரத்தில்தான் உள்ளது. ஏற்கெனவே, செல்லபாண்டியன் சிலை வழியாகச் செல்கின்ற அந்தப் பேருந்துகள், வடக்கு நோக்கி, அதாவது மதுரை, கோவில்பட்டி, விருதுநகர் போன்ற பகுதிகளுக்குச் செல்கின்ற அந்தப் பேருந்துகள், அந்த 1/2 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பழைய பேருந்து நிலையத்திற்கு வந்துசென்றால், மக்களுடைய கால விரயமும், கட்டண விரயமும் தவிர்க்கப்படும். எனவே, அவர்களுக்குக் கட்டணச் சுமையும் ஏற்படுவதால், இந்த அரசு, நம்முடைய தமிழக அரசு, மக்களுக்கு அந்தக் கட்டணச் சுமை ஏறாதவகையிலே, கால விரயம் ஏற்படாதவகையிலே, அந்தத் தொலைவுப் பேருந்து நிலையத்திற்கு, அதாவது திருநெல்வேலி சந்திப்புப் பேருந்து நிலையத்திற்கு அவை மீண்டும் வந்து போவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தைத் துறையின் அதிகாரிகள்மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர்





அவர்களுக்குத் தெரிவிக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவரும் அங்கு இருக்கின்ற காவல் துறை அதிகாரிகளும் இணைந்து, அதேபோல மாநகர மேயர், இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இணைந்து, அந்த வழியே செல்வதற்குத் தடையில்லை என்று எங்களுக்குச் சொல்வீர்களானால், நிச்சயமாக நாங்கள் இயக்கத் தயாராக இருக்கிறோம். போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்ற ஓரே காரணத்தால், புறவழிச் சாலை வழியாகச் செல்லச் சொல்லி அங்கிருக்கின்ற மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்ட காரணத்தால், வெளியிலே சென்று இயக்கிக்கொண்டிருக்கிறோம். போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை, உள்ளாட்சி நிர்வாகம், மாவட்ட நிர்வாகம் என்ன சொல்கிறதோ, அதைத்தான் செய்ய இயலும். குறிப்பாக, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் திருப்பூருக்கு வந்திருந்தபோது, திருப்பூரிலிருக்கின்ற புதிதாகக் கட்டப்பட்ட பேருந்து நிலையத்திற்குள் பேருந்துகள் செல்ல வேண்டும் என்று சொன்னார். நாங்களும் உடனடியாக அதற்கான உத்தரவிட்டபோது, அந்தப் புதிய பேருந்து நிலையத்திற்குச் செல்லாமல் பழைய பேருந்து நிலையத்திலிருந்துதான் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று Court-மூலம் தடையாணை பெற்ற காரணத்தால், அதுகூட இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு பிரச்சினை ஏற்படுகின்றபோதுதான், நாங்கள் அங்கு செல்லாமல் இருக்க முடியுமேதவிர, மற்றபடி மாவட்ட நிர்வாகம் என்ன சொன்னாலும், அதைக் கேட்க இந்தத் துறை தயாராக இருக்கிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட நிர்வாகத்தை அணுகினால், எங்கள் துறையின் அதிகாரிகளையும் அனுப்பி, சுமுகமான நல்லதொரு முடிவை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் நகருக்குள்ளே, திருவானைக்காவல் வழியாக நகரப் பேருந்துகள் வரக்கூடிய வழி என்பது, ஒரு வழிப் பாதையாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருக்கக்கூடிய ஸ்ரீரங்கம் இரயில்வே பாலத்தில் இருவழிப் பாதையாக மாற்றுவதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2006 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி, அந்த ஸ்ரீரங்கம் தொகுதி. அவருக்கே நன்றாகத் தெரியும்; திருவானைக்காவல் என்ற பகுதி, மிக நெரிசலான இடம். அதனால்தான், இவர்களுடைய கடந்த ஆட்சிக் காலத்திலேதான் அந்தப் புதிய பாலம் கட்டுகின்றபோது, அம்மா மண்டபம் வழியாக அந்தப் பேருந்துகள் இயக்கப்பட்டன. இப்பொழுது பாலம் கட்டி முடித்தபிறகு, அது ஒருவழிப் பாதையாக இருக்கிறது. நேற்று முன்தினம்கூட அங்கிருக்கின்ற பல்வேறு அமைப்புகள் எங்களுக்கு ஒரு நான்கைந்து பேருந்துகளாவது அந்த வழியாக மாற்றித் தர வேண்டும் என்று கேட்டார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரும் சொல்லியிருக்கிறார்கள். அனைத்துப் பேருந்துகளும் இல்லையென்றாலும்கூட, பள்ளிக்கூட நேரத்திலே, மற்ற முக்கியமான நேரங்களிலே, ஒரு நான்கைந்து பேருந்துகளைத் திருவானைக்காவல் வழியாக இயக்கலாம் என்று நேற்றுதான் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்குத் தெரிவித்து வந்திருக்கிறேன். விரைவில் அதைப்பற்றி நல்ல முடிவு எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி சந்திப்புப் பேருந்து நிலையம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் சொன்னதுபோன்று, நெரிசலாக இருந்த காரணத்தினால்தான், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், 1996 முதல் 2001 வரை முதல்வராக இருந்தபோது, வேய்ந்தான்குளத்தில் பல கோடி ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. தற்போது, சந்திப்புப் பேருந்து நிலையத்திற்கு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மாலைராஜா அவர்கள் மதுரை, கோவில்பட்டி, தென்காசி செல்கின்ற பேருந்துகள் சென்றுவர வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், போக்குவரத்து நெரிசல் இருக்கும் என்று சொல்லி இருக்கின்றார்கள். ஏற்கெனவே, திருநெல்வேலிக்கு ஒரு புறவழிச் சாலை அமைக்கப்பட்டுவிட்டது. ஆகவே, இந்தப் பேருந்துகள் சந்திப்பு நிலையத்திற்குச் சென்று வருவதால் எந்தவிதமான நெரிசலும், போக்குவரத்து நெரிசலும் ஏற்படாது என்பதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கூறி, ஆகவே அந்தவகையில் பேருந்துகள் இயக்கப்படுமா என்பதைப் பேரவைத் தலைவர்மூலம் கேட்பதோடு, இரயில்வே நிலையத்திற்கு வருகின்ற பயணிகள், train–லிருந்து வருகின்றபோது, சந்திப்புப் பேருந்து நிலையத்திற்கும், வேய்ந்தான்குளம் புதிய பேருந்து நிலையத்திற்கும் வருவதற்கு, அந்த train–கள் வருகின்ற நேரத்தில் புதிதாகப் பேருந்துகள் இயக்க வேண்டும்; இயக்கப்படுமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



2006 ஆகஸ்ட் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் திரு. மாலைராஜா அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அங்கு எங்கள் துறை அதிகாரிகளை அனுப்பி traffic குறித்த அந்தக் கூட்டத்தைக் கூட்டுகின்றபொழுது நீங்கள் எடுக்கின்ற முடிவுக்கு நாங்கள் சரியாக இருக்கிறோம். அதேபோல, நமது அப்பாவு அவர்களும், மாலைராஜா அவர்களோடு இணைந்து, இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, அங்கு கூட்டம் கூட்டுகின்றபோது அந்தக் கூட்டத்திலே முடிவு எடுத்து எங்களுக்கு அறிவித்துவிட்டால், பழைய பேருந்து நிலையம் வழியாக அவை வந்து செல்வதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி தாக்கத்திற்குப் பிறகு, பொதுவாக, மீனவ மக்கள் வெகுவாகப் பாதிப்படைந்திருக்கிறார்கள். கடந்த காலக்கட்டத்தில், நாகர்கோவில் சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட கடற்கரை கிராமங்களில் ஓடிய பேருந்துகளை, சுனாமிக்குப் பிறகு, கடந்த அரசு ஓட்டவில்லை; அவற்றை நிறுத்திவிட்டார்கள். ஆனால், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், இப்போது எல்லாவற்றையும் நல்லபடியாக, சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, நாகர்கோவில் சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட கடற்கரை மக்களின் நீண்டகால கனவான பெரியகாடு கடற்கரை கிராமம் முதல் பொழிக்கரை, கேசவபுத்தன்துறை பள்ளம் வழியாக, மணக்குடி கடற்கரை கிராமம் வரை, கடற்கரை சாலை வழியாக கடற்கரை கிராமங்களை இணைக்கும் புதிய வழித் தடப் பேருந்தை உடனடியாக விட, அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரும் நமது மாண்புமிகு சுற்றுலாத்

[2006 ஆகஸ்ட் 29

துறை அமைச்சரும், கடந்த வாரமே என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். அந்த நாகர்கோவில் பகுதியிலே 100 வண்டிகளாவது, புதிய வண்டிகள், அல்லது இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் ஓடிய வண்டிகளைக் கொடுத்து, புதிய வழித் தடங்களைத் தொடங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை அதோடு இணைத்து, இதையும் பரிசீலித்து நிச்சயமாகப் புதிய வழித் தடம் தொடங்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள சுற்றுலாத் தலங்களில், ஒகேனக்கல் சுற்றுலாத் தலம் மிக முக்கியமான ஒன்றாகும். அந்த ஒகேனக்கல்லுக்குச் சென்னையிலிருந்து இதுவரை பேருந்து இயக்கப்படவில்லை. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும், அண்ணா மற்றும் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மட்டும், இரண்டு தடங்கள் மட்டுமே ஒகேனக்கல்லுக்குச் சென்றுகொண்டிருக்கின்றன. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகச் சொகுசு பேருந்தை, சென்னையிலிருந்து கூடுதலாக இயக்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தைப் புதிதாக விடவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கான முயற்சியை எடுக்கலாம். ஏனென்றால், இப்போது விரைவுப் போக்குவரத்துக் கழகம், வெளி மாநிலங்களுக்குச் செல்கின்ற விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை எல்லாம் புதிய பேருந்துகளாக, tender-விட்டு, வெளியிலிருந்து வாடகைக்கு எடுத்து இயக்க ஆரம்பித்தால், இருக்கின்ற பேருந்துகள் 100, 200 என்ற அளவிலே நமக்கு ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகள் கொஞ்சம் மிஞ்சும். புதிய வழித் தடங்கள் தொடங்கலாம். அதிலே ஒகேனக்கல்லையும் சேர்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தாம்பரம் இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதி என்பது, புறநகர்ப் பகுதியிலே மக்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதி. இங்கே கல்லூரிகளும், மருத்துவமனைகளும்,



2006 ஆகஸ்ட் 29]

அரசு நிறுவனங்களும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், பல்வேறுபட்ட குறைபாடுகள் இருக்கின்றன. சென்றுகொண்டிருந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தக் கூட்டத் தொடர் முடிந்தவுடன், அரசு அதிகாரிகளை வைத்து, பேருந்து வசதிக்கு மட்டும், தனியாக ஒரு மக்கள் குறை தீர்க்கும் நாளை ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால், அவ்வளவு குறைபாடுகள், இன்றையதினம் மக்களுக்கு இருக்கின்ற காரணத்தினால், தாம்பரம் தொகுதிக்குட்பட்ட பகுதிக்கு மட்டும், ஒரு மக்கள் குறை தீர்க்கின்ற நாளை, உள்ளாட்சித் துறையின்மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கே, பயணிகள் நிற்பதற்கு நிழற்குடையும், குடிப்பதற்குத் தண்ணீர்கூட இல்லாத ஒரு சூழ்நிலையிருக்கின்றது. உள்ளாட்சியிலே போதுமான நிதிவசதி இருக்கின்றது. அவர்களோடு இணைந்து அந்த ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து தந்தால், பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும்; குறைபாடுகளும் நீங்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அதை ஆய்வு செய்ய அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை கருத்தில்கொள்ளலாம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் தேதியைக் கேட்டு, அவருக்குச் சௌகரியமான நேரத்தில் இந்தக் கூட்டத்தைக் கூட்டலாம். பொதுவாக, சென்னை மாநகரிலே பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று பல்வேறு உறுப்பினர்களும் மட்டுமல்ல; பொதுநலச் சங்கங்களும் கோரிக்கை விடுத்தவண்ணம் உள்ளனர். குறிப்பாக, நாம் இரண்டாயிரம் பேருந்துகள், சென்னை மாநகரத்திலே விட்டிருந்தபோது, பெங்களூர் நகரத்திலே வெறும் 1,500 பேருந்துகள்தான் இயங்கிக்கொண்டிருந்தன. ஆனால், இன்றைய நிலையிலே அவர்கள் நான்காயிரம் பேருந்துகளுக்குச் சென்றிருக்கிறார்கள். நாம் வெறும் 2,700 பேருந்துகளிலே நின்றுகொண்டிருக்கிறோம். அதனால்தான் Urban Development மூலமாக, இந்தப் போக்குவரத்து வசதியைப் பெருக்குவதற்காக 1,300 கோடி ரூபாய் கடன், டெல்லியிலே நாம் கேட்டிருக்கிறோம்; விரைவிலே அதுவும் கிடைக்கும். அதேநேரத்தில், இந்தப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகத்தான், Metro Rail திட்டத்தையும் இப்போது தொடங்கி இருக்கிறோம். மாநகரப் போக்குவரத்துக் கழகத்தினுடைய ஒரு எண்ணம் என்னவென்றால், 4,000 பேருந்துகள், நமது மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக வெகுவிரைவிலே இயக்குவது என்று முடிவு செய்துதான், அதை நோக்கி இந்தத் துறை சென்று

கொண்டிருக்கிறது. தாம்பரத்திலிருந்து அதிகமான பேருந்துகளை விடவேண்டும் என்றாலும், நிச்சயமாக அதற்கு எப்படியும் 6 மாத காலம் ஆகும், பேருந்துகள் புதிதாக வாங்குவதற்கு. ஆனால், குறை தீர்க்கும் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி, ஓரளவிற்காவது நாம் அவர்களுக்கு வசதியைச் செய்து தரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜ்குமார்.

**திரு. ம. இராஜ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பதவியேற்ற 10 நாட்களிலேயே, பெரம்பலூரிலிருந்து சென்னைக்குத் தடம் எண் 103 என்ற பேருந்து இயக்கப்பட்டது. இன்றுவரை அந்தப் பேருந்துக்கான முன்பதிவு மையம்—Reservation Counter—ஆரம்பிக்கப்படவில்லை. அந்த Counter-ஐ ஆரம்பிக்க, அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும், 6 புதிய வழித் தடங்கள் இப்போது தொடங்கப்பட்டு இருக்கின்றன. அவற்றிலே விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு முன்பதிவு மையம் வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள்; விரைவிலே ஏற்பாடு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**113—**

## வீட்டுமனைப் பட்டா

***2966—திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





பேரூர் தொகுதி, எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதியில் குடியிருப்பவர்கள், தடை செய்யப்பட்ட மயான புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமித்து வீடுகள் கட்டியுள்ளதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட குனியமுத்தூர் நகராட்சி, எம்.ஜி.ஆர். நகர் பகுதியிலே மயானத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் ஒரு பகுதியில், மயானத்திற்குப் பயன்படாத பகுதியில், சுமார் 20 ஆண்டுகளாகக் குடியிருந்து வரும் ஏழை எளிய மக்களுக்கும், அதேபோல குனியமுத்தூர் நரசிம்மபுரம் அம்மன் காலனியிலும், குறிச்சிக்குளம் ஓரத்தில், குனியமுத்தூர் காந்தி நகரிலும், கோவை மாநகர் 57-வது division, சுண்டம்பாளையம் சாலையில் முத்தண்ணகுளம் ஓரத்தில், பால் கம்பெனியில் இருந்து பூசாரிப்பாளையம் வரை சுமார் 50 வருடங்களாக வசித்து வருகின்றனர்; இவர்கள் குளத்திற்கு இடையூறு இன்றி வசித்து வருகின்றனர். இவர்களுக்குப் பட்டா இல்லாத காரணத்தினால் எந்தவித அடிப்படை வசதியும் செய்ய அரசினால் முடிவது இல்லை; எனவே, இவர்களுக்கும் 168-வது விதியைத் தளர்த்தி, இலவச மனைப் பட்டா அரசு வழங்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 168 என்பது, நம்முடைய அரசினுடைய அரசாணை நிலை எண் 168. அதிலே, "One Time Special Scheme" என்று, கடந்த 2000 ஆம் ஆண்டு மார்ச் திங்கள், தலைவர் கலைஞர் அவர்களால் ஓராண்டுக் காலத்திற்கு, ஒரு சிறப்புத் திட்டமாக அறிவிக்கப்பட்டு, அந்தத் திட்டத்தின்கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், இன்னும் துறையில் இருக்கின்ற அலுவலர்கள், புலத் தணிக்கை செய்து, அது சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்ற நிர்வாகத்திலே, அவர்களுடைய தீர்மானத்தைப் பெற்று, ஆட்சேபணை

இல்லையென்றால், உண்மையிலேயே அந்தப் புறம்போக்கு நிலம் எந்தக் காரணத்திற்காக ஒதுக்கப்பட்டதோ, அதற்குப் பயன்பாடு இல்லாமல், அதற்கு இடையூறு இல்லாமல் இருக்கும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் கருதுவார்களேயானால், அவ்வாறு வழங்கலாம் என்ற ஓர் ஆணையை, 2000 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் தந்தார்கள்; ஓராண்டுக் காலம் சிறப்புத் திட்டமாகத் தந்தார்கள். அந்தத் திட்டத்தின்மூலம், தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு பகுதிகளிலே இருக்கின்ற 10 ஆண்டுக் காலம், 20 ஆண்டுக் காலம் வீடு கட்டிக் குடியிருந்து வருகின்ற அவர்கள், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பட்டாவும் பெற்றுக் கொண்டார்கள். அவற்றிலே இன்னும் சில இடங்களிலே, பட்டா பெற முடியாமல் இருக்கின்றவர்களுக்கு, நான் ஏற்கெனவே நேற்று இதே அவையிலே, 'மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து, மீண்டும் அந்த வாய்ப்பை இந்த அரசு தருமா என்பதை, அவரைக் கலந்து ஆலோசித்து இந்த அரசு முடிவு செய்யும்' என்று தெரிவித்து இருக்கின்றேன்; அவ்வாறு முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

*முற்பகல் 9—55*

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட சத்தியமங்கலம் நகராட்சியில் 20, 25 ஆண்டுக் காலமாக வீடுகளைக் கட்டி, அவர்கள் பட்டா இல்லாமல் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் குடியிருந்து வருகின்ற இடம், ஆட்சேபகரமற்ற புறம்போக்காக இருந்தால் நிச்சயம் அரசு உடனே பரிசீலித்து, அதை வழங்க முடியும். ஆட்சேபணைக்கு உட்பட்ட புறம்போக்கு நிலங்களிலே வீடுகட்டிக் குடியிருந்து வருகின்றவர்களுக்கு, நிச்சயமாக அரசு தனிக் கருத்தாக இதைக் கொண்டு, ஏற்கெனவே சொல்லியிருக்கின்றபடி, இதற்கு என்று ஒரு சிறப்புத் திட்டத்தை வகுத்து அதிலேதான் வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சேபகரமான இடங்களிலே, பட்டா வழங்குவதிலே பிரச்சினை இருக்கிறது என்று காலங்காலமாகத் தொடர்ந்து சொல்லப்படுகிற ஒரு செய்தி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே பேசி, உரிய முறையிலே பட்டா வழங்குவதற்கு உரிய முயற்சி மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் இப்போது அறிவித்திருப்பது வரவேற்கக்கூடியது. இருந்தாலும், இப்படி ஆட்சேபகரமான இடங்களிலே ஆக்கிரமிப்பு நடைபெறுகிறது என்று சொல்லுகிறபொழுது, இதைப்போல சாதாரண ஏழையெளிய மக்கள் குடியிருக்க குடிசைகள் போடுவதற்கு உரிய அந்த வாய்ப்பு வருகிறபொழுது, அங்கேயிருக்கிற நம்முடைய நிர்வாகம். இது ஆட்சேபகரமான பகுதி என்று அதை அப்பொழுதே தடுத்து நிறுத்தியிருந்தால், அவர்கள் 20 ஆண்டுக் காலம், 25 ஆண்டுக் காலம் வீடுகள் கட்டிக் குடியிருப்பதற்குரிய வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும்; இல்லையென்றால், மாற்று இடம் அவர்களுக்கு ஏற்பாடு செய்திருக்கலாம். இது இந்த ஒரு ஆட்சியில் என்ற நிலையில் இல்லாமல் தொடர்ந்து தமிழ்நாட்டிலே நடந்து கொண்டேயிருக்கிறது. இரண்டாவது, வசதி வாய்ப்பு உள்ளவர்கள், அரசுப் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து, கோடிக்கணக்கான ரூபாய் செலவிலே கட்டடங்கள், பள்ளி நிறுவனங்கள், கல்லூரிகள் எல்லாம் கட்டப்பட்டு, இடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதையும் இந்த அரசாங்கம், அதுபோல நடைபெறுகிறபொழுது, முன்கூட்டியே அதைத் தடுத்து நிறுத்தியிருந்தால், அப்படிப்பட்ட காரியத்திலே ஈடுபடமாட்டார்கள். ஆகவே, இதைச் செய்வதற்கான ஒரு தொலைநோக்குத் திட்டத்தை, அரசு ஏற்படுத்துவதற்கான முயற்சியை, கடந்தகாலங்களில் இல்லை என்றாலும்கூட, அதை புதிய முறையிலே சிந்தித்து, அதற்கு மாற்று ஏற்பாடுகள் கொடுப்பதற்கான முயற்சி என்ற அடிப்படையில், ஏழைகளுக்குக் கொடுப்பதற்கும், இப்படி ஆக்கிரமிப்புச் செய்வதற்கான முயற்சி எடுக்கிறபொழுது, ஆரம்ப நிலையிலேயே தடுப்பதற்கான முயற்சியையும் அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள். ஆரம்பத்திலேயே தடுக்க வேண்டும்; அரசு அதற்கு நடவடிக்கை எடுக்க

வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், 2000 ஆம் ஆண்டு இதற்காகவே இதே அவையிலே 3 ஆண்டுக் காலம் தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்திய காரணத்தால், ஒரு குழு அமைத்து தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலேயும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணையிட்டு, அந்தக் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையிலேதான் "One time Special Scheme" என்று கொடுத்தார்கள். ஒரு முறை சிறப்புத் திட்டத்திலே, அவர்கள் தங்களுக்கான அந்தப் பட்டாவைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அனுமதியை இந்த அரசு வழங்கியது, உங்களுக்கு நன்றாக நினைவு இருக்கும்.

அதேபோல, ஆக்கிரமிக்கின்ற அந்தச் சமயத்திலேயே அகற்ற வேண்டுமென்று சொன்னார்கள். ஒருவர் வீடு கட்டுகின்றபொழுது அவர்களுக்கே தெரியும், யார் வீடு கட்டினாலும், சம்பந்தப்பட்ட அந்த ஊராட்சி மன்றத்தினுடைய அனுமதி பெறாமல் வீடு கட்டுவது இயலாது என்று. மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், ஊராட்சி மன்றமாக இருந்தாலும் அனுமதி வாங்க வேண்டும். அப்படி அனுமதி வாங்கவில்லை என்றால், அவ்வாறு கட்டுவதைத் தடுப்பதற்கு உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால், அந்தக் காலக்கட்டத்தில் நடைபெறுகின்ற பணிகளிலே அந்த ஊராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட பகுதியாக இல்லாத காரணத்தால்தான், அவர்களால் தடுப்பதற்கு இயலாமல் போய்விடுகின்றது. ஆக, அவர்கள் சொல்கின்ற காரணங்கள் சரியாக இருந்தாலும், ஏற்கெனவே இந்த அரசு ஒரு முறை வாய்ப்புத் தந்தது. மீண்டும் வாய்ப்புத் தருவதற்கு, வாய்ப்புத் தரலாம் என்று யோசித்துதான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வலியுறுத்துகின்ற காரணத்தால், முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, அதிலே முடிவு எடுக்கலாம் என்று நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சி எல்லைக்கு ஒட்டியுள்ள எனது ஓமலூர் சட்டமன்றத் தொகுதியில, சுமார் 25 கி.மீ. தூரம்வரை இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது; அரசு தடையாணை உள்ளதாக வட்டாட்சியர் அவர்கள் கூறுகிறார்கள். நமது அரசு நிலமற்ற ஏழைகளுக்கு 2 ஏக்கர் நிலம் தர முன்வந்தபோது, "எங்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்கக் கூடாதா?" என அவர்கள் கேட்கிறார்கள். எனவே, இந்த அரசு அந்த





ஆணையை இரத்து செய்து, அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, 25 கி.மீ. என்பது நிச்சயமாக இருக்காது. புதிய மாவட்டங்கள் தோன்றிய நேரத்திலே, அந்தப் புதிய மாவட்டங்களுக்கு, அரசு அலுவலகங்களை உருவாக்குவதற்காக, 16 கி.மீ. என்ற ஒரு தடையைப் புதிய நேர்வாகக் கருதி, ஆங்காங்கே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருந்தன. ஆனால், அதுகூட இப்பொழுது தளர்த்தப்பட்டு, குறிப்பாக, மாநகராட்சிக்குப் பக்கத்தில் என்று சொன்னால், 5 மைல் என்று சொல்லியிருக்கிறோம். 2 இலட்சம் மக்கள்தொகைக்குமேல் இருந்தால், 5 மைல் என்று சொல்லியிருக்கிறோம். அதேமாதிரி, குறிப்பாக, மக்கள்தொகை 2 இலட்சத்திற்குக்கீழே இருந்தால், 3 மைல் என்று சொல்லியிருக்கிறோம். ஒரு இலட்சத்திற்குக் கீழே இருக்கக்கூடிய மக்கள்தொகை உள்ள இடங்களில் 2 மைல் என்று சொல்லியிருக்கிறோம். இப்படி மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, அங்கே தூரங்கள் கணக்கிடப்பட்டிருக்கின்றன. 25 கிலோ மீட்டர் என்று சொல்வது நிச்சயமாக இல்லை.

முற்பகல் 10—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பகுதிகளிலே குடியிருக்கின்ற ஏழையெளிய மக்கள், நெடுஞ்சாலை ஓரமாகவும், பொதுப் பணித் துறை இடங்களின் ஓரங்களிலும், வீடில்லாமல் குடிசை போட்டிருக்கின்ற ஏழையெளிய மக்கள், பட்டா கேட்டு மனு செய்கின்றபோது, நகர்ப் பகுதியிலே இடங்கள் இல்லை என்று சொல்லி, அதற்குப் பட்டா கொடுப்பதைப் பெரும்பாலும் மறுத்துவிடுகிறார்கள், அதிகாரிகள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அப்படி நகர்ப்புறத்திலே வாழ்கின்ற வீடில்லாத ஏழையெளிய மக்களுக்கு, நகர்ப்புறத்திலே, கடந்தகாலங்களிலே விவசாய நிலங்களாக இருந்தவற்றில் எல்லாம் இப்போது வீடுகள் கட்டி, அவை எல்லாம் குடியிருப்புப் பகுதிகளாக

[2006 ஆகஸ்ட் 29

*மாறிவிட்டன. அப்படி விவசாயத்திற்குச் சம்பந்தப்பட்ட கண்மாய், குளம், குட்டைகள் எல்லாம் இன்றைக்குப் பாசனத்திற்கு இல்லாமல், விவசாய நிலகளில் எல்லாம் வீடுகள் கட்டிவிட்டார்கள்; கண்மாய் சும்மாதான் இருக்கிறது. என்னுடைய மேலூர் நகரிலேகூட, மேலூர் நகரத்தைச் சுற்றி 3.1 கண்மாய்கள் பாசனத்திற்கு...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஆர். சாமி:** *பாசனத்திற்குப் பயன்படாமல் கொசுக்கள் பெருகி, அசுத்தம் ஏற்படுகின்ற காரணத்தால் சுகாதாரக் கேடும் ஏற்படுகிறது. அப்படிப் பாசனத்திற்கு உபயோகம் இல்லாத கண்மாய்களை, நகர்ப்புறத்தில் இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு அந்தக் கண்மாய் இடத்தைப் பட்டா போட்டுத்தர அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நெடுஞ்சாலைத் துறை ஓரமாக இருக்கின்ற இடங்கள் மற்றும் பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்ட இடங்களில் குடிசை போட்டிருக்கின்றவர்களுக்குப் பட்டா வழங்க முடியுமா என்று கேட்டார்கள்; நிச்சயமாக முடியாது. ஏனென்றால், நெடுஞ்சாலைத் துறை ஓரமாக இருக்கும்போது (குறுக்கீடு) அடுத்து சொல்கிறேன். அவர் சொன்னது நெடுஞ்சாலைத் துறை; இப்போது விரிவாக்கம் செய்து கொண்டிருக்கிற மேலூர் road-ஐ எவ்வளவு விரிவாக்கம் செய்யப் போகிறார்கள் என்றும் அவருக்குத் தெரியும். நெடுஞ்சாலைத் துறை நிச்சயமாக அதற்கு ஒத்துப்போகாது. தேசிய நெடுஞ்சாலை ஓரமாகக் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்கவே இயலாது.*

*அதேமாதிரி, பொதுப் பணித் துறையிலும் நிச்சயம் முடியாது. நீங்கள் ஏரியில் குடியிருப்பவர்களுக்காகக் கேட்கிறீர்கள். ஏரிகள் என்பது, அங்கே இருக்கின்ற விவசாயத்தினுடைய பயன்பாட்டுக்காக ஏரிகள் வெட்டப்படுகின்றன. ஒரு ஏரி உருவாக்கப்படுவது என்பது, விவசாயத்தினுடைய பயன்பாட்டுக்கு. இப்போது அது பயன்படாமலே இருக்கிறது என்பது உங்களுடைய கருத்து. அப்படிப் பயன்படாமல் இருக்கக்கூடிய குட்டைகளில், வீடுகள் கட்டிக் குடியிருப்பார்கள் என்றால்—அதற்காகத்தான் சொன்னேன்—அந்தப் பயன்பாட்டுக்கு, விவசாயத்திற்கே பயன்படவில்லை என்பதைத் தணிக்கை செய்து, முடிவு செய்பவர்கள் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர். ஏற்கெனவே, அந்த "One Time Special Scheme" என்பதில்,*



2006 ஆகஸ்ட் 29]

*குட்டைகளில் இருந்தவர்களுக்குக்கூட, தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே பட்டா வழங்கப்பட்டது என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் III. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**114—**

## வேலூர் கோட்டை

***1105—திரு. சி. ஞானசேகரன்:**

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் கோட்டையை அழகுபடுத்தி, சுற்றுலாத் துறைமூலம் பொழுதுபோக்குப் பூங்கா அமைத்து, கோட்டையின் அகழியில் படகுகளை இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) உங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன். வேலூர் கோட்டை, மைய தொல்பொருள் ஆய்வுத் துறையால் ஒரு வரலாற்றுச் சின்னமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, வேலூர் கோட்டையில் Amusement park அமைக்க மற்றும் அகழியை ஆழப்படுத்த, தொல்பொருள் ஆய்வுத் துறையின் அனுமதி பெற, சுற்றுலாத் துறையின்மூலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உறுதியாக அனுமதி பெறப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல, வேலூர் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இடம். முதல் சுதந்திரப் போர் வெடித்த இடமே அந்த இடம்தான். அந்தக் கோட்டை அகழியில், நான்கு பக்கம் அகழி என்று சொன்னால், இரண்டு பக்க அகழியில் மட்டும் தண்ணீர் தேக்கி வைக்கிறார்கள். மீதம் இரண்டு பக்க அகழியிலே தண்ணீர் தேக்கி வைக்கப்படாமல், அப்படியே கோரையை வளர்க்கிறார்கள். அந்தப் பகுதியிலும் நீரை நிரப்பி, சுற்றுலாத் துறைமூலம் படகு*

[2006 ஆகஸ்ட் 29

விடலாம், அதேபோல அங்கே Amusement park அமைக்கலாம். ஊட்டி ஏரியைச் சுற்றி, குழந்தைகள் எல்லாம் விளையாடக்கூடிய உபகரணங்களை எல்லாம் வைத்து Amusement park வைத்திருக்கிறார்கள். அதேபோல சுற்றுலாத் துறைமூலம் அமைச்சர் அவர்கள் 5 கோடி ரூபாயிலே அது நிறைவேற்றப்படும் என்று நேற்று இந்த அவையிலே அறிவித்தார்கள். அந்த அறிவிப்புக்கு ஏற்ப மத்திய அரசோடு பேசி, உடனடியாக அனுமதி பெற்று, இந்த ஆண்டே—ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் கோட்டையில் படகுகளை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்—சுற்றுலாத் துறையின்மூலம் இப்போதே படகு இயக்குவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. ஆகவே, உடனடியாக சுற்றுலாத் துறைமூலம் வேலூர் கோட்டை அகழியிலே படகு விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா; மத்திய அரசோடு உடனடியாகப் பேசி, 5 கோடி ரூபாயில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கோட்டையை அழகுபடுத்தி, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்த, 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடுகளும் கருத்துருக்களும் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. அவர்களும் அனுமதி தருகிறேன் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக அனுமதியைப் பெற்று, இந்த ஆண்டிற்குள் பணிகள் தொடங்கப்படும்.

*முற்பகல் 10—05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வேலூர் கோட்டையை, அழகுபடுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை, இன்னும் அங்கே உருவாகாததற்குக் காரணமே, சுற்றுலா அலுவலர் மாமலலபுரத்திலே இருக்கிறார். ஒரேயொரு Assistant—ஐ மட்டும் போட்டு, ஒரு சின்ன Office—ஐ அங்கே திறந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு சுற்றுலா அலுவலகத்தை அந்த இடத்திலே திறந்து, சுற்றுலா அலுவலரை, மாமல்லபுரத்தில் இருப்பதற்கு அங்கே தனியாக ஒரு அலுவலரைப் போட்டுவிட்டு, வேலூரிலே ஒரு அலுவலரை நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



2006 ஆகஸ்ட் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தில் ஒன்று, சுற்றுலாத் தகவல் மையமும் அடங்கியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது படகு விடக்கூடிய கேள்வி என்ற காரணத்தால், மேட்டூர் அணை, தமிழ்நாட்டினுடைய மிக முக்கியமான அணை. இந்த அணையில் படகு விடப்பட வேண்டும் என்று சுற்றுலாப் பயணிகள் நீண்டகாலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதிலும், மேட்டூர் அணைப் பூங்கா பராமரிக்கப்படாமல், கடந்த 7, 8 ஆண்டுக் காலமாக உள்ளூர்ப் பயணிகள் எல்லாம்கூட அங்கே செல்ல அனுமதியில்லாமல் இருந்தது. இப்பொழுது பயணிகள் அனுமதிக்கப்பட்டு, அனுமதிச் சீட்டுக் கட்டணமும் கூடுதலாக வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் மேட்டூர் அணைப் பூங்காவைப் பராமரித்து, அதேநேரத்தில் அணையில் படகு சவாரி செய்வதற்கும் இங்கே சுற்றுலாத் துறையின் மூலமாகக் கூடுதலாக நிதியொதுக்கி, அதைச் சுற்றுலா மையமாக எடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மேட்டூர் அணையில் படகு விடக்கூடிய முயற்சிகளில் இந்தத் துறை ஈடுபடும். துறையினுடைய அதிகாரிகளை அழைத்து, தேவையா என்பதையும் கருத்தில் எடுத்து, ஆய்வு செய்யப்பட்டு நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட இந்தியாவில் ஃபதேப்பூர் சிக்ரி, செங்கோட்டை என்று பல

கோட்டை சுற்றுலாத் தலங்கள் சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்றன. அதேபோல, செஞ்சிக்கோட்டைக்குப் பல ஆயிரக்கணக்கான மக்கள் வருகிறார்கள். ஆனால், மலைமீது ஏறி கோட்டைக்குச் செல்ல முடியாத நிலை இருக்கின்ற காரணத்தால், அதற்கு Rope Car அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோட்டையைப் பொறுத்தமட்டில், மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்றுதான் அதை ஏற்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**115—**

## யானைக்கால் நோய்

***870—திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யானைக்கால் நோயை ஒழிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) இந்நோய் வராமல் தடுக்க மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டம் ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) யானைக்கால் நோய்த் தாக்கம் அதிகமுள்ள மாவட்டங்களில், இந்த நோய் மற்றவர்களுக்குப் பரவாமல் தடுக்கவும், இந்த நோயின் உபாதைகளான, கை, கால் வீக்கம் மற்றும் விரை வீக்கம் ஆகியன ஏற்படாமல் தடுக்கவும், 1994 ஆம் ஆண்டு முதல் கடந்த ஏழு ஆண்டுகளாக மத்திய அரசு மற்றும் மாநில அரசு இணைந்து செயல்படுத்தும் இத்திட்டத்தின்படி, ஆண்டுக்கு ஒரு முறை நோய் பரவலாக உள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள அனைவருக்கும்





பெருவாரியாக மருந்து அளிக்கும் திட்டத்தின்கீழ் (MDA Scheme) டி.இ.சி. மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இந்த நோய் வராமல் தடுத்துக்கொள்ள, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துமுகத்தான் வீடுதோறும், துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டு, ஒலிபெருக்கி வழியாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு, கொசுக்கள் உற்பத்தியாகாமல் தடுத்திட, தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைக்கால் நோய் வந்துவிட்டால், அதை முழுமையாகக் குணப்படுத்த முடியாது. எனவே, அந்த நோய் வராமல் தடுத்துக்கொள்வதே சிறந்ததாகும். தமிழகத்தில், சில மாவட்டங்களில் யானைக்கால் நோய் அதிகமாக உள்ளது. எனவே, பிற மாவட்டங்களிலும் இந்த நோய் பரவாமல் தடுக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைக்கால் நோய் வந்தால், அது மீண்டும் பிறருக்குப் பரவாமல் இருக்கிற அந்தத் திட்டத்தின் அடிப்படையில், 1997–1998 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 10,000 பேர்களில் 88 பேருக்கு அந்த நோய் இருந்திருக்கிறது; ஆனால், ஒவ்வோர் அரசாங்கமும் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, இன்றைக்குள்ள புள்ளிவிவரப்படி 10,000 பேர்களில் 4 பேருக்கு மட்டும்தான் உள்ளது. இதையும் குறைப்பதற்கு வேண்டிய அந்த முயற்சிகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் யானைக்கால் வியாதி பல பகுதிகளில் அதிகமாக இருக்கின்றது. குறிப்பாக, என்னுடைய தொகுதியில் இரணியல், திருவிதாங்கோடு போன்ற பகுதிகளில் இந்த நோய் அதிகமாக இருக்கிறது. இந்த நோயினால் மக்கள் பாதிக்கப்பட்டு விரக்தியோடு இருக்கிறார்கள். வாழ்க்கையில்,

[2006 ஆகஸ்ட் 29

இன்றைக்கு அவர்கள் நடைப்பிணமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களை உடல் ஊனமுற்றோர் பட்டியலில் சேர்த்து, உடல் ஊனமுற்றோருக்கு இருக்கின்ற சலுகைகள் கிடைப்பதற்கான கோரிக்கையை, நீண்டகாலமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் அறிய விரும்புகிறேன்.

*(முற்பகல் 10–10)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோய் வந்து பாதிக்கப்பட்டவர்களை, உடல் ஊனமுற்றோர் பட்டியலிலே சேர்ப்பது சம்பந்தமாகத் தனிக் கேள்வி போட்டால்தான் சரியான பதிலைக் கொடுக்க முடியும். உங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்த நோய் இருக்கிறது. ஆனால், கடந்த 10, 15 ஆண்டுக் காலத்திற்குக் கணக்கெடுத்துப் பார்ப்போம் என்று சொன்னால், இன்றைக்கு நம் அரசாங்கம் எதிர்பார்த்த அளவுக்கு நிறைய குறைந்திருக்கிறது. மொத்தத்தில், தமிழ்நாட்டில், 14 மாவட்டங்களில்தான் பாதிப்பு இருக்கிறது. அதிலே ஒரு மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைக்கால் நோய் வருவதற்குரிய காரணம் கொசு என்றும் அதை அழிப்பதற்கான முயற்சி எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. இதேபோலத்தான், சமீபத்திலே தமிழகத்தைக் கலக்கிய சிக்-குன்-குன்யா நோய்க்கான காரணமும் கொசுமூலமாக வருகிறது என்றும் அதைத் தடுப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. பொதுவாக, தமிழ்நாட்டிலே, குறிப்பாக, சென்னை நகரத்தில் மோசமான அளவிற்குக் கொசுத் தொல்லை. அதுவும் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் சொல்லமுடியாத அளவுக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பெரிய ஆதரவு இருக்கிறது பாருங்கள்! (சிரிப்பு) அவ்வளவு தினசரி அனுபவித்துக்கொண்டு இருக்கிறோம். இரவு தூக்கம் என்பதே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இல்லை, ஒரு மாதகாலமாக. இவ்வளவு



2006 ஆகஸ்ட் 29]

மோசமான நிலையில் கொசுத் தொல்லை நமது சென்னை நகரத்திலே இருந்த வரலாறு இல்லை. எல்லா நோய்களுக்கும் காரணமாக இருக்கிற கொசு வளர்ந்துகொண்டே இருக்கிறது. மருந்து அடிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், மருந்து அடிப்பது என்பதை ஒருசில நாட்களில் செய்தார்களேதவிர, பெரும்பாலான வாரங்களில் அது நடைபெறவில்லை. ஆனால், அடித்த மருந்திலே கொசு செத்ததா அல்லது மேலும் வளருகிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஆகவே, இந்தக் கொசுவை உடனடியாக அழிப்பதற்கான முயற்சியை எடுக்கவில்லை என்றால், பல நோய்களுக்கான காரணமாகி, நம்முடைய சுகாதாரத் துறைக்கு மேலும் கூடுதல் செலவுகள் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதை நம்முடைய சென்னையிலும், தமிழகத்திலும் அழிப்பதற்கான தனி முயற்சியை, சிறப்பு முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசு ஒழிக்கிற அந்தப் பணியில் இப்போது சுகாதாரத் துறையும், உள்ளாட்சித் துறையும் சேர்ந்து, இணைந்து பணியாற்றிக்கொண்டிருக்கின்றன. வாரத்திற்கு ஒரு முறை review வேறு செய்துகொண்டிருக்கிறோம். நம் சென்னை மாநகரிலே, புகை அடிக்கக்கூடிய லாரிகளும் நிறைய இருக்கின்றன; machine-களும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் வைத்து அடித்துக்கொண்டிருக்கிறார்கள். காலை நேரத்தில்தான் இந்தக் கொசு வருகிறது. யானைக்கால் வியாதிக்கு வருகிற கொசு, மனிதனை இராத்திரியிலே தாக்குகிறது. சிக்-குன்-குன்யா கொசு காலையிலே தாக்குகிறது. அதாவது, 24 hours வேலை பார்ப்பதுபோல, இரவும், பகலும் நாங்கள் கொசு அடிக்கிற வேலையையும் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆக, இந்த வேலைதான் ஒழுங்காக நடந்துகொண்டிருக்கிறது. கணக்குப் பார்ப்போம் என்று சொன்னால், இந்தச் சிக்-குன்-குன்யா கொசு பகலில்தான் கடிக்கிறது. இந்த யானைக்கால் வியாதி வருகிற கொசுவைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், இரவிலேதான் கடிக்கிறது. இரவிலேதான, அந்த இரத்த sample–ஐ எடுக்கச் சொல்கிறார்கள். ஆகவே, இந்தப் பணியை முடிந்த அளவுக்குச் செய்துகொண்டிருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்தச் சிக்-குன்-குன்யா நோய்க்காக, 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் தனியாக ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பத்து நாளில் ஒதுக்கிக்கொடுத்து, அதற்குக் கூடுதல் பணியாளர்கள், மருந்து அடிப்பதற்கு வேண்டிய அந்தக் கூலி ஆளுக்கு உரிய சம்பளமும்,

இதுவரையில் 150 machine-கள்தான் rural-ல் இருக்கின்றன; கூடுதலாக 200 கொசு அடிக்கக்கூடிய கருவிகள் வாங்குவதற்காகவும், 2 கோடியே 85 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். முடிந்த அளவுக்கு நாங்கள் குறைத்துக்கொண்டுதான் இருக்கிறோம். இந்த முயற்சியில் தனிக் கவனம் எடுக்கிறோம். குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர் அறைகளிலே கொசு வராமல் பார்க்கிற வேலையைக் கட்டாயம் செய்துகொடுக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.*

**திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைக்கால் நோயை filaria என்று சொல்கிறார்கள். அதேபோன்று, மலேரியா கொசுக்கள்மூலம் மலேரியா வருகின்றது. சிக்-குன்-குன்யா, Aedes என்ற கொசுக்கள்மூலம் பரவுகின்றது. நேற்றைக்குக்கூட நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அறைக்கு, ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்க நாங்கள் சென்றிருந்தபோது, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறையிலேயே கொசுக்கள் பறந்துகொண்டிருந்ததை நாங்கள் பார்க்க நேரிட்டது. உடனே, இதுபோன்ற நிலைமை இருக்கிறது என்று சொன்னவுடன், மருந்துகள் அடிக்கிறோம் என்று சொன்னார்கள். மருந்துகள் அடித்தாலும், இந்தக் கொசுக்கள் வரத்தான் செய்கிறது என்ற கருத்தைச் சொன்னபொழுது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். பொதுவாகவே இந்தக் கொசுக்கள் எல்லாம், அடிக்கின்ற மருந்துகளுக்கு ஏற்ப immune, அதாவது அதற்கேற்ப ஒரு உடல்வாகு, ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்கின்றன இப்பொழுது DDT போன்ற மருந்துகள் எல்லாம் அடிக்கப்படுகின்ற நிலையிலே அதற்குக் கொசுக்கள் சாவதில்லை. எனவே, Aedes என்கின்ற சிக்-குன்-குன்யா நோய் பரப்புகின்ற கொசுக்களை ஒழிப்பதற்கும், filaria போன்ற யானைக்கால் நோய் வருவதற்குக் காரணமாக இருக்கின்ற கொசுக்களையும், மலேரியா பரப்புகின்ற அந்த parasite-ஐ ஒழிப்பதற்கும் ஒரு சிறப்பு ஆராய்ச்சி மையம், நம்முடைய அரசின் சார்பிலே ஒரு முழுமையான அளவிற்கு எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*





*(முற்பகல் 10–15*

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்து நல்ல கருத்து. இதற்கு வேண்டிய நடவடிக்கையினை இந்த அரசாங்கம் எடுக்கும். பொதுவாக, இந்தக் கொசுக்கள் உற்பத்தியாவதை தடுக்க அரசாங்கம் மட்டுமல்லாமல், பொதுமக்களும் சேர்ந்து பண்ண வேண்டும். அரசாங்கம் மட்டுமே செய்யக்கூடிய பணியாக இல்லை. அதற்குரிய விழிப்புணர்வை இந்த அரசாங்கம் சரியான முறையிலே எடுத்துச் செய்து கொண்டிருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காயத்ரி தேவி.*

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, நான் சொல்ல வேண்டியதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால், இந்த மலேரியாவாக இருந்தாலும் சரி, சிக்-குன்-குன்யாவாக இருந்தாலும் சரி, டெங்குவாக இருந்தாலும் சரி, எல்லாமே இந்த mosquitoes–கொசுக்களால்தான்—வருகிறது. இதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், சமீபகாலத்தில் எங்கள் area-க்களில், பிராட்வே, வட சென்னையில் எல்லாம் mosquito fumigation, mosquito spray–களையே நாங்கள் பார்க்கவில்லை. கடந்த ஐந்தாண்டுக் காலங்களில் கொசுக்களை ஒழிப்பதற்கு, சரியாக எந்த முயற்சியும் eradication of mosquitoes–க்கு யாரும் சரியாக எடுக்கவில்லை என்பதுதான் உண்மை. நீங்கள் டெங்கு எந்த வருடத்தில் நிறைய வந்தது என்று சொல்லுங்கள் பார்ப்போம். டெங்கு எதனால் வந்தது? அதற்குப் பிறகு, சிக்-குன்-குன்யாவைப்பற்றி தினமும் நாம் இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆகையால், இந்த mosquitoes–ஐ eradicate செய்வதற்கு நம் அரசு முயற்சி எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நல்ல கருத்தைச் சொன்னார்கள். ஐந்தாண்டுக் காலத்தில்தான், இந்தக் கொசுக்கள் வளர்ந்திருக்கின்றன என்று சொன்னார்கள். நாங்கள் வந்து, அந்தக் கொசுக்களை ஒழிப்பதற்கான பணியைச் செய்து கொண்டிருக்கிறோம்.*

[2006 ஆகஸ்ட 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.*

**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், யானைக்கால் நோய் வரக்கூடிய நோயைக் கொடுக்கிற கொசு இரவிலே கடிப்பதாகவும், அதேபோல் சிக்-குன்-குன்யா நோய் வரக்கூடிய கொசு பகலிலே கடிப்பதாகவும் சொல்கிறார்கள். இந்த இரண்டு கொசுக்களுக்கு இருக்கக்கூடிய வித்தியாசம் என்ன? அவற்றிலிருந்து நாம் தப்பிப்பதற்கான வழிமுறைகளை ஏதாவது அமைச்சர் அவர்கள், எந்தெந்த கொசு என்று கண்டுபிடிப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிக்-குன்-குன்யா கொசு, வீட்டிலே இருக்கிற நல்ல தண்ணீரிலே வளர்கிறது. இந்த யானைக்கால் வியாதி வருகிற கொசு, சாக்கடைத் தண்ணீரிலே, அசுத்தத் தண்ணீரிலே வளர்கிறது. அசுத்தத் தண்ணீரிலே வளர்கிற இந்தக் கொசு கடிப்பதன்மூலமாக, நமக்கு அந்த யானைக்கால் நோய் வந்தவுடனேயே, அந்த யானைக்கால் நோயினுடைய தாய்ப் புழு நம்முடைய இரத்த நரம்பிலே ஒரு ஓரமாக இருந்துகொண்டு, இரவிலே சின்ன சின்ன புழுக்களாக அந்த இரத்தத்திலே ஓட வைக்கிறது. இரவு நேரங்களிலே கடிக்கிற அந்த கொசு அந்தப் புழுக்களைச் சேர்ந்து எடுத்துக்கொண்டு போய், இன்னொரு மனிதனைக் கடித்து, அந்த நோயைப் பரப்புகிறது. இப்படித்தான் அந்த யானைக்கால் நோய் வருகிறது. ஆகவேதான், இதை தொற்றுநோயைப் போல் கருதி, எந்தப் பகுதியிலே பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய அத்தனை பேருக்குமே அந்தத் தடுப்பு மாத்திரையை வழங்கிக் கொண்டிருக்கிறோம். வருடா வருடம் ஒருநாள் என்று அதற்கு நாள் குறிப்பிட்டுச் செய்கிறோம். இந்த ஆண்டு, வருகிற 11 ஆம் தேதி இந்தப் பணியை நாம் அரசாங்கத்திலிருந்து, பாதிக்கப்பட்ட பகுதிகளிலே எல்லா இடங்களிலும் எல்லோருக்கும் அந்த மாத்திரையைக் கொடுக்கப் போகிறோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், இந்தக் கொசு ஒழிப்புப் பணியிலே, அரசாங்கத்தோடு சேர்ந்து அதை ஒழிக்க வேண்டும்.*



2006 ஆகஸ்ட் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிக்-குன்-குன்யா என்ற நோயைப் பரப்புகின்ற கொசுவினைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நல்ல பல கருத்துகளை இங்கே சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத துறை அமைச்சர் அவர்களும், இந்த அரசு பல்வேறு வகையான நடவடிக்கைகளை, கொசு ஒழிப்பதற்கு எடுத்துக்கொண்டிருக்கிறது; பொதுமக்களுடைய பங்களிப்பும் இதில் இருக்க வேண்டும் என்ற தொனியில் இங்கே அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்தக் கொசுவைப் பிடிப்பதற்கு, பொதுமக்கள் அனைவருக்கும் கொசு வலை கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயாராக இருக்கின்றார்களா என்பதைத் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன.*

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொசு வந்ததற்குப் பிறகு கடிக்காமல் இருப்பதற்குக் கொசு வலையைக் கேட்கிறார்கள். நாங்கள் சொல்வது, கொசுவே வராமல் இருப்பதற்கு, ஒழிப்பதற்கு வேண்டிய பணிகளைச் செய்வதற்கு உங்கள் உதவியைக் கேட்கிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 116. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம். மாண்புமிகு இந்து சமய மற்றும அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**116—**

## கோயில் தேர்

***502—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் ஆலயத்தின் தேர், பழுது நீக்கம் செய்யப்பட்டு, மீண்டும் தேரோட்டம் நடத்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2006 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் ஆலயத்தில் இருந்த ஐந்து தேர்களும் பழுதடைந்துவிட்டன. இதில் பிரதானத் தேரினை மட்டும், முதல் கட்டமாகப் பழுதுநீக்கம் செய்து, மீண்டும் தேரோட்டம் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனுடைய உத்தேச மதிப்பீடு, ரூபாய் 10 இலட்சம். இந்தப் பணியினை ஓராண்டிற்குள் முடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*முற்பகல் 10–20*

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தேர், கிட்டத்தட்ட 47 ஆண்டுகளாக ஓடாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதில் ஏராளமான மரச் சிற்பங்கள் எல்லாம் பத்திரமாக இக்கிறது. எனவே, 5 தேர்களையுமே தற்பொழுது பழுது நீக்கம் செய்து ஓட்டுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அரசு முழு மானியத்துடன் இந்த ஆண்டே இந்தத் தேரைச் சீர்செய்து ஓட்டுவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தத் திருக்கோயிலுக்கு 5 தேர்கள் உண்டு. அவற்றிலே, 1959 ஆம் ஆண்டில் நடைபெற்ற தீ விபத்தில் ஒரு தேர், பிரதான தேர் எரிந்துபோய் இருக்கிறது. இருந்த 4 தேர்களைக் கொண்டு, இறுதியாக 1959 ஆம் ஆண்டில்தான் முழுத் தேரோட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்று இருக்கின்றன. தொடர்ந்து நடைபெறாமல் இருந்திருக்கின்றது. ஆகவே, அத்தனை தேர்களையும், எஞ்சியிருக்கக்கூடிய 4 தேர்களையும், புதிதாகச் செய்துதான், அந்தத் தேரோட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறது. அத்தனை தேர்களையும் ஒரே நேரத்தில் செய்வதற்கு நிதி ஆதாரங்கள் சரி செய்யமுடியாத காரணத்தால், படிப்படியாக முதலிலே ஒரு தேரையும், பிறகு எஞ்சியிருக்கக்கூடிய 4 தேர்களையும் செய்வதற்குத் துறையில் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 ஆகஸ்ட் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையில் வருகின்ற காரணத்தினால், இந்த வினாவினை எழுப்புகிறேன். கடந்தகால ஆட்சியிலே தமிழகத்திலே கிட்டத்தட்ட 30 ஆயிரம் கோயில்களில், 3 ஆயிரம் கோயில்களுக்கு இலவசமாகத் தலப் புராணப் புத்தகம் அச்சிட்டு, வெளியிட்டு அந்தந்தக் கோயில்களிலே வைக்கப்படும் என்ற ஓர் அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். அது எந்த அளவிற்குச் செயல்முறையில், நடைமுறையில் இருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். ஏனென்றால், நான் எந்தக் கோயிலுக்குச் சென்றாலும், அங்கே அரசாங்க சார்பிலே இலவசமாகத் தலப் புராணத்தை என்னால் பார்க்க முடியவில்லை, அதற்குத் தகுந்த விளக்கத்தைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் அறிவித்த திட்டங்களைச் செய்யவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் விஷ்ணுபிரசாத அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அதனைத் தமிழக மக்களும் அவ்வாறே கருதுகிறார்கள். ஆனால், இப்பொழுது தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் பொறுப்பேற்றிருக்கக்கூடிய இந்த அரசு, சொன்னதைச் செய்யக்கூடிய அரசாக, நான் ஏற்கெனவே என்னுடைய மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டதைப்போல, தல வரலாறுகள் ஆங்காங்கு தயாரித்து வெளியிடுவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. வெகுவிரைவில் அவை கிடைக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதி, அலேபுரம் என்ற கிராமத்திலே, திப்புசுல்தான் காலத்தில் கட்டப்பட்ட நரசிம்மசுவாமி கோயில், பிரசித்திப் பெற்ற கோயிலாக விளங்கி வருகிறது. ஆனால், அப்போது அமைக்கப்பட்ட தேர் பழுதடைந்து, அந்தத் தேரைப் புதுப்பிக்க கடந்த ஆட்சியிலே 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அந்தப் பணம்

போதாது என்பதால், கூடுதலாகப் பணத்தை ஒதுக்கி, அந்தத் தேரைப் புதுப்பிக்க அரசு முன்வருமா என்று தாங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டிருந்தால் விவரமாகப் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். இருந்தாலும்கூட தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மொத்தத் தேர்கள், துறைக்குச் சம்பந்தப்பட்ட தேர்கள், 830 தேர்கள் இருக்கின்றன. இவற்றிலே 521 தேர்கள் இப்பொழுது நல்ல நிலையில் இருக்கின்றன. பழுதுபார்ப்பதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ள தேர்களினுடைய எண்ணிக்கை 225. எஞ்சியவை சற்று மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதும் இருக்கலாம். அவையும் வெகுவிரைவிலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**117—**

## தரம் உயர்த்துதல்

**•1160—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் கல்வி ஆண்டில், 100 அரசு மற்றும் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளை





மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த, வேண்டுகோள்கள் தொடர்ந்து பெறப்பட்டு வருகின்றன. இவ்வாறு பெறப்படும் கோரிக்கைகள்சார்ந்து, 2007–2008 ஆம் கல்வி ஆண்டில், நிலை உயர்த்த கருத்துரு பெறப்பட்டால், உரிய நிபந்தனைக்குட்பட்டு, நிதிநிலைக்கேற்ப மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10–25

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி கல்வி மாவட்டம், என்னுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பழவூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் சுமார் 369 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றார்கள். 14 ஆசிரியர்கள், 3 ஆசிரியர் அல்லாதோர் பணியாற்றி வருகின்றார்கள். கடந்த ஆண்டு, 10 ஆம் வகுப்பு தேர்வு எழுதியவர்களில் 54 மாணவ, மாணவிகள் தேர்வு எழுதி வெற்றிபெறுச சென்றிருக்கிறார்கள். அங்கே இந்தப் பள்ளி நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு, 10–வது வகுப்பிலே 73 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றார்கள். ஏற்கெனவே தரமான, நல்ல கட்டடங்களும் அந்தப் பள்ளிக்கு இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், மீண்டும் மறுபரிசீலனை செய்து, இந்த ஆண்டே இந்தப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமானால், நிச்சயமாக மாணவ, மாணவிகள் மிக அதிகமாக அங்கே படிக்க இருக்கின்றார்கள். காரணம், அதைச் சுற்றி, பழவூர், யாக்கோப்புரம், சிதம்பராபுரம், மாறன்குளம், தெற்குக் கருங்குளம், சங்கனான்குளம், இருக்கன்துறை, இந்திரா காலனி, சூட்சிக்காலனி, பாரவிளை, வண்ணார்குளம் போன்ற பல கிராமங்கள், சுற்று வட்டாரப் பகுதியிலே இருக்கின்றன. அந்த மாணவ, மாணவிகள் எல்லாம் படிப்பதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டி இருக்கின்றது. ஆகவே, இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தினால், மக்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும். இன்னொன்று, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், 1970 ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோதுதான், பழவூரிலே நடுநிலைப் பள்ளியாக இருந்த இந்தப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தந்ததும் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்தான். ஆகவே, 36 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த ஆண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும்; தருவார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய பழவூர் பள்ளியைக் குறித்துச் சொல்லவேண்டுமென்று சொன்னால், அந்தப் பள்ளியிலே இப்பொழுது 370 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். பழவூரிலே போதுமான இடம் இருந்து, அந்த நிபந்தனைகளை எல்லாம் அந்தப் பள்ளி நிர்வாகம் பூர்த்தி செய்துதந்தால், குறிப்பாக, பொதுமக்கள் அளிக்க வேண்டிய அந்தப் பங்களிப்புத் தொகை உட்பட, அந்த நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றுத் தருகிறபட்சத்திலே, வரக்கூடிய நிதியாண்டிலே, நிச்சயமாக அரசு அவற்றைப் பரிசீலத்து ஆவன செய்ய முடியும். காரணம், பழவூரிலே பக்கத்திலே வடக்கன்குளத்திலேயும், ஆவரைக்குளத்திலும் நல்ல தனியார் பள்ளிகள் இருந்தாலும்கூட, அரசு மேல்நிலைப் பள்ளி என்பது 15 கிலோமீட்டர் தள்ளி இருக்கக்கூடிய செட்டிகுளத்தில்தான் அமைந்திருக்கிறது என்பதை அரசு கவனத்திலே கொண்டிருக்கிறது. எனவே, இந்த நிபந்தனைகளை எல்லாம் நிறைவேற்றி, உரிய முன்மொழிவுகள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திலேயிருந்து பெறப்படுகிறபட்சத்திலே, அரசு நிச்சயமாக பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர். (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** இன்னும் ஒரேயொரு கேள்வி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்கு வைப்புத் தொகையாக, மக்களுடைய பங்களிப்பாக ஒரு இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இந்த ஆண்டே, பழவூர் ஊர் கமிட்டித் தலைவராக இருக்கின்ற திரு. இசக்கியப்பன் அவர்கள், அதைக் கட்டுவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அதோடுமட்டுமல்ல; அந்தப் பள்ளிக்கு விளையாட்டு இடத்திற்காகவும், 5 ஏக்கர் நிலம் நாங்கள் தர தயாராக இருக்கின்றோம். ஆகவே, இன்னும் ஒரு வார காலத்திற்குள் இந்த இரண்டையும் பூர்த்தி செய்து தந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நாங்கள், அவருடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலே





ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அவர் கூடங்குளத்திலே ஆரம்பித்தார்; கோலியங்குளத்திலே நின்றுவிடுவார் என்று நினைத்தேன். மீண்டும் பழவூரை வலியுறுத்துகிறார். எனவே அந்த முன்மொழிவுகள் எல்லாம் முறையானவகையில் அமையப்பெற்று வருமானால், அடுத்த ஆண்டு நிச்சயமாக அரசு அவற்றை நிறைவேற்றும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10th Pass பண்ணியவர்கள், 18 மாத இடைவெளி இருந்தால் 12th exam எழுதலாம் என்றிருந்தது. இப்போது அதை 2 ஆண்டுக் கால அவகாசம் வேண்டுமென்று மாற்றியிருக்கிறார்கள். இதனால், இந்த அக்டோபர் தேர்வு எழுதக்கூடிய மாணவர்கள் பல பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை மீண்டும் பழைய முறையிலேயே 18 மாத இடைவெளி இருந்தால் போதும் என்று மாற்றினால், இன்று பல்லாயிரக்கணக்கான மாணவர்கள், அக்டோபர் தேர்வு எழுதுவதற்குத் தயாராக உள்ளார்கள். அவர்கள் ஏமாற்றம் அடையாமல் இருப்பதற்கு உதவியாக இருக்கும். இதற்குண்டான பதிலை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து, துறை அதிகாரிகளிடத்திலே நான் கலந்து பேசி, எந்தவகையிலே அதை நிறைவேற்ற முடியும் என்பதை அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி ஒன்றியத்தைச் சார்ந்த மாவடிப்பண்ணையில், அரசு உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இந்தப் பள்ளி, 1967 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பள்ளி. அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகை, ரூ. 25 ஆயிரத்தையும் தந்துவிட்டார்கள். இந்தப் பள்ளி இன்னும் மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்படவில்லை. இதைச் சுற்றி, பல கிராமங்களிலுள்ள மாணவர்கள் அங்கு படிக்க வருகிறார்கள். ஆகவே, அந்தப் பள்ளியைத்

தரமுயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, ஒரு பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக, உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளியாக, தரமுயர்த்துவதற்கு, அதற்கு இருக்கக்கூடிய நிபந்தனைகளை உரிய வகையிலே அவர்கள் பூர்த்தி செய்து, முறையான முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அதை அரசு பரிசீலிக்கும். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தமிழகத்திலே இருக்கக்கூடிய பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தக்கூடிய காரணங்கள் உள்ளன. தொடக்கக் கல்வியைப் பொறுத்தமட்டிலே, ஓரளவிற்கு பல இடங்களிலே, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பிலே பல பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதிலே, ஒரு குறிப்பிட்ட இலக்கை நாம் அடைந்திருக்கிறோம். இதனுடைய அடுத்த கட்டமாக Universalisation of Secondary Education என்ற அடுத்த கட்டத்திற்கு நாம் போகின்றபோது, தமிழகத்திலே மிகப் பெரும்பான்மையான பள்ளிகளை நாம் தரமுயர்த்திட முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அப்போது நிச்சயமாக பரிசீலனை செய்ய முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**119—**

## சமூக நல அலுவலகம்

***484—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குத் தனியே மாவட்ட சமூக நலத் துறை அலுவலகம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குத் தனியே மாவட்ட சமூக நலத் துறை அலுவலகம் செயல்படுத்த, அரசு ஆணை எண் 53—ல் மே 26 ஆம் தேதியன்றே, ஏற்கெனவே, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவ்வாணையின் அடிப்படையில் அவ்வலுவலகம் ஜூலை 1—ம் தேதி முதல் தனியே செயல்பட்டு வருகிறது. மேலும் மாவட்ட சமூக நல அலுவலகம் தவிர, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி அலுவலகமும், மாவட்ட ஊனமுற்றோர் மறு வாழ்வு அலுவலகமும் புதிதாகத் தொடங்கிச் செயல்பட, தனித் தனியே ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வலுவலகங்களில் பணியாளர்கள் பணி புரிவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வலுவலகம் செயல்பட அதற்குரிய நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு உறுப்பினருக்கு, உங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குத் தனியாக சமூக நலத் துறை அலுவலகம் தந்திருப்பதாக நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அறிவிப்புக்கு நன்றி. இந்தக் கேள்வி, இரண்டு மாதங்களுக்கு முன்பாகக் கொடுக்கப்பட்ட கேள்வி. ஆகவே, அந்த அறிவிப்புக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக, நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**118—**

## சிட்டா நூல்

***785—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம், சென்னிமலைப் பகுதியில் சிட்டா நூலுக்கு இரண்டு விழுக்காடு வரி நீக்கம் செய்யப்படுமா?

[2006 ஆகஸ்ட் 29

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கைத்தறி நெசவாளர் சங்கங்களும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே வைத்த கோரிக்கை ஏற்கப்பட்டு, அரசாணை நிலை எண் 71—ல் 22—7—2006—ல் நிதிநிலை அறிக்கையில், அறிவிக்கை வெளியிடப்பட்டு, சிட்டா நூலுக்கான வரி முழுவதுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள், கடந்தகால ஆட்சியில் கஞ்சித் தொட்டிக்கு அனுப்பிய நெசவாளர்களை மீட்டு, சிட்டா நூலுக்கு வரி விலக்கைத் தந்து, அதோடு மட்டுமல்லாமல், நெசவாளர்களுக்கு இலவச மின்சாரத்தையும் அளித்து, அள்ளித் தந்து, நெசவாளர்களுடைய வாழ்க்கையை வளமாக்கியிருக்கிறார்கள். விவசாயிகளுடைய வாழ்க்கையை வளமாக்கி, கடன்களைத் தள்ளுபடி செய்து, சாதனை படைத்திருக்கிறார் தலைவர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களுக்கு விவசாயம், நெசவும் சார்ந்திருக்கிற காங்கேயம் தொகுதி மக்களின் சார்பிலே, நெசவாளர்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு விவசாயி சம்பந்தப்பட்ட ஒரு சின்ன கோரிக்கையையும் வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு VAT வரி அமல்படுத்தப்படும் என்ற செய்தி வந்திருக்கிறது. VAT அமல்படுத்தப்படுகிறபோது, non-branded, அதாவது brand இல்லாமல் வருகிற வெண்ணெய்க்கு, விவசாயிகள் தங்களுடைய கால்நடைமூலமாக வருகிற பாலைக்கொண்டு, அதைத் தயிராக்கி வெண்ணெயாகத் தயார் செய்து விற்கின்றபோது, அதற்கு 12.5 சதவீதம் வரி VAT மூலமாக வரும் என்கிற அச்சம், விவசாயிகள் மத்தியிலே நிலவிக் கொண்டிருக்கிறது. அப்படி VAT அமல்படுத்தப்படுகிறபோது, வெண்ணெய்க்கு விதிக்க இருக்கிற 12.5 சதவீதம் வரிக்கு, கேரள மாநிலத்தைப்போல, விலக்களிக்கப்படுமா எனபதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முறபகல் 10—35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, VAT அறிவிப்புக்கான அந்த முகாந்திரம், Bill, அறிமுகம்



2006 ஆகஸ்ட் 29]

செய்யப்பட இருக்கிறது. அதற்குப் பின்னர், இதுபற்றிய கருத்துருக்கள் ஏற்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை என் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**120—**

### மீனவர் பயிற்சிப் பள்ளி

***1482—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் மீனவர் பயிற்சிப் பள்ளி அமைத்துத்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், ஏற்கெனவே நான்கு இடங்களில் மீனவர் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில், மீனவர் பயிற்சிப் பள்ளி அமைத்துத்தர திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, பழையாறு, இயற்கையாக அமைந்த மீன் பிடித் துறைமுகம். எல்லா வசதிகளும் அமைந்துள்ளன. அண்மையில் கடல் வசதியுள்ளது. தூரத்திலும் ஆழமான கடல் வசதி உள்ளது. நிறைய மீனவக் கிராம மக்கள்தொகை கொண்ட. மீனவர் கிராமங்கள் உள்ளன. மீன்பிடித் தொழிலுக்குரிய வலை பின்னுதல். கடலில் படகுகள் தொழிலுக்குப் போகும்போது, இயந்திரக் கோளாறு போன்றவை ஏற்படுகிறபோது, அவசியம் பயிற்சி தேவைப்படுவதால், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள், மீண்டும் மறுபரிசீலனை செய்து, சீர்காழி தொகுதி, பழையாறில் மீனவர் பயிற்சிப் பள்ளியை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், தூத்துக்குடி மண்டபம் மற்றும் குளச்சல் ஆகிய நான்கு இடங்களில் மீனவர் பயிற்சிப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் பயிற்சிக்கான மீனவர்களைத் தேர்ந்தெடுத்து, ஜனவரி முதல் அக்டோபர்வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், இந்த நான்கு மீனவர் பயிற்சி நிலையங்களிலும், நவீன மீன்பிடிப்பு மற்றும் சிறுதர கம்மியர் போன்ற சிறப்புப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. நம்முடைய மாண்புமிகு சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்வதைப்போல, நம்முடைய பழையாறு பகுதி மீனவர்கள் நிரம்ப இருக்கக்கூடிய பகுதி. ஆகவே, அவர்கள் சொல்கின்ற அந்தக் கோரிக்கையை, துறையின் அதிகாரிகளோடு பரிசீலனை செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா, எப்போதும் கையைத் தூக்கிக்கொண்டே இருக்கிறீர்கள். கை வலிக்கப்போகிறது. (குறுக்கீடு) திரு. தி.க. ராஜா, (குறுக்கீடு) திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்போரூர் தொகுதியில், கோவளம் பகுதியானது, மீன் வளத்திற்கு மிகவும் பெயர் பெற்ற ஊர். அங்கு மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது குறித்து துறை அதிகாரிகளோடு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2006 ஆகஸ்ட் 29]

(முற்பகல் 10-40)

## 2. தகவல் கோரல்

### (அ) திண்டுக்கல், தந்தை பெரியார் சிலைக்கு இழைக்கப்பட்ட அவமரியாதை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முதல்நாள் இரவு, திண்டுக்கல்லில் தந்தை பெரியார் அவர்களுடைய சிலைக்கு, சில விஷமிகள் நள்ளிரவு நேரத்திலே, சந்தனப் பட்டையைத் தீட்டி, அவரை அவமானப்படுத்தக்கூடிய வகையிலே, பல காரியங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அன்றையதினம், பிள்ளையார் சதுர்த்தி விழா என்பதன் காரணமாக, இந்த மோசமான சம்பவத்தைச் சில விஷமிகள் நடத்தியிருக்கிறார்கள். அதேபோன்று, செல்லாண்டி அம்மன் கோவில் தெருவில், பிள்ளையாரை எடுத்து வரக்கூடிய நேரத்தில், அதற்குப் பாதுகாப்பு என்ற பெயரிலே, சில வீடுகளில் புகுந்து சில இளைஞர்களைக் கைது செய்யக்கூடிய நடவடிக்கையும் நடந்திருக்கிறது. பிள்ளையாருக்கும் பிரச்சினையில்லாமல், தந்தை பெரியாருக்கும் பிரச்சினையில்லாமல், காவல் துறை, பாதுகாப்பிலே ஈடுபட்டிருக்க வேண்டும். தந்தை பெரியாருடைய சிலை, காவல் நிலையத்திற்கு அருகில் இருந்தும்கூட, அங்கே ஒரு கோபுர விளக்கு விடிய விடிய எரிந்து கொண்டிருந்த அந்த நேரத்திலே, எப்படி இப்படிப்பட்ட சம்பவம் நடந்தது என்பது மிகப் பெரிய அதிர்ச்சியை அளிப்பதாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு தமிழகத்தினுடைய, நமது மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள், காவல் துறையோடு உடனடியாகக் கலந்துபேசி, அங்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பதற்ற நிலையைத் தணிக்கவும், திராவிடர் கழகம் மற்றும் தந்தை பெரியாரின்மீது உணர்வுபூர்வமான ஈடுபாடு கொண்டிருக்கக்கூடிய பல்வேறு அரசியல் இயக்கத்தைச் சார்ந்த பொதுமக்களுக்கு, அவர்களுடைய கோபத்தை, ஆவேசத்தைத் தணிக்கக்கூடிய வகையிலும், அந்தக் குற்றத்திலே ஈடுபட்டவர்கள்மீது, உரிய நடவடிக்கை எடுப்பதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம். (குறுக்கீடு) திரு. வை. சிவபுண்ணியம், உட்காருங்கள்.

[2006 ஆகஸ்ட் 29

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரிலே நடைபெற்றிருக்கிற சம்பவம், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருக்கு இழைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொடுமை, அவருடைய கொள்கையை, சித்தாந்தத்தை உள்ளடக்கி, 1967—லேயிருந்து, இன்றைய நாள் வரையிலே, திராவிடக் கட்சிகள்தான் ஆட்சியிலே இருந்து வருகிற ஒரு நிலைமை தமிழகத்திலே இருந்து வருகிறது. இந்தக் கொள்கைக்குச் சில விஷமிகள் குந்தகம் ஏற்படுத்துகிற வகையிலும், தந்தை பெரியாருடைய சுயமரியாதை கொள்கையைக் களங்கப்படுத்துகிற வகையிலும், இதுபோன்று நம்முடைய பேரவைத் தலைவரிடத்திலே ஏற்கெனவே காட்டியிருக்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர், பத்திரிகை ஒன்றின் நகலைக் காட்டினார்.)*

இதுபோன்ற ஒரு விஷமத்தனமான செயலை, தந்தை பெரியாருக்குச் சந்தனமிட்டும், விபூதியை இட்டும், அவருடைய சிலைக்கு அருகிலே, ஊதுபத்தியை எல்லாம் கொளுத்திவைத்து, சாம்பிராணியை வைத்து, இவ்வளவு கேவலமான நிலையை ஏற்படுத்தியிருக்கிற அந்தக் கயவர்கள்மீது, (குறுக்கீடு) இப்படிக் களங்கப்படுத்தியிருக்கிற அந்தக் கயவர்கள்மீது, உடனடியாக நம்முடைய தமிழக அரசாங்கம், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தந்தை பெரியாருடைய வழித்தோன்றலாக இருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதிலே கடுமையான நடவடிக்கை எடுப்பார் என்று கருதி, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, எங்களுடைய கண்டனத்தை வெளிப்படுத்தி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். இதே பிரச்சினைதானே? (குறுக்கீடு) இந்தப் பிரச்சினையைத்தானே பேசுகிறீர்கள்?

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆமாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லிலே நடைபெற்றிருக்கிற இந்தச் சம்பவம் என்பது, குறிப்பாக, பகுத்தறிவுக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களுக்கு மிகப் பெரிய பேரதிர்ச்சியாக இருக்கிறது. தந்தை பெரியாரின் கொள்கையோடு ஆண்டு கொண்டிருக்கிற, டாக்டர் கலைஞருடைய ஆட்சி நடைபெறுகிற



இந்தத் தருணத்தில், இப்படித் தந்தை பெரியார் அவர்களுடைய சிலைக்கு அவமரியாதை செய்வது என்பது, ஓர் உள்நோக்கத்தோடு செய்யப்படுகிற காரியமாகவே நான் கருதுகிறேன். இதைக்கூட பத்திரிகைச் செய்தியிலே நான் பார்க்கிறபோது, "காவல் துறை, அப்படிப்பட்ட விஷமிகளைக் கண்டுபிடித்து, கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாசகத்திலே எனக்கு உடன்பாடு இல்லை. இது பத்திரிகையினுடைய வாசகமாக இருக்கலாம். ஆனால், காவல் துறை அப்படிச் சொல்லியிருந்தால், அது சரியில்லை. வெறும் விஷமிகள் என்று சொல்வது, அது ஓர் ஆழமான அர்த்தத்தைக் கொடுக்கவில்லை என்பது என்னுடைய பணிவான கருத்து. இது உள்நோக்கத்தோடு, திட்டமிட்ட செயலாக நடைபெறுகிறது. தந்தை பெரியாருடைய கொள்கைக்கு எதிராகச் செயல்படுபவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சி அது. பகுத்தறிவுக் கருத்துகளை, சமூகநீதிக் கருத்துகளைச் சொன்ன அந்த ஒப்பற்ற தலைவனுடைய நெற்றிக்குப் பட்டை போடுவது என்று சொன்னாலே, இப்படிப் போடுகிறவர்கள், ஒரு கட்டத்திலே இப்படியே அனுமதித்து விட்டால், நமது சபைக்கே வந்து, நமக்கும் பட்டை போட்டு விடுவார்களோ என்ற அச்சமிருக்கிறது. ஆகவே, இது ஏற்றுக்கொள்ளமுடியாத, மன்னிக்கமுடியாத ஒரு குற்றச் செயல். தந்தை பெரியாருக்கு ஏற்பட்ட அனுபவம் என்பது, தாழ்த்தப்பட்ட, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளிலே ஒன்றாகவே இதைப் பார்க்கிறேன். இன்னமும் அந்தச் சக்திகள் தங்களுடைய வேலையைச் செய்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கும், இந்தக் கருத்துகள், தந்தை பெரியாரின் கருத்துகள், வேகமாகத் தமிழகத்திற்குத் தேவை என்பதை அவர்கள் இதன்மூலமாக உணர்த்தியிருக்கிறார்கள்; அதை விரைவாக மக்களுக்குக் கொண்டு செல்வதற்கான முயற்சியை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, இந்தப் பிரச்சினைபற்றிதானே? திருமதி யசோதா, இதுகுறித்த பிரச்சினைதானே?

**திருமதி டி. யசோதா:** ஆமாம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களை தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், நாங்கள் எல்லாம், எங்களைப் போன்றவர்கள் எல்லாம், கடவுளாகவே நினைக்கின்றோம். அந்தக் கடவுளுக்குரிய மரியாதையை அங்கே இருக்கின்றவர்கள் காட்டியிருந்தால் அதை வரவேற்கலாம். ஆனால், அவருக்குச் சந்தனப் பொட்டு வைத்து, தேங்காய் உடைத்து, கற்பூரம், ஊதுபத்தி கொளுத்தி வைப்பது என்று சொல்வது, அந்தக் கடவுளுக்குரிய மதத்திற்குரியவர்கள் செய்த செயலாக என்னால் எண்ண முடியவில்லை. இதை வேண்டுமென்றே, அவருடைய அந்தக் கொள்கையைப் புண்படுத்த வேண்டும்; கேவலப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திற்குரியவர்கள் இதைச் செய்திருக்கின்றார்கள். இது தொடரக்கூடிய ஒரு நிலைமை ஏற்படாதவண்ணம் நடவடிக்கைகள் கடுமையாக இருக்க வேண்டும். காவல் நிலையத்திற்கு எதிராக இருக்கின்ற ஒரு சிலை, விடிய விடிய விளக்குகள் எரிந்துகொண்டிருக்கின்ற இடத்தில் இருக்கின்ற சிலை, இன்றைக்குப் போலீஸ் மானியக் கோரிக்கை நடைபெறுகின்ற இந்த நேரத்தில், தந்தை பெரியாருடைய சிலைக்கு ஏற்பட்டிருக்கின்ற அந்த நிலையை இந்த மன்றத்திலே சுட்டிக்காட்டுகின்றபோது, இந்த மன்றத்திலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களுடைய மிகவும் வேதனைக்குரிய ஒரு செயலாகத்தான், நாம் கருதுகின்றோம். ஆகவே, நம்முடைய அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய முதல்வர் அவர்கள், கடுமையான நடவடிக்கைகளின்மூலமாக, இதுபோன்ற நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் திராவிடத் தலைவர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய சிலைக்குக் களங்கம் கற்பிக்கின்ற வகையில், சிலைக்கு அல்ல; அவருடைய கொள்கைகளுக்கு, அவருடைய இலட்சியங்களுக்கு, அவருடைய குறிக்கோளுக்குக் களங்கம் கற்பிக்கின்ற வகையில், சிலர் செய்துள்ள சேட்டை குறித்து பத்திரிகைகளிலே செய்தி வந்துள்ளது; படமும் வந்துள்ளது. அது விஷமிகளுடைய வேலை என்று காவல் துறையினர் சொன்னதை நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல், அதைக் கண்டித்திருக்கிறார்.



காவல் துறை இன்னும் வேகமாக, இன்னும் அக்கறையோடு, ஆர்வத்தோடு செயல்பட்டு அந்தக் காரியத்தைச் செய்தவர்கள் யாராயினும், அவர்களைக் கைதுசெய்து குற்றவாளிக் கூண்டிலே ஏற்றக் கடமைப்பட்டிருக்கின்றது. அதற்கான தாக்கீது, அந்த வட்டாரத்திலே உள்ள காவல் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இங்கே இருக்கின்ற தலைமைக் காவலர்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் இதுகுறித்து எச்சரித்துக் கூறப்பட்டிருக்கின்றது. அவர்கள் விஷமிகளாக இருக்க முடியாது. வேறு யாராகவாவது இருக்க வேண்டுமென்று திரு. சிவபுண்ணியம் சொன்னார்.

தந்தை பெரியாருக்கு இத்தகைய இழிவை ஏற்படுத்த வேண்டுமென்று கருதுகின்றவன் நிச்சயமாக நன்றியுள்ள தமிழனாக இருக்கமாட்டான். அதுமாத்திரம் அல்ல; அவன் பன்றிக குணம் படைத்த ஒரு மனிதனாகத்தான் இருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பன்றிகள்தான் இந்த வேலையைச் செய்யும். அதை அவன் செய்திருக்கிறான். இருந்தாலும், பன்றிகளைத் தெருவிலே இப்படி நடமாடவிடக் கூடாது. காவல் துறை கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்; எடுக்க வேண்டும் என்று கூறி, இந்த அளவில் அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) பொது விநியோகத்திற்கு மத்திய அரசின் கோதுமை ஒதுக்கீடு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, என்ன?

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக ration கடைகளிலே வழங்கப்பட்டுவந்த கோதுமையின் அளவு, படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருவதாகப் பல்வேறு பகுதிகளிலிருந்து செய்திகள் வருகின்றன. குறிப்பாக, நம்முடைய திருப்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ration கடைகளில், கடந்த மூன்று மாதங்களாகப் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இந்த மாதம் ration கடைக்கு, கோதுமை ஒதுக்கீடே செய்யப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். மத்திய அரசிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய கோதுமை, உரிய காலத்தில் கிடைக்கவில்லை என்றும் தகவல் தெரிவிக்கிறார்கள். அது உண்மைதானா? அப்படியிருக்குமானால்,

[திரு. சி. கோவிந்தசாமி] [2006 ஆகஸ்ட் 29

மத்திய அரசோடு மாநில அரசு உரிய முறையில் தொடர்பு கொண்டு, தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய கோதுமையை உரிய காலத்திலே பெற்று, பொதுமக்களுக்கு ration விநியோகத்தின்மூலம் அது கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம், உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன்.

*முற்பகல் 10—50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிற்கு, 8,000 மெட்ரிக் டன் கோதுமை தேவைப்படுகிறது. இப்போது 3,783 மெட்ரிக் டன் கோதுமைதான் வந்துகொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்பேரில் டெல்லிக்குச் சென்று, சம்பந்தப்பட்ட மாண்புமிகு மத்திய அமைச்சர் சரத் பவார் அவர்களைப் பார்த்துக் கடிதம் கொடுத்திருக்கிறோம். ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி, இங்கே முதலமைச்சர் அவர்களைச் சந்திக்கிறபொழுது, அவர்களும் அதை வலியுறுத்தியிருக்கிறார்கள். உடனே, இந்த மாதமே அனுப்புவதாகச் சொன்னார்கள். நேற்றையதினம்கூட நாங்கள் fax கொடுத்திருக்கிறோம். எனவே, கட்டாயம் வரும்; வந்தவுடனே இது நிறைவு செய்யப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## (இ) பாபநாசம் தாலுகா, ஆற்றில் விழுந்து இறந்த ஆதிதிராவிட மாணவியரின் குடும்பத்தினர்க்கு நிதியுதவி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைக்கண்ணு, என்ன? சொல்லுங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், பாபநாசம் தாலுகாவில், புள்ளபூதங்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் இரண்டு ஆதி திராவிட மாணவிகள், தனியாக tuition சென்றுவிட்டுத் திரும்பும்போது, அவர்கள் கரையோரத்தில் வந்தபோது, தவறி ஆற்றில் விழுந்து இறந்துவிட்டார்கள். 6 ஆம் தேதி இறந்தவர்களில், 6 ஆம் தேதியன்று ஒருவருடைய சடலத்தையும், 7 ஆம் தேதியன்று ஒருவருடைய சடலத்தையும் கைப்பற்றி, பிரேதப் பரிசோதனை செய்து, பெற்றோரிடத்தில்



2006 ஆகஸ்ட் 29] [திரு. இரா. துரைக்கண்ணு]

ஒப்படைத்துள்ளார்கள். இதுவரை, இறந்த மாணவியர்களுடைய குடும்பத்திற்கு எந்தவிதமான நிதியுதவியும் வழங்கப்படவில்லை. ஆகவே மாணவிகளை, அந்தக் குழந்தைகளை இழந்து தவிக்கும் அந்தக் குடும்பத்திற்கு, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நிதியுதவி வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்வு குறித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்பொழுதுதான் என்னுடைய கவனத்திற்கு இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு முன்னதாகவே எனக்கு அவர்கள் தெரிவிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருந்தால், நிச்சயமாக அதுகுறித்து நான் அறிந்து, அதற்கு எந்தவகையிலே அரசின், மூலமாக உதவிகளைச் செய்திருக்க முடியுமோ, அதைச் செய்திருக்க இயலும். எனவே, இப்போது நீங்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய தகவலின் அடிப்படையிலும், அதிகாரிகளைக் கொண்டு, தொடர்ந்து அந்த இடத்திலே விசாரித்தும், அரசு எந்தவகையிலே அவர்களுக்கு உதவிகள் செய்ய முடியும் என்பதைப் பரிசீலித்து, நிச்சயமாக ஆவன செய்யப்படும்.

# 3. கவன ஈர்ப்பு

## திருப்பதியாபுரம் கிராமத்தில் சிறுத்தை நடமாட்டத்தால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பீதி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55—ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதி, மணிமுத்தாறு பேரூராட்சிப் பகுதியிலே, திருப்பதியாபுரம் என்ற மலையடிவாரக் கிராமத்தில், 7—8—2006—லிருந்து தினமும் இரவு நேரங்களில் புலிகள் வந்து, அட்டகாசம் செய்வதோடு, ஆடுகள், மாடுகள், நாய்களையும் அடித்துக் கொன்று விடுகின்றன. எந்த நேரத்திலும் ஆட்களுக்கும் ஆபத்து வரும் நிலை உள்ளதால், மக்களும் பெரும் அச்சத்தில் உள்ளனர். எனவே, மக்களின் அச்சத்தைப் போக்கவும், புலிகளின்

நாசவேலைகளைத் தடுத்து நிறுத்தவும், வனத் துறைமூலம் நடவடிக்கை எடுத்து, மலையடிவாரக் கிராமங்களில் மின் வேலி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், திரு. பா. வேல்துரை அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிக்கைக்குத் தகுந்த விவர அறிக்கை, அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது.

## அறிக்கை

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதி, மணிமுத்தாறு பேரூராட்சிப் பகுதியிலுள்ள, திருப்பதியாபுரம் கிராமத்தில், 7–8–2006 அன்று புலி ஒன்று, காட்டிலிருந்து வந்து, ஆடு, மாடு மற்றும் நாய்களைத் தூக்கிச் செல்வதாகவும், அதனால் மக்கள் பீதி அடைந்துள்ளதாகவும் தகவல் பெறப்பெற்றவுடன், பாபநாசம் வனச் சரகர், தனது வனச் சிப்பந்திகளுடன் திருப்பதியாபுரம் கிராமம் சென்று விசாரணை செய்து தணிக்கை மேற்கொண்டபோது, வனப் பகுதியிலிருந்து கிராமத்திற்குள் வந்த மிருகம் சிறுத்தை என்று அறியப்பட்டு, மக்களிடம் இதுகுறித்துப் பீதி அடைய வேண்டாம் எனவும், வந்தது புலி அல்ல, சிறுத்தை என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், இதுவரை சிறுத்தை, ஒரே ஒரு நாயை மட்டும் தூக்கிச் சென்றதாக அறியப்பட்டுள்ளது. இதை வனச் சிப்பந்திகள் நேரில் பார்த்து உறுதி செய்துள்ளனர். ஆடு, மாடு எதுவும் தூக்கிச் செல்லப்பட்டு, சிறுத்தையால் கொல்லப்படவில்லையென அறியப்பட்டுள்ளது.

இதுவரையில் மேலே குறிப்பிட்டுள்ள இடத்தில் மின் வேலி எதுவும் அமைக்கப்படவில்லை. மின் வேலி அமைத்தாலும், சிறுத்தை வனப் பகுதியிலிருந்து ஊருக்குள் வருவதைத் தடுப்பதற்கு முழு உத்தரவாதம் கிடையாது. மேலும், இக்கிராமம் வனப் பகுதியை ஒட்டியுள்ளதால், அப்பகுதியில் மின் வேலி அமைத்தால், சிறு குழந்தைகளுக்கு மின்சார வேலியினால் ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது.

மின் வேலிக்குப் பதில், சுமார் 8 கிலோ மீட்டர் தூரம், மேலே குறிப்பிட்ட கிராமப் பகுதியில் வனப் பகுதியை ஒட்டிக் கல் சுவர் கட்டினால், சிறுத்தை போன்ற மிருகங்கள் வருவதைத் தடுக்க முடியும்.



7–8–2006 முதல், 12 வனச் சிப்பந்திகள் (3 வனக் காப்பாளர்கள், 3 வனக் காவலர்கள் மற்றும் 6 வேட்டைத் தடுப்புக் காவலர்கள்) இரவுபகலாகத் திருப்பதியாபுரம் கிராமத்திலே தங்கியிருந்து, பட்டாசு வெடித்தும், இரவு நேரங்களில் search light காண்பித்தும், சிறுத்தையை வெகுதூரம் வனப்பகுதிக்குள் விரட்டியடித்து, பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளித்துள்ளனர். இந்தப் பாதுகாப்பு, இன்றுவரை தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், கடந்த ஒருவார காலமாக, சிறுத்தையின் நடமாட்டம் அங்கு தென்படவில்லை. ஆதலால், மக்கள் பீதியின்றி இருக்கின்றனர். சிறுத்தை காட்டிற்குள் சென்றுவிட்டதால், அதைக் கூண்டு வைத்துப் பிடிக்க நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

மேலும், கடந்த 9–8–2006 அன்று, தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் சூழல் மேம்பாட்டு அலுவலர், அம்பாசமுத்திரம், துணை இயக்குநர் ஆகிய அதிகாரிகள், திருப்பதியாபுரம் கிராமம் சென்று, வனக் குழுத் தலைவர், பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் பொதுமக்களைச் சந்தித்து விசாரணை நடத்தினார்கள். மக்கள் பீதியடையாமல் இருக்க, வனத் துறை முழு ஒத்துழைப்புத் தருவதற்கு உறுதி அளிக்கப்பட்டது.

வனப் பகுதியை ஒட்டியுள்ள கிராமப் பகுதிகளில் நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்ப, தடுப்புச் சுவர் கட்டி, நிரந்தரத் தீர்வு காண ஏற்பாடு செய்யப்படுமென அம்பாசமுத்திரம் துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அங்கே வந்தது புலிகள் அல்ல; சிறுத்தைகள்தான் என்று அறிக்கையிலே அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். புலிகளாக இருந்தாலும் சரி, சிறுத்தைகளாக இருந்தாலும் சரி, மக்களுக்கு ஆபத்து என்பதை இந்தச் சபையோர்கள் எல்லோருமே அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்றவை புலிகளா, சிறுத்தைகளா என்பதை இங்கேயே கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்! (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை. (குறுக்கீடு)

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ரவிக்குமார், உட்காருங்கள். திரு. பா. வேல்துரை, பேசுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை சிறுத்தையால், ஒரேயொரு நாய் மட்டும்தான் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறது என்றும், மாடுகளையோ, மற்ற மிருகங்களையோ அல்லது மனிதர்களையோ அது தாக்கவில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அது தாக்கிய பிறகுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதல்ல. தாக்குவதற்கு முன்பாகவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தடுப்பு நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10–55*

அதுபோன்று, மின் வேலி அமைக்க வேண்டுமென்று—எனது சேரன்மகாதேவி தொகுதியில் அந்தப் பகுதியும், அதேபோன்று மலையடிவார கிராமம்தான்—நான் கேட்டிருந்தேன். அதிகாரிகள், மின் வேலி அமைத்தால், அது முழுமையான பலனைத் தராது. அதோடு அந்தப் புலிகளைத் தடுக்கவும் முடியாது. மேலும், அந்தக் கிராமத்திலே வசிக்கின்ற குழந்தைகள்கூட, அந்த மின் வேலியிலே சிக்கி, உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு, ஆறு கிலோமீட்டர் தூரத்திற்கு நிரந்தரமாகச் சுவர் கட்டினால், அந்தப் புலிகளுடைய வரவைத் தடுக்கமுடியும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சுவர் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லவில்லை. எனவே, இந்த ஆண்டு, உடனடியாகச் சிறப்புத் திட்டமாக, இந்த ஆறு கிலோ மீட்டருக்கும், தடுப்புச் சுவர் கட்டுவதற்கு நமது அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதி, மணிமுத்தாறு பேரூராட்சிக்கு உட்பட்ட திருப்பதியாபுரம்





கிராமத்தில், 7–8–2006–லே, இதுபோல புலி வந்து அட்டகாசம் செய்வதாகவும், ஆடு மாடுகளையும், நாய்களையும் தூக்கிச் செல்வதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டு, உடனடியாக பாபநாசம் வனச் சரகர், தன்னுடைய தலைமையில், மூன்று வனக் காப்பாளர்களையும், மூன்று வனக் காவலர்களையும், ஆறு வேட்டைத் தடுப்புக் காவலர்களையும் அழைத்துச் சென்று, இரவு 8½ மணியளவில், வந்தது புலியா அல்லது சிறுத்தையா என்பதை ஆய்ந்து பார்த்து, அங்கிருப்பவர்கள் அந்தத் தடயங்களை வைத்துப் பார்த்து, அது சிறுத்தைதான் என்பதைச் சொல்லி, அதன் பின்னாலே, அந்த நேரத்தில் இந்த search light வைத்து, அந்த ஒளியினாலே, அந்தச் சிறுத்தை காட்டின் உள்பகுதிக்குச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் பின்னாலே, அந்த மக்களிடம், அந்த அச்சத்தைப் போக்கியிருக்கிறார்கள். 9 ஆம் தேதி, மீண்டும் அந்தப் பகுதியினுடைய தலைமை வனப் பாதுகாவலரும், அதைப்போல சூழல் மேம்பாட்டு அலுவலரும், இன்னும் புலித் திட்டத்தினுடைய துணை இயக்குநர் அவர்களும் அந்த ஊருக்குச் சென்று, ஊராட்சி மன்றத் தலைவரை, வனக் குழுத் தலைவரை, அந்தப் பொதுமக்களையெல்லாம் சந்தித்து, ஆய்ந்து பார்த்து, அவர்களிடம் அந்த விளக்கங்களைக் கேட்டு, அவர்களிடம், அவர்களுடைய உத்தரவாதத்தை அளித்திருக்கிறார்கள். அந்த நேரத்தில், அவர்களெல்லாம், எங்களுக்குச் சுவர் கட்டித் தாருங்கள் என்று அவர்களிடம் கேட்டிருக்கிறார்கள். அதன் பின்னாலே, அங்கே அந்தக் காவலர்களெல்லாம், அங்கேயிருந்து ரோந்துப் பணிகளிலும், அந்த மக்களுக்குப் பாதுகாப்பாக இன்றுவரை அங்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். எந்த்வித அச்சமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், தங்களுடைய தொகுதி என்ற காரணத்தால், நீங்கள் 17–8–2006–ல், 2–00 மணியளவில் அங்கே சென்று, அவர்களிடம் விசாரணை நடத்திவிட்டு, புலிகள் திட்டத் துணை இயக்குநர் அவர்களிடம், தொலைபேசியிலே தொடர்பு கொண்டு கேட்டிருக்கிறீர்கள். அவர்களெல்லாம், அதற்குக் கல் சுவர் கட்டிக் கொடுக்கின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மின் வேலி அமைப்பதைப்பற்றிச் சொன்னார்கள். மின் வேலி அமைப்பது என்பது ஒரு ஆறு அடி உயரத்திற்குத்தான் அமைக்க முடியும்; அப்படி அமைப்பது வழக்கமாக இருந்து வருகிறது, யானைகள், மற்ற விலங்குகளெல்லாம் செல்லும்போது, அதைத் தொட்டால் அங்கே, அந்த ஒரு shock இருக்கின்ற காரணத்தால், செல்லாது என்கின்ற உணர்வுக்கு. ஆனால், சிறுத்தை போன்ற அந்த விலங்கினங்களெல்லாம்

[திரு. என். செல்வராஜ்] [2006 ஆகஸ்ட் 2

ஒரு 15 முதல் 20 அடி உயரம் தாண்டுகின்ற ஆற்றல் பெற்றவை. எனவே மின் வேலி அமைத்தால் அது, அதற்குப் பயன்படாது. கல் சுவர்தான் கட்டவேண்டும். கல் சுவர் கட்டுவதென்றால், நிதி அதிகமாக செலவாகும். ஒரு கிலோ மீட்டர் மின் வேலி அமைப்பதென்றால் 1,64,000 ரூபாய், இப்பொழுது மதிப்பீடு இருக்கிறது. ஆனால், அதையே சுவர் கட்ட வேண்டுமென்றால், 50—லிருந்து 75 இலட்சம் ரூபாய் செலவாகும். ஏனென்றால் 20 அடி உயரம் சுவர் கட்டவேண்டும் எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்து சென்று, நிதிநிலை ஆதாரங்களை ஆராய்ந்து, 6 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கட்டவேண்டிய அந்த கல் சுவர் கட்டுவதற்கு, இந்த ஆண்டு இல்லையென்றாலும், வருகின்ற ஆண்டிலோ அல்லது இந்த புலிகளைப் பாதுகாக்கவேண்டும் என்பது மத்திய அரசினுடைய திட்டமாக இருக்கின்ற காரணத்தால், மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்லி, அவர்களிடம் நிதியைப் பெற்று, விரைவிலே அந்த பணிகள் துவக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 22 – உள் துறை – காவல்**

**(ஆ) கோரிக்கை எண் 23 – உள் துறை – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

**(இ) கோரிக்கை எண் 37 – மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

– – –

### (அ) கோரிக்கை எண் 22 – உள் துறை – காவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 22 – உள் துறை – காவல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,



2006 ஆகஸ்ட் 29] [கலைஞர் மு. கருணாநிதி]

"உள் துறை—காவல் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,526,28,31,000/–, மூலதனக் கணக்கில் ரூ. 116,65,71,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.2,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11•30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1811, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முடீஸ் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—காவல் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,526,28,31,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.116,65,71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5994, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் ஒன்றியம், பகண்டை கூட்டுச் சாலையில் புதிய புறக்காவல் நிலையம் ஒன்றினை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை—காவல் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,526,28,31,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.116,65,71,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3597, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப்பட்டு தொகுதி, அம்மையார்குப்பம் புறக்காவல்

நிலையத்தை முழுக் காவல் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"உள் துறை—காவல் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,526,28,31,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.116,65,71,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6373, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காங்கேயம் பஸ் நிலையத்தில் புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"உள் துறை—காவல் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,526,28,31,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.116,65,71,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9419, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6152, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட காவல் நிலையங்களில் கூடுதல் காவலர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"உள் துறை—காவல் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,526,28,31,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.116,65,71,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2302, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4225, திரு. கே.எல். இளவழகன்.



**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதி, ஆற்காடு நகரில் போக்குவரத்தைச் சரிசெய்ய, போக்குவரத்துக் காவல் பிரிவைத் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"உள் துறை—காவல் பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,526,28,31,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.116,65,71,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,00,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5505, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் ஆறாக ஓடிக்கொண்டிருந்த கள்ளச்சாராயம், இந்த ஆட்சியில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் அதனை முற்றிலும் ஒழிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொல்லவில்லையென்றாலும் எனக்குத் தெரியும். நீங்கள் 11—13-க்குப் பேச ஆரம்பித்தீர்கள்; இப்போது 11—23 ஆகின்றது. ஒருவர் சொல்லித்தான் நான் செயல்பட வேண்டுமென்ற அவசியம் எனக்குக் கிடையாது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அடுத்து, செய்தித் துறை அமைச்சர் சொல்வார். இது பெரிய துறை; 3 துறைகள் சம்பந்தப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாளைக்கு உங்கள் தலைவர் பேசுகிறார். (குறுக்கீடு)

**திரு. பி.கே. சேகர்பாபு:** நான் ஆக்கபூர்வமான கருத்தைத்தான் சொல்கிறேன். எதுவும் controversy-க்குள் நான் போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். இன்னும் ஒரு நிமிடம் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** Deputy Speaker Sir,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறைக்கு இவர்கள்தான் அரிய சாதனைகளைச் செய்ததாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால், இந்தக் காவல் துறையை நவீனமயமாக்க மூன்று முறை Police Commission அமைத்து, அதனுடைய பரிந்துரைகளை ஏற்று, நிறைவேற்றி, நவீனமயமாக்கியவர் இன்றைய முதலமைச்சர் எங்கள் தானைத் தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் சொல்லவில்லை; காவல் துறையில் I.G.—யாகப் பணிபுரிந்து, அண்மையில் மறைந்துவிட்ட திரு. I.G. Arul அவர்கள்.

தன்னுடைய பணிக் காலத்தில் நடந்த சம்பவங்களையெல்லாம் தொகுத்து (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு புத்தகம் எழுதினார். அந்தப் புத்தகத்தின் பெயர் ஒரு போலீஸ்காரன் டைரி. அந்தப் புத்தகத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்:

"இந்தியாவிலே முதன்முதலாக போலீஸ் கமிஷனை நியமித்து, அதனுடைய பரிந்துரைகளை 90 சதவிகிதம் ஏற்று நவீனமயமாக்கியவர் தமிழ்நாட்டு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்" என்பதை, I.G. Arul அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சேகர்பாபு, பேசுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: தொகுதியிலே பார்க்கும்பொழுது சொல்லிக்கொள்ளலாம். கொள்கை விளக்கக் குறிப்பிலேயே வந்திருக்கிறது, இதெல்லாம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 19—10—2004 அன்று அமைதியாக விடிந்த ஒரு அதிகாலை நேரம். செய்தித்தாள்களிலும், உலகத் தொலைக்காட்சியிலும் பரபரப்பான தலைப்புச் செய்தி அது. தமிழ்நாட்டில் மட்டும் அல்ல; இந்தியாவில் மட்டும் அல்ல; உலக அளவிலே தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட அனைவர் உள்ளங்களிலும் உற்சாகத்தில் துள்ளிய காட்சி அது. காட்டுக் கொள்ளையன் வீரப்பன் மூச்சுக் காற்றுக்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் வழிகாட்டுதலால் காவல் துறை முற்றுப்புள்ளி வைத்த தினம் அது. (குறுக்கீடுகள்) அந்த அட்டா என்றால் என்ன? ஊறுகாய் சாப்பிட்டதாலே வருவதா? மூவாயிரம் யானைகளையும்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைதி, அமைதி.

திரு. பி.கே. சேகர்பாபு: ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: Sir, Sir, Deputy Speaker Sir,...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Sekarbabu, I have got every right to enlighten the House. The Chairperson has got every right to enlighten.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



(குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். உங்களுக்கு நான், நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்; தீவிரவாதம் என்பது உலகம் தழுவிய ஒரு பிரச்சினை. நீங்கள் சட்டம்—ஒழுங்கை மட்டும் பேசுங்கள். தீவிரவாதம், எந்தவோர் இடத்திலும் ஒழிக்க முடியாத ஒன்று. இது Supreme Court—னுடைய verdict. அது சம்பந்தமாகப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) கொறடா, என்ன சொல்கிறார்? சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது,- (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இருங்கள், அமைதியாக இருங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: **

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: அப்படிப் பார்த்தால் ஜெயா தொலைக்காட்சியிலேகூட எத்தனையோ சமுதாய விரோதிகள் பேட்டி கொடுத்திருக்கிறார்கள். ** ஜெயா தொலைக்காட்சியிலே யார், யார் பேசினார்கள்? எல்லோரும் அரசியல் கட்சித் தலைவர்கள் மட்டும்தான் பேசினார்களா? அங்கேயும் தீவிரவாதிகள் பேசினார்கள். சமுதாய விரோதிகள் பேசி இருக்கிறார்கள். (கூச்சல்) (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) அமைச்சர் பதில் சொல்லியாகிவிட்டது; விடுங்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: எனவேதான் ** என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள் நீங்கள்.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. சார்பில், வீரப்பனை அடக்கிவிட்டதாக, வீரப்பனுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்ததாகத் தொடர்ந்து சொல்கிறார்கள். நான் அதற்குள்ளே போகவில்லை. (குறுக்கீடு) நான் அதற்குள்ளே போகவில்லை. அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால், வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரால் பல நூற்றுக்கணக்கானவர்கள், அப்பாவிகள், வீரப்பனைக் குழந்தைப் பருவத்திலிருந்து பார்க்காதவர்கள், உயிர் இழந்தார்கள். அதற்குக் காரணம், அன்றைய அரசு, காவல் துறைக்குத் தனி அதிகாரம் கொடுத்து காக்கை குருவிகளைப்போல, காட்டுமிராண்டித்தனமாகச் சுட்டுக் கொன்றார்களே, அந்த உயிர்களுக்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதுமட்டுமல்ல; பல நூற்றுக்கணக்கான உயிர் இழப்புகள். அதுமட்டுமல்ல; அப்பொழுது ஏழைப் பெண்களை விசாரணை என்ற பெயரால் அழைத்துச் சென்று, தலைகீழாகத் தொங்கவிட்டு பெண்களைப் பிறப்புறுப்பு என்றுகூட பாராமல், அதிலே மின்னிணைப்பு கொடுத்துச் சுட்டார்களே, மூக்கு, கண், காது, பிறப்புறுப்பு எல்லாவற்றிலுமே* electric shock *கொடுத்தார்கள்; சித்திரவதைப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் இன்றைக்கு இன்னும் நடுரோட்டிலே அலைந்துகொண்டு இருக்கிறார்கள், எந்த உதவியும் இல்லாமல். அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? எவ்வளவு கொடூரம் நடந்தது, தாக்குதல் நடந்தது என்பதை அவர்கள் இங்கே விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆள் அனுப்பி, அப்போது வீரப்பனுக்குப் பாதுகாப்புக் கொடுத்தது யார்? அர்ஜுனனுக்கு மருத்துவச் சிகிச்சை கொடுத்தது யார்? எப்போதோ பிடித்திருக்க வேண்டியவனை வளர விட்டதே நீங்கள்தான். உங்கள் ஜெயலலிதாவினுடைய ஆட்சியிலேதான் வளரவிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கொள்ளை அடிக்க விட்டுவிட்டு எல்லாம் செய்தது நீங்கள்.*



இந்த ஆட்சியிலே, ஒரு நடிகரைப் பிடித்து வைத்திருக்கிறபோது, அந்த நடிகரைப் பிடித்து வைத்திருக்கிறபோது, காப்பாற்றிக் கொடுத்தவர் தலைவர் கலைஞர் என்பதை கர்நாடகத்திலேகூட பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதே உங்கள் ஆட்சியில், பிடித்து வைத்திருந்த நடிகரை நீங்களே கொலை செய்துவிட்டு, அவன் கொலை செய்தான் என்று அவன்மேல் பழி போட்டது உண்மை. அதெல்லாம் நடந்திருக்கிறது. நிறைய நடந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் இரண்டு பேரில் யார் பேசுகிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 'நக்கீரன்' கோபால் போய் அங்கே வீரப்பனைப் பார்த்து வருவதற்கு அனுமதி அளித்தவர்கள் யார்? 'நக்கீரன்' கோபால் போவதற்குக்கூட அனுமதி அளித்து, அந்தக் காவல் துறையால் அன்றைக்குப் பிடிக்க முடியவில்லையென்று சொன்னால், யாருடைய ஆட்சியிலே வீரப்பனை வளர்த்திருக்கிறார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், யார் யார் என்றார். அது யார் யார் என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும். நாங்கள் விளக்க வேண்டியது இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு, அடுத்த subject–க்குப் போங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** சரி, சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போங்கள் சீக்கிரம். பேசி சீக்கிரம் முடியுங்கள். Time ஆகிவிட்டது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** என்னங்க? இன்னும் இரண்டு நிமிடங்கள்கூட ஆகவில்லை, ஆரம்பித்து!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இந்த நிகழ்வினால், இந்த ஒரு மாநிலத்திலே நடைபெறுகின்ற ஒரு நிகழ்வு, ஒரு நாட்டினாலே பாராட்டப்படுவதுண்டு. (குறுக்கீடு) ஆமாம், அரை மணி நேரம் ஆகிவிட்டது! (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 18 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** ஒரு மாநிலத்திலே நடைபெறுகின்ற ஒரு நிகழ்வினால், ஒரு நாட்டிற்குப் பெருமை ஏற்படுவதுண்டு. (குறுக்கீடுகள்) ஆனால், ஒரு மாநிலத்திலே (குறுக்கீடுகள்) நடைபெறுகின்ற ஒரு நிகழ்வினால், உலகத்திற்கே ஒரு மாநிலத்தினால் ஒரு நாட்டிற்குப் பெருமை வந்தது என்றால் அது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த இந்த நடவடிக்கையால்தான் என்பதை இன்றைக்கு நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 19... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு, அவருடைய கருத்தை இங்கே பதிவு செய்துகொண்டிருக்கின்றார். எதிர்த் தரப்பிலேயிருந்து running commentary, பின்னாலேயே பேசிக்கொண்டிருந்தால் எப்படி அவர் பேச முடியும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) நான் பார்த்துக்கொள்கிறேன்; அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் ஆட்சேபணைக்குரிய ஏதாவது சொல்லியிருந்தால், பொறுப்பில் இருக்கின்றவர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடு) சரி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவரவர் இருக்கையிலே உட்கார்ந்து கொண்டு running commentary கொடுத்துக்கொண்டேயிருந்தால், எப்படி அவர் பேச முடியும் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன், Sir. (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன், எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) O.P.S. நான் சொல்லிவிடுகிறேன், நீங்கள் உட்காருங்கள். உறுப்பினர் பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அனைவரும் உட்காருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** 1991 ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தபோது, தமிழகத்திலே ஆறு தீவிரவாதக் குழுக்கள் நடமாடிக்கொண்டிருந்தன. (குறுக்கீடு)

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோ பாருங்கள், அவர் முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் subject-ஐ முடிக்கட்டும். (குறுக்கீடு) சொல்லுங்கள். திரு. சேகர்பாபு, கொஞ்சம் பொறுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இப்போது நான் பேச முற்படுகிறேன்; பின்னாலேயிருந்து திடுதிடுப்பென்று குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், விஷயத்தைச் சொல்லுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** சொல்கிறேன். இந்த அவையிலே நம்முடைய அமைச்சர் பெருமக்கள் பேசுகிறபோதுகூட, எதிர் வரிசையிலே இருக்கிற பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் மிக மோசமான கேவலமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். இவற்றையெல்லாம்

கட்டுப்படுத்த அவர்களுடைய தலைவர்கள் தயாராக இருக்கிறார்களா? எங்களுடைய தலைவர் இப்போது பேசிக்கொண்டிருக்கிறார். சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். இதைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்களுடைய தலைவர்கள் தயாராக இருக்கிறார்களா என்பதை முதலிலே கேட்க வேண்டும். முதலிலே, தான் சரியாக, தன்னுடைய கட்சியை வழிநடத்திக்கொண்டு, எதிரில் இருக்கிறவர்களை முறைப்படுத்துவதற்கு அவர் முயல வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அவர் கட்டுப்படுத்துவார் என்று எதிர்பார்க்கிறோம். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். உட்காருங்கள். *(குறுக்கீடு)* திரு. செங்கோட்டையன், என்ன இது? நான் சொல்கிறேன். அதாவது, அவர் என்ன சொல்கிறார்? எதிர்க்கட்சி உறுப்பினர்கள், 'அவர்களுடைய தலைவர் சொல்வதைக் கேட்டு நடப்பார்களா?' என்று கேட்கிறார். நீங்கள், 'கேட்டு நடப்பார்கள்' என்று சொல்லிவிட்டு உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* கேட்டு நடக்கமாட்டேன் என்கிறார்கள் என்றுதானே அவர் சொல்கிறார்? *(குறுக்கீடுகள்)* திரு. சேகர்பாபு, சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்ற நேரத்தில், இந்தத் தமிழகத்திலே தீவிரவாதம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. எண்ணிலடங்கா தீவிரவாதக் குழுக்கள் இந்தத் தமிழகத்திலே செயல்பட்டுக்கொண்டிருந்தன. அன்றைக்கு, விடுதலைப் புலிகளின் நடமாட்டமும் இந்தத் தமிழ் மண்ணிலே விதைக்கப்பட்டிருந்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், விடுதலைப் புலிகளினுடைய நடமாட்டத்தை முற்றிலுமாக, முற்றிலுமாக—*(குறுக்கீடு)* தலைவருக்கே கோபம் வருகிறது என்று நினைக்கிறேன், அவர்கள் கொடுக்கிற comment—லே.

*முற்பகல் 11—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இருக்கட்டும். *(குறுக்கீடு)* இதோ பாருங்கள். *(குறுக்கீடு)* இதோ பாருங்கள். 22 நிமிடங்கள் ஆகிவிட்டன. உங்கள் subject—ஐ முடிக்கிறீர்களா, என்ன? *(குறுக்கீடு)* முடியுங்கள் சீக்கிரம்.



**திரு. பி.கே. சேகர்பாபு:** புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முற்றிலுமாக இந்த நாட்டைவிட்டு விடுதலைப் புலிகளை ஓட ஓட விரட்டியடித்த பெருமை, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற 30 மாநிலங்களிலே, பாபர் மசூதி இடிப்புத் தினமான டிசம்பர் 6—லே, இந்தியாவிலே இருக்கிற அனைத்து மாநிலங்களிலே, வன்முறைக் கலவரங்கள் உண்டாகி இருந்தன. ஆனால், தமிழகத்திலே மாத்திரம் பாபர் மசூதி இடிப்புத் தினமான டிசம்பர் 6—லே எந்தவிதமான வன்முறைக் கலவரமும் நடைபெறாமல், தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஏற்படுத்தியவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிசம்பர் 6—லே கர சேவைக்கு இங்கேயிருந்து ஆளை அனுப்பியவர்களே அந்தக் கட்சியைச் சார்ந்த ஜெயலலிதாதான். தீவிரவாதத்தை இந்த மண்ணிலே தூண்டியவர்களே அவர்கள்தான் பேரவைத் தலைவர் அவர்களே, மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்து, இந்த மண்ணிலே தீவிரவாதத்தைத் தூண்ட நினைத்தவர்களும் அவர்கள்தான். இவ்வளவும் பண்ணிவிட்டு, மத வெறியை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தவர்களே அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள்தான். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நீங்கள். *(குறுக்கீடு)* உங்கள் உறுப்பினர் முடித்துவிட்டாரா? *(குறுக்கீடு)*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிசம்பர் 6 கர சேவையைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** எங்களைப் பொறுத்தவரையிலும், கர சேவைக்கு ஆள் அனுப்பவில்லை; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை; இது ஒன்று. இரண்டாவது, கர சேவையைப்பற்றிப் பேசுவதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தகுதி இல்லை. அவர்கள் B.J.P.—யோடு தொடர்பு வைத்துக்கொண்டு, அமைச்சரவையிலே பங்கு பெற்றவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது மத்தியிலே இருந்த ஆட்சியில், தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூடியபோது அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்ட அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள், 'கர சேவையை நாங்கள் ஆதரிக்கிறோம்' என்று தெரிவித்து, பதிவாகி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், பாபர் மசூதி இடிக்கின்ற நேரத்திலே, அதைக் கண்டித்து முதன்முதலில் சிந்தாதிரிப்பேட்டையிலே குரல் கொடுத்த ஒரே தலைவர், இந்தியாவிலே எங்களுடைய தலைவர் கலைஞர்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? எடுத்ததற்கெல்லாம் பேச வேண்டும், பேச வேண்டும் என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. சேகர்பாபு. (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்; மத்தியிலே நடைபெற்ற அந்தக் கூட்டத்தில், கர சேவையைப்பற்றிப் பேசுகிறபோது, மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்; தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்; 'அங்கே இராமர் இருக்கின்ற இடமும், கர சேவையும் அதற்கு ஏற்பட்டிருக்கிற நிலைகளைக் குறித்து ஆய்வு செய்து, அதிலே முடிவு செய்ய வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார்களேதவிர, திராவிட முன்னேற்றக் கழகம், ஏன்...(குறுக்கீடுகள்) இருங்கள், பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** திராவிட முன்னேற்றக் கழகம் கர சேவையைப்பற்றிப் பேசுவதற்கு—பாரதிய ஜனதா கட்சியோடு தொடர்ந்து ஐந்தாண்டுக் காலம் கூட்டணி மந்திரி சபையிலே இடம் பெற்றுக்கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம்; ஏன் அன்றைய கூட்டணியிலேயிருந்து வாபஸ் பெறவில்லை? அதைத்தான் இந்த நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் அப்போது ஓய்வில் இருந்தார். ஆக, இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், அன்று வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள், அவரே என்ன சொன்னார் தெரியுங்களா? "B.J.P.–யினுடைய ஊதுகுழலாக ஜெயலலிதா செயல்படுகிறார்" என்று, மறைந்த வாழப்பாடி ராமமூர்த்தி



அவர்கள் statement கொடுத்திருக்கிறார். ஆக, இதெல்லாம் அவர் சொன்னமாதிரி, மக்களுக்கே தெரியும். நடந்த உண்மைகளை, வரலாற்று உண்மைகளை தயவுசெய்து திரிக்க நினைக்காதீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், விடுங்கள். (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, பேசுங்கள். திரு. சேகர்பாபு.

*முற்பகல் 11–40*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவத்தைப் பொறுத்த அளவில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். பேச்சை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அந்த 6 ஆம் தேதி, அன்று மற்ற மாநிலங்களுக்குக் காவல் துறையைப் பாதுகாப்பிற்கு அனுப்பி, தமிழகக் காவல் துறைக்குப் பெருமை தேடித் தந்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைய முதலமைச்சராக இருக்கின்ற கருணாநிதி அவர்கள் ஆட்சி காலத்திலே... (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேகர்பாபு. (குறுக்கீடுகள்) சேகர்பாபு. (குறுக்கீடுகள்) சேகர்பாபு சொன்ன தேவையில்லாத அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) அடுத்த உறுப்பினர்... (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். அரசுக் கொறடா... (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர்...(குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். திரு. சி.வி. சண்முகம் (குறுக்கீடுகள்). திரு. சண்முகம், (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) எல்லா உறுப்பினர்களும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்கள் உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) கொறடா, எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். (கூச்சல்—குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல நாட்களாக பல மானியக் கோரிக்கைகள்; இடையிடையே கொஞ்சம் காரசாரம் இருந்தாலும்கூட, மிகுந்த அமைதியாக, பல்வேறு கருத்துகளை ஆளுங்கட்சியிலும், எதிர்க்கட்சியிலும், தோழமைக் கட்சிகளின் சார்பிலும் எடுத்துச் சொல்லப்பட்டு, மிகுந்த அமைதியோடும், சுமுக நிலையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. காவல் துறை என்பதற்காகவே, காவலர்கள் வந்து இங்கே அவையை நடத்த வேண்டும் என்கின்ற அளவிற்கு நாம் சென்றுவிடக் கூடாது.

நானும் நீண்டநேரமாக மிகுந்த பொறுமையோடு கவனித்துக் கொண்டிருக்கின்றேன். நான் ஒரு தரப்பைக் குறைகூறிப் பேச விரும்பவில்லை. இரு தரப்பிலும் ஆத்திரத்திற்கு இடம் தராமல், இந்த மானியத்தை நிறைவேற்றுவதுதான் அவையின் மாண்புக்கு ஏற்றது என்பதை எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். பெயர் சொல்வதினால் ஒன்றும் ஆகி விடாது. எந்த அவமானமும் வந்துவிடாது. சேகர்பாபு அவர்கள், என்னுடைய பெயரைக் குறிப்பிட்டு, கருணாநிதி ஆட்சி என்று சொன்னதால் இங்கே இருக்கின்ற பொன்முடியோ, மற்றவர்களோ அதற்குப் பதிலுக்காக முன்னாள் முதலமைச்சருடைய பெயரைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. 'கருணாநிதி' என்று, முத்துவேலரும், அஞ்சுகம் அம்மையாரும் பெயர் வைத்ததே மற்றவர்களும் சொல்லிக் கூப்பிட வேண்டும் என்பதற்காகத்தான். அதைச் சொல்வதனால் எனக்கு ஒரு திருப்தியேதவிர, அதனால் எனக்கு எந்த ஆத்திரமும் கிடையாது; வருத்தமும் கிடையாது.

கருணாநிதி என்று சேகர்பாபு சொல்வதில் வேண்டுமென்று அவர் சொன்னாரே தவிர, இயல்பாக கருணாநிதி என்று அவருக்கு அந்த வார்த்தை வரவில்லை. முதலமைச்சர் என்றுதான் சொல்லியிருப்பார். இங்கே பேசியவர்கள் ஜெயலலிதா என்று குறிப்பிட்ட காரணத்தால், பதிலுக்கு நான் கருணாநிதி என்று சொல்லுகிறேன் என்று சொன்னார். ஆக, இரு தரப்புச் சண்டையிலும் உருளுகின்ற தலைகள் எங்கள் இரண்டு பேருடைய தலைகளாகத்தான் இருக்கின்றன. ஜெயலலிதா அம்மையாருடைய தலையும், என்னுடைய தலையும்தான் உருளுகின்றன என்பது மாத்திரமல்ல; இந்த அவையினுடைய மாண்பு, பெருமை, மகத்துவம், சிறப்பு, ஜனநாயகத்திலே நாம் கட்டிக் காக்கவேண்டிய சில தன்மைகள், இவை எல்லாம் நம்முடைய சச்சரவினால், சண்டையினால், தகராறுகளால், வார்த்தைகளால் அழிந்துவிடக் கூடாது; காலாகாலத்திற்கும் அவற்றையெல்லாம் காப்பாற்ற வேண்டிய கடமையிலே நாம் இருக்கின்றோம்.



*முற்பகல் 11–45*

பொன்முடி சொல்கிறார் என்றால், சேகர்பாபு சொல்கிறார் என்றால், இரண்டுக்கும் உள்ள அடித்தளத்தை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் எப்போதாவது ஆத்திரத்தில், கோபத்தில், பதில் சொல்கின்ற நேரத்தில், நானோ, என்னுடைய இயக்கமோ மிகவும் புண்படுத்தப்படுகிற அளவுக்குத் தாக்கப்படும்போது, என்னை நபர் என்றும், இன்னும் கேவலமான வார்த்தைகளாலும், முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் அழைப்பது மாத்திரம் அல்ல; பத்திரிகைகளிலே அறிக்கைகளாக வெளியிடும்போதுகூட, நான் கொஞ்சம் நாகரீகமாகத்தான் அவர்களைக் கண்டித்திருக்கிறேன். அவர்கள் வார்த்தைக்கு வார்த்தை, கருணாநிதி, கருணாநிதி என்று சொன்ன காரணத்தால்தான், சேகர்பாபு, அவரும் துணிச்சலாக அதைச் சொல்ல முடிகிறது. எனவே, என்னுடைய பெயரைச் சொல்லவே கூடாது; அச்சமூட்டக்கூடிய பெயர் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற, அகம்பாவம் பிடித்தவன் அல்லன் நான்; தாராளமாக என்னுடைய பெயரை எல்லோரும் சொல்லலாம். அதிலே எந்தத் தவறும் கிடையாது.

என்னுடைய பெயரைச் சொன்னதற்காக போட்டிப் போட்டுக் கொண்டு இந்தத் தரப்பிலே உள்ளவர்கள், முன்னாள் முதலமைச்சருடைய பெயரைச் சொல்ல வேண்டும் என்கிற அவசியம் இல்லை. அத்தகைய தகராறுகளை இந்த அவையிலே வைத்துக்கொள்ளாமல், தெருவிலே வைத்துக்கொண்டால் அது இயல்பாக இருக்கலாம்; இயற்கையாக இருக்கலாம். ஆனால், அவையிலே இந்தத் தகராறுகளை வைத்துக்கொள்வது, அவையை நடத்துவதற்கு நிச்சயமாக உதவாது என்பதை நான் மிக மிகப் பணிவன்போடு இருசாராருக்கும் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தாராளமாகச் சொல்லுங்கள், தைரியமாகச் சொல்லுங்கள், கருணாநிதி, கருணாநிதி, கருணாநிதி என்று சொல்லிக்கொண்டே இருங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. இலட்சார்ச்சனை செய்வதுபோல சொல்லுங்கள். அது நல்லதுதான். நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால், இங்கே இருக்கின்ற, இந்தத் தரப்பிலே இருக்கின்ற, ஆளுங்கட்சி நண்பர்களை நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்; நாம் ஒரு மரபை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த மரபுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கின்றோம். அந்தவகையிலே அம்மையார் அவர்களைப்பற்றிச் சொல்லும்போது, இந்த அவையில் பேசும்போது—வேறு எங்காவது ஏதோ பேசுங்கள்; அவர்கள் பேசுகிறார்கள், நீங்களும் பேசுங்கள். இங்கே

பேசும்போது—அவையின் மரபுக்கு உட்பட்டு முன்னாள் முதலமைச்சர் என்று சொல்ல வேண்டும். நான் இந்த அவையிலே என்றைக்காவது அவர்களைக் குறிப்பிடும்போது, அம்மையார் என்று குறிப்பிடத் தவறியிருக்கிறேனா அல்லது முன்னாள் முதலமைச்சர் என்று குறிப்பிடத் தவறியிருக்கிறேனா என்பதை தயவுசெய்து அவர்கள் எண்ணிப் பார்க்காவிட்டாலும், ஆளுங்கட்சியிலே உள்ள நீங்கள் எண்ணிப் பார்க்காவிட்டாலும், தோழமைக் கட்சிகளுடைய தலைவர்கள், உறுப்பினர்கள் நிச்சயமாக எண்ணிப் பார்ப்பார்கள். இவர்கள் யாரும் எண்ணிப் பார்க்காவிட்டாலும், பத்திரிகைக்காரர்களாவது எழுத முடியாவிட்டாலும் எண்ணிப் பார்ப்பார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, தாராளமாக என்னுடைய பெயரைச் சொல்லுங்கள். எனக்குக் கிஞ்சித்தும் அதிலே வருத்தம் கிடையாது, கோபம் கிடையாது. நீங்கள் எல்லாம் பெயர் சொல்லத்தானே என்னைப் பெற்றிருக்கின்றார்கள் அஞ்சுகத்து அம்மையாரும், முத்துவேலரும்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதற்காக நான் கவலைப்படவில்லை. அதற்காக போட்டிப் போட்டுக்கொண்டு, இங்கே பெயரை மாறி மாறிச் சொல்லி, அதன் காரணமாக ஒரு கலாம் விளைய நாம் யாரும் வழிவகுத்துவிடக் கூடாது என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள். இதைவிட வேறு என்ன வேண்டும்? உட்காருங்கள். உட்காருங்கள், திரு. மணி. திரு. சேகர்பாபு, அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கப் போகிறேன். உரையை முடிக்கிறீர்களா என்ன? நீங்கள் பேசுவதாக இருந்தால், மாண்புமிகு முதல்வர் என்று சொல்வதாக இருந்தால் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, பேசுங்கள். இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலக் காவல் துறை வெளி மாநிலங்களுக்குச் சென்று பாதுகாப்புக் கொடுத்த நிகழ்வு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது. நம் மாநிலத்திலே நடைபெற்ற ஒரு மதக் கலவரத்தை அடக்குவதற்கு, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய இராணுவம், தமிழகத்திற்கு வந்த ஆட்சிதான் கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை நான் இங்கே பதிவுசெய்ய விரும்புகிறேன்.



முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6–7–2002 அன்று மாலை 7-00 மணியளவில் தி. நகர், பாண்டி பஜாரிலே ய[illegible]னகோபால் என்ற ஒரு வழக்கறிஞர், தன்னுடைய துணைவியாருடன் வந்து hotel–லிலே சாப்பிட்டுவிட்டு தன்னுடைய காரிலே ஏற முற்படுகின்றபோது ஒருவரால் சுட்டு வீழ்த்தப்படுகின்றார். அந்த இடத்திலேயே அவர் பிணமாகி அந்த நட்டநடு road–லே இருக்கின்றார். இந்தக் கொலைக்குண்டான எந்தவிதமான தடயமும் காவல் துறைக்குக் கிடைக்கவில்லை. இந்தக் கொலையைச் செய்யச் சொன்னவர்கள், பெங்களூரிலே இருக்கின்ற சிறைச்சாலையிலே—பாலசுப்பிரமணியமும் அவர் தம்பியும், பெங்களூர் சிறைச்சாலையிலே—இந்தக் கொலை நடந்தபோது இருக்கின்றார்கள். ஆனால், பெங்களூரிலே இருக்கின்ற சிறைவாசிகளால் ஏவிவிடப்பட்டு, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த பாண்டே, இக்பால் என்ற இருவர்தான் இந்தக் கொலையைச் செய்திருக்கின்றார்கள். எந்தவிதமான துப்பும் இல்லாத இந்தக் கொலையை, சம்பவம் நடைபெற்ற 6–7–2002–லிருந்து, சரியாக 30 நாட்கள் முடிவடைவதற்குள் 5–8–2002–க்குள்ளாக அந்த பாண்டேவையும், இக்பாலையும் மத்திய பிரதேசத்திற்குச் சென்று கைதுசெய்து அழைத்துவந்த பெருமை, புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சிக் காலத்திலேயிருந்த காவல் துறைக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் இன்னொன்றையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) இந்தவகையிலேதான்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காந்தி, திரு. அப்பாவு (குறுக்கீடுகள்) திரு. காந்தி, திரு. அப்பாவு இரண்டுபேரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.கே. சேகர்பாபு:** இந்த நிகழ்வுக்குத்தான் அன்றைய கவர்னர் இராம் மோகன் ராவ் அவர்கள் பாராட்டி, சென்னை காவல் துறையை ஸ்காட்லாந்து யார்டுக்கு ஒப்பிட்டு (மணியடிக்கப்பெற்றது) ஒரு விருந்திலே பாராட்டுரை தெரிவித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, நீங்கள் 40 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். இதைவிட நிரம்ப time கொடுக்கமுடியாது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** ஆரோக்கியமான விவாதம் நடந்து கொண்டிருக்கிறது; ஒரு பெரிய துறை; இன்னும் 5 நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 40 நிமிடம் ஆகிவிட்டது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான், இந்த நிகழ்வுக்குத்தான்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியிலேதான் காவல் துறை அதிகாரியாக ஈரோட்டிலே பணியாற்றிய ஜோதிக் கண்ணன் என்பவர், இன்றுவரை எங்கே இருக்கிறார் என்றுகூட தெரியவில்லை. அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய விவசாய அணியினுடைய செயலாளராக இருந்த கே.பி. இராமலிங்கம் அவர்களுடைய தம்பி. இதுவரையிலும், அவர்களால் அந்த அதிகாரியை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. காவல் துறை அதிகாரியே கடத்தப்பட்டு இன்றுவரை எங்கே இருக்கிறார் என்றே கண்டுபிடிக்க முடியாத ஒரு நிலைமை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, உட்காருங்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள், முடியுங்கள். (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, முடியுங்கள். (குறுக்கீடு) என்ன? மணி எவ்வளவு? 40 நிமிடம் பேசியிருக்கிறீர்கள் நீங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** குறுக்கீடு, குறுக்கீடு, குறுக்கீடுதான்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது இருக்கத்தான் செய்யும். நீங்கள்தான் குறுக்கீட்டை வரவழைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!

**திரு. பி.கே. சேகர்பாபு:** சரி, இதுவே விவாதமாக, இதிலே ஒரு 5 நிமிடம் ஆகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது ஒரு கொலை வழக்கில் குற்றவாளியைக் கண்டுபிடித்த அணுகுமுறை. ஆனால், சமீபத்தில் 13–6–2006 அன்று நம்முடைய



உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மதுரைக்குச் செல்கிறார். அங்கே ஒருவன் கத்தியோடு வந்து அவரைக் கொலை செய்ய முற்படுகின்றான். ஆயிரக்கணக்கிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு அந்த case, investigation–லே இருக்கிறது. அதைப்பற்றி நீங்கள் பேசக் கூடாது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இல்லை, investigation–லே இல்லை, அதில் இன்னும் குற்றவாளியே பிடிபடவில்லை; நன்றாகவே தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no, no. அந்த case investigation–லே இருக்கிறது. நீங்கள் அதைப்பற்றிப் பேசுவதற்கு நான் allow பண்ணமாட்டேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நல்லதைப் பேசவே அனுமதி பண்ணமாட்டீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள். (குறுக்கீடுகள்)

***திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்) வீரத்தாலும், தியாகத்தாலும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, பேசாமல் உட்காருங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** சிவந்து போயிருக்கிற நெல்லைச் சீமையிலே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனை நிமிடம் ஆகிறது?

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** ஒரு குக்கிராமத்தில், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் (குறுக்கீடுகள்) ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னை, நீண்ட இடைவெளிக்குப் பின்னால்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ. கருப்பசாமி பாண்டியன், one minute, உட்காருங்கள். திரு. பி.கே. சேகர்பாபு, உரையை முடியுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி, அதனுள்ளே போகவேண்டாமா? அந்த வழக்கு Court–லே இருக்கிறதா? வேண்டாமா அந்த விஷயம்? அந்தக் குற்றவாளிகளை

நீங்கள் விரைவாகக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த case investigation–லே தலையிட முடியாது. அந்த investigation–ஐப்பற்றிப் பேசக்கூடாது என்பது தெரியுமில்லையா? முதலிலே அந்த மரபைத் தெரிந்துகொள்ளுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** சரி, Okay. Okay. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்கு இரண்டு முரண்பாடான தகவல்களைக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, எல்லாம் கொண்டு வந்துவிட்டீர்களே, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.கே. சேகர்பாபு:** தற்போது காவல் துறையில் நடந்துகொண்டிருக்கிற... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடிக்கமாட்டேன் என்கிறார். (குறுக்கீடுகள்) சும்மா சொல்லிக்கொண்டு... (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி முடியுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.கே. சேகர்பாபு:** ஒரேயொரு விஷயம். முதலமைச்சரே சொல்ல விடுங்கள் என்று சொல்கிறார் பாருங்கள். சொல்ல விடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காவல் துறையில் நடந்திருக்கின்ற ஒன்றுக்கொன்று முரண்பாடான இரண்டு சம்பவங்களை முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஏன் என்றால், அவருடைய கவனத்திற்கு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுப்பார் என்கிற காரணத்திற்காக இதைக் கொண்டுவர விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த நம்பிக்கை இருக்கிறது இல்லையா?

**திரு. பி.கே. சேகர்பாபு:** அதற்காகத்தான் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, எல்லாவற்றையும் எழுதிக் கொடுத்துவிடுங்கள். எழுதிக் கொடுத்துவிடுங்கள். நடவடிக்கை எடுப்பார்கள். உட்காருங்கள்.



**திரு. பி.கே. சேகர்பாபு:** அதற்காகத்தான் கொண்டு வருகிறேன். சொல்ல விடுங்கள். சொன்னால்தானே தெரியும்? சொன்னால்தானே தெரியும்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி பாண்டியன், பேசுங்கள். (குறுக்கீடு) சொல்லியாகிவிட்டது. முடிக்கமாட்டேன் என்கிறார். நீங்கள் எதுவானாலும் எழுதிக் கொடுத்துவிடுங்கள். நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை; முடியாது. (குறுக்கீடு) 42 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள், உட்காருங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** இந்த அவையிலே பங்கேற்று, உரையாற்றுகிற வாய்ப்பைத் தந்த உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்களுடைய உயிர்மூச்சாக விளங்கிக்கொண்டிருக்கிற எங்கள் குடும்பத் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்தினுடைய ஒரே தலைவர், நம் தாய்மொழியாம் தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்த நம்முடைய அன்புத் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் முதுபெரும் தலைவர்களில் ஒருவர், சுதந்திரத்திற்குப் பிறகு, இந்தியாவிலே 5 பிரதமர்களை அடையாளம் காட்டிய தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) 3 ஜனாதிபதிகளை இந்த நாட்டுக்கு அடையாளம் காட்டி, அதிலே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஒருவர் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் முதல் குடிமகனாக வருவதற்கு முன்மொழிந்த நம்முடைய தலைவர், முத்தமிழ் அறிஞர், எங்கள் உயிர்மூச்சாக, எங்கள் அனைவருக்கும் தாயாக, தந்தையாக, அண்ணனாக, ஆசானாக, வழிகாட்டியாக, மொத்தமாகச் சொல்லப்போனால், நாங்கள் வணங்குகிற சக்தியாக, (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற தமிழ் மக்களுடைய காவல் அரணாகத் திகழ்கிற எங்கள் அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து தமிழ் மக்களைக் காத்து நிற்கிற இந்தத் தியாக வேள்வியிலே, எங்கள் தலைவர் கலைஞருடைய வலது கரமாகத் திகழ்ந்து வருகிற அவை முன்னவர், வரியில்லாத நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிற இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தலைவருக்கும், எங்களைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு பாலமாக இருந்து, பல நேரங்களில் எங்களுக்கு அரிய பல உதவிகளைச் செய்கிற எங்களுடைய கழகப்

பொருளாளர், மின் துறை அமைச்சர், அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் வழியிலே தமிழகத்தை எதிர்காலத்தில் காத்து நிற்கிற, எங்கள் நம்பிக்கை நட்சத்திரம், எங்கள் வழிகாட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) ஊரகத் துறையிலும், உள்ளாட்சித் துறையிலும், இன்றைக்கு ஒரு நல்லாட்சியைச் செலுத்திக்கொண்டு, மேயராக இருந்தபோது, சிங்காரச் சென்னையாக உருவாக்கி, சீரழிந்து கிடந்த உள்ளாட்சிகளுக்கு இன்றைக்கு ஓர் உயிர்மூச்சைத் தந்திருக்கிற எங்கள் வழிகாட்டி, அன்புத் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தோழமைக் கட்சிகளைச் சார்ந்த இந்திய காங்கிரஸ் பேரியக்கம், பாட்டாளி மக்கள் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம் உள்ளடங்கிய எங்களுடைய தோழமைக் கட்சிகளுடைய தலைவர்களுக்கும், எங்கள் தலைவர் கலைஞருடைய வேண்டுகோளை ஏற்று, 18,860 வாக்குகள் அதிகம் தந்து, என்னை இந்த மன்றத்திலே கலந்துகொள்கிற வாய்ப்பைத் தந்த, தென்காசி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், மாண்புமிகு மத்திய அமைச்சர் பெருமக்கள், இன்றைக்கு இந்தியாவின் மத்திய அமைச்சர்களிலேயே தலைசிறந்த அமைச்சராக, ஐந்தாவது வரிசையிலே இடம்பெற்றிருக்கிற மாண்புமிகு திரு. தயாநிதி மாறன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அமைச்சர்கள், மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்கள், மாண்புமிகு திரு. வாசன் அவர்கள், மாண்புமிகு திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள், அய்யா கிருஷ்ணசாமி அவர்கள், மருத்துவர் அய்யா அவர்கள் மற்றும் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள் எல்லோரும் எங்கள் மாவட்டத்திலே வந்து, அனைவருடைய வெற்றிக்காகப் பாடுபட்ட அந்தத் தலைவர்கள் அனைவருக்கும் இந்த நேரத்திலே என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*நண்பகல் 12–00*

தலைவர் கலைஞர் அவர்கள், தமிழகத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, அவர் கைக்குக் காவல் துறை வந்த நேரத்திலேதான், இந்தியாவிலே மட்டுமல்ல; உலகத்திலேயே காவல் துறைக்குப் பெயர்பெற்ற ஸ்காட்லாந்து நாட்டு போலீசுக்குச் சமமாக, தமிழகக் காவல் துறை பெயர்பெற்றது என்பதும், (மேசையைத் தட்டும் ஒலி) அவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த 1969 ஆம் ஆண்டிலேதான், சுதந்திரத்திற்குப் பிறகு எத்தனையோ, அரிய, பெரிய தலைவர்கள் முதலமைச்சராக இந்த அவையிலே வீற்றிருந்து, நாட்டைக்காத்து, நன்மைகள் பல செய்திருந்தாலும், தலைவர் கலைஞர் அவர்கள், இந்தத் துறைக்குப் பொறுப்பேற்ற பிறகுதான் இருபத்து நான்கு மணி நேரமும், இன்னும் சொல்லப்போனால், பயங்கரவாதத்தை எதிர்த்துப் பணி செய்கிற, ஒரு குறிப்பிட்ட துறையாக இருக்கிற காவல் துறையிலே இருக்கிற அலுவலர்கள், அதிகாரிகளுக்கு, குறிப்பாக அடித்தளத்திலே இருக்கிற காவலர்களுக்கு, அவர்களுக்கு இருக்கிற குறைகளையும் நீக்க வேண்டும் என்கிற எண்ணம், உணர்வு வந்து, அந்தத் தாயுள்ளத்தோடு ஓய்வு பெற்ற I.C.S. அதிகாரி திரு. கோபால்சாமி அவர்கள் தலைமையிலே, முதல் போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு, அந்தக் கமிஷன் 133 பரிந்துரைகளை அரசுக்குத் தந்து, தந்த பரிந்துரைகளையெல்லாம் எங்கேயோ பரணிலே போடாமல், உடனடியாக அதிலே 115 பரிந்துரைகளை ஏற்று, சட்ட வடிவம் தந்தவர் தலைவர் கலைஞர் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிறகு 1989–லே மூன்றாவது முறையாக அவர் முதல்வர் பொறுப்பேற்ற பிறகுதான், இரண்டாவது போலீஸ் கமிஷன், ஓய்வுபெற்ற முன்னாள் தலைமைச் செயலாளர் உயர்திரு. சபாநாயகம், I.A.S. தலைமையிலே அமைக்கப்பட்டு, அவர்கள் 115 பரிந்துரைகளை அரசுக்குத் தந்து, தந்த அந்தப் பரிந்துரைகளிலே 89 பரிந்துரைகளை நிறைவேற்றி, காவலர்களுடைய குறை தீர்த்த (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இன்றைக்கு, ஐந்தாவது முறையாக தமிழ்நாட்டு மக்களின் பேராதரவோடு அரியணை ஏறியிருக்கிற நம்முடைய அன்புத் தலைவர், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், காவல் துறையில், அவர்களுக்கு இருக்கிற கஷ்டங்களையெல்லாம் போக்கிட, மூன்றாவது போலீஸ் கமிஷனை நியமித்திருக்கிறார்கள். இதற்காகத் தமிழகமெங்கும் இருக்கிற காவல் துறையிலே, கடைசி பொறுப்பிலே இருக்கிற அடிமட்ட காவலர்களிலேயிருந்து உயர் அதிகாரிகள் வரை உள்ளம் குளிர்ந்து, இந்த அரசுக்கு ஒரு நல்ல முறையிலே பணியாற்ற வேண்டும் என்கிற ஓர் உத்வேகத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிய வருகிறோம்.

இன்றைக்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், அவருடைய மானியக் கோரிக்கைககான கொள்கை விளக்கக் குறிப்பை அச்சடித்து, நேற்று மாலையிலே புத்தகமாக எல்லா உறுப்பினர்களுக்கும்

தந்திருக்கிறார்கள். அதிலே, முகவுரையிலேயே இந்த அரசினுடைய எண்ணத்தை மிக அழகாக, முத்தாய்ப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பொது அமைதியை நிலைநாட்ட இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க உறுதி பூண்டுள்ளது என்றும், தமிழ்நாட்டை அமைதியின் உறைவிடமாக்கிட, பயங்கரவாதிகள் மற்றும் தீவிரவாதிகள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதில் அரசு உறுதியாக இருக்கும் என்றும், இந்த இலக்குகளை அடைய காவல் துறையை விரைவாக நவீனமயப்படுத்தினால் மட்டும் போதாது; காவல் பணியாளர்களின் மனோபாவம், கூருணர்வுத் திறன் ஆகியவற்றிலும் மாற்றம் வேண்டும் என்பதையும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அழகாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

அவர் வகிக்கிற காவல் துறை மட்டுமல்ல; ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, இந்த 100 நாட்களிலே, அனைத்துத் துறைகளிலும் எவ்வளவு அரிய பெரிய சாதனைகளை, இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதை நல்ல மனம் கொண்ட அனைவரும் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நடுநிலைப் பத்திரிகைகள் எல்லாம் மனந்திறந்து பாராட்டி எழுதிக் கொண்டிருக்கின்றன.

இன்னும் சொல்லப்போனால், தலைவர் கலைஞர் அவர்களுக்கு இருக்கிற சிறப்பு, எங்களை எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக, ஏன், இன்றைக்கு அவர் தாயுள்ளத்தோடு என்னை நெல்லை மாவட்டத்திற்கு, கழகத்திற்குப் பணி செய்கிற ஒரு பொறுப்பாளராக நியமித்தது என்பது, எங்கள் அவையிலே இங்கேயிருக்கிற சகாக்களைவிட, என்னைப் போன்றவர்களுக்கு இருக்கிற நன்றிக்கடன், எஞ்சியிருக்கிற எங்கள் வாழ்நாளிலே முடியாது. காரணம், அவரை எதிர்த்துக் கூச்சல் போட்டுக்கொண்டு பல நேரம் கணைகளைத் தொடுக்கிறார்களே நண்பர்கள், அவர்களைப்போல தலைவர் கலைஞருக்கு எதிராக இருந்துகொண்டு பல கணைகளைத் தொடுத்த பாவத்தைச் செய்தவர்களிலே நானும் ஒருவன் என்பதை இந்த அவையிலே நான் மனசாட்சியோடு ஒப்புக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் மட்டுமல்ல; பல பேர்கள் அவருக்கும் கழகத்திற்கும் சேதாரம் விளைவித்து, கேள்விக் கணைகளால், வசைகளால் அவரைத் துளைத்தெடுத்தவர்களுக்கு, அவர்கள் சேர்ந்த இடத்திலே அவர்கள் சிதைக்கப்பட்ட நேரத்தில், காயம்பட்டு வீதியிலே அனாதையாக நின்றபோது, தாயுள்ளத்தோடு அறிவாலயத்திற்கு அழைத்து மருந்து போட்டு அவர்களையும் காப்பாற்றி, அப்படிப்பட்டவர்களுக்கும்



இன்றைக்கு அரசியல் அங்கீகாரம் பெற்றுக் கொடுத்து, அழகோடு பார்க்கிற தாய்தான் கலைஞர் என்பதை நான் நன்றியுணர்வோடு குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலேகூட, முதல் வரிசையிலே இருந்து கடைசி வரிசைவரை, ஒவ்வொருவரும் அந்தவகைக் கடனாளியாகவும், தலைவர் கலைஞருக்கு வாழ்நாள் முழுவதும் கடன்பட்டிருக்கிறோம் என்பதை வார்த்தையாலே மட்டுமல்ல; எங்கள் வாழ்நாளையே அவருக்காக ஒப்படைப்பதற்கு எங்களுக்குக் கடமை இருக்கிறது; கடன் இருக்கிறது என்பதை நன்றியோடு நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 12—05

இந்த அவையிலே அவரைப்பற்றி ஏளனம் பேசவேண்டுமென்று, புண்படுத்த வேண்டுமென்று நினைத்துப் பேசுபவர்கள் யாராக இருந்தாலும், ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அவருக்கும், தலைவர் பக்கத்திலே இருக்கிற நம்முடைய அவை முன்னவர் இரண்டு பேருக்கும் இருக்கிற சிறப்பு, இங்கே படமாக மட்டுமல்ல, தமிழர்களுக்குப் பாடமாக இருக்கிற தலைவர்கள், வள்ளுவரையும், மகாத்மா காந்தியைத் தவிர மற்ற தலைவர்கள் எல்லோரிடமும் நெருங்கிப் பழகி, அவர்களுடைய அன்பை, அவர்களுடைய நல்லெண்ணத்தை, பாராட்டைப் பெற்ற தலைவர், தமிழகத்திலே கலைஞர் ஒருவர்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவர்களிலே படமாக நிற்கிற தலைவர்களிடத்திலே அவர் அன்பு பாராட்டியதும் உண்டு; களத்திலே எதிர்த்து நின்றதும் உண்டு, கொள்கை மாறுபாடுகள் இருந்தாலும்கூட அந்தத் தலைவர்கள் எல்லாம் மறைந்த பிறகு, அவர்கள் அத்தனை பேர்களுக்கும் நினைவுச் சின்னத்தை இன்றுவரை தவறாமல் எழுப்பிக் கொண்டிருக்கிற தலைவரும் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதல்வர் கலைஞர் ஒருவர்தான். 'வாழும் பெரியார் கலைஞர்' என்று இங்கே தோழமைக் கட்சித் தலைவர்கள் மட்டுமல்ல; தோழமையிலே கொஞ்சம் மாறுபட்டு—இன்றுவரை கொஞ்சம் மாறுபட்டிருக்கிற—விடுதலைச் சிறுத்தைகளைச் சேர்ந்த நண்பர் செல்வம்கூட நேற்று 'வாழும் பெரியார்' என்று சொன்னார். பெரியார் கண்ட கனவுகளை எல்லாம் வாய்ப்புக் கிடைக்கிறபோது நிறைவேற்றி வருகிறவர், முதல்வர் தலைவர் கலைஞர். ஒரு தாழ்த்தப்பட்டவரை ஜனாதிபதியாக ஆக்குவதற்கு முன்மொழிந்தவர், ஒரு தாழ்த்தப்பட்டவர் Supreme Court நீதிபதியாகப் போவதற்கு வழிவகுத்தவர், அவர் ஆள்கிற போதெல்லாம்தான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு,

[திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்][2006 ஆகஸ்ட் 29

அதிகார இயந்திரத்திலே உயர் பதவிகளைக் கொடுத்து, அழகு பார்க்கிற முதல்வரும் நம்முடைய கலைஞர்தான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பெண்களுக்குச் சொத்திலே சம பங்கு உரிமை வேண்டும் என்று 1929–லே செங்கல்பட்டு மாநாட்டிலே, தந்தை பெரியார் நிறைவேற்றிய தீர்மானத்தைச் செயல்வடிவமாக்கித் தந்தவர், 50 ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய தலைவர் கலைஞர் என்பதும், அவருக்கு இருக்கிற சிறப்பை வேறு யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

செம்மொழி அந்தஸ்து கிடைத்தபோது, இந்தியத் திருநாட்டின் தியாகத் தாயாக இருக்கிற நூறு கோடி மக்களினுடைய நன்மதிப்பை இன்றைக்குப் பெற்றிருக்கிற அன்னை சோனியா காந்தி அவர்கள் எழுதிய கடிதத்தில், *(மேசையைத் தட்டும் ஒலி)* "இன்றைக்குத் தாய்மொழி தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால், அந்தப் பெருமை உங்களைத்தான் சாரும்" என்று எழுதி இருக்கிறாரே அந்த வைர வரிகளுக்கு, *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தத் தாய் சொல்லி இருக்கிற அந்த நற்சான்றிதழ்களைவிட, வேறு எந்தத் தாயினுடைய சான்றிதழ்களும் நம்முடைய தலைவருக்குத் தேவையில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அனைத்து சாதிகளைச் சார்ந்தவர்களும் அர்ச்சகர் ஆகலாம். இந்தியாவிலே எந்த மாநிலத்திலேயும் யாருமே எடுத்துச் சொல்வதற்குக்கூட தைரியம் இல்லாத நேரத்தில், இன்றைக்கு அதை அரசியல் சட்டமாக்கித் தந்து, பெரியார் நெஞ்சிலே தைத்த முள்ளை எடுத்திருக்கிற பெருமை, நம்முடைய தலைவர் கலைஞருக்கு உண்டு. *(மேசையைத் தட்டும் ஒலி)* 27 சதவீத இட ஒதுக்கீடு குறித்து பாராளுமன்றத்திலே சட்ட மசோதா தாக்கல் செய்கிறபோது, தமிழ்நாட்டைச் சார்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்திலேயும் மைய மண்டபத்தில், மத்திய அமைச்சர், காங்கிரஸ் அமைச்சர், "இந்த 27 சதவீத இட ஒதுக்கீடு வருவதற்குத் தமிழ்நாட்டிலே உள்ள ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள் அனைவரும் முயற்சி எடுத்தார்கள் என்றாலும்கூட, இந்த வெற்றிக்கு, இந்த மசோதா தாக்கல் ஆவதற்கு முழுமுதல் காரணம் உங்கள் முதல்வர் கலைஞர்தான்" என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், *(மேசையைத் தட்டும் ஒலி)* இப்படிப்பட்ட சரித்திர சாதனைகளை ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்தில் செய்திருப்பவர்



2006 ஆகஸ்ட் 29][திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்]

தலைவர் கலைஞர் அவர்கள் அரும்பெரும் தலைவர்களையெல்லாம் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை; ஒவ்வொருவரும் குறைந்த நாட்களே பொறுப்பிலே இருந்தார்கள். ஆனால், 5 முறையும் ஆள்கிற வாய்ப்புக் கிடைக்கிறபோதெல்லாம் மேட்டுக் குடியிலே இருப்பவர்களுக்கு அல்ல; சமுதாயத்தின் அடித்தளத்திலே இருப்பவர்களுக்கு, அடக்கப்பட்டவர்களுக்கு, ஒடுக்கப்பட்டவர்களுக்கு பல சாதனைகளை, எண்ணிப் பார்க்க முடியாத சரித்திர சாதனைகளைச் சட்டமாக்கி நிறைவேற்றித் தந்து, அதிலே மகிழ்ந்து இருப்பவர் நம்முடைய தலைவர் கலைஞர் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–10*

எதிர்க்கட்சி நண்பர்கள் நான் சொல்வதால் கோபித்துக்கொள்ளக் கூடாது. இதை ஆத்ம பரிசோதனை செய்யவேண்டும். ஒவ்வொரு துறையிலேயும் பேசும்போதும் நாங்கள் கவனித்துக் கொண்டிருக்கிறோம்; எங்கள் தலைவர் கலைஞருக்குக் கட்டுப்பட்டிருக்கிறோம். எல்லோரும் அவரவர்கள் துறையிலே அந்த ஆட்சியிலே பல சாதனைகள் செய்ததாக இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள்; அது உங்களுக்கு இருக்கிற உரிமை. ஆனால், ஜனநாயகத்திலே ஒரு ஆட்சி நல்ல திட்டங்களை வகுத்துத் தந்து, மக்களுக்கு நன்மை செய்து இருக்குமேயானால் நம்முடைய சகோதரர் மாண்புமிகு சேகர்பாபுகூட சொன்னார், நடப்பதெல்லாம் மக்களுக்குத் தெரியுமென்று. தெரிந்த காரணத்தினாலேதான், இந்தப் பக்கம் இருந்தவர்கள் அந்தப் பக்கமும், அந்தப் பக்கம் இருந்தவர்கள் இந்தப் பக்கமும் வந்திருக்கிறோம் என்பதை *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, 3 ஆண்டுகள் கழிந்து, முழுமை பெற்றபிறகு, நீங்கள் நாட்டுக்குச் செய்யாத சாதனைகள், திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிய காரணத்தினாலேதான், நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் பெறாத வெற்றியை கலைஞர் பெற்று *(மேசையைத் தட்டும் ஒலி)* பாண்டிச்சேரி உட்பட, 40–க்கு 40–லேயும் கலைஞர் அணி வெற்றி பெற்றது என்று சொன்னால், நாட்டு மக்கள் எல்லாம் தெரிந்து, உணர்ந்து, புரிந்த காரணத்தினாலே, மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்; அந்த மக்களை நம்பித்தான் தலைவர் கலைஞருடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறதேதவிர, *(மேசையைத் தட்டும் ஒலி)* வேறு எதுவும் இல்லை என்பதை நான் மெத்தப் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இவ்வளவு புகழ் வாய்ந்த தலைவரை, ஒரு வழக்கிலே போட்டது மாநகராட்சி கட்டிய பாலம்; இந்தப் பாலத்திலேதான் இன்றைக்கு நாம் மட்டுமல்ல; இன்றைக்குத் தமிழ்நாடு மட்டுமல்ல; உலகமெங்கிருந்தும் வருகிறவர்கள், இந்தியாவின் தலைசிறந்த நகரங்களில் ஒன்றாக இருக்கிற சென்னையிலே பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த 10 பாலங்களையும் தளபதி அவர்கள் மேயராக இருந்த காலத்திலே, அவர் முயற்சி எடுத்து, திட்டமிட்ட காலத்திற்குள் வேலையை முடித்து, ஒப்பந்தப்புள்ளிகளிலேயிருந்து 10 கோடி ரூபாயை மிச்சப்படுத்தி, அவற்றில் 9 பாலங்களை மக்களுக்கு அர்ப்பணித்துத் தந்தார். அந்தப் பாலத்திலேதான் இன்றைய முதல்வரும் வருகிறார் முன்னாள் முதல்வரும் பயணிக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தப் பாலத்திலே குறைபாடுகள் இருந்திருந்தால், அதை நீங்கள் ஆட்சியிலே இருந்தபோது பரிசோதித்திருக்கலாம்; தவறு இருந்தால் நடவடிக்கை எடுங்கள்; நீதிமன்றம் இருக்கிறது; கொடுக்கிற தீர்ப்பை மதித்து, நீதிக்குத் தலை வணங்குபவர்தான் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நள்ளிரவு 12—00 மணிக்கு—சென்ற ஆட்சியிலே யாரைக் கைது செய்தாலும், நள்ளிரவு 12—00 மணிதான். கிராமத்திலேயெல்லாம் சொல்வார்கள். 12—00 மணிக்கு மோகினி பிசாசு, பேய்கள்தான் நடமாடும் என்பார்கள். ஆனால், கடந்தகால ஆட்சியிலே யாரைக் கைது செய்தாலும்—எங்கள் தலைவர் கலைஞர் எப்போதாவது ஓய்வெடுப்பதற்காக வேறு மாநிலம் போகிறவர் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) 20 மணி நேரம் உழைக்கிறவர். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 20 மணி நேரமும் அவருடைய நிகழ்ச்சி நிரல் சாமானிய மக்களுக்கும் தெரிந்த ஒன்றுதான். அது சிதம்பர இரகசியம் அல்ல.

காலை 4—00 மணிக்கு விழித்தெழுந்து இரவு 1—00 மணி வரை அவர் கண்ணயர்ந்து தூங்குகிற நேரம் 3 மணி நேரம். இந்த 20 மணி நேரத்திலே அவருடைய பணி, எறும்பு தோற்றுப்போகிற பணிகள் என்பதை நாடு அறியும். அப்படிப்பட்ட தலைவரை, அவர் வகித்த பொறுப்பு, 4 முறை முதல்வராக வந்திருக்கிறார். இந்த நாட்டின் மூத்த தலைவர்களிலே ஒருவர். சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவிலிருந்த அத்தனை தலைவர்களோடும் தொடர்பும், உறவும், நட்பும் வைத்து, 70 ஆண்டுக் காலம் இந்த இனத்திற்காக, மொழிக்காகப் பாடுபட்ட தலைவர், அவரைத் தவிர (மேசையைத் தட்டும் ஒலி) வேறு யாரையும் இங்கு பார்க்க முடியாது. அப்படிப்பட்ட தலைவரை, நள்ளிரவு 2—30 மணிக்கு அவர் வசிக்கிற வீட்டிலே, அதுவும் 30 படிகள் கொண்ட அந்தப்





பழைய வீட்டில், 7 கதவுகளை உடைத்து, அவர் உடுத்தியிருந்த லுங்கியைக்கூட மாற்றுவதற்கு அனுமதிக்காமல், அந்த 30 படிகளிலே தரதரவென்று இழுத்துவந்து, இரவு 2—00 மணிக்குக் கொண்டுபோய் C.B.C.I.D. அலுவலகத்திலே வைத்து, காலை 7 மணிக்கு அந்த வயதிலே அவரை முதல் மாடியிலே இருக்கிற அன்றைய Sessions நீதிபதி வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய், அந்த நீதிபதியும் நெல்லை மாவட்டத்துக்காரர்; அதனாலே விளைவுகளைப்பற்றிக் கவலைப்படாமல் அவரும் சொன்னார்; 'உங்கள் இதயம் என்ன, களி மண்ணாலா செய்திருக்கிறது?' என்று கேட்டு, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மத்தியச் சிறைச்சாலையிலே கொண்டுபோய், அவரை வெளியே உட்கார வைத்த அந்தக் கொடுமை, இந்த நாட்டிலே இதுவரை நிகழாத ஓர் அரசியல் ஜனநாயகக் கொடுமை என்பதையும், ஓர் அரசியல் தீவிரவாதம் என்பதையும் நான் இங்கே பகிரங்கமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சரி, அப்படி ஒரு வழக்குப் போட்டீர்களே, அதற்கு பிறகு Charge sheet போடுவதற்கு அந்த அரசினிடத்திலே ஏதாவது துப்பு இருந்ததா? 5 ஆண்டுகள் முடிந்து இன்றைய வரை அந்த வழக்குக்கு Diary இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) சரி, வழக்கைப் போட்டீர்கள். மறு நாள் தொலைக்காட்சியிலே அவர் கைது செய்யப்படுகிறபோது நடந்த அக்கிரமச் செயலைப் பார்த்து, அவரைக் கைது செய்தபோது வந்து தடுத்த மத்திய அமைச்சர்கள் தாக்கப்பட்டு, அவர்களும் கைது செய்யப்பட்டு, இந்திய ஜனநாயக மாண்புகளையெல்லாம் புதைகுழிக்கு அனுப்பி, நீங்கள் நடத்திய அந்த அக்கிரமங்களைத் தொலைக்காட்சியிலே பார்த்தவர்கள் அதிர்ச்சியாலும், அவர்மேல் கொண்ட அன்பால் தற்கொலைக்கும் ஆளாகி, 70 பேர் மாய்ந்து போனார்கள். பத்திரிகைகளிலே இப்போது நான்கு நாட்களாக, எல்லோரும் பரவலாகப் பார்க்கிறோம்; தொலைக்காட்சியிலேயும் பார்க்கிறோம்.

ஒரு T.V. நடிகை தற்கொலைக்கு முயன்ற காரணத்தினாலே, அந்தத் தற்கொலைக்கு முயற்சி செய்யக் காரணமான ஒருவரை, வெளி மாநிலம் எல்லாம் தேடி, இன்றைக்கு போலீஸ் போகிறது. 70 பேர் செத்துப்போன ஒரு அக்கிரமத்தை அரங்கேற்றி, 70 பேர் செத்துப் போனதற்குக் காரணமாக இருந்தவர்கள்மீது, இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

தமிழ்நாட்டிலே, இப்போது 15 தினங்களுக்கு முன்பு பத்திரிகையிலே பார்த்தோம். ஒரு குடிகாரக் கணவர், போக்குவரத்துத் துறையிலே பணிபுரிபவர்; அவர் திருந்தவில்லை என்கிற காரணத்தினாலே, மனைவி, மூன்று பிள்ளைகளும் தற்கொலை செய்துகொள்கிறார்கள். அந்தக் கணவர் இன்றைக்குக் கடுமையான வழக்குகளில் கைது செய்யப்பட்டு காராகிருகத்திலே அடைக்கப்பட்டிருக்கிறார். ஆனால், இதில் 70 பேர் இறந்து போனார்கள். நான்கு முறை முதலமைச்சராக இருந்த மூத்த தலைவரை, எந்தக் காரணமும் இல்லாமல் கைது செய்து, அவரை அக்கிரமமாக, ஆறு மாதம் அவருடைய கைக்குச் சிகிச்சையளிக்கிற அளவிற்கு அந்த நிலைமைகளை ஏற்படுத்தியவர்கள் எந்த இடத்திலே இருந்தாலும், தலைவர் கலைஞர் அவர்களே, நீங்கள் மன்னிக்கலாம்; ஆனால், வரலாற்றிலே இந்தக் கரும்புள்ளிக்குக் காரணமான கருப்பு ஆடுகள் எவையாக இருந்தாலும், கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று நான் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சம்பவம் நடந்த பிறகு 15 தினங்கள் கழித்து, எங்கள் தலைமைக் கழகத்தின் சார்பிலே அனுமதி பெற்று, ஒரு ஊர்வலம் சென்னையிலே நடத்துகிறோம். அந்த ஊர்வலத்திலே, ஒழுங்காக வருகிற ஊர்வலம், அன்றைக்கு இருக்கிற D.G.P. அலுவலகம் முன்னால் திட்டமிடப்பட்டு 200 குண்டர்கள் ஏவிவிடப்பட்டு, கிட்டத்தட்ட ஏழெட்டுப் பேர்கள், ஊர்வலத்திலேயிருந்த எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், பலியானார்கள். 65, 70 வாகனங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. நெல்லை உள்பட தமிழ்நாடு முழுக்க 120 பேர் காயம்பட்டு, இன்னும் பல பேர் செயல்பட முடியாத நிலையிலே இருக்கிறார்கள். யார் மீதும் இன்னும் வழக்குகள் போடப்பட்டதாகத் தெரியவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** சரி. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எந்த முதலமைச்சர் ஆண்டாலும், அந்த முதலமைச்சர் அல்லது காவல் துறை பொறுப்பிலே இருப்பவர்கள் கையிலேதான் அந்தத் துறை இருக்கும். நண்பர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. இது நாட்டிலே நடந்த செய்தி. பரபரப்பாக எல்லா இடத்திலேயும் வந்த செய்தி. திருநெல்வேலி, விருதுநகர், மதுரை, தேனி, திண்டுக்கல், கரூர்,



கோயம்புத்தூர்வரை ஒன்றரை ஆண்டுக் காலம், போன ஆட்சிக் காலத்திலே, காவல் துறை யார் கையிலே இருந்தது என்றால், சிவகாசி ஜெயலட்சுமி கையிலே இந்தக் காவல் துறை (மேசையைத் தட்டும் ஒலி) கட்டுப்பாட்டோடு இருந்தது என்பதை அவ்வளவு எளிதாக மறந்துவிட முடியாது. அதிலே, ஒருவர்தான் இன்றைக்குத் தண்டனைக்கு ஆளாகி இருக்கிறாரே தவிர, மற்றவர்கள் எல்லாம் வெளியே உலவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எந்த ஆட்சியாக இருந்தாலும் கஞ்சாவை ஒழிப்பதற்கு என்று ஒரு தனித் துறை, காவல் துறையிலே உண்டு. ஆனால், கடந்த காலங்களிலே பார்த்தால், ஆளுங்கட்சிக்கு எதிர்ப்பான கருத்துள்ளவர்களுக்கு போலீஸ் ஸ்டேஷனிலே அவரவர்கள் தகுதிக்குத் தக்க கஞ்சாவை வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) செரினா என்கிற பெண்ணுக்கு — ஒரு ஏழெட்டு மாதம் தொலைக்காட்சியில் வேறேதும் பார்க்க முடியவில்லை; வருவதும் போவதும் என ஏதோ வெளிநாட்டு விருந்தாளியைப் போல — அவருக்கு அரை மூட்டை கஞ்சா. பிறகு சென்னைக்கு அவரைக் கொண்டுவந்து ஒரு வீட்டைச் சோதிக்கிறார்கள், மகாபலிபுரம் சாலையிலே. ஒரு கோடியே நாற்பது இலட்சம் ரூபாய் எடுக்கப்படுகிறது. அதிலே அதிர்ச்சியான தகவல், முப்பது இலடசம் ரூபாய் கள்ள நோட்டு என்பதும், அந்தக் கள்ள நோட்டு நாசிக்கிலே அடுத்த மாதம் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிற நெம்பரிலே இந்த நோட்டு இருக்கிறது என்பதும், (மேசையைத் தட்டும் ஒலி) இதை மிகச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள கூடாது என்பதும், செரினாமீது இந்த நடவடிக்கை பாய்ந்ததற்கு ஒரு நிழல் மனிதர் காரணம் என்பதும், அவர் ஆண்டில் பாதி வெளிநாட்டிலே சுற்றுகிறார் என்பதும், நான் அறிந்தவரை அந்த நிழல் மனிதர் பாளையங்கோட்டையிலே நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, அவர் A.P.R.O.–வாக வேலை பார்த்து... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Case விடுதலை ஆகிவிட்டதே! (குறுக்கீடு) Investigation-ல் இல்லை Sir. Case is already concluded. உட்காருங்கள். (குறுக்கீடு) Case is already concluded. (குறுக்கீடு) No, no, no. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. கருப்பசாமி பாண்டியன், சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) Case முடிந்துவிட்டது, உட்காருங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** உலகம் எங்கும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம், உட்காருங்கள். திரு. கருப்பசாமி பாண்டியன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

*பிற்பகல் 12—20*

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** *உலகம் எங்கும் நாங்களும் சங்கராச்சாரியாரும் கொள்கை ரீதியாக இரண்டு துருவங்கள். (குறுக்கீடு) நான் அந்த வழக்குக்குள்ளே வர விரும்பவில்லை; அது நீதிமன்றத்தில் இருக்கிறது. ஆனால், நீங்கள் உங்களுடைய ஆட்சியிலே இந்துக்களுக்குத் தலைமைப் பீடமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட, நீங்களே போய் வழிபட்ட, அந்தத் திருத்தலத்திலேயிருந்த, அந்தக் காஞ்சி மடத்தைக் கஞ்சா மடமாக அறிவித்திருப்பது (மேசையைத் தட்டும் ஒலி) கோடிக்கணக்கான இந்துக்களுடைய மனதைப் புண்படுத்தியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள்.*

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** *வளர்ப்பு மகன் என்று, இங்கிலாந்து இளவரசர் சார்லஸுக்கு அடுத்து, பிரம்மாண்டமான திருமணம், மகிழ்ச்சியான விஷயம்தான். ஆனால், அந்த வளர்ப்பு மகன், (குறுக்கீடுகள்) எங்கள் ஊர் பாளையங்கோட்டை சிறைச்சாலைக்கே வந்தார். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. வீ. கருப்பசாமி பாண்டியன், கொஞ்சம் சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** *என்ன என்று சொன்னால், அவருக்கும் அரை மூட்டை கஞ்சா! (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள்.*

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** *பிறகு அவர் ஜாமீனிலே வெளியே வந்தார். இன்றுவரை அந்த வழக்கு என்ன ஆனது என்பது தெரியவில்லை. அந்த சுதாகரன்மீது என்ன காரணத்திற்காக கஞ்சா வழக்குப் போட்டீர்கள் என்பதற்கு நீங்கள் தெளிவாகப் பதில் சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *முடியுங்கள், திரு. கருப்பசாமி பாண்டியன், முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்). உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர் பதில் சொல்கிறார், உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் தனிப்பட்ட முறையிலே யாரையும் குற்றஞ்சாட்டி (குறுக்கீடு) இங்கே பேசிக்கொண்டு இருக்கவில்லை. (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அமைச்சர் பேசிக்கொண்டு இருக்கும்போது பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) திரு. சேகர்பாபு...*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *அவர், கடந்தகால ஆட்சியில், (குறுக்கீடு) கடந்தகால ஆட்சியில், காவலர்கள் எப்படிக் கஞ்சாவைப் பயன்படுத்தினார்கள் என்பதைப் புள்ளிவிவரங்களோடு பேசுகின்றார்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. பி.கே. சேகர்பாபு, நீங்கள் இடையூறு செய்து கொண்டேயிருக்கிறீர்கள். திரு. பி.கே. சேகர்பாபு, எச்சரிக்கிறேன், உட்காருங்கள் முதலில்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *இந்த ஆட்சி வந்து நான்கு மாதங்கள் ஆகப்போகிறது. ஒருவர்மீதுகூட கஞ்சா வழக்குப் போடவில்லை. ஆனால், கடந்த காலத்திலே கஞ்சாவை வைத்து, எதிரிகளை மடக்குவது என்பதும், எதிரிகளை அச்சுறுத்துவது என்பதும், மற்றவர்கள்மீது அது பயன்படுத்தப்பட்டது என்பதற்கும் ஆதாரம் இருந்த காரணத்தினால்தான், வழக்குகள் நீதிமன்றத்திலே நடத்தப்பட்டன என்பதைச் சொல்லி, (குறுக்கீடு) கஞ்சாவைக் காவல் துறையைச் சேர்ந்தவர்கள், (குறுக்கீடுகள்) காவல் துறையைச் சேர்ந்தவர்கள், ஆளுங்கட்சியினுடைய விருப்பத்திற்கேற்ப, கஞ்சாவைப் பயன்படுத்தக் கூடாது என்பதைத்தான்...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடு) சொல்லுங்கள், திரு. டி. சுதர்சனம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் பேசுகின்றபோது, வழக்கு ஒன்று வழக்காடு மன்றத்தில் இருக்கின்ற நேரத்தில் நீங்கள் பேசக்கூடாது என்று ஒரு நல்ல தீர்ப்பினை வழங்கினீர்கள். ஆனால், அதே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரித்துச் சொல்லக்கூடாது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Case is under investigation என்றுதான் நான் சொன்னேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சரி. இந்தப் பக்கம் மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். Already they concluded, judgement pronounced. (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், என்ன சொல்லுங்கள்?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இன்னும் வழக்காடுமன்றத்திலே நடந்து கொண்டிருக்கின்ற ஒரு வழக்கைப்பற்றி, பல வழக்குகளைப்பற்றி, மாண்புமிகு உறுப்பினர், திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும், அவர் ஆதாரத்தை வைத்துக்கொண்டு பேசுகிறார் என்று சொன்னார். எந்த ஆதாரத்தை வைத்து, எந்த நீதிமன்றம், "Police – காவல் துறை – கஞ்சாவை வைத்துப் பொய் வழக்குப் போடப்பட்டிருக்கிறது" என்று தீர்ப்பு ஏதேனும் கூறியிருக்கிறார்களா? அந்த ஆதாரத்தைத் திரு. கருப்பசாமி பாண்டியன் வைத்திருக்கின்றாரா? அதுபோன்ற எந்த ஆதாரமும் இல்லாமல், பொத்தாம் பொதுவாக அவர்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொய் வழக்குப் போட்டதாகச் சொல்லவில்லை. கஞ்சாவை வைத்து ஆளுங்கட்சிக்காரர்கள், தங்களுக்கு வேண்டாதவர்கள்மீது வழக்குப் போட்டார்கள் என்றுதான் இங்கு சொல்லப்பட்டதே தவிர, பொய் வழக்கு என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் (குறுக்கீடு) திரு. டி. சுதர்சனம்.

பிற்பகல் 12–25

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்குகளைப்பற்றி இந்த மன்றத்திலே விவாதிப்பது முறையல்ல என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், இங்கே பேசப்படுகின்ற வழக்கு, யாரோ ஒரு தனிப்பட்ட ஒருவர் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக கஞ்சா வழக்குப் போட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். கஞ்சா வழக்குப் போட்டவர்களுக்கும், இவர்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) கஞ்சா வழக்கு, இப்போது, செரினா என்ற அம்மையார்மீது கஞ்சா வழக்கு போட்டதாக, திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் குற்றம் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால், அந்தக் கஞ்சா வழக்கிற்கும், இங்கே இருக்கின்ற பிரதான எதிர்க்கட்சிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்று நான் கருதுகிறேன். அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே தெரிவிக்கவேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அருமை அண்ணன் திரு. டி. சுதர்சனம் அவர்கள் சொன்னதுபோல, கஞ்சா வழக்கிற்கும், எங்களுக்கும் சம்பந்தம் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Right.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் பேசியதும், (கூச்சல்—குழப்பம்) அவர்களுக்கு ஆதரவாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் பேசியதும், அவர்களுக்கு ஆதரவாக மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஆதாரத்தை வைத்துக்கொண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் பேசுகிறார் என்று சொன்னதற்குத்தான் நான், "எந்த ஆதாரத்தை அவர் வைத்திருக்கின்றார்?" என்றேன். அந்த ஆதாரத்தை...(குறுக்கீடுகள்) இது என்ன? எல்லோரும் பதில் சொன்னால் எப்படி? (குறுக்கீடுகள்) எல்லோரும் பேசினால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு. (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒருவர் பேசிக் கொண்டிருக்கும்போது, இடையிலே குறுக்கிட்டுப் பேசாதீர்கள். (குறுக்கீடு) குறுக்கிட்டு யாரும் பேசாதீர்கள்; அவர் பேசிக் கொண்டிருக்கிறார் அல்லவா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். ஆதாரங்கள் என்ன என்று கேட்கிறார். நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்குகள்தான் ஆதாரம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லிவிட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடு) சொல்லி முடித்துவிடுங்கள். முடித்துவிடுங்கள், சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நாங்களும் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்றது; அதற்குள், தீர்ப்பை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் வழங்குவது, எந்தவிதத்தில் நியாயம் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள் மற்றவர்கள் எல்லோரும். (குறுக்கீடு) திரு. வீ. கருப்பசாமி பாண்டியன், time ஆகிவிட்டது, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** ஐந்து நிமிடங்கள். முடித்துவிடுகிறேன். இங்கே பேசிய எதிர்க்கட்சி நண்பர் அவர்கள்,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொ. சின்னப்பன், உங்கள் இடத்திலே போய் உட்காருங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** "பயங்கரவாதத்தை, குறிப்பாக, விடுதலைப் புலிகளை ஒடுக்குவதில் எங்கள் ஆட்சிதான் சாதனை புரிந்தது" என்று சொன்னார்கள். அவர்கள் ஆட்சியிலே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக மட்டுமல்ல; தமிழீழத்திலே இருக்கிற தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த காரணத்தினால், எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த ஒருவர், பொடாவிலே கைது செய்யப்பட்டு, 19 மாதங்கள் வேலூர் சிறையிலே இருந்தார். அவருக்குத் 'தமிழ்நாட்டுப் பிரபாகரன்' என்றுகூட, அவருடைய கட்சிக்காரர்கள் சொல்லிப் பெருமைப்படுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், "என்ன விளைவுகளுக்கும் தயார்; விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில் இருந்து நான் பின்வாங்கமாட்டேன்" என்று அவர் குரல் கொடுக்கிறார். அது அவருக்கு இருக்கிற உணர்வு; உரிமை. அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால், தமிழ்நாட்டிலே விடுதலைப் புலிகள் என்று சொன்னாலே, நினைவுக்கு வருகிற திரு. வைகோ அவர்களோடு தேர்தல் கூட்டு வைத்துக்கொண்டு, நீங்கள், "விடுதலைப் புலிகளை ஒடுக்குவதில் நாங்கள்தான் சூரர்கள்" என்று சொல்வதற்கு உங்களுக்குத் தகுதியில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் அழுத்தந்திருத்தமாக, திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

உங்கள் ஆட்சி அலங்கோலத்திலேதான், காவல் துறைக்குத் தலைமை தாங்குகிற Home Secretary, D.G.P., City Police Commissioner, இவர்களெல்லாம் suspend செய்யப்பட்டார்கள். உங்கள் ஆட்சிக் காலத்திலேதான், C.B.,C.I.D.–யிலே தலைமைப் பொறுப்பிலே இருந்து, எங்கள் தலைவரை நள்ளிரவிலே கைது செய்தவருக்கு, ஆட்சியிலே

இருப்பவர்களின் தண்டனை இல்லாவிட்டாலும்கூட, இறை தண்டிப்பு என்று சொல்வார்களே, ஆண்டவன் பார்ப்பான் என்று, அந்த நம்பிக்கையுள்ளவர்களின் வழியிலே சொன்னால், ஆண்டவனே பார்த்து, போலி முத்திரைத்தாள் மோசடியிலே, 40 நாள் காராகிருகத்திலே அந்த ஆள் அடைக்கப்பட்டார் என்பதும், (மேசையைத் தட்டும் ஒலி) சுதந்திரம் கிடைத்தபிறகு, இந்தியாவிலே எங்கேயும் இல்லாத குற்றச்சாட்டு உங்கள் ஆட்சியிலேதான், காவல் துறையிலே வழங்குகிற முதல் தகவல் அறிக்கை என்கிற F.I.R.- என்பதே போலியாக (மேசையைத் தட்டும் ஒலி) பல்லாயிரக்கணக்கிலே, இப்படிப் போலி F.I.R. எத்தனை பேர்மீது போடப்பட்டது? அந்த ஐந்தாண்டுக் காலத்திலே போடப்பட்ட வழக்குகளிலே, எது உண்மையான F.I.R.? எது போலி F.I.R.? அதை ஆய்வு செய்தால், மிகப் பெரிய கஷ்டம். எனவே, அதற்குள்ளே எல்லாம், நான் போக விரும்பவில்லை. (குறுக்கீடுகள்) எம.கே. பாலன் என்கிற ஒரு முன்னாள் எம்.எல்.ஏ.; வீட்டிலே இருக்கிறவரைப் பிடித்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** முடிக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) முடிக்கச் சொல்லுங்கள் அவரை.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** நான் காவல் துறையிலே இருப்பவர்களுக்குள்ள கோரிக்கைகளை மட்டும் சொல்லி நிறைவு செய்கின்றேன். காவலர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வீ. கருப்பசாமி பாண்டியன், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12–30

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** காவல் துறையில் பணிபுரிகிற காவலர்கள்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முடிக்கப் போகிறார், முடிக்கப் போகிறார். ஏன் பிரச்சினை செய்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.



முடிக்கப் போகிறார், முடிக்கப் போகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆர். சின்னசாமி, உங்கள் இருக்கையைவிட்டு இங்கு ஏன் வருகிறீர்கள்? உங்கள் இடத்திற்குச் சென்று உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சின்னசாமி உங்கள் இடத்திற்குப் போகிறீர்களா? என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்களுடைய கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்களிடத்திலே எழுதிக் கொடுத்தால் அவர் கவனித்துக்கொள்வார். நேரம் ஆகிக்கொண்டிருக்கிறது. இன்னும் ஆறு கட்சித் தலைவர்கள் பேச வேண்டும். தயவுசெய்து அடுத்த காங்கிரஸ் கட்சி உறுப்பினரைப் பேச அழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்... (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பண்டியன்:** நன்றி சொல்லிவிடுகிறேன். ஒரே வார்த்தை. நிறைவாக இந்த மூன்று மாதங்களிலே என் தொகுதி தென்காசிக்கு நான் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளிலே பாதியை நிறைவேற்றி இன்னும் பாதியை வருகின்ற ஆண்டுகளிலே நிறைவேற்றுகிற வழிவகைகள் கண்டு, நெல்லை மாவட்டத்திற்குப் பல திட்டங்களைத் தந்திருக்கிற.(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சின்னசாமி ஏதாவது கருத்துச் சொல்ல வேண்டுமென்றால் முதலிலே அனுமதி பெற்றுப் பேச வேண்டும். அவையில் உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது. அதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். தெரிகிறதா? உங்கள் ஊரில் பேசுவது மாதிரி இங்கே பேசக் கூடாது. (குறுக்கீடு) உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** நம்முடைய நெல்லை மாவட்டத்திற்குப் பல திட்டங்கள்; ஏன்? இன்னும் சொல்லப்போனால், நெல்லை மாவட்டம் பெற்றிருக்கிற நன்மைகளில நூற்றுக்குத் தொண்ணூறு சதவீத

நன்மைகள், கலைஞருடைய ஆட்சிக் காலத்திலேதான் வந்திருக்கின்றன. ஈரடுக்கு மேம்பாலம், பல்கலைக்கழகம், 11 அணைகளிலே 9 அணைகள், By-pass சாலை, சட்டக் கல்லூரி, மாநகராட்சி அந்தஸ்து, நெல்லை மாவட்டத்திலுள்ள அவ்வளவு நகரங்களுக்கும், ஒன்றியப் பகுதிகளுக்கும் தாமிரபரணி தண்ணீர், இப்படி அந்த மாவட்டத்தை வாழ வைத்திருக்கிற எங்கள் உள்ளத்திலே எல்லாம் இதயபூர்வமாக நிறைந்திருக்கிற நாங்கள் நித்தம் நித்தம் வணங்குகிற தலைவர் கலைஞர் அவர்களே உங்களுக்கு நன்றி சொல்ல நான் கற்ற தமிழிலே வார்த்தை இல்லை. உயிரையே உங்களுக்காகத் தருவோம் என்று சொல்லி நன்றியோடு நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய சட்டப் பேரவையினுடைய பட்ஜெட் சட்டமன்றக் கூட்டத் தொடர், ஏறக்குறைய ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. கடந்த முப்பது நாட்களாக, பல்வேறு செய்திகளை, பல்வேறு திட்டங்களை, இந்த மாமன்றத்திலே தந்து வரலாற்றுப் புகழ்மிக்க கூட்டத் தொடராக, இந்தக் கூட்டத் தொடரை நிறைவு செய்கின்ற நாட்களை நோக்கி நாம் நகர்ந்துகொண்டிருக்கிறோம். கடந்த முப்பது நாட்களாக ஏறக்குறைய இந்த மன்றத்திலிருந்து வெளியே புறப்பட்ட தகவல்கள், செய்திகள், தமிழகத்தினுடைய விளிம்புக்கெல்லாம் சென்று நாட்டு மக்களுடைய நெஞ்சத்தையெல்லாம் நனைய வைத்தது; குளிர வைத்தது என்பதை நாட்டிலுள்ள நல்லவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்; விஷயம் தெரிந்தவர்கள் பாராட்டுகிறார்கள். எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாமல் தோற்றுப்போன அரசாங்கங்கள் உண்டு. மக்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாமல், அந்த எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தோற்றுப்போன அரசுகள் இந்த மண்ணிலே இருந்திருக்கின்றன, இந்த மண்ணைவிட்டு மறைந்திருக்கின்றன. மக்களுடைய எதிர்பார்ப்புகளை 50 விழுக்காடு, 60 விழுக்காடு, 70 விழுக்காடு என்று நிறைவேற்றிய அரசுகளும் உண்டு. ஆனால், மக்களுடைய எதிர்பார்ப்புகளை மீறி, அதிகமாகச் செயல்பட்ட ஒரு அரசு உண்டு என்கிற வரலாற்றினைப் படைத்து, அரசு நிர்வாகத்திற்கு ஒரு புதிய முன்னுதாரணமாக, மக்கள் நலப் பணிகளிலே ஒரு புதிய அத்தியாயத்தை எழுதிக்கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை, நான் நெஞ்சார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



தோழமை கொண்டிருப்பதால் அல்ல. நான்மட்டும் அதைச் சொல்லவில்லை. இந்த அகில இந்தியாவிலே மிக அழகாக ஆங்கில ஏடான அங்கீகாரம் பெற்றிருக்கின்ற, 'Times of India'. ஒரு ஏழே ஏழு வாக்கியங்களிலே இந்த நூறு நாள் சாதனைகளைச் சொல்லியிருக்கிறது. அந்த வார்த்தைகளை இந்த மாமன்றத்திலே நான் பதிவுசெய்ய விரும்புகிறேன்:

பிற்பகல் 12–45

"The State has now acquired a shimmering smile on its face - a collective expression of the satisfaction firmly seated in the heart of its people. The reason behind this has much to do with the new regime and Dr. Kalaignar's ascension to power. Prior to the election furore who would have ever dreamed of purchasing 1 Kg. of rice for Rs.2/-? Or that our farmers would be able to focus on future development untroubled by co-operative loans and electricity bills? Or that the ESMA and TESMA Acts, a thorn in the flesh of many a Government employee's career, would be repealed? The State is on the verge of a beautiful metamorphosis, no doubt, and thanks to the new regime, is charting its course on a distinct upward spiral." (Thumping of desks)

இதுதான், இந்த 100 நாட்கள் ஆட்சியினுடைய சாதனைகளைக் குறித்து, 'Times of India' என்கிற அந்த ஆங்கில ஏடு எழுதியிருக்கிற அந்தச் செய்திக் கட்டுரை என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாக இந்த நாட்டிற்கு நான் கொண்டுபோக விரும்புகிறேன்.

காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது, இங்கே முன்னால் அந்தப் பொறுப்பைக் கையிலே வைத்திருந்த, இன்று பிரதான எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஓர் உறுப்பினர் பேசி அமர்ந்த பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, இன்று அந்தப் பொறுப்பைக் கையிலே வைத்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒருவர் பேசி அமர்ந்து, பிறகு, காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் பேசுவதற்கான வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். 100 நாட்களான இந்த ஆட்சியிலே காவல் துறையைப் பற்றி, என்ன நடந்தது என்று சொல்வதற்கான பொறுப்பு எனக்கு இருக்கிறது. கடந்த காலத்திலே என்ன தவறுகள் நடந்தன, அந்தத் தவறுகள் நடக்காமல் எப்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று, இங்கு நடக்கின்ற ஆட்சிக்கு ஆலோசனை சொல்ல வேண்டிய கடமையும் எனக்கு இருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்களை இந்த மாமன்றத்திலே

வைக்கிறேன். தகவல்கள் முழுவதும் சரியானவை என்று நான் வாதிடமாட்டேன். ஆனால், தகவல்கள் பொறுப்பாகச் சேகரிக்கப்பட்டவை. இதற்கு மாற்றுக் கருத்து எங்கேயும் இருக்குமென்று சொன்னால், என்னுடைய உரை முடிந்த பிறகு, நீங்கள் அவர்களை அனுமதிக்க வேண்டும். என்னைக் குறுக்கிட அனுமதிக்கக்கூடாது என்பதை நான் முதலிலேயே மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இந்த 100 நாட்களிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே என்ன நடந்தது காவல் துறையில் என்பதை நான் சொல்லவில்லை, நமது 'இந்து' பத்திரிகை எழுதியிருக்கிறது. அதையும் நான் இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன்:

"It was a multi-pronged action by the Tamil Nadu Police in the last three months after the Dravida Munnetra Kazhagam took over the reins in the State again. To begin with, a crackdown was ordered on anti-social elements through a sustained "storming operation". Also, a drive was launched against prohibition offences and smuggling of essential commodities meant for the public distribution system. As illicit sand quarrying was rampant, the Police, Revenue and P.W.D. officials launched a joint drive against the transportation of illegally mined sand.

Director General of Police D. Mukherjee, who was repatriated from the Centre to Tamil Nadu has revived the "Police Image Project" aimed at bringing in an attitudinal change at the grass-roots. It was a big relief for the Police, when controversial events like the Kandadevi Car festival in Sivaganga district, observance of the Melavalavu Massacre and the Tamiraparani river tragedy anniversaries passed off peacefully.

According to the Police, 6,314 persons were arrested during the storming operations, 81 later being detained under the Goondas Act. Similarly, 16,271 persons were arrested in connection with 16,125 prohibition cases and 451 vehicles were seized. Twenty persons were detained under the Bootleggers Act.

The drive against Motor Vehicles Act violations led to the registration of 2,66,451 cases of which 1,49,606 cases were booked for using dazzling lights, one of the main reasons for accidents on highways.



Under the Police Image Project, which, it is hoped, will go a long way in instilling public confidence in police, every Superintendent of Police has been requested to select two Inspectors who will address the personnel on a weekly basis on the 'dos and don'ts' and the need to protect human rights, an aspect emphasised by Mr. Mukherjee."

*பிற்பகல் 12–40*

இது, கடந்த 100 நாட்களாக, இந்தக் காவல் துறை என்ன செய்தது என்பதை, ஒரு நடுநிலை நாளேடு என்று நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற, 100 ஆண்டுக் கால பாரம்பரியமிக்க "Hindu" பத்திரிகை எழுதியிருக்கிற தகவலைத்தான் நான் இந்த மன்றத்திலே குறிப்பிட்டேன்.

எனவே, ஒரு நல்ல துவக்கம், எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் சொன்னதுபோல, வரலாற்றுப் புகழ்மிக்க இந்த அமைச்சரவையிலே, ஏறக்குறைய ஐந்து முறை முதலமைச்சராக இருந்து, பழுத்த நிர்வாக அனுபவம் பெற்று, வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளையும், சோதனைகளையும், வேதனைகளையும் கடந்து, ஏழை படுகிற கஷ்டத்தையும் உணர்ந்து, பொது வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளை அறிந்த ஒரு அற்புதமான தலைவர், இன்று காவல் துறையைக் கையிலே வைத்திருக்கிறார் என்று சொன்னால், இந்தத் தமிழக மக்கள் அதைப்பற்றிப் பாதுகாப்பாக உணர்கிறார்கள்; உணர முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, காவல் துறைக்கு ஏதும் செய்யவில்லை என்பது என்னுடைய வாதம் அல்ல. அது ஏதும் செய்யவில்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு நான் விவரமற்றவனும் அல்லன. ஆனால், அங்கே என்ன நடந்தது என்று சொன்னால், காவல் துறைக்கு மிகப் பெரிய பொருள் செலவு செய்யப்பட்டது. காவல் துறைக்கு மிகப் பெரிய ஊக்கம் தரப்பட்டது. ஆனால், ஒரு சிறந்த மல்யுத்த வீரனைப்போல வளர்த்தார்களேயொழிய, அவனிடமிருந்த இதயம் எடுக்கப்பட்டுவிட்டது என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இதயமே இல்லாத ஒரு காவல் துறையாக இருந்தது. இன்றும், ஆங்கிலத்திலே சொல்லப்போனால், in the last five years, the Home-Police Department had lost its soul. *(குறுக்கீடு)*

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order...

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** தன்னுடைய ஆன்மாவை இழந்துவிட்ட காவல் துறைக்கு, மீண்டும் ஆன்மாவை வழங்கக்கூடிய புனிதமான பணியைத்தான் நாம் செய்யவேண்டும். அந்தப் பணியை நாம் செய்யத் தயாராக இருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சொல்லுகின்றேன். *(குறுக்கீடுகள்)* நான் முடித்துவிட்ட பிறகு சொல்லுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am not yielding. *(குறுக்கீடு)* முடித்துவிட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** See, Mr. Jayakumar, he has not stated that he... *(குறுக்கீடுகள்)* என்ன வேண்டும்? *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலே இருக்கின்ற காவல் துறைக்கு என்ன குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன கேட்கிறீர்கள்? *(குறுக்கீடு)* என்ன வேண்டும்? *(குறுக்கீடு)* சொல்லுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே, காவல் துறை ஒரு மல்யுத்த வீரனைப்போல் உருவாக்கப்பட்டு, இதயம் இல்லையென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களை நான் கேட்கின்றேன். ஏன் இந்தக் கருத்தை அவர்கள் மறைத்துக் கூறுகின்றார்கள்? இன்றைக்கு முதலமைச்சராக இருக்கும் ** அன்றைக்கு முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் *(குறுக்கீடு)* sorry, sorry.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் என்று சொல்லுங்கள், அந்த வார்த்தையை எடுத்துவிடுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** முதலமைச்சர், அன்றைக்கு காவல் துறையைப்பற்றி என்ன சொன்னார்? காவல் துறை, முழுவதுமாக ஈரல் கெட்டுவிட்டது என்கின்ற கருத்தை, ஏன் மறைத்துப் பேசுகின்றார் என்றுதான் நான் இங்கே கேட்க விரும்புகின்றேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரல் கெட்டுவிட்டது என்று சொல்வதுதான் அவருடைய பெருமை. அதைத் தைரியமாகச் சொல்லக்கூடிய அரசியல் தைரியம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



அவருக்கு இருந்தது. தனக்குக்கீழே இருக்கிற துறையில் என்ன செயல்பாடுகள், குறை என்பதை, ஒரு ஜனநாயக நாட்டிலே பகிரங்கமாக ஒத்துக்கொள்ளக்கூடிய மனப்பக்குவம்தான், முதலில் ஆள்வதற்கான தகுதி என்பதை, எனது அருமைக்குரிய நண்பர் உணர்ந்து கொள்ளவேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இருக்கின்ற குறையை, இல்லாதது என்று வாதிட அவர் தயாராக இல்லை. நாங்கள் சுட்டிக்காட்டினால், அவர் புரிந்துகொண்டார். தவறுகளே இல்லாத ஒரு நிர்வாகம் என்பது இருக்கமுடியாது. நீங்கள்தான் சொல்வீர்கள், தவறுகளே இல்லாத நிர்வாகம் நடந்தது என்று. ஆனால், என்ன தவறுகள் நடந்தது என்பதைச் சொன்னால், என்ன ஆதாரம் என்று உடனே கேட்பீர்கள். ஆதாரத்தைச் சொன்னால், அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்வீர்கள். இப்பொழுதுகூட, என்னுடைய அருமைக்குரிய நண்பர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கருப்பசாமி பாண்டியன் அவர்கள் பேசுகின்றபோது, ஒரு வழக்கைச் சொன்னார். நான் இதயம் இல்லாத காவல் துறை என்று சொன்னேன். அதைச் சொன்னதற்கான நூற்றுக்கு நூறு விழுக்காட்டை, அதற்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

எப்படி கஞ்சாத் தோட்டம், ஒவ்வொரு காவல் நிலையம் முன்பும் பயிரிடப்பட்டது என்பதை, அவர் புள்ளிவிவரத்தோடு சொன்னார். யார் மேல்? உச்ச நீதிமன்ற நீதிபதியினுடைய மருமகன்மீது, கஞ்சா வழக்கு. மிகப் பெரிய, ஆயிரம் ஆண்டு, இரண்டாயிரம் ஆண்டு பாரம்பரியம் படைத்த இந்த...*(குறுக்கீடு)* உள்ளதைத்தானே நான் சொல்கிறேன்! *(குறுக்கீடு)* இதிலே சொல்வதற்கு என்ன இருக்கிறது? *(கூச்சல்—குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, *(குறுக்கீடு)* நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள், நான் சொல்கிறேன். திரு. பீட்டர்... *(குறுக்கீடு)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் ஒன்றும் தப்பாகப் பேசவில்லையே? *(கூச்சல்—குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mr. Peter, go to other subject. *(குறுக்கீடுகள்)* Mr. Peter go to other subject. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், உட்காருங்கள்.

*பிற்பகல் 12—45*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இதயமற்ற

காவல் துறை என்று சொன்னது, நான் எதுவும் தப்பாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) எதற்காக அது ஆக்கப்பட்டது என்பதை நண்பர்கள் புரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) இன்று அவர்கள் பேசுகின்றபோது... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். முதலில் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை எதிர்நோக்கியிருக்கின்ற பிரச்சினைகள், இன்று தமிழகக் காவல் துறைக்கு என்ன நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை மூன்றே வாக்கியங்களில் என்னால் சொல்ல முடியும். அந்த மூன்று வாக்கியங்களை மட்டும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுபோகிறேன். இன்று அவர்கள் பொறுப்பு எடுத்திருக்கின்ற அந்தக் காவல் துறைக்கு, என்ன குறை? அதனை மூன்றே வாக்கியங்களில் என்னால் சொல்ல முடியும். இன்றைக்குத் தமிழகக் காவல் துறைக்கு ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகள் என்னவென்றால், யார் அவர்களைக் கண்டு பயப்பட வேண்டுமோ, அவர்கள், அவர்களைக் கண்டு பயப்படுவதில்லை; யார் அவர்களை நம்பவேண்டுமோ, அவர்கள், அவர்களை நம்பவில்லை; யார் அவர்களுக்கு நண்பர்களாக இருக்கவேண்டுமோ, அவர்கள் அந்தக் காவலர்களை நண்பர்களாக ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய காவல் துறையினுடைய இலக்கணம் இதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் எதற்குச் சொன்னேன் என்று சொன்னால், யார் அவர்களைக் கண்டு பயப்பட வேண்டுமோ, அவர்கள் பயப்படவில்லையென்று சொல்வதற்குக் காரணம், அந்தக் காவல் துறையைச் சுற்றிப் பின்னியிருக்கிற உலகம், இன்று தவறான உலகமாக இருக்கிறது. காவல் துறைக்குள்ளேயிருக்கிறவர்களே, காவல் நிலையங்களை வைத்துக்கொண்டிருக்கின்றவர்களே, போலி F.I.R.-களை அடிப்பார்கள் என்று சொன்னால், குற்றவாளிகள் அவர்களைப் பார்த்து எப்படிப் பயப்படுவார்கள்? இது நடக்கக்கூடாது என்பதல்ல; இதற்கு நான், கடந்தகாலத்தில் ஆட்சியிலிருந்த முதலமைச்சரை நான் குறை சொல்லவில்லை. அதிகாரிகளை நான் குறை சொல்லவில்லை. இந்தியாவே உற்றுப் பார்க்கக்கூடிய அளவிற்குத் தமிழகத்தின் வரலாற்றில் முதல்முறையாக காவல் நிலையங்களிலேயே, போலியாக F.I.R.-களை அச்சடித்து, ஆயிரம் வழக்குகளைப் பதிவுசெய்து, ஒரு வழக்கு, இரண்டு வழக்கு அல்ல; ஆயிரம் வழக்குகளைப் பதிவுசெய்து, தேச உடைமையாக்கப்பட்ட ஆயுள் காப்பீட்டுக் கழகங்களை ஏமாற்றி,



கோடிக்கணக்கான பணத்தைப் பெற்ற ஒரு பெரிய scandal ஒரு பெரிய மோசடி அம்பலத்திற்கு வருகிறது: முதலமைச்சராக இருந்தவர் என்ன செய்திருக்க வேண்டும்? இந்த நிர்வாகத்தைப் பார்த்து அவாகள் என்ன செய்திருக்க வேண்டும்? ஓராயிரம் வழக்கைப் போடுகின்ற அளவிற்கு, போலி F.I.R. தயாரித்து, நீதிமன்றங்களிலே charge-sheet போடக்கூடிய அளவிற்கு, ஒரு பெரிய நிகழ்வு நடந்திருக்கிறது என்று சொன்னால், அந்த இலாகாவைப் பொறுப்பிலே, கையிலே வைத்திருக்கிறவர்கள் என்ன செய்ய வேண்டும்? உடனே அந்த வழக்கை C.B.I.–க்கு ஒப்படைத்திருக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இது ஒரு normal prudent rules of policing. ஏனென்று சொன்னால், இதிலே தமிழகத்திலே இருக்கின்ற காவல் துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட குற்றமாக இருக்கின்றபோது, அதை C.B.I. விசாரிப்பதுதானே நியாயமாக இருக்கும்? C.B.I. விசாரிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால், முடியாது என்று நீங்கள் மறுக்கிறீர்கள். இன்று உச்ச நீதிமன்றமே ஆணையிட்டிருக்கிறது. இதற்குக்கூட என்ன ஆதாரம் என்று கேட்பார்கள். என்னுடைய அருமைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்று, 14–7–2006 நாளிட்ட "The Hindu" பத்திரிகையில் வந்த செய்தியை வாசிக்க அனுமதிக்குமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்:

"The C.B.I., Anti-corruption, Chennai Unit will begin in the next few days, the investigation into the sensational fake F.I.R. scam that rocked the State a couple of months ago. The cases which were recently exposed by a recent Television channel relates to printing of thousands of fake F.I.R. proformas in a Press in Salem and several cases were booked using these F.I.R.s Following the Supreme Court order, handing over the investigation to the C.B.I., the Chennai Unit is awaiting formal orders from its Headquarters. The Supreme Court felt that since there was a possibility of involvement of many State Police officials in the case, it would not be appropriate for Tamil Nadu Police to handle the investigation".

இதுதான் உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பு. இதைக்கூட அந்த முதலமைச்சரே, அப்படிச் செய்திருப்பார்கள் என்று சொன்னால் பொறுப்பிலேயிருந்த முதலமைச்சர் தனக்குக் கீழே இருந்த ஒரு நிர்வாகத்தில் இவ்வளவு பெரிய மாபெரும் மோசடி நடந்து ஏழையெளிய மக்களுக்குச் சொந்தமான, அரசுக்குச் சொந்தமான.... (குறுக்கீடுகள்) இதிலே என்ன சொல்லிவிட்டேன்? (குறுக்கீடுகள்) தப்பைத்தானே சொல்லியிருக்கிறேன்:

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சொல்லுங்கள், என்ன? (குறுக்கீடுகள்) உங்களுடைய துணைத் தலைவர் பேசுகின்றார். (குறுக்கீடுகள்) எல்லோரும் சப்தம் போட்டால் என்ன அர்த்தம்?*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், F.I.R.— முதல் தகவல் அறிக்கையைப்பற்றி இங்கே— போலி F.I.R.–ஐப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார். இது காலங்காலமாக....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அப்படியெல்லாம் ஒன்றுமல்ல.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *நீங்கள் அதை விசாரித்துப் பார்த்தீர்களா? உங்களுக்குத் தெரியுமா?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நானும் 34 வருடங்களாக வக்கீலாக இருந்திருக்கிறேன். இரண்டு வருடங்களுக்கு முன்னர்தான் நடந்தது.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *இல்லை, சொல்வதைக் கேளுங்கள், ஒரு இரண்டு நிமிடங்கள். கவனியுங்கள். இல்லை, இது மத்திய...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சொல்லுங்கள்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *உடனடியாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், தீர்ப்பு வழங்கிட வேண்டாம். இதுவும் நீங்கள் சொன்னது போல் investigation–ல் இருக்கிறது. C.B.I. விசாரிக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம்... (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 12–50.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்கிறேன் கேளுங்கள். நானே, இரண்டு வருடங்களுக்கு முன்னால், போலி F.I.R. போடப்பட்ட கொலை வழக்கு ஒன்றை நடத்தியிருக்கிறேன். (குறுக்கீடுகள்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *நிரம்ப காலமாக நடந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் குற்றமும், (குறுக்கீடுகள்) எந்தக் குற்றமும், எந்த முறைகேடும், எந்தச் சட்ட விரோதமான காரியமும்*



*கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பின்னர்தான், அந்தக் குற்றச்சாட்டு அடிப்படையில், வாதங்கள் நடைபெறும். இது கண்டுபிடிக்கப்பட்டது, கடந்த ஆட்சிக் காலத்தில் அந்த ஆட்சிக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதைப் பற்றித்தான, நம்முடைய மாணபுமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். நீண்டகாலமாகத் திருட்டு இருக்கலாம்; நீண்டகாலமாகக் களவு இருக்கலாம்; ஒவ்வொரு களவும் கண்டுபிடிக்கப்பட்டபோதுதான், குற்றத்திற்கான நடவடிக்கை எடுக்க முடியும். அந்த நடவடிக்கை எடுத்ததிலேதான், மாநிலத்திலே உள்ள காவல் துறை இதில் பெருமளவுக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறபோது, அதை விசாரிப்பதற்கு C.B.I. துறையைக் கொண்டு விசாரணை நடத்த அன்றைய முதலமைச்சர் ஆணையிடவில்லை; அல்லது ஒப்புக்கொள்ளவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச்சொன்னார்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *பேரவைத் தலைவர் அவர்களே....*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதாவது, Sir. நான் சொல்கிறேன் கேளுங்கள். அதாவது, நான் சொன்னது, இரண்டு வருடங்களுக்கு முன்னாலே எங்கள் மாவட்டத்திலே ஒரு கொலை வழக்கை போலீஸ் போட்டு, அந்தக் கொலை வழக்கை நான் நடத்தியவன். அதனாலே சொல்கிறேன். அந்த வழக்கிலே, போலி F.I.R. என்று சொல்லி, அந்த வழக்கில் விடுதலை ஆகியிருக்கிறது. அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் என்ற கருத்துபட கருத்தைச் சொன்னார்கள். குற்றம் கண்டுபிடிக்கப்பட்டதே, மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில்தான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அந்தக் குற்றம் முழுவதும் நடந்தது, இந்த ஐந்தாண்டுக் காலத்தில்தான் என்பதுபோல, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்றார். அதைத்தான் நான் மறுக்கின்றேன். அதனுடைய விசாரணை, காவல் துறை. போலி F.I.R.-ஐப் பயன்படுத்தியது என்ற விசாரணை, இன்றைக்கு C.B.I. விசாரிப்பதற்கு உச்ச நீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது. அவர்கள் விசாரணை முழுவதும் விசாரித்து முடிந்த பிறகுதான், எந்த ஆண்டிலிருந்து அந்தக் குற்றங்கள் நிகழ்ந்தன என்பது வெளிச்சத்திற்கு வரும். நீங்கள்கூட, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள்கூட, ஓர்*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2006 ஆகஸ்ட் 29

உதாரணத்தைச் சொன்னீர்கள். அதை நான் பெரியதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஏனென்று சொன்னால், அது உங்களுடைய, வழக்கறிஞருடைய தர்மம். அந்த தர்மத்தின்படி நீங்கள் நடந்து கொண்டீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) என்ன? திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னாள் முதலமைச்சர், இன்றைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். போலி F.I.R. தொடர்ந்து கடந்தகாலங்களிலே நடைபெற்று வந்திருக்கிறது என்று சொல்கிறார். இப்படி, முதல் தகவல் அறிக்கை போலியாகப் பதிவு செய்யப்பட்டது என்று இதுவரையிலும், வரலாற்றிலே, தமிழ்நாட்டிலே, இந்தியத் திருநாட்டில் எங்கும் சொல்லப்படவில்லை. கடந்த ஆட்சிக் காலத்திலேதான் நிரூபிக்கப்பட்டது. இது வெளிச்சத்திற்கு வந்தது. (குறுக்கீடுகள்) ஆமாம், வெளிச்சத்திற்கு வந்தது. இதற்கு முன்னால் எப்போதும் நடக்கவில்லை. (குறுக்கீடுகள்) இதற்கு முன்னால் எப்போதும் நடக்கவில்லை. இப்போது நடந்தது உண்மை; அது வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது. அதை இல்லை என்று சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. டி. சுதர்சனம், சொல்லுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை என்னவென்று சொன்னால், யார் காலத்திலே அந்த போலி F.I.R. அடிக்கப்பட்டது என்ற பிரச்சினை வேறு விஷயம். முன்னாள் முதலமைச்சர் ஆட்சிக் காலத்திலே அது கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கு நீதிமன்றத்திலே ஆணை பிறப்பிக்கப்பட்டு, C.B.I. விசாரிக்க வேண்டுமென்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஏன் நீங்களே செய்யவில்லை என்பதுதான் இன்றையதினம் நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய கேள்வியே தவிர வேறொன்றுமில்லை. அந்த வழக்கில் அதிகமான போலீஸ் அதிகாரிகள் சிக்கியிருக்கின்றார்கள்; அவர்கள்மீது இருக்கிற வழக்கை ஏன் C.B.I.–க்கு மாற்றவில்லை என்றுதான் அவர் கேள்வி கேட்டிருக்கிறாரே தவிர, பிரச்சினை எப்போது ஆரம்பிக்கப்பட்டது, எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது என்பதைப்பற்றியெல்லாம் பிரச்சினை இல்லை. மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எப்போது திருட்டு கண்டுபிடிக்கப்படுகிறதோ, அப்போதுதானே வழக்குப் போடமுடியும்? திருட்டு ஆரம்பிக்கும்போது யாருக்குத் தெரியும், இது திருட்டு என்று? யாருக்கும் தெரியாது. திருட்டைக் கண்டுபிடித்தவர்கள், வழக்கை எப்படி நடத்த வேண்டும் என்பதில்தான் பிரச்சினையே தவிர, வழக்கை யாரிடத்திலே கொடுத்து அதை நடத்த வேண்டும்; அதாவது, நம்முடைய தமிழகக் காவல் துறையிடம் கொடுக்க வேண்டுமா, அல்லது C.B.I.இடத்திலே கொடுக்க வேண்டுமா என்பதுதான் பிரச்சினையே தவிர, ஏன் இந்த அரசு C.B.I. இடத்திலே கொடுத்து, அதை விசாரிக்க மறுத்துவிட்டது என்பதை விவரமாகச் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)



2006 ஆகஸ்ட் 29] [திரு. டி. சுதர்சனம்]

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், திரு. சுதர்சனம் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது **

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி ஆவணங்கள், F.I.R. இருக்கிறதென்று கண்டுபிடித்ததே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவுடைய ஆட்சியில், அதை மறந்துவிடக்கூடாது. ஆனால், இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கின்ற பிரச்சினை, ஒன்றே ஒன்றுதான். தமிழ்நாட்டுக் காவல் துறையை நீங்கள் நம்புகிறீர்களா, இல்லையா? மத்தியிலே இருக்கிற C.B.I.–யைத்தான் நீங்கள் நம்புகிறீர்களா என்பதுதான் எங்களுடைய கேள்வியே தவிர, ஆகவே, இங்கே இருக்கிற C.B.C.I.D.–யை வைத்துக்கொண்டு விசாரிக்கலாம் என்று முடிவு செய்தார்களே தவிர, இவர்கள் சொல்வதைப் போலல்ல. தமிழ்நாட்டுக் காவல் துறை என்பது, நாம் இன்றைக்கு வைத்துக்கொள்கிறோம், ஸ்காட்லாண்டைப்போல இருக்கின்றவர்கள், தமிழ்நாட்டுக் காவல் துறை என்று எல்லோரும் பேசுகிறோம். ஆகவே, அதிலேயிருந்து விசாரிக்கலாம் என்று சொன்னார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி F.I.R. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது, அம்மாவுடைய ஆட்சிக் காலத்தில்தான கண்டுபிடிக்கப்பட்டது என்று மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் சொல்கிறார்கள். அது பத்திரிகையாளர்கள் கண்டுபிடித்து, குறிப்பாக, 'தமிழ் முரசு' பத்திரிகையில் வந்த பிறகுதான் வெளி உலகத்திற்கே தெரிய வந்தது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதே உண்மை; அதைத் திரையிட்டு மறைக்கப் பார்க்காதீர்கள். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி. (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க் கட்சிக் கொறடா அவர்கள் இங்கே கேட்டார்கள்; மாநிலக் காவல் துறையின்மீது நம்பிக்கை உண்டா, இல்லையா என்று. மாநிலக் காவல் துறையின்மீது ஆழமான நம்பிக்கை உண்டு. ஆனால், கடந்தகாலங்களில் நீங்கள் ஆட்சியில் இருந்தபோது செய்த அதிகார துஷ்பிரயோகம் காரணமாக, காவல் துறை சிறந்த முறையில் செயல்பட அனுமதிக்கப்படாதபோது... (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். அனுமதிக்கப்படாதபோது, C.B.I. விசாரணை கேட்டு, உண்மையை வெளிக் கொண்டுவருவதற்காக, அதுபோன்று கோருவது நடைமுறையில் உள்ளது என்பதை நான் கவனப்படுத்த விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. பீட்டர், (குறுக்கீடு) திரு. பீட்டர், திரு. பீட்டர், time ஆகிவிட்டது; சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர், கொஞ்சம் சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சின்னசாமி, உட்காருங்கள், (குறுக்கீடு) உட்காருங்கள்

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, C.B.I. விசாரணை என்பது, ஏதோ அயல் நாட்டிலிருந்து போலீசார் வந்து விசாரிப்பதல்ல. (குறுக்கீடுகள்) C.B.I. என்பது... (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஓர் உதாரணம்கூட என்னால் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக உட்காருங்கள். திரு. சின்னசாமி, உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இப்பொழுது நம்மைப் பொறுத்தவரை, அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம். இன்று அவர்களோடு தோழமையோடு இருக்கின்ற நம்முடைய அருமைக்குரிய மாண்புமிகு உறுப்பினர், நம்முடைய விடுதலைச் சிறுத்தைகளைச் சார்ந்த நம்முடைய



சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. செல்வம் அவர்கள், 2003 ஆம் ஆண்டு, மத மாற்றத் தடைச் சட்டத்தை எதிர்த்த காரணத்தினால், அவர்மீது நான்கு பொய் வழக்குகள் போட்டு சிறையில் அடைத்தது கடந்தகால ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) திரு. செல்வம் அவர்கள், உயர் நீதிமன்றத்திலே இந்த வழக்கை C.B.I. விசாரிக்க வேண்டுமென்று அவரே மனு போட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், C.B.I. விசாரிக்கக்கூடாது என்று மறுத்தவர்கள், இன்று இந்தப் பக்கம் இருக்கிறார்கள். இதை எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், மாநிலத்திலே ஒரு வழக்கு, மாநிலக் காவல் துறை அதிகாரிகளே சம்பந்தப்பட்டிருக்கின்றபோது, முறையான விசாரணை வேண்டுமென்று கேட்பதற்காகத்தான் C.B.I.-யைக் கூப்பிடுகிறோம். இப்பொழுதுகூட, ஒரு கஞ்சா கடத்தல் வழக்கைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்கள் பேசினார். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. விவாதத்திற்காக அதை ஒரு உண்மையான வழக்கு என்றுகூட நான் ஏற்றுக்கொள்கிறேன். கடந்தகால ஆட்சியிலே அந்தப் பெண்மீது போடப்பட்ட வழக்கு உண்மையான வழக்காகவே இருக்கட்டும். என்னுடைய கேள்வி, இங்கே நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பு வைத்திருக்கிறார்கள். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, கடந்த ஆண்டு முழுவதும் பிடிபட்ட அந்தக் கஞ்சா பொருட்களுடைய மதிப்பு ஒரு கோடி ரூபாய் சில்லானம் என்று போட்டுக் காண்பித்திருக்கிறார்கள். ஆனால், செரினா என்கிற பெண்மீது போடப்பட்ட வழக்கும், பிடிபட்ட பணமும் அந்த ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாயும், கஞ்சா விற்றுவந்த பணம் என்று காண்பித்துத்தான், அவர்கள் அதை நீதிமன்றத்திலே தாக்கல் செய்திருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் என்ன கேட்கிறேன் என்றால், எதற்காக...

பிற்பகல் 1—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Don't—(interruptions) அதாவது, case—னுடைய facts—க்குள்ளே போகாதீர்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** Case முடிந்துபோய் விட்டது. அந்த case தீர்ப்பு வந்துவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. You need not go into the facts of the case. (குறுக்கீடு) Right. உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அவரிடம் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். இல்லை, இல்லை. I have given the instructions. Right. உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி என்பதே வேறு. நான் என்ன கேட்க வருகிறேன் என்று சொன்னால், N.I.B. - Narcotic Intelligence Bureau என்று காவல் துறையிலே ஒரு தனிப் பிரிவு இருக்கிறபோது, கோடிக்கணக்கான ரூபாய் கஞ்சா கடத்தல் வழக்கை ஏன் அந்தத் துறையிடம் ஒப்படைக்கவில்லை என்பதை அந்தத் துறைக்கு பொறுப்பேற்ற முதலமைச்சர் சொல்ல வேண்டாமா? கஞ்சா கடத்தல் வழக்கு, கஞ்சா கடத்தல், போதை மருந்து கடத்தல், இதைத் தனியே விசாரிப்பதற்கு, இந்த வழக்கை நடத்துவதற்கு ஒரு தனித் துறை இருக்கிறது. கோடிக்கணக்கான ரூபாய் விற்று கஞ்சா பிடிபட்டதாக ஒரு வழக்கு வருகிறது. அந்த வழக்கை, நீங்கள் அந்தத் துறையிடம், அந்தக் குறிப்பிட்ட பிரிவிடம் ஏன் ஒப்படைக்கவில்லை என்பதற்கு இன்று இருக்கிற நம்முடைய முதலமைச்சர்தான் எங்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். அப்போது அந்தத் துறை எதற்கு? அந்தத் துறையைக் கையாளுகின்றவர், நான் உலகிலேயே மிகச் சிறந்த நிர்வாகி என்று சொல்கிறாரே, இவ்வளவு பெரிய வழக்கு, இவர் பார்வைக்கு வந்தவுடனே, அந்த வழக்கை ஏன் N.I.B.-யிடம் ஒப்படைக்கவில்லை என்று கேட்டிருக்க வேண்டும் அல்லவா? அந்தக் கேள்வியைத்தான் இந்த மன்றத்திலே நாங்கள் வைக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னேன், புதிதாக பொறுப்பேற்றிருக்கிற காவல் துறை தலைவர் அவர்கள்,—Improving the Police Image—போலீஸினுடைய நன்மதிப்பைக் கூட்டுவதற்கான பணிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். அதற்கு அடிப்படையான தேவை, attitudinal change. காவலர்களுடைய மனப்பாங்கு மாறவேண்டும், அவர்களுடைய அணுகுமுறை மாறவேண்டும். அவர்கள் பொதுமக்களைப் பார்க்கிற பார்வை மாறவேண்டும். பொதுமக்கள் இவர்களைப் பார்க்கிற பார்வை மாறவேண்டும். குற்றவாளிகளும், குற்றங்களும் 20 ஆண்டுகளுக்கு முன்னால், 25 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலையில் இன்று இல்லை. கன்னக்கோல் வைத்து திருடிய திருடன் இன்று Bureau pulling திருடனாக மாறியிருக்கிறான். 25 ஆண்டுகளுக்கு முன்னால் நீங்களும், நானும் நீதிமன்றத்திலே பணியாற்றுகிறபோது, திருடர்கள் என்பவர்கள், அழுக்கு உடையோடு, பரட்டைத் தலையோடு, கசங்கிய தலையோடு வருவார்கள். ஆனால், இன்று நாம் பார்க்கின்ற திருடர்கள், தொலைக்காட்சியிலே பார்க்கின்றபோது, அற்புதமாக ஆங்கிலம் பேசக்கூடியவர்கள், computer-ஐ முறையாகக் கற்றவர்கள், பெரிய



பாரம்பரியத்திலே இருந்து வருகின்றவர்கள், பெரிய அரசியல் தலைவர்கள், முதலமைச்சராக இருந்தவர்கள் எல்லாம் இன்று குற்றவாளிகளாக இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்தக் குற்றவாளிகளுடைய பரிணாமம்கூட மாறி இருக்கிறது. அந்தக் குற்றவாளிகளுடைய பரிணாமம் மாறியிருக்கிற அளவிற்குக் காவல் துறையினுடைய தரத்தை உயர்த்த வேண்டும். காவல் துறையினுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்றால், காவலர்கள் மனம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அவ்வாறு மனம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு அவர்களுக்கு வேலைசூழலை உருவாக்க வேண்டும். அந்த வேலைசூழலிலே, அவர்களுடைய களப் பணியை அங்கீகரித்து, அவர்களுடைய நேர்மையை ஏற்றுக்கொண்டு, தகுதியின் அடிப்படையிலே அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். அது மிக முக்கியமான செய்தி. இதிலே இரண்டே இரண்டு பிரச்சினைகளை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

1984 ஆம் வருடம் தேர்வுபெற்ற இரண்டாம் நிலைக் காவலர்களில் ஒரு பகுதியினர் 1-8-1984-ல் வேலையில் சேர்கிறார்கள், பயிற்சியில் சேர்கிறார்கள்; ஒரே நிலையிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அடுத்த பிரிவினர் 25-10-1984 அன்று சேருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** என்னுடைய நேரம் குறித்து தங்களுக்குத் தெரியும். இன்னும் 5 நிமிடம் கொடுங்கள். எனவே, அந்தக் காவலர்களிலே ஒரேநாளில் தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்களில், ஒரு பகுதியினருக்கு மட்டும்தான் பதவி உயர்வுக்குத் தகுதி என்று சொல்லி, மற்றவர்களுக்குப் பதவி உயர்வுக்குத் தகுதி இல்லை என்று சொல்வது, அவர்கள் மத்தியிலே மனச் சோர்வை ஏற்படுத்துகிறது. இதைப்போல்தான், சிறப்பு Battalion-லே, Armoury பிரிவிலே வேலை செய்கின்றவர்கள், மிகக் கொஞ்சம் பேர். பொதுப் பிரிவிலே வேலை செய்கின்றவர்களும், அவர்களும் ஒரேநாளில் சேர்ந்தாலும்கூட, Armoury பிரிவிலே வேலை செய்கின்றவர்கள், மிக விரைவாக மேலே வந்துவிடுகிற காரணத்தால், ஒரேநாளில் இரண்டாம் நிலைக் காவலர்களாகச் சேர்ந்தவர்கள், 6, 7 வருடத்திற்குள் Armoury-ல் வேலை செய்கின்றவர் Sub-Inspector ஆகி விடுகிறார்; பொதுப் பிரிவில் வேலை செய்கிறவர்கள் காவலர்களாகவே இருக்கிறார்கள். இதைப்போன்ற மாறுபாடுகளைக்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] 2006 ஆகஸ்ட் 29

களையவேண்டும். ஏனென்றால், ஒரு promotion is not only a promotion, but a demotion for others. ஒருவருக்குப் பதவி உயர்வு என்பது, மற்றவருக்கு பதவி இறக்கம்.

*பிற்பகல் 1–05*

இதிலே இழைக்கப்பட்ட மிகப் பெரிய அநீதி, வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது, பரிசு வழங்குகிறோம், அவர்களைப் பாராட்டுகின்றோம் என்ற பெயரிலே வழங்கப்பட்ட பதவி உயர்வுகளைத் தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உள்துறையும் பரிசீலனை செயயவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) வீரப்பனைப் பிடித்தவர்கள், அவனைச் சுட்டவர்கள், அவனைக் கைது செய்வதற்கு ஆதரவாக இருந்த காவலர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. நான் முழுமையாக வரவேற்கிறேன். ஆனால், அந்தப் பெயரிலே வீரப்பனைக் கைது செய்தவர்கள் அல்லது வீரப்பனைக் கைது செய்து சுடுவதற்கு உதவியாக இருந்தவர்கள் என்ற பெயரிலே எங்கெல்லாமோ இருந்தவர்கள், அந்தப் பதவி உயர்வுக்குச் சற்றும் தகுதியில்லாதவர்கள், பல ஊழல் வழக்குகளை இன்னும் சந்தித்துக் கொண்டிருக்கிறவர்கள், அவர்களெல்லாம் இதைச் சாதகமாக வைத்துக்கொண்டு பதவி உயர்வு பெற்றிருப்பது, தமிழகக் காவல் துறையில் இருக்கிற பல்வேறு அதிகாரிகளுக்கு மிகப் பெரிய மனச் சோர்வை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த மனச் சோர்வைப் போக்கி, அதிலே வழங்கப்பட்ட பதவி உயர்வு நியாயமானதுதானா என்று பார்த்து வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆயத்தீர்வை என்பது இன்று ஒரு மிக முக்கியமான கோரிக்கை. இந்த அரசுக்கு வருகின்ற வருமானத்திலே ஏறக்குறைய 20 விழுக்காடு, ஆயத்தீர்வையிலேயிருந்து வருகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் ஒரு கேள்வியை மாண்புமிகு முதல்வரிடம் கேட்க ஆசைப்படுகிறேன். அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே, "இம்மாநிலத்தில், அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகளை உற்பத்தி செய்ய 1981 ஆம் ஆண்டு அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள் (தயாரிப்பு) விதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களும் மற்றும் 1983 ஆம் ஆண்டு பீர் வடிப்பாலைகள் விதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட பீர் தயாரிக்கும் நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. அவை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள் மற்றும் பீர் வகைகளை, விநியோகம் செய்து வருகின்றன"



2006 ஆகஸ்ட் 29] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள் என்றால் என்னவென்று எனக்கு விளங்கவில்லை. ஒருசில நிறுவனங்கள் மட்டும்தான் அனுமதிக்கப்பட வேண்டுமென்பது என்ன நியாயம்? பக்கத்திலே இருக்கிற கேரளாவிலே, ஆந்திராவிலே, பாண்டிச்சேரியிலே, ஒரு Open Transparent Policy; பீர் தயாரிக்கின்றவர்கள், மது தயாரிக்கின்றவர்கள் யார் வேண்டுமானாலும் நம்முடைய மது விற்பனை நிலையத்திற்கு வந்து, தங்களுடைய சரக்குகளைக் கொடுத்து, competitive price bidding என்று செய்யலாம். இன்று இந்தியாவிலேயே, தமிழகத்தில்தான் அதிகமான பீர் பானங்களை நாம் உபயோகிக்கிறோம். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இன்று உபயோகிப்பாளர்களுக்கு, பயனீட்டாளர்களுக்கு மிகுந்த விலை கொடுத்தாலும்கூட சரியான quality product கிடைப்பதில்லை. எனவேதான் நான் கேட்கிறேன்: அனுமதி கொடுக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து சரக்குகளை வாங்குவதினால், அரசாங்கத்திற்கு என்ன இலாபம்? இல்லை, அரசாங்கத்திற்கு என்ன ஆதாயம்? இதை ஆந்திராவில் இருப்பதைப்போல, கேரளாவில் இருப்பதைப்போல, இல்லை, ஒருபடி மேலே போய் சொல்லவேண்டுமானால், என்னால் நிரூபிக்க முடியும். கடந்தகால ஆட்சியிலே அனுமதிக்கப்பட்டவர்களைக்கூட, அவர்கள் சரக்குகளை supply செய்ய அனுமதிக்கவில்லை. நான் இந்தக் குற்றச்சாட்டைப் பதிவுசெய்ய விரும்புகிறேன். ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்துகூட, சரக்குகளை வாங்காமல், ஒரு தனிப்பட்ட இடத்திலிருந்து வாங்கவேண்டுமென்று நிர்ப்பந்தித்த காரணத்தினால், இன்று இந்த அரசுக்கு மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

இன்னும் ஒன்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று, winery, distillery, brewery இது மிகப் பெரிய தொழிலாக வளர்ந்து வருகிறது. இன்று பன்னாட்டு நிறுவனங்கள் ஹரியானா மாநிலத்திலே, பஞ்சாப் மாநிலத்திலே மிகப் பெரிய கோடிக்கணக்கான, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீடுகளை வைத்து, அந்தப் பன்னாட்டு நிறுவனங்கள், தங்களுடைய முதலீட்டைச் செய்கிறார்கள். இன்று Cobra என்று ஒரு நிறுவனம், Fosters's, Tiger, Heineken, Sab Miller போன்ற மிகப் பெரிய நிறுவனங்கள் இன்று ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைக் கொண்டு வந்து முதலிடத் தயாராக இருக்கின்றன. அவர்களுக்கு— distillery–க்கோ, brewery–க்கோ, winery–க்கோ நாம் புதிய licence–ஐ வழங்கப் போகிறோமா? இந்த அரசிடம் எத்தனைக் கேட்பு மனுக்கள், இந்த distillery–க்காக, brewery–க்காக, winery–க்காக இருக்கின்றன? அப்படி இருந்த மனுவிலே கடந்த ஆட்சிக் காலத்தில்

யாருக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது? யாருக்கு நிராகரிக்கப்பட்டது? ஒருவருக்கு மட்டுமே வழங்குவதற்குக் காரணம் என்ன? என்பதையெல்லாம் இந்த மன்றத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவிக்கவேண்டும். ஏனென்று சொன்னால், இது ஏறக்குறைய 8 ஆயிரம் கோடி ரூபாயை அள்ளித் தருகின்ற தொழில். இந்தத் தொழிலில் இன்னும் கூடுதல் வருவாய் வருவதற்கும், பயனீட்டாளர்களுக்கு, they should have a choice. அதைப்போன்று, ஆந்திராவில் இருப்பதைப்போல, கேரளாவில் இருப்பதைப்போல, கர்நாடகத்தில் இருப்பதைப்போல, பாண்டிச்சேரியிலே இருப்பதைப்போல ஒரு open transparent liquor policy; வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது வந்தால், பல்வேறு வெளிநாட்டு முதலீடுகள் இங்கே வரும். பல பேருக்கு வேலைவாய்ப்பு வரும். அதனால் வருகின்ற நிதி ஆதாயங்கள் இந்தத் தமிழகத்தினுடைய கஜானாவை நிறைக்கும் என்று சொல்லி இந்த அற்புதமான திட்டத்திற்கு வழிவகுத்துத் தந்திருக்கின்ற நமமுடைய முதலமைச்சர் அவர்களை நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

*பிற்பகல் 1–10*

இரண்டு நாட்களுக்கு முன்னால், நான் ஓர் ஆங்கிலக் கவிதை படித்தேன். அந்தக் கவிதையை இந்த மன்றத்திலே பதியவைத்து விடைபெற எண்ணுகிறேன்:

"If there is a runway, I will run. If there is a pathway, I will walk. If there is only a narrow hole through which I can crawl, I will crawl. But, I will be always on the move towards progress and development."

"ஓடுவதற்கு இடமிருந்தால் ஓடுவேன்; நடப்பதற்கு இடமிருந்தால் நடப்பேன்; நுழைந்து போவதற்கு ஒரு சிறிய சந்து இருந்தால்கூட, அதிலும் நுழைந்து வெளியே வருவேன்; வாழ்க்கை முழுவதும் நகர்ந்து கொண்டிருப்பேன், முன்னேற்றத்தை நோக்கி, வளர்ச்சியை நோக்கி" இது நம்முடைய முதலமைச்சருக்குப் பொருந்தும் என்று சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றி, சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. *(குறுக்கீடு)* திரு. வேல்முருகன், நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள்.



**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே– றுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? (குறுக்கீடுகள்) நாளைக்கு. ாளைக்கு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ாவல் துறை, தீயணைப்புத் துறை, மதுவிலக்குத் துறை ஆகிய மானியக் 'காரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் புவர்களுக்கு நன்றி சொல்லி, புதிய அரசு பொறுப்பேற்று, 3 மாத ாலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, ்க்களின் பேராதரவைப் பெற்று, 100 நாட்களைக் கடந்து வெற்றி நடை 'பாடும் இந்த அரசு, காவல் துறை செயல்பாட்டிலும் மக்கள் மத்தியில் ]ன்றுள்ள காவல் துறை குறித்த கருத்துகளை மாற்றுகிற வகையில், ாவல் துறையினுடைய செயல்பாட்டில் உரிய மாற்றங்களைச் செய்து, ்க்களுக்குச் சிறந்த சேவை செய்யும் ஒரு துறையாக்க் காவல் துறையின் 'செயல்பாடுகளை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் முதலில் 'கட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியாவில், நம்முடைய தமிழ்நாட்டின் காவல் துறை, தனித் தன்மை 'கொண்டது. நீண்ட, நெடிய பாரம்பரியமிக்க தொழில் திறனோடு 'செயல்படக்கூடிய தமிழ்நாடு காவல் துறை, கடந்த ஆட்சிக் காலத்தில் 'ப்படியெல்லாம் பயன்படுத்தப்பட்டது என்பதை, இங்கே எனக்கு ுன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் உங்கள் முன்னால் 'டுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சிகளைப் பழிவாங்க யன்படுத்தப்பட்டது; பொய் வழக்குகள் போடப்பட்டது; நம்முடைய 'பருமதிப்பிற்குரிய தலைவர் கலைஞர் அவர்களின்மீது, மார்க்சிய ம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் என். வரதராஜன் புவர்கள்மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் ல்லக்கண்ணு அவர்கள்மீது, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் ிரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள்மீது, இப்படி மதிப்புமிக்க லைவர்களின்மீது பொய் வழக்குகள் போடப்பட்டதும், மத்திய புமைச்சர்கள்கூட தாக்கப்பட்ட நிகழ்ச்சியும், நீதிபதிகள் மிரட்டப்பட்ட 'கழ்வுகள் எல்லாம் கடந்தகாலத்திலே நடந்த நிகழ்ச்சிகள்.

ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்று என்று மதிக்கப்படுகிற ்த்திரிகைகளின்மீது எப்படியெல்லாம் வழக்குகள் தொடுக்கப்பட்டன; ாக்குதல் நடத்தப்பட்டன என்பதும், 'Hindu' 'முரசொலி', 'தீக்கதிர்'

உள்ளிட்ட பல்வேறு பத்திரிகைகள், இந்தத் தாக்குதலுக்கு உள்ளானவை என்பதையும் கவனப்படுத்த விரும்புகிறேன்.

அரசு ஊழியர்கள் போராடிய நேரத்தில், அந்தப் போராட்டத்தின்போது காவல் துறை எப்படியெல்லாம் அத்துமீறி நடந்துகொண்டது என்பதை நான் இங்கே பதிவுசெய்ய விரும்புகிறேன். இரவு நேரத்தில் வீடு புகுந்து கைது செய்வது, ஆண் அரசு ஊழியர்கள் வீட்டில் இல்லாத நேரத்தில், அரசு ஊழியரே அல்லாத அவருடைய மனைவியை வீட்டிலே பல்வேறு தொல்லைகள்படுத்தி மிரட்டியது, குழந்தைகளை மிரட்டியது, அரசு ஊழியராகப் பணியாற்றுகிற பெண் ஊழியர்களின்மீது விபச்சார வழக்குத் தொடர்வோம் என்று மிரட்டியது போன்ற மோசமான செயல்கள் கடந்த ஆட்சிக் காலத்திலே நடந்தது என்பதை நான் கவனப்படுத்த விரும்புகிறேன். ஆகவே, இவையெல்லாம் காவல் துறையின் வரலாற்றிலே ஒரு கரும்புள்ளி என்பதை இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–15*

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு, அதே மக்களைப் பதம் பார்த்தது. காவல் துறையின் மூலமாக. ஜனநாயக இயக்கங்கள் செயல்பட முடியவில்லை. ஊர்வலம், பொதுக் கூட்டங்கள் போன்ற உரிமைகள் முடக்கப்பட்டன. C.I.T.U.–வினுடைய அகில இந்திய மாநாட்டைக்கூட, சென்னை நகரத்திற்குள்ளே நடத்த முடியவில்லை. I.A.S., I.P.S. அதிகாரிகள் பலர்—நான் அனைவரையும் சொல்லவில்லை; பலர்—அன்றைய ஆளும் கட்சியின் அமைப்பாளர்களாகச் செயல்பட்டார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

காவல் துறையினுடைய அத்துமீறல்களுக்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும், அரசியல்வாதிகளின் பரிந்துரைகளே மிகுந்த அத்துமீறல்களுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன என்பதையும் நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். கட்டப் பஞ்சாயத்து போன்றவற்றை கவனத்தில்கொள்ள வேண்டும். அத்துமீறலின் உச்சக்கட்டம்தான், இன்றைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை, அவருடைய வீடு தேடிச் சென்று, நள்ளிரவு நேரத்தில் படுக்கை அறை வரையிலே சென்று, அவரைக் கைது செய்ததும், உடை மாற்றிக்கொள்வதற்குக்கூட அனுமதிக்கப்படாமல், காவல் துறை அன்றைக்கு நடந்து கொண்டதும், இந்த அத்துமீறல்களின் உச்சக்கட்டம் என்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். இந்த நிலை எதிர்வருகிற காலத்திலே தொடரக் கூடாது என்பதே



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை என்பதை இங்கே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

பல சிவில் வழக்குகளில் போலீஸ் தலையீடுகள் காரணமாக, தற்கொலைகள் ஏற்படுகிற அளவிற்கு நிலைமைகள் சென்றிருக்கின்றன. காதல் ஜோடிகளைப் பிரிப்பது, கணவன் மனைவி பிரச்சினைகளிலே தேவையின்றி ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்வது போன்ற நடவடிக்கைகளை நீதிமன்றமே கண்டிக்கத்தக்க அளவிற்குக் காவல் துறையினுடைய நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன என்பதை நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல, கடன் தொல்லையால் சில பேர் உயிரை மாய்த்துக்கொள்கிற நிகழ்ச்சிகூட சகஜமாக நடந்து வருகிறது. ஏனென்றால், அதற்குக் காரணம், கடன் கொடுத்தோர் அரசியல் செல்வாக்குமிக்கவராக, காவல் துறையின் செல்வாக்கு காரணமாக சம்பந்தபட்டவரை நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். நிர்ப்பந்தம் தாங்க முடியாமல் தற்கொலைக்குச் .செல்கிற நிலைமையைப் பார்க்க முடிகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழகத்தினுடைய பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் ஜி.வி. என்று அழைக்கப்படுகிற ஜி. வெங்கடேஸ்வரன் மரணம், இதற்கு ஒரு சான்றாக அமைந்தது என்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். ஆகவே, அதே போல, lock-up மரணங்கள், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகிற கொடுமைகள் தொடர்வதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சமீபத்திலேகூட, சாத்தான்குளம் காவல் நிலையத்தில் அருண் பாரத் என்று சொல்லக்கூடிய ஒரு இளைஞன், எந்த வழக்கும் இல்லாமல், சந்தேகத்தின் பேரில் அழைத்துச் சென்று, வழியிலே காவல் துறையால் கடுமையாகத் தாக்கப்பட்டு, அவன் lock-up–க்குக் கொண்டு செல்கிறபோது மரணம் அடைந்த செய்தியையும் நான் இங்கே நினைவுபடுத்துகிறேன். ஆகவே, அந்த ஏதும் அறியாத அப்பாவி இளைஞனுக்கு இந்த அரசு உதவி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சமீபத்திலே நாகர்கோவிலில் நடைபெற்ற ஒரு மறியல் போராட்டத்தில் நாகர்கோவில் நாடாளுமன்ற உறுப்பினர் பெல்லார்மின் அவர்கள் தலைமையிலே நடைபெறுகிற ஒரு இயக்கம்; அந்த இயக்கத்திலேகூட காவல் துறை அத்துமீறி, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்றுகூட பாராமல், அவருடைய பழைய தோஷத்திலே சட்டையைப் பிடித்து இழுத்து அவரைத் தாக்குவதும், அங்கே மாவட்ட

C.I.T.U. செயலாளர் அண்ணாதுரை அவர்களைக் கீழே போட்டு boots கால்களால் ஏறி மிதித்த கொடுமை, இன்றைக்கும் தொடர்கிறது. ஆகவே, கவனத்தோடு அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

அதேபோல, புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் தாலுகா, நாகுடி காவல் நிலையத்தில் கண்ணம்மாள் என்ற ஒரு பெண் உள்பட மூன்று பேர் கடுமையான முறையிலே தாக்கப்பட்ட நிகழ்ச்சி நடந்தது. அப்படியொரு நிகழ்வே நடைபெறவில்லை என்று மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் சொல்கிற ஒரு அவல நிலைமையைப் பார்த்தோம். முதலமைச்சர் அவர்களின் தலையீட்டிற்குப் பிறகு, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே சேர்த்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, முதல் தகவல் அறிக்கை காவல் நிலையத்தில் பதிவு செய்கிறபோது குற்றஞ்சாட்டுபவர், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பெயர்கள் குறிப்பிடுவதைப் போல, அந்த வழக்குக்கு யார் பரிந்துரை செய்கிறார்கள் என்பதற்கும் ஒரு தனி வரி ஒதுக்கப்பட்டு, அவ்வாறு பரிந்துரை செய்தவருடைய பெயரும் சேர்க்கப்பட வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஊடகங்களிலே 'புகை பிடிப்பது உடலுக்குக் கெடுதல்' என்று குறிப்பிடுவது போலவே, காவல் நிலையத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை, 'முட்டிக்கு முட்டி தட்டினால் உண்மை வெளி வந்துவிடும்' என்பது போன்ற சினிமாவில் வரும் வசனங்கள், அந்த வசனங்கள் வருகிறபோதும், lock-up-இல் காவல் துறையால் கடுமையாகத் தாக்கப்படுகிற காட்சிகள் வரும்போதும், அந்த நேரத்தில், 'மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன' என்கிற ஒரு செய்தி, அந்த இடத்திலே பதிவுசெய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இல்லையென்றால், அந்தப் படத்தைப் பார்க்கிற மக்களுக்கு, காவல் துறையில் இது போன்ற வசனங்கள் பேசுவது, lock-up-ல் வைத்து பொதுமக்களை அடித்து, உதைத்து துன்புறுத்துவதெல்லாம், சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய காரியம்தான் என்று பொதுமக்கள் கருதுகிற ஒரு நிலைமை ஏற்படுகிற ஆபத்து இருக்கிற காரணத்தினாலே, 'புகை பிடிப்பது கெடுதல்' என்று இந்த வாசகங்கள் சொல்வதைப் போல, காவல் நிலையத்தில் அத்துமீறல் நடைபெறுகிற சினிமா காட்சிகளின்போதும், 'மனித உரிமை மீறப்படுகிறது' என்கிற அந்த வாசகமும் அந்த இடத்திலே பொருத்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



பிற்பகல் 1–20

அடுத்ததாக, கணினி சம்பந்தமான குற்றங்களை விசாரிப்பதற்குத் தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு உள்ளது. துணைக் கண்காணிப்பாளர் அந்தஸ்தில் உள்ளவர்தான் அதை விசாரிக்க முடியும். ஆகவே, மேற்படி சட்டம் புதியதாக உள்ளதாலும், புலன் விசாரணை செயவதற்குச் சற்றுக் கடினமாக இருக்கிற காரணத்தினாலும், இதுகுறித்து நீதிமன்றத் தீர்ப்புகளும் ஏதும் இல்லாத ஒரு நிலையில், காவல் துறை இந்தக் கணினி சம்பந்தமான, துறையில் ஏற்படுகிற பிரச்சினைகளைப்பற்றி விவாதிக்கிறபோது, விசாரிக்கிறபோது, கணினி சம்பந்தப்பட்ட வல்லுநர்களையும் இதோடு இணைத்து, அவர்கள் விசாரிப்பதற்குக் காவல் துறை கணினி நிபுணர்களைப் பயன்படுத்திக்கொள்வது, அதனுடைய குற்றங்கள் கண்டறிவதற்கு உதவியாக இருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதேபோல், 1998-ல் கோவையிலே நடந்த கலவரத்தையொட்டி, நீதியரசர் பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்களின் விசாரணை அறிக்கை, அரசுக்கு 31-1-2000 ஆம் நாளன்று அளிக்கப்பட்டு இருக்கிறது. அதனுடைய விளக்கத்திற்குள் நான் போகவில்லை. அதில் காவல் துறை சம்பந்தமாக, நீதியரசர் பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிற அந்த அம்சங்களைக் கோவைக்கு மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும், காவல் துறையில் அமலாக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, காவலர்கள் நீண்ட நெடுங்காலமாக வலியுறுத்தி வரக்கூடிய, அவர்களுடைய குறைகளை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்வதற்கு எந்த ஒரு அமைப்பும் இல்லாத நிலையில், ஒரு மேல் அதிகாரியினுடைய நடவடிக்கைபற்றி புகார் செய்ய வேண்டுமானாலும், அந்தக் குறிப்பிட்ட மேல் அதிகாரியிடத்திலே புகார் செய்ய வேண்டிய ஒரு அவல நிலைமை இன்றைக்கும் நீடிக்கிறது. ஆகவே, காவலர்கள் தங்களுடைய உரிமைகளை வெளிப்படுத்துவதற்குச் சங்கம் அமைத்துக் கொள்வதற்காக, நிப்பந்தனைகளோடுகூடிய ஒரு வாய்ப்பை, இந்த அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு மேற்கு வங்காளம், கேரளா, பீகார், ஆந்திரா போன்ற மாநிலங்களிலே காவலர்களுக்குச் சங்கம் அமைத்துக்கொள்ள உரிமை இருக்கிறது. இங்கேயும் இப்போது அதிகாரிகளுக்குச் சங்கம் இருக்கிறது. ஆனால், காவலர்களுக்கு இல்லை. ஆகவே, அதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். 30 வருடங்களாக மேற்கு வங்காளத்திலே சங்கம் இருக்கிறது. ஒரு மணி நேரம்கூட அங்கே இதுவரையில் வேலைநிறுத்தம்

நடந்ததில்லை. ஆகவே, காவல் துறைக்குச் சங்கம் அமைக்க வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 1994–1995–ல் 1,198 பேர் காவல் துறைக்கு, உதவி ஆய்வாளராகத் தேர்வு செய்யப்பட்டவர்களில், 37 பேர் மட்டும் இன்றைக்கும் தமிழகச் சிறப்பு Battalion–ல் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் எல்லாப் பயிற்சிகளையும் முறையாகப் பெற்று இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய வயது வரம்பைத் தளர்த்தி, தாலுகா S.I.–களாக, உதவி ஆய்வாளர்களாக மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெண் காவலர்கள் தேர்வின்போது, அவர்களுடைய உயரம், எடை இவையெல்லாம் கணக்கிடப்படுகிறது. ஆனால், இடையில் பதவி உயர்வு ஏற்படுகிறபோது, மீண்டும் ஒருமுறை இப்படிப்பட்ட சோதனைகள் செய்யப்படுகின்றன. இவை தவிர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

அதேபோல, இரண்டாம் நிலைக் காவலர்கள் 15 வருடம் பணியாற்றக்கூடியவர்களுக்குத் தலைமைக் காவலர் பதவியும், மேலும் 10 ஆண்டுகள் பணியாற்றினால் அவர்களுக்கு உதவி ஆய்வாளர் பதவியும் வழங்கப்படுகிறது. 10 வருடங்கள் என்று இந்த service–ஐக் கணக்கிட்டுப் பார்த்தால், பல பேர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுவிடுகிறார்கள். ஆகவே, 10 வருடங்கள் தலைமைக் காவலர்களாகப் பணியாற்ற வேண்டும் என்கிற விதியை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சற்றுத் தளர்த்தி, அவர்கள் 5 ஆண்டுகள் அல்லது 6 ஆண்டுகள் பணியாற்றினால், அவர்கள் உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்பு அளித்தால், கடைசி நேரத்தில் ஒரு சில ஆண்டுகள் அவர்கள் அந்தப் பதவி உயர்வோடு பணியாற்றி விடைபெறுகிற வாய்ப்பு இருக்கும் என்று தெரிவிக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதை ஆய்வு செய்ய வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, சீரணி அரங்கத்தில், ஜனநாயக இயக்கங்கள் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கான அனுமதியை வழங்க வேண்டும். தங்கள் ஆட்சிக் காலத்திலே இருந்தது; இடையிலே அது தடுக்கப்பட்டு இருக்கிறது. மீண்டும் நீங்கள் அந்த ஜனநாயக உரிமையை, கடற்கரையில் கூட்டம் நடத்துகிற வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, சில இடங்களிலே ரௌடிகளின் செயல்பாடுகள் ஆங்காங்கே தலை தூக்குகின்றன. உரிய முறையிலே தலையிட்டு அவை தடுக்கப்பட வேண்டும். சில இடங்களில் கொலை, கொள்ளை, பட்டப் பகலிலேயே நடக்கிற நிலைமை என்பதும் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலேகூட இரண்டு நகைக் கடைகளுக்குள்ளே பகலிலே வந்து, shutter–ஐ இழுத்து மூடிவிட்டு, கடைக்காரரையும் கத்தியால் குத்திவிட்டு, நகையைக் கொள்ளையடித்துச் செல்கிற அளவிற்கு இன்றைக்குச் சில இடங்களிலே துணிச்சல்பெற்று இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சிறப்புக் காவல் படையிலே உள்ள முடி வெட்டுதல், சலவை செய்தல், சமையல் செய்தல் போன்ற பணியிலே இருப்பவர்களைப் பணி நிரந்தரம் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கள்ளச் சாராயம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அதைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், அதில் ஈடுபடக்கூடிய வாலிபர்கள், பெண்களுக்கு மாற்று வேலைக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். போலீஸ் கமிஷன் அமைக்கப்படுவது நல்லது; இங்கே கொள்கைக் குறிப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–25

அதேபோல, போலீஸ் செயல்பாடுகளைக் கணிகாணிக்க மாவட்ட அளவிலே, மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்களைக் கொண்ட ஒரு கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்தினால், தவறுகள் நடக்கிறபோது உடனுக்குடன் அதைக் களைவதற்கு அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லவும் உதவியாக இருக்கும். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூரிலே 9 இலட்சம் மக்கள் தொகை உள்ளது. 6 இலட்சம் மக்கள் வெளியேயிருந்து தினசரி வந்து செல்கிறார்கள். பல மாவட்டங்களைச் சேர்ந்த, மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அங்கே வசிக்கிறார்கள். அதற்கேற்ப பிரச்சினைகளும் அதிகமாக இருக்கின்றன. இன்றைக்கு அங்கேயிருக்கிற காவல் துறை அலுவலர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவான எண்ணிக்கையில் இருக்கிறது. இரவு பகல் எந்த நேரமும் அங்கே ரோந்து செல்ல வேண்டிய தேவை இருக்கிறது. அந்த அளவுக்குப் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, திருப்பூரிலே வருகின்ற பிரச்சினைகளைக் கவனத்தில்கொண்டு,

கூடுதலான காவலர்களை நியமிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையை நவீனப்படுத்த வேண்டும். உயரமான கட்டடங்களிலே தீப் பிடித்தால், உடனே அணைப்பதற்காக சென்னை போன்ற பெரு நகரங்களிலே நவீனப்படுத்தப்பட்ட தீயணைப்பு வாகனங்கள் இருக்கின்றன. ஆனால், சிறிய நகரங்களிலே அதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆகவே, குறிப்பிட்ட சிறிய நகரங்களுக்கும் அந்த வாய்ப்பை உருவாக்கக்கூடியவகையில், தீயணைப்பு நிலையங்கள், தீயணைப்பு வாகனங்கள் நவீனப்படுத்த வேண்டும். ஒன்றிய அளவுக்கு ஒரு தீயணைப்பு நிலையம் என்ற நிலையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1996 ஆம் ஆண்டுவரை மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை இந்தத் துறையில் இருக்கிற ஊழியர்கள் பெற்று வந்தார்கள். ஆனால், 6–வது ஊதியக் கமிஷன்படி மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆகவே, தொடர்ந்து ஏற்கெனவே வழங்கிவந்த அந்த ஊதியம், 6–வது ஊதியக் கமிஷனுக்குப் பிறகு, காவல் துறைக்கு ஒரு மாதிரியும், தீயணைப்புத் துறைக்கு ஒரு மாதிரியும், அதேபோல சிறைத் துறையில் இருக்கிற காவலர்களுக்கு வேறு மாதிரியும் இருக்கிறது. இவற்றைக் கடந்த காலங்களைப் போல, மீண்டும் ஒருமுகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு முடிந்து, தீயணைப்பாளர்களாகத் தேர்வு செய்யப்பட்ட, 2003–லே தேர்வு செய்யப்பட்ட, 27 பழங்குடியின இளைஞர்களுக்குப் பணி நியமனம் இதுவரையில் வழங்கப்படாமல், அவர்களுடைய வயதுகூட கடந்துசெல்லுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கருணை அடிப்படையில் அவர்களுக்கு வேலை வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி, சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஒரே ஒரு நிமிஷம். அடுத்ததாக மதுவிலக்கு சம்பந்தமான விதியில் ஒரு கருத்தைச் சொல்லி விடைபெறுகிறேன். 'டாஸ்மாக்' கடைகள் இன்றைக்குத் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. ஆகவே, தொடர்ந்து அரசு அதை நடத்துகிற முடிவுக்கு வந்துள்ள நிலையில், அந்த 'டாஸ்மாக்' நிறுவனத்திலே பணியாற்றுகிற சற்றேறக்குறைய 33,000 ஊழியர்கள் இன்றைக்கு எந்தவிதமான வேலை உத்தரவாதமும் அற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அதனைப்



பரிசீலித்து, அவர்களைப் பணி நிரந்தரம் ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பலபேர் எந்தக் காரணமும் இல்லாமல், வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் திரும்பப் பெற்று, அவர்களை மீண்டும் வேலைக்கு எடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கோயில், பள்ளிக்கூடங்கள் அருகில் பல இடங்களிலே 'டாஸ்மாக்' கடைகள் இன்றைக்கும் இருக்கின்றன. நான் திருப்பூரிலே அப்படிப்பட்ட ஒன்றிரண்டு கடைகள் குறித்து, சம்பந்தப்பட்ட 'டாஸ்மாக்' அதிகாரிகளுக்குத் தெரிவித்தபோது, கிட்டத்தட்ட 2 மாதங்களுக்கு மேலாகியும், அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறார்கள். அரசினுடைய விதிகளுக்குப் புறம்பாக பள்ளிக்கூடம், கோயில்களுக்கு அருகிலே இதுபோன்ற மதுபானக் கடைகளை அமைக்கக்கூடாது என்பதிலே, சற்றுக் கண்டிப்பாக, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், 'டாஸ்மாக்' கடைகள், இன்றைக்கு இரவு 12–00 மணி வரையில் திறந்து இருக்கலாம் என்று கடந்த அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், tea கடைகள், Hotel–கள்—தொழிலாளிகள் சாப்பிடுகிற tea கடைகள்—இரவு 9–00 மணிக்குமேல் திறக்கக்கூடாது என்று ஒரு வேடிக்கையான முடிவை அரசு எடுத்திருக்கிறது. ஆகவே, அந்த 'டாஸ்மாக்' கடைகளை இரவு 9–00 மணிக்குள்ளாக மூடுவதற்கும், tea கடைகள்—இரவுப் பேருந்துகளிலே பயணம் செய்கிறவர்கள் மற்றும் தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகள் இருக்கிறார்கள்; அவர்களுக்காக அந்த tea கடைகள்—இரவுக் கடைகள் சிலவற்றை அனுமதிக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். மதுரையில் tea கடை நடத்துவதற்குக் காவல் துறையினுடைய அனுமதி தேவைப்படுகிறது. அங்கே tea கடை நடத்துவதற்கு அனுமதி கொடுக்கிறார்கள்; ஆனால் அதிலே biscuit–ம், bun–ம் வைத்துக் கொண்டால், அனுமதி கிடையாது என்று மறுக்கப்படுகிறார்கள். ஆக, இதுபோன்ற சில நடவடிக்கைகளை அரசு கவனமாகப் பரிசீலித்து, சில காவல் துறை அதிகாரிகள் ஆங்காங்கே ஏற்படுத்துகிற தவறான போக்குகளைக் களைந்து, சிறந்த காவல் துறையாக, தமிழகத்தில் காவல் துறை செயலாற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருப்பது எங்களுக்கெல்லாம் நம்பிக்கை அளிக்கிறது; ஆகவே அந்த நம்பிக்கைக்கு உரிய முறையில் அவர் செயல்படுவார் என்று நம்பி, நான் இந்த மானியக் கோரிக்கையிலே

என்னுடைய கருத்துகளைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * * என்ற அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை, தீயணைப்புத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே, டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே ஆட்சி அமைக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில், தமிழகத்திலே பல ஆண்டுக் காலமாக, குறிப்பாக கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், அரசியல் தலைவர்கள்மீதும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள்மீதும் TESMA, ESMA போன்ற சட்டங்களைப் பயன்படுத்தி, பல்வேறு வழக்குகள் பதியப்பட்டு, அதனால் பல பாதிப்புகளுக்கு ஆளான தலைவர்களும், அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் அந்த வழக்குகளிலிருந்து விடுதலைபெறச் செய்வதற்கான முயற்சிகள் எடுத்து, அந்த வழக்குகளிலிருந்து அவர்களை விடுதலைசெய்து, அந்த வழக்கையே நீக்கி, எல்லோரையும் பணியமர்த்தி, அந்தப் பணிக் காலங்களிலே பாதிக்கப்பட்டவர்களுக்குச் சலுகைகளையும் வழங்கி, அந்த வழக்கு பாதித்த தலைவர்கள்மீது போடப்பட்ட அந்த வழக்குகளையும் வாபஸ் பெற்று, உண்மையிலேயே ஜனநாயகபூர்வமான ஓர் ஆட்சி நடைபெறுகிறது என்பதை உறுதி செய்திருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய பாராட்டுதலை, வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

காவல் துறை என்பது, தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் வளர்ந்துள்ள காலத்திலே நாம் வாழ்ந்து வருகிற இந்தச் சூழ்நிலையில் அதற்கேற்றாற்போல் அதன் செயல்பாடுகள் அமைய வேண்டும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய முன்னுரையிலேயே, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே அறிவித்திருக்கிறார்கள். அடிப்படையான விஷயங்களைப் புரிந்துகொண்டு, மக்களுடைய தேவைகளை அறிந்து, மக்களுக்கு உற்ற நண்பனாகக் காவல் துறை செயல்பட வேண்டுமென்று, கொள்கை விளக்கக் குறிப்பிலே மிகப் பொருத்தமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கேற்றாற்போல, அந்தக் காவல் துறையினுடைய செயல்பாடுகளையும் அமைத்துக் கொள்வதற்கான முயற்சி எடுக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை இங்கே பேசிய தலைவர்கள் எல்லாம் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாக, தேச அளவிலே பல்வேறு காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழகத்திலும் பல்வேறு சம்பவங்கள் நடைபெற்ற வரலாறுகள் உண்டு. சாதி மதக் கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதேபோல, வேறுவிதமான குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. பொருளாதாரக் குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. எனவே இப்படிப் பல்வேறு குற்றங்கள் நடைபெற்ற வரலாறுகள் உண்டு. அவற்றின்மீது வழக்குகள் பதியப்பட்டிருக்கின்றன. இப்படி இந்த சாதி மத மோதல்கள் நடைபெறுகிறபோதுகூட, அதிலே தயவுதாட்சண்யம் பார்த்து, வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற முறையிலே எல்லாம் வழக்குப் பதிவு செய்யப்பட்டது என்றெல்லாம் விவாதங்கள் நடைபெற்றதுண்டு. அதேபோல, சிறு குற்றங்கள் செய்தவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். பெரிய குற்றங்கள் செய்தவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் அல்லது கண்டுகொள்ளாமலேயே விடப்பட்டிருக்கிறார்கள் என்ற விமர்சனங்கள் உண்டு. அவையெல்லாம் எதிர்காலத்திலே போக்கப்பட வேண்டும் என்பதற்கான வகையிலேதான் இந்தத் துறை மானியக் கோரிக்கையின்மீது பல்வேறு கருத்துகளைச் சொல்லி, இந்தத் துறையை செம்மைப்படுத்துவதற்கான முயற்சியாகத்தான் நாம் அனைவரும் பேசிக் கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் முதலாவதாக வைக்க வேண்டிய கோரிக்கை என்பது, மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், தொழிலாளர்கள், இவர்கள்மீதான அணுகுமுறை என்பது, புதிய அணுகுமுறையாக மாற்றப்பட வேண்டும என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தாக நான் வ்லியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த காலங்களிலே அப்படிப்பட்ட அணுகுமுறை இல்லாமல், அத்துமீறிய காரியங்களிலே

ஈடுபட்டது மட்டும் அல்லாமல், அடக்குமுறையைக் கையாண்டார்கள். இது மறுக்க முடியாத உண்மை. ஒரு வரியிலே சொல்ல வேண்டுமானால், நண்பர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது; சென்ற ஆட்சிக் காலத்திலே காவல் துறையினுடைய செயல்பாடு மிகச் சிறப்பாக இருந்ததாகவும் சட்டம்—ஒழுங்கு மிகச் சிறப்பாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டதாகவும், எல்லாவகையிலும், சிறப்புக்குரிய மாநிலமாக நடைபெற்றது என்றும் சொன்னார்கள். ஆனால், நான் கேட்கிறேன். காவல் துறையும், சட்டம்—ஒழுங்கும் சிறப்பாக நடைபெற்றது என்று சொன்னால், தொழிலாளர்கள் போராட முடியாது; மாணவர்கள் போராட முடியாது; பெண்கள் போராட முடியாது; பொதுக் கூட்டங்கள் நடத்த முடியாது; ஊர்வலங்கள் செல்ல முடியாது. எந்த இடங்களிலே நடத்த வேண்டுமென்று கறாராகச் சொல்வதற்குரிய முயற்சி எடுக்கப்படவில்லை. அதுவும், விழுப்புரத்திலே நடைபெற்ற ஓர் சம்பவத்தை முன்னுதாரணமாகக் காட்டி, Supreme Court-லே நடைபெற்ற தீர்ப்புகளைக் காட்டி, இங்கே ஒரு அடக்குமுறைச் சட்டத்தையே போட்டு, தமிழகத்திலே, சென்ற அ.தி.மு.க. ஆட்சியில், ஓர் அறிவிக்கப்படாத் மிசா ஆட்சி* நடைபெற்றது என்பதுதான் உண்மையே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம்—ஒழுங்கைப் பராமரித்த ஆட்சியாக அது நடைபெறவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் தவறான கருத்தைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, தவறாக எதைச் சொன்னார் அவர்? (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** இங்கே மாண்புமிகு உறுப்பினர், காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஒரு செய்தியைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர்கள் அந்தச் செய்தியைக்கூட இங்கே அரை குறையாக விட்டுவிட்டார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Time இல்லை, பாருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** குறிப்பாக இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் செல்வம் அவர்களுடைய... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். என்ன? சொல்லுங்கள், சொல்லுங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மற்றவர்களெல்லாம் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துகளைச் சொல்வதற்கு அவர்களுக்கு முழு உரிமை இருக்கிறது. இருக்கின்றபோதும், முன்னாள் ஆட்சியைப்பற்றி, 'ஒரு மிசா அரசாங்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது' என்று சொல்வதுதான்... (குறுக்கீடு) பேச்சுரிமை இருக்கிறது. பேச்சுரிமை இருக்கலாம். பேச்சு உரிமையிலே மிசாவெல்லாம் எப்படி வர முடியும்? அவர்கள் இப்போது மிசா என்று சொல்லிவிட்டுப் பேசிக் கொண்டிருக்கிறார். ஆகவே, மிசா ஆட்சி நடைபெற்றது என்பதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று எங்கள் சார்பாகப் பணிந்து வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒன்றும் un-parliamentary word இல்லையே? (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்) அனுபவித்தவர்களெல்லாம் இங்கே இருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் அவருடைய உணர்வைச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) அது un-parliamentary word இல்லையே?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச அனுமதியுங்கள், நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் மிசா என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். மிசா சட்டம் இப்போது அமலில் இல்லை என்ற காரணத்தினால் கொறடா ஆட்சேபனை செய்கிறார். அப்படியானால் அதை (குறுக்கீடுகள்) அறிவிக்கப்படாத மிசா என்று மாற்றிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிவிக்கப்படாத மிசா என்று அதை திருத்திக்கொள்ளுங்கள்; Right. (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். பேசியாயிற்று. எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை. நான் சொன்ன செய்தி, நான் கேட்கிறேன், அப்படி இல்லை என்று சொன்னால், ESMA சட்டம், TESMA சட்டம் ஏன் பயன்படுத்தப்பட்டது? *(குறுக்கீடுகள்)* அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஒரே உத்தரவின்மூலமாக ஒன்றே முக்கால் இலட்சம் பேர்களைப் பணிநீக்கம் செய்தீர்களே, அது ஜனநாயக ஆட்சியா? *(மேசையைத் தட்டும் ஒலி)* அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? இல்லை, இதைச் சொன்னார்கள் என்கிற காரணத்தினாலே, தலைவர்கள் மீது ESMA சட்டத்தின்மீதும், TESMA சட்டத்தின்மீதும், வழக்குகளைப் பதிவு செய்தீர்களே, அது இந்த நாட்டிலே ஜனநாயகபூர்வமாக, அரசியல் கட்சிகளை, தலைவர்களைக் கருத்துச் சொல்ல அனுமதித்த விஷயமா? பத்திரிகையாளர்களே ஏதாவது செய்திகளைச் சொல்ல முடிந்ததா? அவர்கள்மீதே வழக்குகள் போடப்பட்டதே? இப்படி எல்லாவற்றையும் அடுக்கிக் கொண்டே போகலாம். நீங்கள் நேரம் கொடுக்கமாட்டீர்கள். அதனாலே நான் சொன்ன விஷயங்கள் என்பது, என்னுடைய மொழியில் சொன்னால், நான் நிரம்ப mild ஆகச் சொல்லியிருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* ஆகவே, சென்ற ஆட்சியிலே, நான் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன், இங்கே இருக்கிற காரணத்தினாலே.

மாண்புமிகு உறுப்பினர் செல்வம், விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தினுடைய தலைவர் செல்வம் அவர்களைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்தச் செய்திகளைச் சொல்வதற்குக் காரணம், எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மூத்த தலைவராக இருக்கிற மரியாதைக்குரிய நல்லக்கண்ணு அவர்கள், 4 வழக்குகள் புனையப்பட்டு, திரு. செல்வம் அவர்கள் சிறைச்சாலையிலே இருந்து, அப்படிப்பட்ட அனுபவங்களை மேற்கொண்டபோது, "இப்படிப் பொய்யான வழங்குகளைப் புனைந்து, அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டிருப்பது தடுக்கப்பட வேண்டுமென்பதற்கான முயற்சி எடுக்க வேண்டும்" என்று, *(குறுக்கீடுகள்)* எங்களுடைய மாண்புமிகு தலைவர் நல்லக்கண்ணு அவர்கள், மத்திய புலனாய்வுத் துறை சிபிஐ–க்குக் கடிதம் எழுதினார். பாரதப் பிரதமர் அவர்களுக்கும் கடிதம் எழுதி, செல்வம் அவர்கள், அந்தப் பொய்யான குற்றச்சாட்டிலிருந்து விடுதலைபெற வேண்டுமென்பதற்கான முயற்சிகளை எடுத்த இயக்கம்



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. நான் இப்போது கேட்கிறேன். *(குறுக்கீடுகள்)* வேண்டாம், இங்கேயே இருக்கிறார் செல்வம். இல்லை என்று மறுத்துவிட்டால் நான் சொன்னது அனைத்தையுமே நான் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** உங்களுடைய கூட்டணிக் கட்சி உறுப்பினர் இல்லையென்று மறுத்தால், நான் வாபஸ் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். வணிகராக இருக்கக்கூடிய ஒரு நபரை, நந்தகுமார் என்ற ஒரு நபரைப் பயன்படுத்தி, பொய்யான வழக்கு செல்வத்தின்மீது தொடுக்கப்பட்டது. அப்படிப் பொய்யான வழக்குத் தொடுக்கப்பட்டது என்று வணிகர் சங்கத்தினுடைய தலைவராக இருக்கிற மரியாதைக்குரிய வெள்ளையன் அவர்களே, நேரடியாக நீதிமன்றத்திற்கு அந்த நந்தகுமாரை அழைத்துச் சென்று, நீதிபதி முன்னாலேயே கொண்டுபோய்க் காட்டி, அவர், "என்மீது குண்டு வீசவில்லை; என்னுடைய காலும் சிதைந்து போகவில்லை; இப்போது பாருங்கள் என்னுடைய நல்ல காலை" என்று அந்த நீதிமன்றத்திலேயே காட்டிய வரலாறுதான் நடைபெற்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)* செல்வம் இங்கேயே சாட்சியாக இருக்கிறார். இல்லை என்று மறுத்தால், எனக்கு ஆட்சேபனை இல்லை. நடைபெற்ற சம்பவம் இது. உங்களுடைய அதிமுக ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட பொய்யான வழக்குகளுக்குச் சாட்சியாக இங்கே சட்டமன்ற உறுப்பினர் ஒருவரே இருக்கிறார் என்பதுதான் உங்களுடைய சட்டம்–ஒழுங்கையும், காவல் துறையையும் நீங்கள் பயன்படுத்திய இலட்சணமா என்பதை இந்த அவையிலே நான் பயன்படுத்த வேண்டிய அவசியத்திற்கு ஆளாகியிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)* நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை; இல்லையென்று மறுக்க முடியாது. *(குறுக்கீடு)* மாண்புமிகு கொறடா அவர்கள் இதைச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். நான் அருமைச் சகோதரர் செல்வத்தைப் பற்றி சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆகவே, இதில் நீங்கள் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. *(குறுக்கீடு)*

*பிற்பகல் 1–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினரை உதாரணம் காட்டி, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "அனைத்து சட்டம்–ஒழுங்கும்

சீர்குலைந்துவிட்டன; பொய்யான வழக்குகளைத் தொடர்வதுதான் முந்தைய ஆட்சிக் காலத்திலே இருந்திருக்கிறது" என்று சொல்கிறார்கள் என்று சொன்னால், ஆட்சியிலே பல்வேறு கட்சிகள் நம்மோடு சேர்கிறார்கள்; மாறுகிறார்கள்; அவர்கள் செய்கின்ற பல்வேறு பிரச்சினைகளைக் காவல் துறைதான் கண்காணித்து, அவர்கள்மீது வழக்குத் தொடருகிறதே தவிர, ஆட்சியாளர்கள் அல்லர் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, அந்தச் சூழ்நிலையிலே அங்கே இருக்கிற ஆளுங்கட்சியாக இருந்தாலும், சில வழக்குகளைப் போடுகிறபொழுது, அந்த வழக்கின் தன்மையைத் தெரிந்து, அவர்கள் வழக்குப் போடுகிறார்கள். அந்த உதாரணத்தைக் காட்டி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது சரியானது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், time ஆகிவிட்டது, please. 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உண்மைக்கு மாறான எந்தச் செய்தியையும் இங்கே சொல்லவில்லை. உண்மையைத்தான் சொல்கிறேன் நான். நான் சொல்வது, (குறுக்கீடு) இல்லை. இதுவும் எதிலிருந்து வந்தது என்றால், ஏன் எங்களுடைய தலைவர் திரு. நல்லக்கண்ணு தலையிட வேண்டிய அவசியம் வந்தது என்றால், மதமாற்றத் தடைச் சட்டத்தை அ.தி.மு.க. அரசு கொண்டுவந்தது. அதை எதிர்த்து விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் போராடினார்கள். போராடியவர்கள்மீது வேறுவிதமான, தவறான வழக்குப் புனையப்பட்டு, அவர் பாதிக்கப்பட்டார் என்பதுதான் இதிலே இருக்கிற உண்மை. நான் கேட்கிறேன், அப்படியானால், இதை நீதிமன்றத்திலே கொண்டு சென்று அவர் வாதாடி, அவர்மீது போடப்பட்டது பொய் வழக்கு என்று உயர் நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அதை இல்லையென்று மறுத்து, உச்ச நீதிமன்றத்திற்குப் போனது. அ.தி.மு.க. அரசு. உச்ச நீதிமன்றமும், அதை இல்லையென்று தீர்ப்புச் சொல்லி, அவரை எப்படியாவது வாபஸ் பெற வேண்டுமென்பதற்கான முயற்சிகளை எடுத்தவர்கள் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள், நீங்கள். ஆனால், அதை மறுத்து இதிலிருந்து உண்மை வெளிவர வேண்டும் என்பதற்கான முயற்சியிலே அவர் உறுதியாக இருக்கிறார். கூட்டணி வேறாக இருக்கலாம். தனியாக பாதிக்கப்பட்டிருக்கிறார். ஜனநாயகம் பறிக்கப்பட்டிருக்கிறது. உரிமை மீறப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினாலே உறுதியாக இருக்கிறார் செல்வம். இல்லையென்று மறுக்க முடியுமா? ஆகவே சட்டம்—ஒழுங்கு பிரச்சினைகளைப் பற்றி...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் time ஆகிவிட்டது. 12 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இங்கே சொல்லுகிறபோது, அவர்கள் ஆத்திரப்பட வேண்டியதில்லை. அவர்கள் வருத்தப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை மட்டும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, காவல் துறையை நிர்வாகம் செய்கின்ற பொறுப்பை முதலமைச்சர் அவர்கள்தான் வைத்திருந்தார்கள்; முதலமைச்சராக இருந்தவர்கள். இங்கே சந்தனக் கடத்தல் வீரப்பனைச் சூறையாடிய சம்பவங்களைப்பற்றிப் பெருமையாகச் சொன்னார்கள். அந்த வீரப்பன்மீது நடவடிக்கை எடுத்த காவல் துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகளைப் பற்றிப் பேசினார்கள். ஒன்றே ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்; அப்படி, எல்லோருக்கும் பணி உயர்வு வழங்கப்பட்டது; அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டன. வீட்டு மனைகள் வழங்கப்பட்டன. பதக்கங்கள் வழங்கப்பட்டன. இப்படிப் பல ஆண்டுக் காலமாக அந்தப் பணியிலேயிருந்த அந்தத் தலைமை அதிகாரிகளாக இருந்தவர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டது. அதை வழங்கியபொழுது, திரும்பப் பத்திரிகையாளர் கூட்டத்திலே, அன்றைய முதலமைச்சராக இருந்தவர், செய்தியாளரிடம் சொல்கிறபோது, குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அவர் சொல்கிறபொழுது, "அப்படிப்பட்ட பணியிலே ஈடுபட்ட எந்த ஒரு அதிகாரிக்கும், அவர்களுக்கு உரிய பணி உயர்வோ அல்லது வீட்டு மனை வழங்குவதோ அல்லது வெகுமதி வழங்குவதோ யாருக்கும் விடுபட்டுப் போகவில்லை என்பதை நான் மன நிறைவோடு கூறுகிறேன்" என்று உங்களுடைய தலைவி, முதலமைச்சராக இருந்த காலத்திலே அறிவித்திருக்கிறார். ஆனால், அந்தக் காலக்கட்டத்திலேதான் அதிரடிப் படையினுடைய தலைவராக இருந்த, மரியாதைக்குரிய திரு. காளிமுத்து அவர்களும் அந்தப் பணியிலே இருந்தார். 4½ ஆண்டுக் காலம் பணியாற்றியிருக்கிறார். சிறந்த சேவை செய்திருக்கிறார். ஆனால், இடைப்பட்ட காலத்திலே வந்தவர்களுக்கெல்லாம், பணி உயர்வு, பதக்கம், வெகுமதி, மனை, வீட்டுமனைகள் எல்லாம் வழங்கிவிட்டு, இந்தக் காளிமுத்து அவர்களுக்கு மட்டும் வழங்காதது ஏன்? (குறுக்கீடு) இல்லை, இல்லை நான் கேட்க வேண்டிய இந்த விஷயங்கள்மீது ஏதாவது அவர்கள் சொல்ல முடியுமா? அப்படியானால், நான் என்ன கேட்கிறேன் என்றால், என்னுடைய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கிறபொழுது,

வேண்டியவர்களுக்காக வழங்கப்பட்டிருக்கிறது; ஒருத்தருக்கு மட்டும்... (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் வந்து வழங்குவேன் என்று விட்டுவிட்டார்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. திரு. சிவபுண்ணியம், time ஆகிவிட்டது. 14 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைத்தான், இப்பொழுது நம்பி அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். இந்தச் செய்தியை நான் அவையிலே பதிவுசெய்தாலும், செய்யவில்லையென்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நீங்கள் வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை அவருக்கும் இருக்கிறது; எங்களுக்கும் இருக்கிறது; தமிழகத்திற்கும் இருக்கிறது. அதைச் சிறப்பாக நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், காவல் துறையிலேயே வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற முயற்சியை எடுத்திருக்கிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** குறிப்பாக, போக்குவரத்து விபத்துகள் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) அடுத்த மானியக் கோரிக்கையிலே பார்த்துக்கொள்ளலாம்.

பிற்பகல் 1—45

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். நிறைய கோரிக்கைகள் இருக்கின்றன. இருந்தாலும், காலத்தின் அருமை கருதி, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், திரு. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, காவலர்களுக்கான ஏராளமான கோரிக்கைகள்



இருக்கின்றன. அவற்றையெல்லாம் நிறைவேற்றச் செய்வதற்கான முயற்சிகளை நான் இந்த அவையிலே பேசியதாகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் கொடுக்கிறேன். அதைக் கருதி, அவர்களுக்குரிய எல்லாச் சலுகைகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கை என்ற முறையிலே, திருமகோட்டை என்ற இடத்திற்குக் காவல் நிலையம் கேட்டிருக்கிறேன்; பெருகவாழ்ந்தான் என்ற இடத்திலே தீயணைப்பு நிலையம் கேட்டிருக்கிறேன்; தாழையமங்கலம். வடபாதிமங்கலத்திற்குரிய காவலர் குடியிருப்பு. காவல் நிலையம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது; அவற்றையும் இந்த அறிவிப்பின்மூலமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டு முடிக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த்.

***திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் உங்கள் நண்பன் என்பர். ஆனால், யாருக்கு நண்பன் என்பதே கேள்வி. யாருக்கு வேண்டுமானாலும் நண்பனாக இருக்கலாம். ஆனால், எக்காரணத்தை முன்னிட்டும் குற்றவாளிகளுக்கும், சமூக விரோதிகளுக்கும் நண்பராக ஆகிவிடக் கூடாது.

பாமர மக்களும் நம்பிக்கைகொள்ளும்வகையில் இருந்தால்தான், போலீஸ் உண்மையில் நண்பனாக முடியும். அத்தகைய நல்லுறவு காவல் துறைக்கும் மக்களுக்கும் நீடிக்கிறதா? ஏழைகள் காவல் துறையினரைக் கண்டால் பயப்படும் நிலைதான் உள்ளது. பெற்றோர்களே சென்றாலும், காவல் நிலையத்திலிருந்து பிள்ளைகளை ஜாமீனில் எடுக்க முடிவதில்லை. இடைத் தரகர் யாராவது வந்தால்தான், வெளியே எடுக்கும் நிலை உள்ளது. சில நாட்கள் காவலில் வைத்தாலும், அக்குடும்பம் பட்டினிதான். காவல் கைதியாக இருக்கும்பொழுது இறந்துவிட்டாலோ, அந்தக் குடும்பம் நடுத்தெருவில் நிற்க வேண்டியதுதான். இந்நிலையைத் தவிர்த்து, ஏழைகளுக்கு நம்பிக்கையளிக்கும்வகையில், அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

ஒரு ஆட்சியைப்பற்றி மக்களின் கணிப்பு, காவல் துறை இயங்கும் தன்மையைப் பொறுத்தே பெரும்பாலும் அமைகிறது. காவல் துறையில் இலஞ்சமும், ஊழலும் ஊடுருவி இருப்பதால், சட்டங்களையே சில அதிகாரிகள் புறக்கணிப்பதோடு மட்டுமல்லாமல், தங்களுக்குச்

சாதகமாகவும் வளைத்துக்கொள்கின்றனர். இதனால் குற்றவாளிகள் தப்பித்துக்கொள்வதோடு, நிரபராதிகள் தண்டிக்கப்படும் நிலை உள்ளது. நேர்மையான அதிகாரிகளும் பாதிக்கப்படுகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறையின் சீரழிவை, பாதிக்கப்பட்ட நுரையீரலோடு ஒப்பிட்டுப் பேசி உள்ளார். ஆகவே, களை எடுக்கும் நடவடிக்கையைத் தீவிரப்படுத்துவார் என்று நம்புகிறேன்.

ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறைத் தலைவராகத் தற்போது நியமிக்கப்படும் I.A.S. அதிகாரிகளுக்குப் பதிலாக நீதிபதி ஒருவரை ஆணையராக நியமித்தால் நல்லது எனக் கருதுகிறேன்.

காவல் துறை நிர்வாகம் எந்த அளவுக்குச் சீர்கேடு அடைந்திருக்கிறது என்றால், அரசு முத்திரைத்தாள், F.I.R.–கள் போலியாக காவல் துறையினராலேயே அச்சடிக்கப்பட்டு பயன்படுத்தப்படுவதுதான். இதுகுறித்து C.B.I. விசாரணை எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோன்று, போலி முத்திரைத்தாள் மோசடியில், ஒருசில காவல் துறை அதிகாரிகளே ஈடுபட்டுள்ளனர். உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும், விசாரணை சரியாகச் செய்யப்படவில்லை. சிலவற்றில் குற்றப்பத்திரிகையும் சரிவரத் தாக்கல் செய்யப்படவில்லை என்று அறிகிறேன். இதுகுறித்து அரசு சரியான, உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

என்னுடைய விருத்தாசலம் தொகுதியில், வழக்கறிஞர் முருகேசனின் மனைவி பட்டப்பகலில் கொலை செய்யப்பட்டு, மூன்று ஆண்டுகளாயினும் குற்றவாளிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. கடந்த பொதுத் தேர்தலில், என்னுடைய தொகுதியில் எம். பரூரில் குடிநீரில் விஷம் கலக்கப்பட்டது. இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்போது, காவலர்கள் 24 மணி நேரமும் பணியில் இருப்பதாகக் கருதப்பட்டு, எப்போது வேண்டுமானாலும் அழைக்கப்படுகின்றனர். 8 மணி நேர வேலை என்று நிர்ணயித்து, 3 shift-களாக மாற்றி, போதிய காவலர்களை நியமிப்பது, ஆரோக்கியமான செயல்பாட்டுக்கு வழிவகுக்கும். வாரம் ஒரு நாள் ஓய்வு கட்டாயம் தரப்பட வேண்டும்.

Orderly முறை ஒழிப்பு ஏட்டளவில் உள்ளதே தவிர, நடைமுறையில் இல்லை. அனைவருக்கும் அரசாங்கம் வீடு கட்டித் தந்தால்தான், காவலர்கள் அச்சமின்றி பணி செய்ய முடியும். பணிக் காலத்தில் இறந்தவர்களின் வாரிசுகளுக்கு வேலைகள் வழங்கக்



காலதாமதமாவதால், அந்தக் குடும்பங்கள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். பணி செய்யும்போது விபத்தோ அல்லது வேறு அசம்பாவிதங்களோ ஏற்பட்டால், சிகிச்சை பெறும் காலம், மருத்துவ விடுப்பாகக் கருதப்படுகிறது. அதற்குப் பதிலாக அரசாங்கப் பணிக் காலமாகக் கருதப்பட வேண்டும்.

நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் இருந்ததைப்போல் பாதி விலையில் வழங்கப்பட வேண்டும். உணவுப் படியான ரூ.80–ஐயும் வார ஓய்வுப் படியான ரூ.150–ஐயும அதிகரிக்க வேண்டும். ஏற்கெனவே இருந்ததைப்போல, surrender leave 30 நாட்களுக்குத் தர வேண்டும்.

1994–95–ல் தேர்வு செய்யப்பட்டவர்களில் 98 உதவி ஆய்வாளர்கள், 2000 ஆம் ஆண்டு சிறப்புக் காவல் படையில் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்குப் பின் தேர்வு செய்யப்பட்டவர்கள், தாலுகா காவல் நிலையங்களுக்கு மாற்றப்பட்டும், இவர்களுக்கு அந்த வாய்ப்பு இன்னும் தரப்படவில்லை. அரசு இதைக் கவனித்து, அவர்களுக்கு அந்தப் பணியைத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–50*

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. நகை பறிப்பு, வரதட்சணை சாவுகள், கற்பழிப்பு, கொலை செய்தல், eve teasing இவற்றோடு மட்டுமல்லாமல், தாலி பறிப்பும் நடைபெறுவதால் தாய்மார்கள் தாலி அணிந்துகூட செல்லமுடியவில்லை. பெண்களைப் பாதுகாக்கப் பல சட்டங்கள் இருந்தாலும், அவற்றைச் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர், காவல் துறைக்குக் கடுமையான ஆணை பிறப்பிக்க வேண்டும்.

ஊர்க் காவல் படையினர் காவல் துறைக்கு உதவியாக உள்ளனர். கிட்டத்தட்ட, காவலர் கடமைகள் அளவு, பணி செய்கின்றனர். அவர்களுக்கு அளிக்கப்படும் 31 ரூபாய் தினப் படி மிகவும் குறைவு. அதை உயர்த்த கேட்டுக்கொள்கிறேன். மேலும், பல ஆண்டுக் காலம் பணி புரிபவர்களை நிரந்தரம் செய்ய, காவலர் தேர்வில் முன்னுரிமை வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தீயணைப்புத் துறையில் காவல் துறைக்கு ஈடான ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. 6–வது ஊதியக் குழுவில் இந்நிலை மாற்றப்பட்டது. தீயணைப்புத் துறையினரின் அடிப்படை ஊதியம்

குறைக்கப்பட்டது. இதை மீண்டும் சமநிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை தேவை. தீயணைப்புத் துறையில் உள்ள பட்டதாரிகளுக்கு, சார்பு ஆய்வாளர் நேரடித் தேர்வுக்குக் காவல் துறையில் உள்ளதைப்போல, வயது வரம்புச் சலுகை அளிக்கக் கேட்டுக்கொள்கிறேன். தீயணைப்புத் துறையின் பகுதிநேரப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ரூபாய் 150/–ஐ உயர்த்த வேண்டுகிறேன். எரிகிற நெருப்பில் இருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்றும் தீயணைப்புத் துறையினருக்கு இது மிகவும் அவசியம் என்று வற்புறுத்துகிறேன்.

போக்குவரத்துப் போலீசார், விதிகளை மீறுபவர்களிடம் பல கோடி ரூபாய்களை வசூலிக்கின்றனர். இதில் இலஞ்ச ஊழலைத் தடுத்து, இந்த நிதியை நவீனமாக்கப் பயன்படுத்தலாம். தற்போது வசூலிக்கப்படும் அபராதத் தொகை, உயர் அதிகாரிகளுக்கும் மற்றவற்றிற்கும் செலவு செய்யப்படுவது வேதனை தருவதாகும்.

காவல் துறையில் பணி நியமனம், பயிற்சித் தருதல், இடம் மாற்றுதல் ஆகியவற்றில் முறைகேடுகள் நடப்பதால், அனைத்துத் தரப்பினரும் நாளாவட்டத்தில் ஊக்கம் இழந்து விடுகின்றனர். காவல் துறை தேர்வு வாரியத்தின் தலைவர் மூலமாக நியமனம் செய்யாமல், வேறு இரண்டு I.G.–க்களைக் கொண்டுவந்து தேர்வு நடத்தியதில், அந்த இருவரும் ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளானார்கள். வினாத் தாள்கள் வெளியானதிலும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. தேர்வில் வெற்றி பெற்றவர்களின் பின்னணியைப் பார்த்து வடிகட்டிய பின்னர்தான், நியமன உத்தரவை வழங்க வேண்டும், அதுவும் புறக்கணிக்கப்படுகின்றது. இலஞ்சம் கொடுத்து வேலையில் சேர்ந்தால், இலஞ்சத்தை எவ்வாறு ஒழிக்க முடியும்? விஞ்ஞானம் வளர்ந்துள்ள இக்காலக்கட்டத்தில் பல துறைகளிலும் நிபுணர்களைக் கொண்டு பயிற்சி அளிப்பது அவசியம். காவல் துறை பயிற்சி நிலையம், வேண்டாத அதிகாரிகளின் புகலிடமாக மாறிவருவது நாம் காணும் விசித்திரமாகும்.

குறைந்தது 3 ஆண்டுகளாவது, ஓர் அதிகாரி ஓரிடத்தில் இருந்தால்தான் பணிகளைச் செவ்வனே செய்ய முடியும். தமிழ்நாடு காவல் துறை அதிகாரிகள் 3 ஆண்டுக் காலமாவது தொடர்ந்து ஓரிடத்தில் பணியாற்றினார்களா என்று பார்த்தால், அவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். இவற்றில் எல்லாம் அரசு தனிக் கவனம் செலுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.



எல்லாவற்றிற்கும் மேலாக, காவல் துறையில் அரசியல்வாதிகள் சுய இலாபத்திற்காகத் தலையிடுவதைத் தடுக்க வேண்டும். சொந்தக் கட்சி சட்டமன்ற உறுப்பினரே, சட்டத்தை மீறி தொழிலாளர் போராட்டத்தில் ஈடுபட்டபோது, தயவுதாட்சண்யம் இன்றி அவரைக் கைது செய்ய உத்தரவிட்டவர் அன்றைய முதல்வர் மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்கள். தனது கட்சி சட்டமன்ற உறுப்பினர் காவல் துறை ஆய்வாளருக்கு சிபாரிசுக் கடிதம் அனுப்பியதைக் கண்டித்தவர் மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்கள். இவையெல்லாம் இன்றைய முதல்வர் அறியாதவர் அல்லர். ஆனால், இன்றைய நிலைமை, ஆட்சிகள் மாறினாலே, காவல் துறை அதிகாரிகள் கூண்டோடு மாற்றப்பட வேண்டியுள்ளது. காவல் துறைத் தலைமை அதிகாரியின் சாவுக்குக்கூட ஆட்சி மாற்றம்தான் காரணம் என்று சொல்லப்பட்டது. நேர்மையற்ற அதிகாரிகளும் அரசியல்வாதிகளைப் பயன்படுத்துகின்றனர். பலவீனமான அரசியல்வாதிகளும் அதிகாரிகளைப் பயன்படுத்துகின்றனர். இந்தத் தகாத உறவுக்கு முதலமைச்சர் அவர்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

காவல் துறையை வைத்து அரசியல் கட்சிகளையும், தலைவர்களையும் வேவுபார்க்கும் முறை உள்ளது. இது ஆங்கிலேயர் காலத்திலிருந்து வந்த ஆதிக்க நெறியாகும். ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அரசு இதைத் தவிர்க்க வேண்டும். தலைமறைவாகச் செயல்படும் இயக்கங்களையும், தீவிரவாதிகளையும் கண்காணிக்கலாம். ஆனால், வெளிப்படையாக இயங்கும் அரசியல் கட்சிகளையும், தொழிலாளர் இயக்கங்களையும், இதர ஜனநாயக அமைப்புகளையும் ஒற்றர்களை வைத்துக் கண்காணிப்பதைத் தவிர்க்க வேண்டும். அதிகாரிகள் அரசியல்வாதிகளாக மாறுவது ஜனநாயகத்திற்கு ஆபத்தாகும்.

தமிழ்நாடு காவல் துறை, மக்கள் நலன்காக்கும் தன்னிச்சையாகச் செயல்படும், உன்னதமான ஒரு துறையாக மாற வேண்டும். குற்றம் செய்பவர்கள் தப்பிக்க முடியாது என்ற நிலை வரவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் தரும் துறையாக ஆக வேண்டும். தமிழ்நாடு சட்டமுறைக்கும், அமைதிக்கும் பெயர்பெற்ற மாநிலமாகத் திகழ வேண்டும். அண்மையில் ஐ.நா. சபை "எல்சால்வேடார்" என்னும் நாட்டில் புதிதாகக் காவல் துறையை உருவாக்கியது. காவல் துறை தவறாமல் மக்களைச் சந்தித்து அவ்வப்போது கூட்டம் நடத்த வேண்டுமென்று சட்டம் போடப்பட்டது. மக்களுக்கும் காவல் துறை கடமைப்பட்டது என்பதை இதன்மூலம் வலியுறுத்தப்பட்டது.

இதன்விளைவாக, மக்கள், நடைபெற்ற குற்றங்களைத் தங்குதடையின்றி எடுத்துக் கூறினர். காவல் துறைக்கும் பலவகையான துப்புகள் கிடைத்தன. நீதிமன்றங்கள்மூலம் விரைவாக தண்டனை வாங்கித்தர முடிந்தது. காவலர் பயிற்சி நிலையம், ஒரு University—ஆக, பல பேராசிரியர்களைக் கொண்டு இயங்குகிறது. படித்த பட்டதாரிகள் காவல் துறையில் சேரும்வகையில், உயர்ந்த சம்பளமும் தரப்படுகிறது. மக்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்படக்கூடிய அத்தகைய ஒரு காவல் துறையாக, தமிழ்நாடு காவல் துறையை ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு நாடு முன்னேறுகிறது என்றால் குற்றங்கள் குறைய வேண்டும். காவலர்களுக்கும் வேலைப் பளு இருக்கக் கூடாது. இன்று நாம் காவலர்கள் போதவில்லை என்று குறைப்பட்டுக்கொள்கிறோம் என்றால், நம்முடைய பண்பாட்டை நாம் இழந்து வருகிறோம் என்பது பொருள். தாழ்ந்த தமிழகத்தைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைநிமிரச் செய்ய வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடு)

*பிற்பகல் 1–55*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996–2001 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலே, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இருக்கின்றபோது, அன்றைய திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் ஒருவரை, அவர் காவல் துறையினரிடத்திலே அத்துமீறி நடந்துகொண்டார் என்ற காரணத்தால், கைது செய்து காஞ்சிபுரம் சிறையிலே அடைத்தார் என்பதை இந்த அவையிலே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார். Thiru. D. Ravikumar, only 5 minutes.

***திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின்கீழ் இருக்கின்ற முக்கியத்துவம் வாய்ந்த இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிரடிப் படையினரின் அத்துமீறலால் பாதிக்கப்பட்ட பழங்குடியின மக்களுக்கு, சதாசிவம் கமிஷன் அறிக்கையின் அடிப்படையிலே இழப்பீடு வழங்குவதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வந்ததை, இங்கே நான் பாராட்டி, வரவேற்கின்றேன்.



நீதிபதி சதாசிவம் அவர்கள், தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது, இழப்பீடு வழங்கப்பட வேண்டியவர்களின் பட்டியலை அளித்து, அந்தத் தொகையைக் குறிப்பிட்டுத் தரும்படி, தேசிய மனித உரிமைகள் ஆணையத்திற்கு அனுப்பினார்கள். கடந்த 3 ஆண்டுகளாகத் தேசிய மனித உரிமை ஆணையத்தின் பரிசீலனையிலே, அது கிடப்பில் கிடந்தது. மனித உரிமைகள் ஆணையம் செய்யாத ஒன்றை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்ய முன்வந்ததற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்த இழப்பீட்டை அறிவிக்கும்போது, அந்த சதாசிவம் கமிஷன் முன்னாலே சாட்சியம் அளித்த பல பேர்களுடைய பெயர்கள் விடுபட்டிருக்கின்றன. அவர்களையும் கணக்கிலேகொண்டு, அவர்களுக்கும் அந்த இழப்பீடு கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமாய் உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவது போலீஸ் கமிஷன் அமைக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு முன்னாலே அமைக்கப்பட்ட இரண்டு போலீஸ் கமிஷன்களினுடைய பரிந்துரைகளிலே, முதலிலே வந்த ஆர்.ஏ. கோபாலசாமி கமிஷனுடைய 18 பரிந்துரைகளும், அதன்பின் அமைக்கப்பட்ட சபாநாயகம் கமிஷனுடைய 25 பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளன. அவற்றையும் பரிசீலித்து, அவற்றில் தகுதியான பரிந்துரைகள் இருந்தால், நடைமுறைப்படுத்த வேண்டுமாய் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாடெங்கும் பயங்கரவாத அச்சுறுத்தல் அதிகரித்துவரும் இன்றையச் சூழலிலே, உளவுத் துறையினுடைய செயல்பாடு, மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இன்றைக்கு நம்முடைய உளவுத் துறையானது அந்தச் சவாலையேற்று, சமாளிக்குமா என்கின்ற ஐயம் நமக்கு ஏற்படுகிறது. ஏனென்று சொன்னால், சமீபத்திலே கோவையிலே மனித நீதிப் பாசறை என்ற அமைப்பினர்மீது தவறுதலாகப் போடப்பட்ட வழக்குகள், இந்த ஐயத்தை நமக்கு ஏற்படுத்துகின்றன. எனவே, சுயேச்சையான அதிகாரம் கொண்ட அமைப்பாக உளவுத் துறையை உருவாக்க வேண்டும். அதற்குப் பணியமர்த்துதல் செய்யும்போதும், ஏற்கெனவே காவல் துறையில் இருப்பவர்களை எடுக்காமல், நேரடியாகச் சிறப்புக் கவனம் செலுத்தி, சிறப்புத் தகுதிகள் வாய்ந்தவர்களைப் பணியமர்த்துதல் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காவல் துறையில் பணியாற்றுவோருக்கு ஓய்வு என்பது, மிக மிக முக்கியமானது. ஆனால்,

அந்த ஓய்வு நேரத்திலே அவர்கள் பணியிலே இருப்பதற்காக Extra Time Remuneration-E.T.R. என்று ஒரு தொகை தரப்படுகிறது. அந்தத் தொகையை வாங்க வேண்டும் என்பதற்காகவே, ஓய்வு இல்லாமல் காவல் துறையினர் பணியாற்றுகின்றார்கள். ஆகவே, காவல் துறையின் பணியிலே பல இடையூறுகள், பல குறைபாடுகள் ஏற்படுகின்றன. எனவே, அந்த E.T.R. என்பதை இரத்து செய்து, வாரத்திற்கு ஒரு நாள் ஓய்வு என்பதைக் கட்டாயமாக்கிட வேண்டும். காவலர்களுக்கு என்று பல நலத் திட்டங்கள் இருந்தபோதிலும், போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்கு இருப்பதுபோல, காவல் துறையைச் சேர்ந்தவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கென்று பொறியியல் கல்லூரி ஒன்றை நமது அரசே உருவாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–00

போலீஸ் canteen–களை ஒப்பந்தத்துக்கு விடும்போது, அந்த ஒப்பந்தப் பணிகளுக்கு ஓய்வுபெற்ற காவலர்கள், காவல் துறையைச் சேர்ந்த குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

தற்போதுள்ள, போலீஸ்–பொதுமக்கள் விகிதம், Police Public Ratio, என்பது போதுமானதாக இல்லை. இது 788 பேருக்கு ஒரு காவலர் என்ற அளவில்தான் இருக்கிறது. தமிழ்நாட்டிலே 95,000 காவலர்கள் இருக்க வேண்டிய இடத்திலே 88,000 பேர்தான் இருக்கிறார்கள். குறிப்பாக, பெண் காவலர்களுடைய எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருக்கிறது. National Crime Record Bureau–வினுடைய புள்ளிவிவரப்படிப் பார்த்தால், 52 ஆண் போலீஸ் இருந்தால், ஒரு பெண் போலீஸ் என்ற விகிதத்தில்தான் இருக்கிறது. எனவே, இதைச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

காவல் துறையினருக்குப் பாலின சமத்துவம்பற்றியும், ஆதி திராவிட பழங்குடி மக்கள் பிரச்சினைகள்பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தும்விதமாக, கடந்த ஆட்சியிலே இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அந்த நல்ல திட்டங்களை, இந்த ஆட்சியும் தொடர்ந்து நடத்திட வேண்டுமாய் நான் உங்களைப் பணிவோடு வேண்டுகிறேன். ஏனென்று சொன்னால், பெண்கள் மீதான குற்றங்கள் தொடர்ந்து பெருகி வருகின்றன. நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களைப்


விவாதமும் வாக்கெடுப்பும்
2006 ஆகஸ்ட் 29] [திரு. து. ரவிக்குமார்]

பார்க்கும்போது, ஏறத்தாழ நாளொன்றுக்கு ஒரு பெண் கற்பழிக்கப்படுகின்றார் என்று தெரிய வருகிறது. அதுமட்டுமல்லாமல், நாள் ஒன்றுக்கு ஏழு குற்றங்கள் அவர்கள் தொடர்பான வழக்குகள் பதிவாகின்றன என்பது தெரிய வருகிறது. இவற்றைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால், பாலின சமத்துவம் பற்றிய விழிப்புணர்வைக் காவல் துறையினரிடம் மட்டுமல்லாமல், சமூகத்தின் பிற பகுதிகளிலும் ஏற்படுத்த வேண்டும். எனவே, இந்த பாலின சமத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை ஒரு தனித் திட்டமாகவே செயல்படுத்த இந்த அரசு முன்வர வேண்டும்.

1977–ல் அமைக்கப்பட்ட தேசிய போலீஸ் கமிஷன், 8 அறிக்கைகளை இங்கே சமர்ப்பித்திருக்கிறது. அந்த அறிக்கைகளில் பல்வேறு பரிந்துரைகள் செய்யப்பட்டன. குறிப்பாக, (மணியடிக்கப்பெற்றது) புதிய போலீஸ் சட்டத்தை உருவாக்க வேண்டுமென்கின்ற ஒரு பரிந்துரை. அதை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாட்டிலே ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. அந்தக் குழு என்ன ஆனது என்று தெரியவில்லை. இந்த 1861 ஆம் ஆண்டு சட்டத்திற்குப் பதிலாக புதிய போலீஸ் சட்டம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் நிலையங்களிலே ரௌடி list என்றும் கேடி list என்றும் வைத்திருக்கின்றார்கள். அந்தப் பட்டியல்களிலே அதிக அளவிலே ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களுடைய பெயர்களையும் சேர்த்திருக்கிறார்கள். அதுபோல, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களுடைய பெயர்களும் சேர்க்கப்படுகின்றன. எந்த அடிப்படையிலே இந்தப் பெயர்கள் சேர்க்கப்படுகின்றன என்பது தெரியவில்லை. அதனாலே இதைக் கண்காணிப்பதற்கு குழு ஒன்றை அமைத்து, அதுபற்றி விசாரிக்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஆதி திராவிட மக்களைப் பொறுத்த அளவிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், ஏழு நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. து. ரவிக்குமார்:** இரண்டு விதங்களிலே காவல் துறையினருடைய அணுகுமுறையால் பாதிக்கப்படுகிறார்கள். ஒன்று, அவர்களுக்கான பாதுகாப்பான சட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இன்னொன்று, அவர்கள்மீது உண்மைக்கு மாறான, பல்வேறு

வழக்குகள் போடப்படுகின்றன. ஏற்கெனவே உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல, இங்கே இருக்கின்ற எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் செல்வம் அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் அதற்கு உதாரணம். எங்களுடைய இயக்கத்தினுடைய பொதுச் செயலாளர் திருமாவளவன் அவர்கள் மீதும்கூட பல்வேறு உண்மைக்கு மாறான வழக்குகள் பதியப்பட்டன. திட்டக்குடியிலே அவா, 'தேடப்படும் குற்றவாளி' என்று பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்தப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டார். அதுபோல பல்வேறு வழக்குகள், இந்த மக்கள்மீது போடப்பட்ட வழக்குகள் எல்லாம் 10 ஆண்டுகளாக விசாரணையின்றி கிடக்கின்றன. 1997 ஆம் ஆண்டு வள்ளியூரிலும், மதுரையில் சுப்பிரமணியபுரம், பந்தல்குடி, மீனாம்பாள்புரம் ஆகிய இடங்களிலும் அம்பேத்கர் சிலைகள் உடைக்கப்பட்டு, அவை தொடர்பாக நடந்த கலவரத்திலே 200 வீடுகள் எரிக்கப்பட்டன. அப்போது பதியப்பட்ட வழக்குகள் எல்லாம், பின்னால் எந்தவிதக் காரணமும் காட்டப்படாமல் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் மறுபடியும் விசாரித்து, குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *முடியுங்கள். முடியுங்கள்.*

**திரு. து. ரவிக்குமார்:** இதுமட்டுமல்லாமல், காவல் துறையினர் தமது அதிகாரத்தை முறையாகப் பயன்படுத்தாமல் இருப்பதாலும், முறைகேடாகப் பயன்படுத்துவதாலும் பாதிக்கப்படுகிறவர்கள் காவல் துறைக்கு எதிராக வழக்குத் தொடர முடியாதபடி, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகள் 132 மற்றும் 197 ஆகியவற்றின் பாதுகாப்பு, காவல் துறைக்கு இருக்கிறது. அந்தச் சட்டப் பிரிவுகளின் பாதுகாப்பை நீக்குவதற்குத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எந்த ஒரு துறையிலும் பணி புரிகிறவர்கள், தமது உரிமைகளைப் பெற, தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை என்பது, ஓர் அடிப்படை உரிமையாகும்; அந்த உரிமை காவல் துறையினருக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். வணக்கம.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று பேரவையில் எடுத்துக்கொண்ட மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதம், நாளை தொடரும்.



*பிற்பகல் 2–05*

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2006). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2006) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* (ஆம்)

*மறுப்போர் 'இல்லை' என்க.* (இல்லை)

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.*

*பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

---

@ *4–8–2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

[பேரவைத் தலைவர்] [2006 ஆகஸ்ட் 29

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2006) நிறைவேற்றப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2006 ஆகஸ்ட் 29]

## (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2006), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

### பிரிவு 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள், தன்னுடைய திருத்தத்தை முன்மொழியலாம்.

***திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"The proposed amendment shall be omitted"

என்ற திருத்தத்தை நான் மொழிகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிகிறார்களா?

---

@ 23-8-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2006 ஆகஸ்ட் 29

***திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமுன்வடிவிலே, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 89(a) என்னும் பிரிவானது சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். 1996 ஆம் ஆண்டுக்குப் பிறகு நீக்கப்பட்ட, அந்தந்தத் துறையைச் சார்ந்த கூட்டுறவாளர்கள் மீண்டும் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்படுவதற்கும், தற்போது தகுதி படைத்த புதிய அங்கத்தினர்களை உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவதற்கும் கொண்டுவரப்பட்ட சட்டம்தான் 89(a) பிரிவாகும். 2001–க்குப் பிறகு விசாரணை நடைபெற்று, பல்வேறு தலைவர்கள், அங்கத்தினர்கள் தகுதியிழப்புச் செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மீதான கிரிமினல் வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளன. இதுகுறித்து அரசு முடிவெடுக்கவேண்டும். மேலும், Model Co-operative Act - திரு. வைத்தியநாதன் கமிட்டியினுடைய பரிந்துரைகளை எந்த அளவிற்கு நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதற்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டதற்குப் பிறகு, உண்மையான உறுப்பினர்கள் சேர்க்கப்படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புதிய உறுப்பினர்கள் ஏன் சேர்க்கப்படவேண்டும் என்று கூறுகிறோம் என்றால், பல்வேறு வகையான உறுப்பினர்களை, அந்தச் சங்கத்திற்கு சம்பந்தமில்லாத, ஒருவர் பால் சொசைட்டிக்கு என்றால், அந்தப் பால் சொசைட்டியிலே இருக்கக்கூடியவர்கள், மாடு வைத்திருக்கக்கூடியவர்கள் அங்கு அங்கத்தினர்களாக இல்லை. வேறு ஏதோ நபர்களை அங்கே உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளார்கள். அதேபோல, கூட்டுறவு வங்கியை எடுத்துக்கொண்டாலும், அதற்குரியவர்கள் அதிலே உறுப்பினர்களாக இல்லை. வேறு நபர்கள், அந்த நிலம் இல்லாதவர்கள்கூட உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அப்படியிருக்கக்கூடியவர்களை நீக்கிவிட்டு, எடுத்துவிட்டு, புதிதாக உறுப்பினர்களைச் சேர்த்து, அவர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துத்தான் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதற்காகத்தான். இதற்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, வழக்கு நிலுவையிலே உள்ள நிலையிலே, 89(a) பிரிவினை நடைமுறைப்படுத்தி, தேர்தல் நடத்த வேண்டுமென்று பதிவுசெய்து கொள்கிறேன்.



006 ஆகஸ்ட் 29] [திரு. சி. சண்முகவேலு]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கைவிட்டுவிட்டு, நான் கொண்டுவந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–10

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய நோக்கமே, Member களைச் சேர்ப்பதற்குத் தனி அதிகாரிகளுக்கு அதிகாரமில்லை என்று அறிவித்ததற்குப் பிறகு, உயர் நீதிமன்றம், Full Bench தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு, இந்தச் சட்டமுன்வடிவை இங்கே நாங்கள் கொண்டு வருகிறோம். காரணம், தேர்தலை நடத்துவதற்காகத்தான். ஆட்சிப் பொறுப்பேற்று, ஏறத்தாழ 107 நாட்கள்தான் ஆகின்றன. இதற்குள், தேர்தலை நடத்துவதற்கு இயலவில்லை. அதற்காக, இன்றும் சுருக்கமாகச் சொல்லப்போனால், உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில்தான் இந்தச் சட்டத் திருத்தத்தை நாங்கள் கொண்டு வருகிறோம்; இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை ஏற்றுக் கொள்வதற்கான முக்கிய காரணம், விரைவாகத் தேர்தலை நடத்துவதற்காகத்தான்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆரம்பத்திலேயே, 'இந்தத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்' என்று எனக்கு அறிவுரை வழங்கினார்.. நான் அவரிடத்திலே கேட்டுக்கொண்டது, 'இரண்டு தேர்தல்கள் இருக்கின்றன; இன்றைக்கு உள்ளாட்சித் தேர்தலும், அதற்குப்பிறகு கூட்டுறவுத் தேர்தலும் நடத்துவதற்கான வாய்ப்பைப் பெறலாம்' என்று குறிப்பிட்டேன். அதற்கு அவர் காரணம் கேட்டார்; நானும் சொன்னேன். மூன்று அமைப்பாக, மூன்று கட்டமாக இந்தத் தேர்தலை நடத்த வேண்டியிருக்கிறது. ஒன்று, Primary Society; ஆரம்பத்திலே இருக்கிற விவசாயக் கூட்டுறவுச் சங்கம். அந்தத் தேர்தல் முடிவுற்றபிறகு, அதிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள், மேலமைப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செல்ல வேண்டுமானால், அதற்குக் குறைந்தபட்சக் கெடு வேண்டும்; Notification ஆகி, அவர்கள் Member என்று உறுதி செய்யப்பட்டு, பிறகு வாக்காளர்களாக வருகிறார்கள். வாக்காளர்களாக வந்தபிறகு, அதற்குமேல் மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய மத்திய சங்கங்களுடைய தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்குப்பிறகு, அதிலே உறுப்பினர்கள் வாக்காளர்களாக மாறி, Notification ஆனதற்குப் பிறகு, அவர்கள்

[திரு. கோ.சி. மணி] [2006 ஆகஸ்ட் 29

State Co-operative Bank - மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு மாநிலச் சங்கத்திற்கு வருகிறார்கள். மூன்று கட்டங்களாக இந்தத் தேர்தலை நடத்துவதற்கு, இப்போது அவகாசம் இல்லை. அதோடு மட்டுமல்ல; அதிகாரிகளும் இல்லை. அந்த அதிகாரிகளைக் கொண்டுவந்து, அந்த இடங்களையெல்லாம் நிறைவு செய்து, இந்தத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்காகத்தான், இந்தச் சட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இது ஒன்றும்—நீங்கள் ஆரம்பத்திலேயே, தனி அதிகாரிகளை நியமித்ததும்—நல்ல வலுவான எதிர்க்கட்சியாக இருக்கிறோம் என்று சொல்கிறீர்களே—நீங்கள்தான் ஆரம்பித்தீர்கள். இப்போது இதை எதிர்ப்பதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.

அவர்கள் பதவிக் காலம் ஆறு மாத காலத்திற்குத்தான்; அப்படித்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். 5 ஆண்டுக் காலம் இருந்தது; இப்போது 5½ ஆண்டுக் காலமாக மாற்றுகிறோம்; 5½ ஆண்டுக் காலமாக இதை மாற்றுகிறோம்; அவ்வளவுதான். 6 மாத காலத்தில், இந்தத் தேர்தலை நடத்திவிட முடியும் என்று நம்புகிறேன். எனவே, இதை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டி, முடிக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடு)



2006 ஆகஸ்ட் 29] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடட்டும். (குறுக்கீடு) முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? (குறுக்கீடுகள்) கொறடா, நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சி. சண்முகவேலு கேட்டது, பழைய உறுப்பினரை வைத்துக்கொண்டு தேர்தலை நடத்துவதா? புதிய உறுப்பினர்களைச் சேர்க்கப் போகிறீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்கான தெளிவான விளக்கத்தைச் சொல்லவில்லை. புதிய உறுப்பினர்களைச் சேர்த்து, தேர்தலை நடத்த வேண்டும் என்பதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில், Full Bench அளித்த தீர்ப்புப்படி,

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வந்துதான், அந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்ட பிறகுதான், புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி. (குறுக்கீடுகள்) சொல்லிவிட்டார்கள்; விளக்கத்தைத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு (குறுக்கீடுகள்) என்ன அது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்குத் தேர்தலை,* Primary...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** *ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். உயர் நீதிமன்றத்தினுடைய* Full Bench *தீர்ப்பு, தனி அலுவலர்கள்,* Member*—களைச் சேர்க்கக்கூடாது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது. (குறுக்கீடுகள்) இவர்களுக்கு அந்த அதிகாரமில்லை; தனி அலுவலர்களுக்கு அதிகாரமில்லை என்று குறிப்பிட்டிருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Right. *(குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லிவிட்டார்கள் அல்லவா? நீங்கள் சொன்னீர்கள், அதற்கு அவர்... (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 2—15*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *பேரவைத் தலைவர் அவர்களே, நோக்கக் காரண விளக்கவுரையில், மிகத் தெளிவாக இந்தச் சட்டமுன்வடிவிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கடந்த காலத்திலே ஐந்தாண்டுக் காலமாக தேர்தல் நடைபெறவில்லை. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், அதற்கான காரணங்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதற்குப்பிறகு நீதிமன்றத்திலே வழக்கு இருந்தது. கடைசியாக* Full Bench *கொடுத்த தீர்ப்பின்படி, "புதிய உறுப்பினர்களைப் பதிவு செய்வதற்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட குழுமம் மட்டுமே அதிகாரம் படைத்ததாகும்" எனத் தீர்ப்பளித்துள்ளது. மேலும், சென்னை உயர் நீதிமன்றமானது மேற்சொன்ன சட்டத்தின் 89* (a) *எனும் பிரிவானது, அச்சங்கத்தின் பொதுக் குழுவின் குடியாட்சி உரிமைகளைப் பாதிக்கிறவாறு, குடியாட்சி நடைமுறைகளுக்கு ஊறு விளைவிப்பதாகவும், குடியாட்சி அமைப்பிற்குத் தொந்தரவு தரும்வகையிலும் அமைவதால், விருப்பப்படியானதாகவும், நியாயமற்றதாகவும், அரசமைப்பை மீறியதாகவும், அரசமைப்புக்குப்*



*றம்பானதாகவும் இருப்பதாக விளம்பியுள்ளது. எனவேதான், ரசானது மேற்சொன்ன சட்டத்தைத் திருத்துவதன்மூலம், ற்சொன்ன 89* (a) *எனும் பிரிவை விட்டுவிடுவதென முடிவு செய்துள்ளது. துதான் இன்றைய சட்டம். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *விளக்கம் தெளிவாகச் சால்லியாகிவிட்டது. இன்னும் இதற்குமேல் விவாதம் ஒன்றும் இல்லை. ாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்ப, ன்ன இது? (குறுக்கீடுகள்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே, 10 ஆண்டுக் காலமாக தேர்தல் நடக்கவில்லை என்ற ஒரு ழ்நிலை இருக்கின்றது. (குறுக்கீடுகள்) சரி, ஐந்தாண்டுகள், ஐந்தாண்டுகள் ேர்தல் நடக்கவில்லை என்ற சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு மைச்சர் அவர்கள், உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை இங்கே சால்லியிருக்கின்றார்கள். நாங்கள் கேட்பது, அந்தந்தக் கூட்டுறவுச் ங்கங்களுக்கு, அதனுடைய பொதுக் குழு, மகாசபையைக் கூட்டி குதியுடையவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து, தகுதியுடையவர்களை றுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டவர்களைப் போட்டியிடுவதற்கு னுமதிக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அந்தக் காரிக்கையினை, ஏன் ஆளும் தரப்பிலே இருக்கின்றவர்கள் றுக்கின்றார்கள் என்பதற்குதான் நாங்கள் காரணம் கேட்டுக் காண்டிருக்கிறோமேயொழிய, நாங்கள் தேர்தல் நடத்துவதைப்பற்றியோ, னி அலுவலர்களை நியமிப்பதுபற்றியோ கேள்வி கேட்கவில்லை. குதியுடையவர்களை, அந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சர்ப்பதற்கும், தகுதியுடைய உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட்டு ந்தச் சங்கத்தினுடைய பொறுப்பாளராக வருவதற்கும் ஏன் அரசு பாராக இல்லை என்பதைத்தான் நாங்கள் கேட்டுக்கொள்ளக் டமைப்பட்டிருக்கின்றோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி. (குறுக்கீடு) அமைச்சர் பதில் சால்லட்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ந்த ஐந்தாண்டுக் காலத்தில் கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்பட வண்டுமென்று இந்த மாமன்றத்தில் எங்களைப் போன்றவர்கள் எல்லாம்*

[திரு. ஜி.கே. மணி] [2006 ஆகஸ்ட் 29

தொடர்ந்து வலியுறுத்தினோம். அப்பொழுது ஆளுங்கட்சியாக இருந்த அ.தி.மு.க. சார்பிலே சொல்லப்பட்டது, கூட்டுறவுத் தேர்தல் நடத்தக்கூடிய பிரச்சினை நீதிமன்றத்திலே இருக்கிறது. அதனால் நடத்த இயலாது என்ற காரணத்தைச் சொன்னீர்கள். ஆனால், இப்போது பொறுப்பேற்றிருக்கிற அரசு, நீதிமன்றத்திலே வழக்கு இருந்தாலும்கூட, தேர்தலை எப்படி நடத்துவது என்பதை ஆய்ந்து அறிந்து, தேர்தலை நடத்துவதற்கான முகாந்திரங்களையெல்லாம் கொண்டு வந்து, தேர்தல் நடத்தக்கூடிய இந்த நேரத்தில், இதுபோன்ற பிரச்சினைகளை நீங்கள் முட்டுக்கட்டையாகச் சொல்லுகிறீர்களா அல்லது எந்த வகையிலாவது தேர்தல் நடத்துவதற்கு நீங்கள் முன்வர வேண்டுமென்று ஆதரவளிக்கிறீர்களா என்பதைத் தெளிவுபடுத்த நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** அதிகாரிகள், இப்போது அதிகாரிகளாக இருக்கிறவர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிவிட்டார். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** அதிகாரிகள் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க முடியாது. பழைய உறுப்பினர்களைக் கொண்டுதான் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்குத் தகுதியான உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2006 ஆகஸ்ட் 29]

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மேலும் விளக்கம் கேட்க அனுமதி அளிக்காத காரணத்தினால், நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*பிற்பகல் 2–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 30–08–2006 புதன்கிழமை அன்று, வினாக்கள்–விடைகள் நேரம்... (குறுக்கீடுகள்) 2–30 மணியாகிவிட்டது. அதைத்தான் கேட்கிறேன். சொல்லுங்கள், என்ன? 2–15 மணியாகிவிட்டது.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** பேச வாய்ப்புக் கொடுக்கவில்லை. அதனால்தான் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 30–8–2006 புதன்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின்... (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தீர்மானம் தோல்வியுற்றது. சொல்லுங்கள். (கூச்சல்–குழப்பம்)

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் இங்கே கொண்டுவருவதற்கு முன்னால், ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், முறையில்லாமல், சொல்லப்பட்ட விளக்கத்தைப் புரிந்து கொள்ளாமலோ, வேண்டுமென்றோ, மாறான கருத்தைச் சொல்லி வெளியேறுகிறார்கள். இப்பொழுது இருக்கிற அதிகாரிகளுக்குப் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க அதிகாரம் இல்லை, கூட்டுறவுச் சங்கத்தில். இருக்கிற அதிகாரிகளுக்கு அந்த அதிகாரம் இல்லாத காரணத்தால், அதிகாரத்தைப் பெறுவதற்கு,

[பேராசிரியர் க. அன்பழகன்] [2006 ஆகஸ்ட் 29

இருப்பவர்களைக்கொண்டு தேர்தல் நடத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அப்படி இருப்பவர்களைக் கொண்டு, தேர்தல் நடத்தி, அவர்கள் அதிகாரத்திலே வந்து, புதிய உறுப்பினர்களைச் சேர்க்கலாம். முடியாத காரியத்திற்குக் குற்றஞ்சாட்டி வெளியேறுவது என்பது, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து செய்து வருகிற ஒரு காரியம் என்பதை முதலில் நான் சொல்லி, என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, இந்தத் தீர்மானம்.

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, 30–8–2006 புதன்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (30–8–2006) புதன்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30–8–2006) புதன்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–22 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



2006 ஆகஸ்ட் 29]

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

34. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையினால் 4–2–1998 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட II(1)/வ.வ (ம) அ.நி/11/98 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தும் மற்றும் சென்னை இணைப்புப் பெட்டி தொழிற்சாலைக்கு நிலக்கீல் பொருட்களை விற்பனை செய்ததற்காக திருவாளர்கள் இண்டஸ்டிரியல் 'எச்' பேக்கர்ஸ் செலுத்தத்தக்க வரி, மேல்வரி மற்றும் கூடுதல் வரி ஆகிய வகையில் எட்டு சதவீதத்திற்கும் நான்கு சதவீதத்திற்குமிடையேயான வேறுபாட்டுத் தொகையினை 1990–1991 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் தள்ளுபடி செய்தது குறித்தும் 24–2–2006 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் அரசாணை (2டி) எண் 80–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) மற்றும் 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

35. 2004–2005 ஆம் ஆண்டிற்கான கன்னியாகுமரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

36. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

37. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தேனி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

38. 2004–2005 ஆம் ஆண்டிற்கான திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*39. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தூத்துக்குடி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*104. மானியக் கோரிக்கை எண் 22 – உள் துறை – காவல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)*

*105. மானியக் கோரிக்கை எண் 37 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)*

*106. மானியக் கோரிக்கை எண் 23 – உள் துறை–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)*

*107. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2006–2007. (தமிழ்)*

*108. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2006–2007. (தமிழ்)*

*109. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – எழுதுபொருள் மற்றும் அச்சு மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2006–2007. (தமிழ்)*



# இணைப்பு I

*(392 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 22 – உள் துறை – காவல்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006 – 2007

## தமிழ்நாடு காவல் துறை

### முகவுரை

இந்தியத் திருநாட்டிலேயே தனித்தன்மை வாய்ந்த, நீண்ட நெடிய பாரம்பரியமிக்க, தொழில் திறனுடன் வெகுசிறப்பாகச் செயல்படக்கூடிய துறையாகத் தமிழ்நாடு காவல் துறை விளங்கி வருகிறது. இத்துறை சட்டம் ஒழுங்கைத் திறம்படப் பராமரிப்பதிலும், குற்ற நிகழ்வுகளைத் தடுப்பதிலும், கண்டுபிடிப்பதிலும் புகழ்பெற்று விளங்குகிறது. 2006 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் ஒன்பதாம் நாளன்று கண்டதேவி திருவிழா மிகச் செம்மையாக நடந்து முடிந்துள்ளது. இம்மாநிலத்தில், பொது அமைதியும், நல்லிணக்கமும் மிகச் சிறப்பாகப் பேணப்பட்டு வருவதற்குச் சமீப கால எடுத்துக்காட்டாகும்.

சொத்து வழக்குகளில், குற்ற நிகழ்வுகள் கண்டுபிடிக்கப்படுவதும், சொத்துகள் மீட்கப்படுவதுமான நடவடிக்கைகள் உயரதிகாரிகளின் தீவிரமான கண்காணிப்பின்கீழ் மேம்பட்ட நிலையில் நடைபெறுவதற்கு உயர்நிலையை அடைய மாநிலக் காவல் துறை முயற்சி செய்து வருகிறது.

காவல் துறை பொது மக்களின் உற்ற நண்பனாக – பொது மக்கள் ஏற்றுக்கொண்டுள்ள நண்பனாக விளங்க வேண்டும். சமுதாயத்தின் நலிந்த பிரிவினர், அடித்தட்டு மக்கள், சாதாரண சாமான்ய மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு, காவல் துறையினர் பணியாற்ற வேண்டும் என்பதே இந்த அரசின் அடிப்படைக் கொள்கையாக இருக்கும். இந்த இலக்கை அடைய, காவல் துறையின் பணிகள் மேலும் சிறந்திட இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த வெற்றி இலக்கை அடைவதற்கேற்ப அனைத்து திட்டமிட்ட மேம்பாட்டுப் பணிகளும் அமையும்.

பொது அமைதி பராமரிப்பானது, மாநிலத்தின் தொழில் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு அத்தியாவசியமான ஒன்றாகும். பொது அமைதியை நிலைநாட்ட இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க உறுதி பூண்டுள்ளது. இதற்காகக் காவல் துறையினருக்கு உரிய பயிற்சியும், ஆள் பலமும், நவீன கருவிகளும் வழங்கப்படும்.

களவுகளைத் தடுக்கவும், கண்டுபிடிக்கவும் நவீன தொழில்நுட்பத்தைக் கையாள வேண்டியுள்ளது. விசாரணையில் துன்புறுத்துதல் போன்ற காலத்திற்கொவ்வாத கொடுமையான நடைமுறைகள் காவல் துறையின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துபவை என்பதால் இவற்றுக்கு முடிவு கட்டவேண்டும். சமுதாயத்தில் தங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று பெண்கள் கருதினால் அச்சமுதாயமானது ஒரு பாதுகாப்பான சமுதாயமாக இருக்க முடியாது. பெண்களின் பிரச்சினைகளுக்கு உயரிய முக்கியத்துவம் அளிப்பதோடு, சமூகத்தில் அவர்களுக்கு உரிய மரியாதை கிடைக்கவும், அவர்களது உரிமை குறித்து விழிப்புணர்வையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தவும் இந்த அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

இந்த இலக்குகளை அடைய, காவல் துறையை விரைவாக நவீனமயப்படுத்தினால் மட்டும் போதாது; காவல் பணியாளர்களின் மனோபாவம், கூருணர்வுத் திறன் ஆகியவற்றிலும் மாற்றம் வேண்டும். திட்டமிட்ட மற்றும் முறையான செயல்பாடுகளின்மூலம், விரும்பி, எதிர்பார்க்கும் இலக்குகளை காவல் துறை அடைந்து சாதனை புரியும் என்று இந்த அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.





## அத்தியாயம் – 1

## காவல் துறையின் நிர்வாக அமைப்பு

மாநில காவல் துறைக்குத் தலைமை வகிக்கும் காவல் துறை தலைமை இயக்குநர், துறையின் பல்வேறு பிரிவுகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு வழிநடத்தி வருகிறார். துறையின் பல்வேறு பிரிவுகளில் காவல் துறை இயக்குநர்கள், கூடுதல் காவல் துறை இயக்குநர்கள், காவல் துறைத் தலைவர்கள் போன்ற பதவி நிலைகளில் உள்ள அதிகாரிகள் தலைமைப் பொறுப்பேற்றுள்ளனர். உயரிய பணி சார்ந்த செயல்பாடுகளை நிர்வகித்திடக் காவல் துறை தலைமை இயக்குநருக்கு அந்த அதிகாரிகள் உதவிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு காவல் துறையின் நிர்வாகப் பணியமைப்பு குறித்த விவரங்கள் இக்கொள்கைக் குறிப்பின் பின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

நிர்வாக வசதிக்காக, மாநிலம், நான்கு மண்டலங்களாகப் (சென்னை மாநகர் ஆணையரகம் நீங்கலாக) பிரிக்கப்பட்டுள்ளது. கோவை, மதுரை, திருச்சி மற்றும் சென்னை ஆகிய இடங்களைத் தலைமையகங்களாகக் கொண்டுள்ள ஒவ்வொரு மண்டலமும், ஒரு காவல் துறைத் தலைவரின்கீழ் இயங்கி வருகின்றது. அந்நான்கு மண்டலங்களும், கூடுதல் காவல் துறை இயக்குநரின் (சட்டம்-ஒழுங்கு) நேரடிக் கண்காணிப்பில் இயங்கி வருகின்றன. குறிப்பிட்ட காவல் பணிகளுக்காக, பல்வேறு சிறப்பு/தனிப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன.

காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் இயங்கிவரும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், காவல் துறையின் கட்டடங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகள் ஆகியவற்றைக் கட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளைக் கவனித்து வருகிறது.

சிறைக் காவலர், தீயணைப்புப் படை வீரர், காவலர் மற்றும் உதவி ஆய்வாளர் நிலை பணியாளர்களைத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் தேர்வு செய்கிறது. இவ்வாரியம் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநரும், ஒரு காவல் துறைத் தலைவரும் பணியாற்றி வருகின்றனர்.

மத அடிப்படைவாதிகள்மீதான அனைத்து வழக்குகளையும் புலன் விசாரணை செய்து, வழக்குத் தொடர அமைக்கப்பட்ட சிறப்புப்

புலனாய்வுப் பிரிவு, போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, வீடியோ, சிடி மற்றும் டிவிடி திருட்டை ஒடுக்க வீடியோ திருட்டைத் தடுக்கும் பிரிவு, கூட்டுக் கொள்ளைத் தடுப்புப் பிரிவு ஆகியன குற்றப் பிரிவு கூடுதல் காவல் துறை இயக்குநரின்கீழ் இயங்கி வருகின்றன. சமூக நீதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள்மீது விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுத்து வருகிறது. காவல் பணியாளர்களுக்குப் பயிற்சி என்பது மிக முக்கியமான ஒன்றாகும். அதனைக் காவல் துறை இயக்குநரின்கீழ் உள்ள பயிற்சிப் பிரிவு கவனித்து வருகிறது.

தமிழ்நாடு அதிரடிப் படை, தமிழ்நாடு அதிரடிப் படைப் பள்ளி உள்ளிட்ட சிறப்புச் செயலாக்கப் பிரிவு ஆகியவற்றின் செயல்பாடுகளைக் கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவர் கவனித்து வருகிறார். அவரே சிறப்பு அதிரடிப் படையின் தலைவராகவும் இருந்து வருகிறார்.

தமிழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட இந்திய காவல் பணி அதிகாரிகளின் எண்ணிக்கை 211 ஆகும். 01–05–2006 அன்றைய நிலவரப்படி உள்ள மொத்த அதிகாரிகளின் எண்ணிக்கை 189 ஆகும். 01–05–2006 அன்றைய நிலவரப்படி, ஒப்பளிக்கப்பட்ட மொத்த காவல் பணியாளர்களின் எண்ணிக்கை 98,897; அமைச்சுப் பணியாளர்களின் எண்ணிக்கை 5,297 ஆகும்.





## அத்தியாயம் – 2

## சட்டம் – ஒழுங்கு

சட்டம்-ஒழுங்கு சீராகப் பாராமரிக்கப்பட்டு, மாநிலத்தில் அமைதி நிலவி வருகிறது. சாதி மதப் பூசல்களோ அல்லது மத அடிப்படைவாதப் பிரச்சினைகளோ அல்லது இடதுசாரி தீவிரவாத சம்பவங்களோ குறிப்பிடும்படியாக எதுவும் மாநிலத்தில் நிகழவில்லை.

அண்மையில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல்களின்போது, காவல் துறையினர் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். இதனால் வாக்குப் பதிவுகள் அமைதியாக நடந்து முடிந்தன. இதற்காக, தேர்தல் ஆணையம் தமிழ்நாடு காவல் துறையைப் பாராட்டியுள்ளது.

சட்டம்-ஒழுங்கு பாராமரிப்பு தொடர்ந்து நல்லமுறையில் பேணப்பட்டு வருகின்றது. காவல் துறையினரும், மாவட்ட நிர்வாகமும் மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளின் காரணமாக, 09–07–2006 அன்று, கண்டதேவி கோவில் திருவிழா, நல்லிணக்க உணர்வுடன் அமைதியாக நடந்து முடிவுற்றது. அதேபோன்று, மும்பையில் நிகழ்ந்த வெடிகுண்டு சம்பவத்திற்குப் பிறகு, காவல் துறையினர் விழிப்புணர்வுடன் செயல்பட்டு, மாநிலத்தில் அமைதியைப் பராமரிக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

2006 ஆம் ஆண்டு ஜூலை மாதத் தொடக்கத்தில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் பணிபுரியும், 19 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த 8,872 நிரந்தர ஊழியர்களும், 10,000 ஒப்பந்த ஊழியர்களும் நடத்திய போராட்டத்தின்போது, காவல் துறையினர் நிலைமையைத் திறம்பட சமாளித்தனர். தொழிற்சங்கங்களின் எதிர்ப்புக்கிடையே, மின்சார உற்பத்தி செய்யும் பணியைத் தொடர மேலதிகாரிகள் முயற்சித்தபோது, எவ்வித அசம்பாவிதமும் நிகழாமல், மாவட்ட நிர்வாகம் சிறப்பான வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

காவல் துறையினர் திறமையாகச் செயல்படவும், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், பின்வரும் உத்தரவுகளை அரசு வழங்கியுள்ளது:

* 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 14–ன்படி, மணல் கடத்தலைச் சட்ட விரோதமாக்கி, மணல் கொள்ளையில் ஈடுபடுவோரைக் கைது செய்து, அவர்களைக் குண்டர் சட்டத்தின்கீழ் அடைக்க நடவடிக்கை.

[2006 ஆகஸ்ட் 29

* மத நல்லிணக்கத்தைப் பராமரிக்க, தீவிரக் கண்காணிப்பு மற்றும் திறமையான நடவடிக்கையை மேற்கொள்ளுதல்.
* அமைதியைப் பராமரிக்க, சாதிய மோதல்கள் மீதான கண்காணிப்பைத் தீவிரப்படுத்துதல்.
* சாலை விபத்துகளின் காரணமாக ஏற்படும் உயிர் இழப்புகளைக் குறைக்க, போக்குவரத்து, நெடுஞ்சாலை மற்றும் நல்வாழ்வுத் துறைகளுடன் காவல் துறை இணைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ளுதல்.

தமிழ்நாட்டை அமைதியின் உறைவிடமாக்கிட, பயங்கரவாதிகள் மற்றும் தீவிரவாதிகள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதில் அரசு உறுதியாக உள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள், இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம், தமிழ் தேசிய மீட்புப் படை, தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழர் விடுதலை இயக்கம், பொதுவுடைமைக் கட்சி (மாவோயிஸ்ட்) போன்ற தீவிரவாத அமைப்புகள் தமிழ்நாட்டில் தொடர்ந்து தடை செய்யப்பட்ட இயக்கங்களாக இருந்து வருகின்றன.

இலங்கையில், அண்மையில், வன்முறைச் செயல்கள் தலைதூக்கியுள்ள காரணத்தால், இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழ்நாட்டிற்குள் வருகின்ற நிலை உள்ளது. மத்திய அரசின் உதவியுடன் அகதிகளை உன்னிப்பாகக் கண்காணிக்க போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் நக்சலைட்டுகளின் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை. அத்தகைய சம்பவங்கள் நிகழக்கூடுமெனக் கருதப்படும் இடங்களைக் கண்டறிந்து, பாதுகாப்புப் பணிகள் அவ்வப்போது பலப்படுத்தப்பட்டு வருவதுடன், அவ்விடங்களில் மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவை தொடர் குண்டு வெடிப்பு வழக்குகளில் விசாரணை முடியும் தருவாயில் உள்ளது. அரசுத் தரப்பு விசாரணை முடிவுற்று, எதிர்த் தரப்பு வாதம் நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்று வருகிறது.

**காவல் துறையின் பாதுகாவலின்போது ஏற்பட்ட மரணங்கள்**

காவல் கைதிகள் துன்புறுத்தப்படுவது இவ்வரசிற்கு ஏற்புடையதல்ல. நடப்பாண்டில், 30–06–2006 வரையில், நான்கு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. காவல் துறையின் பாதுகாவலில் இருந்தபோது ஏற்பட்ட



2006 ஆகஸ்ட் 29]

மரணங்கள் குறித்து, அவ்வப்போது அரசு நுணுக்கமாக ஆய்வு செய்து, அத்தகைய நிகழ்வுகளை அறவே தவிர்த்திட எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து காவல் துறை இயக்குநருக்கும், இதர உயரதிகாரிகளுக்கும் அவ்வப்போது அறிவுரைகளை வழங்கி வருகிறது.

**காவல் துறை துப்பாக்கிச் சூடு**

நடப்பாண்டில், 15–08–2006 வரை ஒன்பது சந்தர்ப்பங்களில் மட்டுமே காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதிலும், பொது மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிப்பதிலும், பலப்பிரயோகம் குறைந்தபட்சமாக இருக்க வேண்டுமென்று அரசு உறுதியான அறிவுரைகளை வழங்கியுள்ளது. களப்பணியில் உள்ளவர்களுக்குத் தகுந்த முறையில் அறிவுரைகள் வழங்கி, துப்பாக்கிச் சூடு சம்பவத்தைத் தவிர்க்கவும், எத்தகைய சூழ்நிலையையும் சமாளிக்கவும் முன்கூட்டியே திட்டமிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று காவல் உயர் அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர். 2004 முதல் 2006 வரையிலான காலக்கட்டத்தில் காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு குறித்த விவரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| வ. எண் | விவரங்கள் | 2004 | 2005 | 2006 (15-8-2006 முடிய) |
|---|---|---|---|---|
| 1. | துப்பாக்கிச் சூடு நடைபெற்ற சம்பவங்களின் எண்ணிக்கை | 12 | 9 | 9 |
| | அ) கலவரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் | 4 | 3 | 1 |
| | ஆ) கூட்டுக் கொள்ளையைத் தடுக்கும் நடவடிக்கையில் | – | – | – |
| | இ) பிற குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கையில் | 8 | 5 | 7 |
| | ஈ) மற்றவை | – | 1 | 1 |

227434
சென்னை-600 009

| வ. எண் | விவரங்கள் | 2004 | 2005 | 2006 (15-8-2006 முடிய) |
|---|---|---|---|---|
| 2. | இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை | 6 | 3 | 3 |
| | அ) காவல் துறையினர் (சம்பவங்களில்) | – | – | – |
| | ஆ) பொதுமக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்) | 6 | 3 | 3 |
| 3. | காயமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை | 24 | 13 | 16 |
| | அ) காவல் துறையினர் (சம்பவங்களில்) | 23 | 12 | 14 |
| | ஆ) பொதுமக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்) | 1 | 1 | 2 |





## அத்தியாயம் – 3

## குற்ற நிகழ்வு நிலவரம்

தமிழ்நாடு காவல் துறை விரைந்து குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், சொத்துகளை மீட்பதிலும் தொடர்ந்து நற்பெயரைப் பெற்று வருகின்றது. குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் தொடர்ந்து 80 விழுக்காட்டிற்கும் அதிகமாகவே உள்ளது. ஒரு படி மேலே முன்னேறி, தமிழ்நாடு காவல் துறை தன்னுடைய செயல் திறமையை மெச்சத்தகுந்த அளவில் மேம்படுத்துவற்கு, கடின உழைப்பை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சமீப காலத்தில் குற்ற நிகழ்வுகளின் தன்மை கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கண்டிருக்கிறது. தகவல் தொழில்நுட்பப் புதுமையின் காரணமாக கணினிசார் குற்றங்கள், கடன் அட்டை மோசடிகள், வேலைவாய்ப்பு மோசடி, செல்லிடத் தொலைபேசி வழிக் குற்றங்கள் போன்றவை அதிகரித்துள்ளன.

இத்தகைய புதிய வகையான குற்றங்களைச் சமாளிக்க, புதிய திறன்முறை மற்றும் அணுகுமுறைகள் வகுக்கப்பட வேண்டும். புதிய சவால்களை எதிர்கொள்ள காவல் துறையினர் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

2005 ஆம் ஆண்டு ஜூன் மாதவரையிலான குற்ற நிகழ்வு எண்ணிக்கைகளோடு ஒப்பிடுகையில், இவ்வாண்டில் (2006–ல்) ஜூன் மாதம் வரை குற்ற நிகழ்வுகள் குறைந்துவரும் நிலையைக் காணலாம்.

[2006 ஆகஸ்ட் 2

**2005 மற்றும் 2006-க்கான ஒப்பீட்டுப் பட்டியல் (ஜூன் மாதம் வரையில்)**

| வ. எண் | குற்றத் தலைப்பு | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | |
|---|---|---|---|
| | | 2005 | 2006 |
| 1. | கொலை | 737 | 633 |
| 2. | ஆதாயக் கொலை | 34 | 34 |
| 3. | கூட்டுக் கொள்ளை | 35 | 57 |
| 4. | வழிப் பறி | 215 | 204 |
| 5. | கன்னக் களவு | 1,840 | 1,528 |
| 6. | திருட்டு | 7,902 | 6,754 |
| | மொத்தம் | 10,763 | 9,210 |
| | கண்டுபிடிப்பு சதவிகிதம் | 81.4 % | 82.2 % |
| | சொத்து இழப்பு | ரூ.19.19 கோடி | ரூ.18.47 கோடி |
| | மீட்கப்பட்ட சொத்துகள் | ரூ.14.05 கோடி | ரூ.13.28 கோடி |
| | மீட்பு சதவிகிதம் | 73 % | 72 % |

**பெண்களுக்கு எதிரான குற்றங்கள்**

சமுதாயத்தில் பெண்களுக்கு உரிய பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு எடுத்துள்ளது. அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் பெண்கள்



2006 ஆகஸ்ட் 29]

மற்றும் குழந்தைகளுக்கு ஆபத்துக் காலத்தில் உதவும்வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொலைபேசி வசதிகள் மற்றும் ஆலோசனை மையங்கள் இதில் அடங்கும். பெண்களிடையே அவர்களது சட்டப்பூர்வமான உரிமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த சில ஆண்டுகளில், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த புள்ளிவிவரங்கள் பின்வருமாறு:—



[2006 ஆகஸ்ட் 29




காவல் துறையினருக்குப் பாலியல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் தன்மையினை உணர்த்தி பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் குறைப்பதற்குத் தொய்வில்லாத கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெண்களின் குறைகளைக் களைவதற்கு ஏற்ப – மகளிர் காவலர்களுக்குத் தக்க ஆலோசனை உத்திகளை வழங்குமாறு காவல் துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கிராமப்புறப் பெண்களுக்கு அவர்களுடைய இல்ல வாசலிலேயே தேவையான உதவி வழங்கப்பட நடமாடும் ஆலோசனை மையங்கள் திறம்படப் பயன்படுத்தப்படும்.

2004, 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் ஜூன் மாதம் வரையில், பெண்களுக்கெதிரான குற்ற வழக்குகள் பதிவு குறித்த ஒப்பீட்டுப் பட்டியலை நோக்கும்போது, குற்றங்கள் வெகுவாக குறைந்துள்ளது தெரிகிறது. இத்தகைய முக்கிய பணிப் பிரிவில் ஈட்டியுள்ள சாதனையைத் தக்க வைத்துக்கொள்ள தொய்வில்லாத தொடர்ச்சியான முயற்சி தேவைப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 29]

**பெண்களுக்கெதிரான குற்ற வழக்குகள் பதிவு குறித்த ஒப்பீட்டுப் பட்டியல் (ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் முடிய)**

| வ. எண் | தலைப்பு | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|
| 1. | கற்பழிப்பு | 318 | 301 | 218 |
| 2. | ஆட்கடத்தல் | 398 | 485 | 350 |
| 3. | வரதட்சணை மரணங்கள் | 100 | 130 | 74 |
| 4. | கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமை | 641 | 865 | 573 |
| 5. | மானபங்கம் | 908 | 934 | 610 |
| | மொத்தம் | 2,365 | 2,715 | 1,825 |

[2006 ஆகஸ்ட் 29

## அத்தியாயம் – 4

## போக்குவரத்து விபத்துகள்

தமிழ்நாட்டில் நிகழும் போக்குவரத்து விபத்துகள், அதன் விளைவாக ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை ஆகியவை அதிகரித்து வருவது, மிகுந்த கவலையளிப்பதாக உள்ளது. கடந்த 2003 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாட்டில் சாலை விபத்து மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட மரணங்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

| தலைப்புகள் | வருடம் | | | |
|---|---|---|---|---|
| | 2003 | 2004 | 2005 | 2006 (31-7-2006 வரை) |
| மொத்த விபத்துகள் | 51,141 | 52,508 | 53,866 | 32,277 |
| மரண விபத்துகள் | 9,112 | 8,733 | 8,843 | 5,856 |
| மரணங்கள் | 9,899 | 9,507 | 10,003 | 6,366 |

சென்னை மாநகரத்தின் கடந்த 2003 ஆம் ஆண்டு முதலான விபத்து மற்றும் மரணம் குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

| தலைப்புகள் | வருடம் | | | |
|---|---|---|---|---|
| | 2003 | 2004 | 2005 | 2006 (31-7-2006 வரை) |
| மொத்த விபத்துகள் | 4,243 | 4,873 | 4,896 | 3,959 |
| மரண விபத்துகள் | 545 | 560 | 561 | 680 |
| மரணங்கள் | 567 | 605 | 1,190 | 692 |

வாகனங்களின் எண்ணிக்கை 12 விழுக்காடு உயரக்கூடும் என
எதிர்பார்க்கப்படுவதால், உயிரிழப்புகளையும், விபத்தில் பாதிக்கப்பட்ட



ஆகஸ்ட் 29]

பத்தாரின் துயரங்களையும் தவிர்த்திட, சிறப்பான போக்குவரத்து
ாண்மை முறைகள் உடனடியாகக் கடைப்பிடிக்கப்படாவிட்டால்,
ல விபத்துகளின் எண்ணிக்கை உயரும். சாலை விபத்துகளைக்
க்க அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காவல் துறைக்கு
கனவே உத்தரவிடப்பட்டுள்ளது. அனைத்து விபத்துகள் குறித்தும்,
ளை மற்றும் அத்துமீறியவகையிலும் வாகனங்களை
பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள
சி எடுக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு மாதங்களில்
பான்ற 2,209 நிகழ்வுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது,
றில் 184 நிகழ்வுகளில் ஓட்டுநர் உரிமம் நிரந்தரமாகவோ
து தற்காலிகமாகவோ இரத்து செய்யப்பட்டுள்ளது. எனினும்,
ிரச்சினைக்கு நீண்ட காலத் தீர்வு காணப்பட
களுக்கிடையேயான சிறப்பான ஒருங்கிணைந்த நடவடிக்கை
வ. நெடுஞ்சாலை, போக்குவரத்து, நல்வாழ்வு துறைகளின்
லாளர்களையும், காவல் துறைத் தலைமை இயக்குநரையும்
டக்கிய உள் துறைச் செயலாளரின் தலைமையிலான ஒரு குழு,
ல விபத்துகள் சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும்
ய்ந்து, மாநிலம் முழுவதும் ஒரு செயல் திட்டத்தை நடைமுறைப்
துவதற்கு இவ்வாண்டு ஆலோசனை வழங்கிட உள்ளது.

[2006 ஆகஸ்ட் 29

## அத்தியாயம் – 5

## காவல் ஆணையம் (போலீஸ் கமிஷன்)

காவல் துறையின் பணிகள், கடமைகள், பொறுப்புகள், நவீனமயமாக்குதல் போன்றவற்றை ஆராய்வதற்கென, காவல் ஆணையம் மாநில அளவில் தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக அமைக்கப்பட்டது. ஓய்வுபெற்ற ஐ.சி.எஸ். அதிகாரி திரு. ஆர்.ஏ. கோபாலசாமி தலைமையில் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட முதல் காவல் ஆணையம் 1969 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டில், இவ்வாணையம் 133 பரிந்துரைகளை அரசுக்கு அளித்தது. 115 பரிந்துரைகள் ஏற்கப்பட்டன.

பின்னர், 1989 ஆம் ஆண்டு, ஓய்வுபெற்ற ஐஏஎஸ். அதிகாரி திரு சபாநாயகம் தலைமையில் நான்கு உறுப்பினர்களைக் கொண்ட, இரண்டாவது காவல் ஆணையம் அமைக்கப்பட்டது. இவ்வாணையம் 112 பரிந்துரைகளை அளித்ததில், 87 பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டு முதல், காவல் துறை பெரும் வளர்ச்சியைப் பெற்று, காவல் துறையின் அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. காவல் துறையினரின் தேவைகளை நிறைவு செய்யும் அதே நேரத்தில், நவீன சவால்களைத் திறமையாக எதிர்கொள்ள காவல் துறை தயாராக இருப்பதற்கான பரிந்துரைகளை அளிக்க, பின்வருவனவற்றில் கவனம் செலுத்தும் வகையில், மூன்றாவது காவல் ஆணையத்தை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

1. பணி, குடியிருப்பு மற்றும் நலன் பற்றிய பொதுவான நிலைமை.
2. சட்டம்-ஒழுங்கைப் பராமரித்தல், குற்றங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் போக்குவரத்தைச் சீர்செய்தல் ஆகியவற்றில் காவல் துறையின் அதிகாரங்களும், கடமைகளும்.
3. அமைப்பு மற்றும் முறைகளை நவீனமயமாக்கல், புலன்விசாரணைக்கான வசதிகள், புள்ளி விவரங்கள் மற்றும் ஆவணங்கள், ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல்.
4. காவல் பணியாளர்களின் எண்ணிக்கை குறித்த திட்டம், தேர்வு, பயிற்சி மற்றும் நியமனம்.
5. பொது மக்கள், அரசியல் மற்றும் அரசியல் சாரா அமைப்புகளுடனான உறவு.
6. நீதிமன்றங்கள், நீதிமன்ற நடுவர்கள் மற்றும் பிற அரசுத் துறைகளுடனான ஒருங்கிணைப்பு.



2006 ஆகஸ்ட் 29]

## அத்தியாயம் – 6

## காவல் துறை நவீனமயமாக்கல்

இன்றைய தொழில்நுட்பம் சார்ந்த சமுதாயம் சிக்கல் நிறைந்ததாக இருப்பதால், இச்சவால்களை எதிர்கொள்ள புதிய அணுகுமுறைகளை காவல் துறை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதிவிரைவு போக்குவரத்து வசதியின் காரணமாக, குற்றவாளிகள் தங்களது எல்லைகளை விரிவுப்படுத்திக் கொண்டு, மக்கள் கூட்டத்தில் கலந்து தப்பி விடுகினறனா. செல்லிடத் தொலைபேசி சாதனம் மற்றும் இணையதளம் போன்றவற்றின்மூலமாக திட்டமிட்ட குற்றங்களை இழைப்பது எளிதாகி, தற்போது வேகமாக மாறிவரும் காலத்தின் புதிய கண்டுபிடிப்புகளான கணினி மற்றும் பல்வேறு வகையான வணிகக் குற்றங்கள் போன்ற புதிய வகையான குற்றங்களும் தோன்றியுள்ளன. மேலும், வகுப்புவாதம், வெறிச்செயல்கள் மற்றும் சாதீயவாதம் போன்றவற்றால் எழும் பிரச்சினைகளைத் தவிர, இன்றைய காலக்கட்டத்தில் நவீனமயமாக்கலால் வளர்ந்துவரும் பயங்காவாதம் மற்றும் ஆயுதமேந்திய தீவிரவாதத்தை எதிர்த்து நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.

மேலே குறிப்பிட்ட இத்தகைய பிரச்சினைகள் நமது சமுதாயத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். அவற்றைத் தெளிவாகவும், உறுதியாகவும் சந்திக்க வேண்டும். இத்தகைய வளர்ந்துவரும் மிரட்டல்களையும், புதிய பிரச்சினைகளையும் எதிர்கொள்ள, காவல் துறையின் தாக்கும் சக்தியையும், திறனையும் அதிகப்படுத்தி, காவல் துறையை விரைவாக நவீனமாக்குவது அவசியமாகும்.

2006–2007 ஆம் ஆண்டிற்கான காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தில் முக்கிய அம்சம் – சென்னைப் பெருநகரத்திற்கு ரூபாய் 18 கோடி ஒதுக்கப்பட்டதேயாகும். சென்னைப் பெருநகரக் காவல் துறையின் எல்லை விரிவுபடுத்தப்பட்டபோது, சென்னைப் பெருநகரக் காவல் துறையின்கீழ் வரும் புதிய காவல் நிலையங்களுக்குப் போதிய உள்கட்டமைப்பு வசதிகள் அளிக்கப்படாததால், இந்த ஒதுக்கீடு அவசியமாயிற்று. காவல் நிலையக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டப்படவும், வாகனங்கள், தொலைத் தொடர்பு மற்றும் கண்காணிப்புச் சாதனங்கள் மற்றும் கணினிகள் வாங்கிடவும், இந்த 18 கோடி ரூபாய் செலவிடப்படும். சென்னைப் பெருநகரக் காவல் துறையுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் மேம்பட்ட காவல் பணியை மேற்கொள்ள இது உதவும்.

மாநிலத்தில் காவல் துறையை நவீனமயமாக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு, வரும் ஆண்டுகளில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க அரசாங்கம் தீவிர முயற்சியை மேற்கொள்ளும்.

2006-2007 ஆம் ஆண்டிற்கு, காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் செலவின ஒதுக்கீடு 68 கோடி ரூபாய் ஆகும். இந்நிதியை, கட்டடங்கள், வாகனங்கள், கணினிமயமாக்கல், பயிற்சி, தொலைத்தொடர்பு போன்ற இனங்களில் நவீனமயமாக்கும் பணிகளுக்குச் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.





## அத்தியாயம் - 7

## நலத் திட்டங்கள்

தமிழ்நாடு அரசு, காவல் துறையினரின் நலத்தைப் பேணுவதில் உயர் முன்னுரிமை அளித்திடும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அத்தகைய நலத் திட்டங்கள் பின்வருமாறு:-

**1. தமிழ்நாடு காவல் துறை கருணைக் கொடைத் திட்டம்**

அரசிதழ் பதிவு பெறாத காவல் பணியாளர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் நிதி உதவியும், இதர நிவாரண உதவிகளையும் வழங்கும் நோக்கத்தோடு, 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் துறை கருணைக் கொடைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு உறுப்பினர்களிடமிருந்து சந்தாவும், கொடையாளிகளிடமிருந்து நன்கொடையும், மாநில அரசிடமிருந்து ஒவ்வோர் ஆண்டும் மானியமும் பெறப்படுகிறது. 2005 ஆம் ஆண்டில், 4,064 பயனீட்டாளர்களுக்கு உதவித் தொகையாக மொத்தம் ரூ.1,45,86,500/- வழங்கப்பட்டது.

**2. தமிழ்நாடு காவல் நூற்றாண்டு கல்வி உதவித் தொகை நிதியம்**

அரசிதழ் பதிவுபெறா காவல் பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்காக 1959 ஆம் ஆண்டு, தமிழ்நாடு காவல் நூற்றாண்டு கல்வி உதவித் தொகை நிதியம் உருவாக்கப்பட்டது. மொத்தமாக கொடுக்கப்பட்ட நிதியைக் கொண்டும், கொடையாளிகளிடமிருந்து ஒவ்வோர் ஆண்டும் அவ்வப்போது பெறப்படும் நன்கொடையைக் கொண்டும், இந்நிதியம் உருவாக்கப்பட்டது. 2004-2005 ஆம் கல்வியாண்டிற்காக, காவல் பணியாளர்களின் குழந்தைகள் 3,809 பேருக்கு இந்நிதியத்திலிருந்து மொத்தம் ரூ. 1,34,36,500 கல்வி உதவித் தொகை 2005 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

**3. தமிழ்நாடு அரசு சிறப்புக் கல்வி உதவித் தொகை நிதியம்**

அரசிதழ் பதிவு பெறாத காவல் பணியாளர்களின் பிள்ளைகள் உயர் கல்வியைப் பெறும் நோக்கில் அவர்களுக்குப் பண உதவி அளிக்க சிறப்பு உதவித் தொகை நிதியத்தை அரசு உருவாக்கியது.

தமிழ்நாட்டில் உள்ள மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரிகளில் நுழைவுத் தேர்வின் மூலமாகத் தேர்ச்சி பெற்று சேர்ந்துள்ள முதலிடம்

பெற்ற அரசிதழ் பதிவுபெறாத காவல் பணியாளர்களின் பிள்ளைகளுக்குத் தலா ரூபாய் 40,000 வீதமும், இரண்டு முதல் ஒன்பது வரையிலான இடங்களைப் பெற்றவர்களுக்குத் தலா ரூபாய் 20,000 வீதமும், இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் இரண்டு இலட்சம் வழங்கப்படுகிறது.

### 4. கல்விப் பரிசுகள்

இப்பரிசுகள் மாவட்ட அளவில் உயர்நிலைப் பள்ளித் தேர்வில் முதலாம், இரண்டாம், மற்றும் மூன்றாம் இடம்பெற்ற காவல் துறையினரின் பிள்ளைகளுக்கு முறையே தலா ரூ.7,000, ரூ.5,000 மற்றும் ரூ.3,000 வீதம் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதேபோன்று, பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு தலா ரூ.6,000, ரூ.4,000, ரூ.2,000 வழங்கப்படுகிறது. இப்பரிசுகள் மாநில அரசு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யும் நிதியிலிருந்து வழங்கப்படுகின்றன.

### 5. காவல் துறை மருத்துவமனை

காவல் துறையினர்க்கும் அவர்தம் குடும்பத்தினர்க்கும் மருத்துவ உதவியளிக்க மாநிலத்தில் 12 காவல் துறை மருத்துவமனைகள் உள்ளன

### 6. காவல் பணியாளர்கள் உடல் நலப் பாதுகாப்பு நிதியம்

தமிழ்நாடு காவல் துறை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு ஏற்படும் பெரிய நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கவும் சிறப்பு அறுவை சிகிச்சை செய்துகொள்ளவும் நிதியுதவி அளிக்கும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு ஊழியரும் மாதந்தோறும் ரூ.15/– சந்தாவாகச் செலுத்தி வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் ஒரு கோடியை அரசு மானியமாக வழங்கி வருகிறது

### 7. கருணைத் தொகை

பணியின்போது வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு, இறக்க நேரிட்டாலோ அல்லது காயமடைந்தாலோ, இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மரணமடைந்தவர்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சமும், நிரந்தர ஊனமுற்றவர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சமும், பலத்த காயமடைந்தவர்களுக்கு ரூபாய் 20 ஆயிரமும் சாதாரண காயமடைந்தவர்களுக்கு ரூபாய் 10 ஆயிரமும் வழங்கப்படுகிறது சிறப்புப் பாதுகாப்புப் பிரிவு புலனாய்வுத் துறை, அதிரடிப் படை மற்றும்





அதிரடிப் படை பயிற்சிப் பள்ளி ஆகியவற்றில் பணியாற்றுபவர்கள், வீரதீரச் செயல்களின்போது உயிரிழந்தால் அந்தக் காவல் பணியாளர்களின் வாரிசுகளுக்கு அதிக அளவிலான கருணைத் தொகை வழங்கப்படுகிறது. இப்பிரிவுகள் காவல் துணைக் கண்காணிப்பாளர் நிலையில் உள்ளவர்கள் மரணமடைந்தால் அவர்களின் வாரிசுதாரருக்கு ரூபாய் பத்து இலட்சமும், காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான பதவியில் உள்ளவர்கள் உயிரிழந்தால் அவர்களது வாரிசுகளுக்கு ரூபாய் ஆறு இலட்சமும் வழங்கப்படுகிறது. நிரந்தர ஊனமுற்றால் ரூபாய் நான்கு இலட்சமும், உடல் உறுக்குலைவு ஏறபட்டால் ரூபாய் இரண்டு இலட்சமும் வழங்கப்படுகிறது. சிறப்பு இலக்குப் படையில் உள்ள அனைத்துப் பதவிகளையும் சார்ந்தவர்கள் வீரதீரச் செயல்களின்போது இறக்க நேரிட்டாலோ அல்லது ஊனமுற்றாலோ அவர்களுக்கு ரூபாய் 10 இலட்சம் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. வீரதீரச் செயல்களின்போது இறந்தவர்களின் குடும்பத்திற்கு இறந்தவர் கடைசியாகப் பெற்ற முழு ஊதியம் அவர் ஓய்வு பெறும் நாள் வரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

### 8. தமிழ்நாடு காவலர் காப்பீட்டுத் திட்டம்

1–4–1997 அன்று அமல்படுத்தப்பட்ட தமிழ்நாடு காப்பீட்டு விதியின்படி, காவல் பணியாளர்கள் பணியின்போது இறந்தாலோ அல்லது நிரந்தர காயமடைந்தாலோ, இத்திட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இதற்காக ஆண்டுதோறும் ரூபாய் 10 இலட்சத்தை நிதிநிலை அறிக்கையில் அரசு ஒதுக்கி வருகிறது.

### 9. மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், காவலர் முதல் ஆய்வாளர் பதவி வரை உள்ள காவல் பணியாளர்களுக்கு, அரிசி, சர்க்கரை, கோதுமை போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், பொது மக்களுக்கு வழங்கப்படும் விலையில் பாதி விலைக்கு வழங்கப்படுகிறது.

### 10. கருணை அடிப்படையிலான பணி நியமனம்

கருணை அடிப்படையில் நிரந்தரப் பணிக்கு நியமனம் செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை 10–7–2006 முதல் நீக்கப்பட்டது. இறந்த காவல் பணியாளர்களின் தகுதியுடைய வாரிசுகளுக்குத் தற்போது பணி நியமனம் கிடைக்கப்பெறும்.

[2006 ஆகஸ்ட் 29

## அத்தியாயம் – 8

## பெண் காவலர்கள்

சமுதாயத்தில் மகளிர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளைக் கையாளுவதில் காவலர்களுக்கு உதவும் நோக்கில், 1973 ஆம் ஆண்டு மகளிர் காவல் அணி தொடங்கப்பட்டது. கடந்த 30 ஆண்டுகளில் நிலைமை மாறி, தற்போது, சட்டம்-ஒழுங்கைப் பராமரித்தல், குற்றத் தடுப்பு மற்றும் கண்டுபிடிப்பு, போக்குவரத்து சீரமைத்தல் உள்ளிட்ட அனைத்து வகையான பணிகளையும் மேற்கொள்ளும்வகையில் காவல் துறையின் ஓர் அங்கமாகவே மகளிர் காவல் பிரிவு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

திருமணத்திற்குப் பிறகு கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், ஆண்களால் ஏற்படும் இன்னல்கள், பணிபுரியும் இடங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் போன்ற பெண்கள் சந்திக்கும் பலவகையான பிரச்சினைகளைக் கையாளுவதற்கேற்ப, மகளிர் காவலர்களைத் தயார் செய்யும்வகையில் ஆலோசனை தொடர்பான நுணுக்கங்கள் குறித்த சிறப்புப் பயிற்சிகள் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. மாநிலத்தில் தற்போது 196 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. பாதிக்கப்பட்ட பெண்கள் தங்கள் பிரச்சினைகளையும், குறைகளையும் வெளிப்படையாகி எடுத்துக் கூறுவதற்கு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்மூலம் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

பெண்களிடையே சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்களது குறைகளை அவர்களது இருப்பிடத்திற்கே சென்று தீர்த்து வைக்கவும், ஒவ்வொரு மாவட்டம் மற்றும் நகரத்திலும் நடமாடும் ஆலோசனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த மையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒலிபெருக்கி வசதிகள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, காணொலி பதிவுக் கருவி (VCR), தொலைத் தொடர்பு சாதனம் மற்றும் ஏ.சி. மின் உற்பத்திக் கருவி ஆகியவை பொருத்தப்பட்ட வேன் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 29]

## அத்தியாயம் – 9

## தமிழக காவல் துறையில் உள்ள சிறப்புப் பிரிவுகள்

### குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரின் தலைமையில் இயங்கிவரும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில், குற்றப் பிரிவு மற்றும் மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம் ஆகிய இரண்டு பிரிவுகள் உள்ளன.

### குற்றப் பிரிவு

குற்றப் பிரிவானது, 7 தனிப் பிரிவுகளுடனும், 34 உட்பிரிவுகளுடனும் இயங்கி வருகிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் திட்டமிட்டு நிகழ்த்தப்படும் குற்றங்களைத் தடுப்பதற்கான பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவுகள், குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் தலைமையகத்திலும், சென்னை மாநகரக் காவல் துறை ஆணையரகத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில், கள்ள நோட்டு தடுப்புப் பிரிவு ஒன்றும், விபச்சாரத் தடுப்புப் பிரிவு ஒன்றும் உள்ளன.

2005 ஆம் ஆண்டு குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, நீதிமன்ற நிலுவையில் உள்ள 469 வழக்குகளையும், விசாரணையில் உள்ள 73 வழக்குகளையும் கையாண்டுள்ளது. நீதிமன்ற நிலுவையிலுள்ள வழக்குகளில், 27 வழக்குகளில் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

### மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம்

1995 ஆம் ஆண்டு மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம் ஏற்படுத்தப்பட்டது. அண்மையில், காவல் துறைத் தலைவர் ஒருவரின் கட்டுப்பாட்டின்கீழ் இப்பிரிவு கொண்டு வரப்பட்டது. குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் தொடர்பான அனைத்துத் தகவல்கள் குறித்த தரவுகளைச் சேகரித்து, ஒருங்கிணைத்து, பகுப்பாய்வு செய்யும் மையமாக மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம் செயல்படுகிறது. காவல் கணினிப் பிரிவு, விரல் ரேகைப் பதிவுப் பிரிவு, புள்ளிவிவரப் பிரிவு மற்றும குற்றவாளிகள் குற்றம் செய்ய கையாளும் முறையைக் கண்காணிக்கும் பிரிவு ஆகியவை மாநிலக் குற்ற ஆவணக் காப்பகத்தின்கீழ் இயங்கும் பிரிவுகளாகும்.

[2006 ஆகஸ்ட் 29

மாநிலத்திலுள்ள குற்ற நிகழ்வுகள் குறித்த தகவல்களை, மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம், தேசிய குற்ற ஆவணக் காப்பகத்திற்கு அளிப்பதோடு, தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் சார்பில் குற்றம் மற்றும் குற்றத் தகவல் முறையை நடைமுறைப்படுத்துகிறது.

## குற்றப் பிரிவு

கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் இயங்கி வரும் குற்றப் பிரிவில் பின்வரும் பிரிவுகள் அடங்கியுள்ளன:—

(i) மத அடிப்படைவாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் புலன் விசாரணை செய்வதற்கும், வழக்கை நடத்துவதற்கும் தனியாக **சிறப்புப் புலனாய்வுப் பிரிவு** உருவாக்கப்பட்டது. இப்பிரிவு காவல் துறைத் தலைவரின்கீழ் இயங்கி வருகிறது.

கடந்த எட்டு ஆண்டுகளில் தீவிரவாத நடவடிக்கைகள் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு, அவர்களின் அச்சுறுத்தல்கள் பெருமளவில் முறியடிக்கப்பட்டன. கோவை தொடர் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தொடர்புடைய எதிரிகள், அல் உம்மா, இஸ்லாமிய பாதுகாப்புப் படை, அகில இந்திய ஜிகாத் கமிட்டி மற்றும் பிற இயக்கங்களைச் சார்ந்த 240 தீவிரவாதத் தன்மைகொண்ட அடிப்படைவாதிகள் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

**(ii) போதைப் பொருள் கடத்தல் நுண்ணறிவுப் பிரிவு,** ஒரு காவல் கண்காணிப்பாளர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இப்பிரிவிற்கு 15 அலகுகள் உள்ளன. இப்பிரிவு, போதைப்பொருள் கடத்தல் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரிப்பதுடன், போதை மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டத்தை மாநிலத்தில் அமல்படுத்தி வருகிறது.

**(iii) வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு,** காவல் கண்காணிப்பாளர் ஒருவரது தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இப்பிரிவிற்கு 12 அலகுகள் உள்ளன. பதிப்புரிமைச் சட்டம், தமிழ்நாடு காணொலிப் பேழை பதிவுக் கருவிகள் மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பு அமைவு மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்களைக் காட்டுதல் சட்டம் ஆகியவற்றின் விதிகளை மீறுவோர்மீது நடவடிக்கை எடுத்து, தண்டனை பெற்றுத் தரும் பணியினை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.



2006 ஆகஸ்ட் 29]

**(iv) கூட்டுக் கொள்ளை தடுப்புப் பிரிவு,** காவல் கண்காணிப்பாளர் தலைமையில் இயங்கி வருகிறது. மாநிலத்திற்குள்ளும், மாநிலங்களுக்கிடையேயும் செயல்படும் குற்றவாளிகள் மற்றும் அவர்களது நடவடிக்கைகள் குறித்த தகவல்களை இப்பிரிவு சேகரித்து வருகிறது. உயர் நீதிமன்றம் மற்றும் அரசின் உத்தரவுகள்பேரிலும், காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களது ஆணையின்பேரிலும் ஒப்படைக்கப்படும் முக்கியமான வழக்குகளை இப்பிரிவு புலன் விசாரணை செய்து வருகிறது.

## பொருளாதார குற்றத் தடுப்புப் பிரிவு

1997 ஆம் ஆண்டில், தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு வைப்புதாரர்கள் நலன் பாதுகாப்பு (நிதி நிறுவனங்களின்) சட்டத்திற்குச் செயல்வடிவம் அளிக்கும் முகத்தான், பொருளாதார குற்றத் தடுப்புப் பிரிவு அமைக்கப்பட்டது. பொதுவாக இச்சட்டம் "தான்பிட்" சட்டம் எனப்படும். கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையில் செயல்படும் இப்பிரிவில் பின்வரும் அலகுகள் உள்ளன.

### (i) நிதி நிறுவனங்கள் பிரிவு

பொருளாதார குற்றங்கள் பிரிவு 2000 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இப்பிரிவு வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் தொடர்பான மோசடி வழக்குகளை விசாரணை செய்கிறது. பல வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படுவதிலும் முதலீடு செய்தவர்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் திரும்பக் கிடைக்கச் செய்வதிலும் இப்பிரிவு வெற்றி கண்டுள்ளது. 18.26 கோடி ரூபாய் தொடர்புடைய இத்தகைய வழக்குகளில் இன்றுவரையில் 7.64 கோடி ரூபாய் கைப்பற்றப்பட்டு, முதலீடு செய்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### (ii) வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு நிலையங்களில் நடக்கும் நிதி மோசடிகளை விசாரணை செய்ய, 1971 ஆம் ஆண்டில் வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு அமைக்கப்பட்டது. ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட நிதி கையாடல் வழக்குகளை இப்பிரிவு புலனாய்வு செய்கிறது. வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவின் காவல் கண்காணிப்பாளருக்கு உதவியாக சென்னை, விழுப்புரம், சேலம்,

[2006 ஆகஸ்ட் 29

தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய 7 இடங்களில் தலா ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர் உள்ளார். இப்பிரிவின்கீழ் 32 மாவட்ட அலகுகள் உள்ளன. இப்பிரிவு புலனாய்வு செய்த வழக்குகளை விசாரணை செய்வதற்கென வேலூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூரில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

### (iii) சிலை திருட்டு தடுப்புப் பிரிவு

ரூபாய் 5 இலட்சத்திற்குமேல் மதிப்புடைய, தொன்மை வாய்ந்த சிலை திருட்டு வழக்குகளையும், காவல் துறைத் தலைமை இயக்குநர் அவர்களால் ஒப்படைக்கப்படும் சிலை திருட்டு வழக்குகளையும் இப்பிரிவு புலனாய்வு செய்கிறது. மாவட்ட மற்றும் மாநிலக் காவல் துறையால் கையாளப்படும் முக்கியமான சிலை திருட்டு வழக்குகளின் புலன் விசாரணைப் பணிகளை ஒருங்கிணைத்து, மேற்பார்வையிடுவதுடன், தொன்மைவாய்ந்த கலைப் பொருள் வணிகர்களின் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள்பற்றிய உளவுத் தகவல்களை சேகரிப்பதும் இப்பிரிவின் முக்கியப் பணியாகும்.

## சிறப்பு செயல்பாடுகள் பிரிவு

கூடுதல் காவல் துறை இயக்குநர் ஒருவரது தலைமையின்கீழ் இப்பிரிவு உள்ளது. இப்பிரிவில், தமிழ்நாடு அதிரடிப் படை மற்றும் தமிழ்நாடு அதிரடிப் படைப் பயிற்சிப் பள்ளி ஆகியவை உள்ளன. 24—1—1997 நாளிட்ட அரசாணை, பல்வகை எண் 102, உள் துறை (காவல் 12)—ன்படி, இவ்வலகுகள் 24—1—1997 அன்று அமைக்கப்பட்டன.

### (i) தமிழ்நாடு அதிரடிப் படை

தடா, பொடா மற்றும் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் குற்றவாளிகளின் வழித்துணைப் பாதுகாப்புப் பணி, மிக முக்கியமானோர்க்குப் பாதுகாப்பு அளிக்கும் பணி, முக்கிய நிகழ்ச்சிகளின்போது இதர பாதுகாப்புப் பணி ஆகியவற்றை மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு அதிரடிப் படை உருவாக்கப்பட்டது. சட்டம்-ஒழுங்கு, மீட்புப் பணி, வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்தல், தேர்தல் பாதுகாப்பு போன்ற பல்வேறு பணிகளையும் இப்படையினர் செய்து வருகின்றனர்.



2006 ஆகஸ்ட் 29]

### (ii) தமிழ்நாடு அதிரடிப் படை பயிற்சிப் பள்ளி

அதிரடிப் படையின் வீரராகச் செயல்படத் தேவைப்படும் பயிற்சிகளை இப்பள்ளி அளிக்கிறது. நவீன ஆயுதங்களைக் கையாளுவதற்கும், வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து, செயலிழக்கச் செய்யும் நுணுக்கத்திற்கும் தேவையான பயிற்சிகளை இப்பள்ளி அளிக்கிறது. ஸ்னைப்பர் வகை துப்பாக்கிச் சுடுதல், வனப் பகுதியில் தங்கியிருத்தல் ஆகியவற்றிற்கும், நவீன ஆயுதங்கள் மற்றும் சதிச் செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகள் போன்றவற்றைத் திறமையாகக் கையாளுவதற்கும் தேவையான சிறப்புப் பயிற்சிகளை இப்பள்ளி அளிக்கிறது.

### (iii) வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் படை

வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்யும் படை 1991 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. திறமை வாய்ந்த நிபுணர்களைக் கொண்ட தமிழ்நாடு அதிரடிப் படை பள்ளியின் சிறப்பு அங்கமான இப்பிரிவு, சாதுர்யமான தொழில்நுட்பத்தால் வெடிகுண்டுகளை விரைந்து கண்டுபிடித்து, அவற்றைச் செயலிழக்கச் செய்யும் பணியை மேற்கொண்டு வருகிறது.

## நுண்ணறிவுப் பிரிவு

கூடுதல் காவல் துறை இயக்குநரின் தலைமையின்கீழ் இயங்கிவரும் நுண்ணறிவுப் பிரிவானது, முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்பு தொடர்பான தகவல்களை அளிப்பதுடன், நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, ஒப்பாய்வு செய்து, உரியவர்களுக்கு அனுப்பும் பணியை ஆற்றி வருகிறது. இப்பிரிவில், தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, க்யூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் சிறப்புப் பிரிவு ஆகியன உள்ளன.

### (i) தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

இத்துறையானது, மாநிலத்தில் மத வேறுபாடுகள மற்றும் சாதிப் பிரச்சினைகளால் ஏற்படும் பதற்ற நிலை மற்றும் பிற சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் குறித்த நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்து, ஒப்பாய்வு செய்து, உரியவர்களுக்கு அனுப்பும் பணியை ஆற்றி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும்/ஆணையரகத்திலும் ஆய்வாளர் ஒருவரின் தலைமையின்கீழ் இத்துறையின் ஒரு பிரிவு இயங்கி வருகிறது.

[2006 ஆகஸ்ட் 29

### (ii) க்யூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

1967–1970 ஆம் ஆண்டுகளில், தமிழ்நாட்டில் நக்சலைட்டுகளின் நடவடிக்கைகள் தலைதூக்கியபோது, காவல் கண்காணிப்பாளர் உட்பட கூடுதல் பணியாளர்கள் கொண்ட தனி அலகு ஒன்று, தனிப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் 1971 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு, ஜூலை மாதத்தில், இவ்வலகின் பெயர் "க்யூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை" என மாற்றப்பட்டு, தற்போது, நக்சலைட்டுகளின் நடவடிக்கைகளை இது கவனித்து வருகிறது.

### (iii) பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

அயல்நாட்டுத் தலைவர்கள் உட்பட, முக்கிய பிரமுகர்கள்/மிக முக்கிய பிரமுகர்கள் ஆகியோரது பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், வெளிநாட்டவரின் நடவடிக்கைகள், முக்கிய கேந்திர அமைப்புகள், பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் பாஸ்போர்ட் தொடர்பான நடவடிக்கைகளையும் இப்பிரிவு கையாண்டு வருகிறது.

பாதுகாப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையிலுள்ள மிக முக்கியமானோரின் பாதுகாப்புப் பிரிவில், அருகிலிருந்து பாதுகாக்கும் குழு, வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் படை, மோட்டார் வாகனப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு, மோப்ப நாய் படை மற்றும் பெண்கள் அணி ஆகியன அடங்கியுள்ளன.

### (iv) சிறப்புப் பிரிவு

கோவை தொடர் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, மத அடிப்படைவாதிகள் தொடர்பான நடவடிக்கைகளைக் கையாளுவதற்காக, சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டது. சென்னை, வேலூர், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இந்தச் சிறப்புப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. காவல் துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் தலைமையில் அவருக்கு உதவியாக மூன்று காவல் ஆய்வாளர்களுடன் ஒவ்வோர் அலகும் செயல்படுகின்றது.

### (v) காவல் சுருக்கெழுத்துத் துறை

காவல் சுருக்கெழுத்துத் துறைக்கு அனைத்து மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் கிளைகள் உள்ளன. பொதுக் கூட்டப் பேச்சுக்களை



2006 ஆகஸ்ட் 29]

முழுமையாகக் குறிப்பெடுப்பதும், அவதூறான பேச்சுக்களைக் கண்காணிப்பதும் இத்துறையின் பணியாகும். இது தவிர, குற்றப் புலனாய்வுத் துறையின் மாநிலக் குற்றப் பிரிவு, க்யூ பிரிவு, சிறப்புப் பிரிவு, தமிழ்நாடு சட்டமன்றம் மற்றும் பொதுத் துறை (அதிமந்தணம்) தொடர்பான முக்கிய ஆவணங்களை மொழியாக்கம் செய்யும் பணி இப்பிரிவிடம் ஒப்படைக்கப்படுகிறது. இப்பிரிவில், தலைமை அறிக்கையாளர், முதுநிலை அறிக்கையாளர்கள், இளநிலை அறிக்கையாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் உள்ளனர்.

## தொழில்நுட்பப் பிரிவு

தமிழ்நாடு காவல் துறைக்குத் தொலைத் தொடர்பு கட்டமைப்பு வசதிகளைத் தொழில்நுட்பப் பிரிவு அமைத்துக் கொடுக்கிறது. இப்பிரிவு காவல் துறைத் தலைவர் ஒருவரது தலைமையில் இயங்கி வருகிறது. தற்போது அனைத்து மாவட்டங்களிலும், மாநகரங்களிலும், காவல் நிலையங்களுக்கிடையே தகவல் பரிமாற்றம் செய்துகொள்ளும்வகையில், மிக உயரலை உயர் வேக தொலைத் தொடர்பு சாதன வசதிகள் உள்ளன. சிறப்பான தகவல் பரிமாற்றத்திற்கென 41 மறு அஞ்சல் அமைப்பு இடங்களில் 117 மிக உயரலை உயர் வேக தொலைத் தொடர்பு சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் நுண்ணலைத் தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது. மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் உட்பட பல அதிகாரிகளுக்கு வீடியோமூலம் கலந்துரையாடும் வசதி செய்து தரப்பட்டுள்ளது. மாநிலத்தில் விரிபரப்பு இணையத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, மாநிலத்திலுள்ள பல்வேறு அலகுகளுக்குள் தரவுகள் பரிமாற்றம் செய்துகொள்ளப் பயன்படுத்தப்படுகிறது. சென்னை மாநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள காவல் நிலையங்களிடையே ஒலி மற்றும் தரவுகளை இணைப்பதற்காக வலைதளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒரு வினாடிக்கு 70 கிலோ பைட் தரவுகள் பரிமாற்றம் செய்யப்பட வாய்ப்புகள் உள்ளன.

## சிறப்பு இலக்குப் படை

ஆட்கடத்தல், ஆயுதமேந்திய போராட்டம், உள்நாட்டுக் கலகம், பயங்கரவாத நடவடிக்கைகள், பணத்திற்காக மிக முக்கியமானோரைக் கடத்துதல் போன்றவற்றைத் தடுப்பதற்காகச் சிறப்பு இலக்குப் படை உருவாக்கப்பட்டுள்ளது. மிகப் பெரிய இயற்கைச் சீற்றங்கள், இரயில் விபத்துகள் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் போன்றவற்றின்போது

[2006 ஆகஸ்ட் 29

உள்ளூர் காவல் துறையினருக்கு சிறப்பு இலக்குப் படையினர் உதவி செய்து வருகின்றனர்.

## சமூக நீதி

சமூக நீதிப் பிரிவை, காவல் துறை துணைத் தலைவர் ஒருவர் தலைமையேற்று நடத்தி வருகிறார். இப்பிரிவிற்கு மாநிலம் முழுவதும் 35 அலகுகள் உள்ளன. 1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்ட விதிகளையும், 1989 ஆம் ஆண்டு பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டத்தின் பிரிவுகளையும் நடைமுறைப்படுத்துவதை இப்பிரிவு கண்காணித்து வருகிறது. பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, அத்தகைய வன்கொடுமைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை இப்பிரிவு செய்து வருகிறது. பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் ஆகியோரைப் பாதிக்கும் மோதல்களில் தீர்வு காண்பதில் இப்பிரிவு முக்கியப் பங்காற்றி வருகிறது.

## காவல் பயிற்சிக் கல்லூரி

காவல் அமைப்பில் பயிற்சி என்பது ஒரு முக்கிய நடவடிக்கையாகும். காவல் துறையினர் சீரிய முறையில் செயல்படுவதற்குத் தேவையான திறமை, பயிற்சியின் மூலமாகவே அளிக்கப்படுகிறது. தமிழகக் காவல் துறையிலுள்ள பயிற்சிப் பிரிவிற்கு காவல் துறை இயக்குநர் ஒருவர் தலைமை வகிக்கிறார். கூடுதல் காவல் துறை இயக்குநர், காவல் துறைத் தலைவர், காவல் துறை துணைத் தலைவர், காவல் கண்காணிப்பாளர் மற்றும் இதர பயிற்றுநர்கள், திட்டமிடுதலிலும், பல்வேறு வகையான பயிற்சிகளை அளிப்பதிலும் காவல் துறை இயக்குநருக்கு உதவி புரிகின்றனர். காவல் பயிற்சிக் கல்லூரி, காவல் துறையின் முக்கிய பயிற்சி மையமாக விளங்குவதோடு, அங்கு காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் அதற்குக்கீழ் பதவியிலுள்ள அதிகாரிகளுக்கு அடிப்படைப் பயிற்சியும், பணியிடைப் பயிற்சியும் வழங்கப்படுகின்றன. பயிற்சியாளர்களுக்கு சிறப்புப் பாடத் திட்டங்களுக்கான வகுப்புகளையும், பயிலரங்குகளையும், பயிற்சிகளையும் நடத்துவதோடு, பல்வேறு கருத்தரங்குகளையும் காவல் பயிற்சிக் கல்லூரி நடத்துகிறது. காவல் பயிற்சிக் கல்லூரி தவிர, வேலூர், கோயம்புத்தூர் மற்றும் பேரூரணி (தூத்துக்குடி மாவட்டம்) ஆகிய இடங்களில் காவலர் பயிற்சிப் பள்ளிகளும், சென்னை மாநகரம், செங்கல்பட்டு, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், சேலம், மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய சரக தலைநகரங்களில் பணியிடைப் பயிற்சி மையங்களும் காவல் துறையால் நடத்தப்படுகின்றன.



2006 ஆகஸ்ட் 29]

2005 ஆம் ஆண்டில், 56—வது அணியைச் சேர்ந்த நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதிகாண் பருவத்திலுள்ள 5 இந்திய காவல பணி அதிகாரிகளுக்கும், 57—வது அணியைச் சேர்ந்த நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தகுதிகாண் பருவத்திலுள்ள 4 இந்திய காவல் பணி அதிகாரிகளுக்கும், பணிசார் பயிற்சி அளிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 காவல் துணைக் கண்காணிப்பாளர்களும், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 984 பெண் உதவி ஆய்வாளர்களும் ஓராண்டு அடிப்படைப் பயிற்சியையும், 16 தொழில்நுட்ப உதவி ஆய்வாளர்கள் ஆறு மாத அடிப்படைப் பயிற்சியையும் பெற்றுள்ளனர். 4,080 ஆண் மற்றும் பெண் காவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. பதவி உயர்வுக்கு முந்தைய பல்வேறு பயிற்சிகள், சிறப்புப் பாடத்திட்ட வகுப்புகள், பணியிடைப் பயிற்சி வகுப்புகள் மற்றும் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் ஆகியன நடத்தப்பட்டுள்ளன.

## தமிழ்நாடு காவல் பயிற்சிக் கழகம்

அனைத்து நவீன கட்டமைப்பு வசதிகளோடுகூடிய காவல் பயிற்சிக் கழகம் வண்டலூர் அருகே உள்ள ஊனமாஞ்சேரி கிராமத்தில் ரூபாய் 48 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

காவல் பயிற்சிக் கழகம் அமைக்கப்படுவதற்கான பணிகளைக் கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவியில் உள்ள ஒரு திட்ட அலுவலர் கவனித்து வருகிறார்.

## தமிழ்நாடு சிறப்புக் காவல் படை

ஒரு காவல் துறைத் தலைவர் கட்டுப்பாட்டில், ரெஜிமென்ட்டல் மையம் மற்றும் ஒரு சிறப்புப் படை அணி உள்ளிட்ட 15 சிறப்புக் காவல் அணிகள் இயங்கி வருகின்றன. ஆவடி மற்றும் திருச்சியில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை கட்டுப்பாட்டின்கீழ் இரண்டு காவல் போக்குவரத்துப் பணிமனைகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் எட்டாம் அணி, புதுதில்லியிலுள்ள திகார்

[2006 ஆகஸ்ட் 29

சிறைச்சாலையில் அயற்பணியில் உள்ளது. தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகள், மாவட்டக் காவல் துறையினரால் சமாளிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும்போது பயன்படுத்தப்படுகின்றன. முக்கிய சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள், முக்கிய கோவில் திருவிழாக்கள் மற்றும் அரசியல் பேரணிகளின்போது, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். அதுமட்டுமல்லாமல், சிறப்பு இலக்குப் படை, கடலோரப் பாதுகாப்புப் படை, சிறைச்சாலைப் பணிகள், சிறப்பு அகதிகள் முகாம்கள் மற்றும் காவல் துறை தலைமை அலுவலகப் பாதுகாப்புப் பணி போன்றவற்றிலும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் பணி, பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. மேலும், மாநிலத்தில் நடைபெறும் முக்கிய அரசுசார் நிகழ்ச்சிகளுக்குப் பெருமை சேர்க்கும்விதமாக தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் அணிகள் பங்கேற்கின்றன.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, பிற மாநிலங்களின் தேர்தல் பணிகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. வெள்ளம் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் நிகழும்போது, மீட்புப் பணிகளிலும் நிவாரணப் பணிகளிலும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை வீரர்களும் அதிகாரிகளும் முக்கியப் பங்காற்றுகின்றனர். 2006 மே திங்களில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான தேர்தலின்போது தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, பாராட்டத்தக்க வகையில் பணிபுரிந்துள்ளது. தானியங்கி பணப் பட்டுவாடா இயந்திரம் மூலமாக பல காவல் அணிகளுக்குச் சம்பளம் வழங்கப்படும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், குறித்த நேரத்தில் சம்பளம் வழங்கப்படுவதோடு, சிறப்புத் தூதுவர்கள்மூலமாகச் சம்பளம் வழங்க ஏற்படும் செலவும் மிச்சப்படுத்தப்படுகிறது.

## கடலோரக் காவல் படை

ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் கடலோரக் காவல் படை இயங்கி வருகிறது. தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு எரிபொருட்கள், மருந்து மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்கள் கடல்மூலமாக கடத்தப்படுவதைத் தடுக்கவும், தமிழ்நாட்டிற்குள் போராளிகள் ஊடுருவுவதைத் தடுக்கவும், மீனவர்கள் மற்றும் போராளிகளுக்கிடையே தொடர்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை முன்கூட்டியே கண்டறியவும், இப்படை உருவாக்கப்பட்டது. கடற்கரையோரம் ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவைப் பாதுகாக்க



2006 ஆகஸ்ட் 29]

60 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. கடலோரப் பாதுகாப்பு குறித்த நுண்ணறிவுத் தகவல்களைப் பெறும் வகையில் கடலோரக் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள 441 கிராம கண்காணிப்புக் குழுக்கள், கடற்படை, கடலோரப் பாதுகாப்புப் படை, உள்ளூர் காவல் துறை, மீன்வளத் துறை, சுங்கத் துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளோடு கடலோரக் காவல் படையினர் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர்.

கடலோரக் காவல் படையை பலப்படுத்துவதற்காக 12 கடல்சார் காவல் நிலையங்கள், 12 கடல்சார் புறக்காவல் நிலையங்கள், 40 கூடுதல் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன.

## மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிற்கு, ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைவராக இருக்கிறார். ஓர் ஆய்வாளர் தலைமையில் 94 அலகுகள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டுக்குள் கள்ளச்சாராயம் காய்ச்சுவதைத் தடுக்கவும், அண்டை மாநிலங்களிலிருந்து சட்டவிரோதமாக மது கொண்டுவரப்படுவதைத் தடுக்கவும் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது. எரிசாராயத்தை மதுவாகக் குடிப்பதைத் தடுக்கும் பணியையும் இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## இரயில்வே காவல் படை

1932 ஆம் ஆண்டில், திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு இரயில்வே காவல் படை அமைக்கப்பட்டது. பின்னர், 1981 ஆம் ஆண்டு, ஏற்கெனவே இருந்த இரயில்வே காவல் படையை இரண்டாகப் பிரித்து, சென்னையில் இரயில்வே காவல் படை அமைக்கப்பட்டது. இப்படை காவல் துறைத் தலைவர் ஒருவரது தலைமையின்கீழ், 32 இரயில்வே காவல் நிலையங்கள், 25 புறக் காவல் நிலையங்கள் மற்றும் 3 நடமாடும் காவல் நிலையங்களுடன் இயங்கி வருகிறது. இரயில்களிலும், இருப்புப் பாதை நடைமேடைகளிலும் நிகழும் குற்றங்களைத் தடுப்பது, விசாரிப்பது, இரயில்வே சொத்துக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது போன்ற பணிகளை இரயில்வே காவல் படை கவனித்து வருகிறது. அதற்காக, இப்படையானது இரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் உள்ளூர் காவல் துறையினரோடு ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

[2006 ஆகஸ்ட் 29

இரயில்வே காவல் படை, 5,525 கி.மீ. நீளத்திற்குப் பரந்து விரிந்துள்ள இரயில் பாதைகளைப் பாதுகாக்கிறது. இம்மாநில இரயில் போக்குவரத்து முழுவதிலும் கொலை, கொள்ளை, கற்பழிப்புப் போன்ற குற்றங்கள் எதுவும் நிகழாமல் சிறந்த முறையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## மோப்ப நாய்ப் படைப் பிரிவு

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் மோப்ப நாய்ப் படைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், சிறப்பு இலக்குப் படை, இரயில்வே காவல் படை, அதிரடிப் படை ஆகிய சிறப்புப் பிரிவுகளிலும், மோப்ப நாய்ப் படை உள்ளது. மாநிலத்தில் தடத்தைப் பின்பற்றிச் செல்லும் 86 மோப்ப நாய்களும், வெடிமருந்துப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் 86 மோப்ப நாய்களும், நான்கு மீட்பு நாய்களும், போதைப் பொருள் கண்டறியும் 9 மோப்ப நாய்களும் உள்ளன.

## குதிரைப் படைப் பிரிவு

தமிழக குதிரைப் படைப் பிரிவில் 47 குதிரைகள் உள்ளன. சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சி ஆகிய மாநகரங்களில் இப்பிரிவு இயங்கி வருகிறது. நெரிசலைக் கட்டுப்படுத்த குதிரைப் படை பயன்படுத்தப்படுகிறது. குடியரசு தினம், சுதந்திர தினம், பதக்கம் வழங்கும் விழா போன்ற சிறப்புக்கால அணிவகுப்புகளிலும் குதிரைப் படை பங்கேற்கிறது.

## தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்

1991 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு காவல் துறையின் உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்களைத் தேர்வு செய்கிறது. இது தவிர, தீயணைப்பு வீரர்கள் மற்றும் இரண்டாம் நிலை சிறைத் துறை காவலர்களையும் இவ்வாரியம் தேர்வு செய்கிறது. நேர்மையான, ஒளிவுமறைவற்ற, வெளிப்படையான முறையில் தேர்வு நடைபெறுவதை வாரியம் உறுதி செய்து கொள்கிறது.

634 ஆண் உதவி ஆய்வாளர்களையும், 102 பெண் உதவி ஆய்வாளர்களையும் தேர்வு செய்ய 19–6–2006 அன்று ஆணை வழங்கப்பட்டது.



2006 ஆகஸ்ட் 29]

## ஊர்க் காவல் படை

குடிமக்கள் தங்களது சமுதாயத்தைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்கிற குறிக்கோளின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள ஊர்க் காவல் படை என்பது ஒரு தன்னார்வ சேவை அமைப்பாகும். பல்வேறு பிரிவு மக்களை உள்ளடக்கிய ஊர்க் காவல் படையின் உறுப்பினர்கள் போக்குவரத்தை முறைப்படுத்துதல், கோவில் திருவிழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளில் கூட்டத்தை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றில் காவல் துறையினருக்கு உதவியாகச் செயல்படுகின்றனர். தமிழ்நாடு ஊர்க் காவல் படைக்குக் கூடுதல் காவல் துறைத் தலைவர் ஒருவர் தலைமை வகிக்கிறார். மாநில அளவில் காவல் துறை இயக்குநர் அவர்கள் பதவி வழியால் இப்படையின் தலைமைத் தளவாயாகவும், மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களும் மற்றும் மாநகர அளவில் காவல் ஆணையாளர்களும் அந்தந்த அலகுகளுக்குத் தளவாய்களாகவும் செயல்படுகிறார்கள்.

தமிழ்நாடு ஊர்க் காவல் படையில் உள்ளவர்களின் தற்போதைய எண்ணிக்கை 2,750 பெண்கள் உட்பட மொத்தம் 11,605 ஆகும்.

## குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவு

குடிமைப்பொருள் புலனாய்வுப் பிரிவானது ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் செயல்படுகிறது. இப்பிரிவு அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தையும், மத்திய, மாநில அரசுகளால் பிறப்பிக்கப்படும் பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. மாநிலம் முழுவதிலும் 16 அலகுகள் இப்பிரிவில் உள்ளன.

## மாநிலப் போக்குவரத்துத் திட்டமிடல் பிரிவு

மாநிலப் போக்குவரத்துத் திட்டமிடல் பிரிவானது, ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநரின் தலைமையில் செயல்படுகிறது. காவல் துறை இயக்குநர் அவர்களது நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் இப்பிரிவு, சாலைப் பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சினைகளை ஆராய்கிறது. சாலை விபத்து குறித்த புள்ளிவிவரங்களைச் சேகரித்தல், ஒருங்கிணைத்தல், ஆய்வு செய்தல், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து சாலைப் பாதுகாப்பைத் திட்டமிடல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை இப்பிரிவு செய்து வருகிறது.

நெடுஞ்சாலை ரோந்துப் பணிகளையும் இப்பிரிவு மேற்பார்வையிடுகிறது. தற்சமயம் தேசிய நெடுஞ்சாலையில் 80 சாலைப் பிரிவுகளில் ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சாலைப் பாதுகாப்பு மற்றும் விபத்துத் தடுப்பு ஆகியவற்றிற்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. இப்பிரிவின் செயல்பாடுகளை மாற்றியமைத்து செம்மைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.





## அத்தியாயம் — 10

## காவல் துறை வாகன வசதி

காவல் துறை பணியில் விரைந்து சம்பவ இடங்களைச் சென்றடைதல் மிக அவசியமான ஒன்றாகும். குற்றம் நிகழ்ந்த இடத்திற்கு காவல் துறையினர் தக்க நேரத்திற்குச் சென்றால், சிறிய சம்பவங்கள் காட்டுத் தீ போல பரவாமல் தடுக்க இயலும். காவல் துறையில் இடம்பெயர்வாற்றலுக்கு, தமிழக அரசு உயர் முன்னுரிமை அளிக்கிறது.

31–5–2006 அன்றைய நிலவரப்படி, தமிழ்நாடு காவல் துறையில் 10,974 வாகனங்கள் உள்ளன.

பின்வரும் வரைபடத்தில் வாகனங்களின் எண்ணிக்கை வகைவாரியாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது:



[2006 ஆகஸ்ட் 29

| | |
|---|---|
| கனரக வாகனங்கள் | பேருந்து/லாரி |
| இலகுரக வாகனங்கள் | கார், டாடா சுமோ, மற்றும் ஸ்பேசியோ/போலேரோ/ டோயோடோ குவாலீஸ், ஜீப் |
| மிகரக வாகனங்கள் | மினி பேருந்து, வேன் |
| இருசக்கர வாகனங்கள் | மொபெட்/மோட்டார் சைக்கிள் |
| இதர வாகனங்கள் | வஜ்ரா/க்ரேன்/கைதி பாதுகாப்பு வாகனம்/ தண்ணீர் வீசியடிக்கும் வாகனம்/ஆம்புலன்ஸ் |



2006 ஆகஸ்ட் 29]

## அத்தியாயம் – 11

## காவலர் வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள்

காவல் துறை கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளின் கட்டுமானம் மற்றும் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் சிறப்புப் பணிகள் அனைத்தையும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் கவனித்து வருகிறது.

போதிய அளவில் குடியிருப்பு வசதியின்றி தவிப்புக்குள்ளாகும் காவல் பணியாளர்களின் சிரமங்களைக் கருத்திற்கொண்டு, ஒவ்வோர் ஆண்டும் ஆயிரம் குடியிருப்புகளைத் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் கட்டித் தர வேண்டுமென்று அரசு இலக்கு நிர்ணயித்தது. 1998 ஆம் ஆண்டு முதல், ஆண்டுக்கு 2,500 குடியிருப்புகள் கட்டப்பட வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டு முதல், 3,000 குடியிருப்புகள் கட்டப்பட வேண்டுமென்று அந்த இலக்கு மேலும் உயர்த்தப்பட்டது. இதுவரையில் 20,230 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

### காவலர் குடியிருப்புகள்

**31–05–2006 அன்றைய நிலவரப்படி, குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டுள்ள காவலர்களின் எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| ஒப்பளிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | – | 98,897 |
| குடியிருப்பு ஒதுக்கீடு | – | 42,016 |



[2006 ஆகஸ்ட் 29

தமிழ்நாட்டில், தற்போது 98,897 காவல் பணியாளர்களுக்கு, 42,016 குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 5,373 காவலர் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. இந்த 5,373 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்பு, குடியிருப்புகளில் உள்ள காவல் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 47,389 ஆக இருக்கும். காவல் குடியிருப்பு வசதி 42.48 விழுக்காட்டிலிருந்து 47.91 விழுக்காடாக உயரும்.

## காவல் துறைக் கட்டடங்கள்

2004 முதல் 2006 வரை, 73 காவல் நிலையங்கள், 5 மாவட்டக் காவல் அலுவலகங்கள், ஓர் ஆயுதப் படைப் பிரிவு வளாகம், 2 நவீன காவல் கட்டுப்பாட்டறைகள், 9 பணியிடைப் பயிற்சி மையங்கள், ஓய்வு அறைகள் மற்றும் மோப்ப நாய் பராமரிப்புக் கட்டடம் ஆகியவை ரூ. 3,103.17 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ரூபாய் 680.44 இலட்சம் செலவில், 37 காவல் நிலையங்கள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் கட்டுமானத்தில் உள்ளன.

### காவல் நிலையங்கள்

### 31-5-2006 நிலவரம்

**மொத்த காவல் நிலையங்கள்** – **1,419 (196 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உட்பட)**






5 ஆகஸ்ட் 29]

அதேபோன்று, ரூபாய் 5,004.69 இலட்சம் செலவில், திருநெல்வேலி, ரம்பலூர், நாமக்கல், கரூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஐந்து பட்டங்களில் காவல் அலுவலகங்கள், போச்சம்பள்ளியில், தமிழ்நாடு பபுக் காவல் படை 7–வது அணியின் அலுவலகம், 4 மண்டல காவல் ற தலைவர் அலுவலகங்கள் மற்றும் இதர காவல் கட்டடங்கள் ட்டப்பட்டு வருகின்றன.

ரு.2,953.87 இலட்சம் செலவில், அரசால் அங்கீகாரம் ங்கப்பட்டுள்ள 18 திட்டப் பணிகள் விரைவில் த்துக்கொள்ளப்படும்.

### லோரப் பாதுகாப்புத் திட்டம் (கட்டுமானம்) 2005–2006

கடலோரப் பாதுகாப்புப் பிரிவிற்கென, ரூபாய் 6.18 கோடி செலவில், டல்சார் காவல் நிலையங்கள், 12 புறக்காவல் நிலையங்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் கட்டுவதற்கு அரசு இசைவளித்துள்ளது.

[2006 ஆகஸ்ட் 29

## அத்தியாயம் – 12

## அகில இந்திய காவல் பணித் திறன் போட்டிகள்

அகில இந்திய காவல் பணித் திறன் போட்டிகள் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுகின்றன. அவற்றில் தமிழ்நாடு காவல் துறை சிறப்பாக விளையாடி வெற்றிகளைக் குவிக்கிறது. குறிப்பாக, தமிழ்நாடு காவல் துறை அணிகள், துப்பாக்கிச் சுடும் போட்டி, படகுப் போட்டி மற்றும் தடகளப் போட்டி போன்றவற்றில் மிகச் சிறந்த சாதனைகளைப் படைக்கின்றன. அது போலவே, தமிழ்நாடு காவல் இசைக் குழு, தனது திறமைகள்மூலம் பல பெருமைகளை ஈட்டியுள்ளது.

இந்த நிதி ஆண்டில், 50–வது அகில இந்திய காவல் பணித் திறன் போட்டிகளைத் தமிழகத்தில் நடத்திட கருத்துரு உள்ளது.



2006 ஆகஸ்ட் 29]

## அத்தியாயம் – 13

## தடய அறிவியல் துறை

தடய அறிவியல் துறையானது, இயக்குநர் ஒருவரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. 1849 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இப்பிரிவில் 230 தடய அறிவியல் பணியாளர்களும், 206 இதர பணியாளர்களும் உள்ளனர். வழக்கு புலன் விசாரணையில், இத்துறை அறிவியல் சார்ந்த யுக்திகளை வழங்கி அத்தியாவசிய சேவை புரிந்து வருகிறது.

சென்னையில் உள்ள பிரதான ஆய்வகத்தில் 15 பிரிவுகள் உள்ளன. இத்துறையின்கீழ் ஒன்பது வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் உள்ளன. புதிதாக உருவாக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டம் நீங்கலாக, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஆணையரகத்திலும் ஒரு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் உள்ளது.

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவுகளில் மரபணு ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

விஷ பாதிப்பால் சென்னை மாநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகளுக்கு, மருத்துவம் சார்ந்த நச்சியல் ஆய்வு தொடர்பான பணிகளை இத்துறை செய்து வருகிறது. மேலும், ஆதரவற்ற பெண்களுக்கு உதவும் ஒரு சமூகப் பணியாக "பெற்றோரைக் கண்டறியும்" ஆய்வையும் இத்துறை மேற்கொள்கிறது.

தமிழ்நாடு தடய அறிவியல் துறையில், மரபணுச் சோதனை ஆய்வகத்தை ஏற்படுத்தியதன்மூலம், மரபணு பகுப்பாய்வில் சேவை செய்கின்ற மாநிலமாக தமிழ்நாடு முதன்மை பெற்று விளங்குகிறது.

[2006 ஆகஸ்ட் 2

## அத்தியாயம் – 14

## புதிய முயற்சிகள்

சாதாரண மக்களின் நீண்ட நாள் தேவைக்கேற்ப, புதிதாக உருவாக்கப்பட்ட சென்னைப் பெருநகர ஆணையரகத்தின் பணியாளர் எண்ணிக்கையை அதிகரித்திடவும், வாகன வசதியை மேம்படுத்திடவும் மிகுந்த முக்கியத்துவம் அவசியமாகிறது. இந்த இலக்கை அடைய, காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகரக் காவல் ஆணையரகத்திற்கென கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.5.33 கோடி, இவ்வாண்டு ரூ. 18 கோடியாக உயர்த்தப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு, மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு பொது அமைதியைப் பராமரிக்க பல்வேறு புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சாதி, மத மோதல்களைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது குறித்து காவல் துறை அதிகாரிகளுக்கு விரிவான அறிவுரைகளை அரசு வழங்கி வருகிறது.

அரசு அறிவுறுத்தியபடி, அரிசிக் கடத்தல் தடுப்பு, மணல் திருட்டைத் தடுத்தல், கள்ளச்சாராயத்தையும், போலி அயல்நாட்டு மதுபானங்களையும் ஒழித்தல் போன்ற சிறப்பு நடவடிக்கைகளைக் காவல் துறையினர் மேற்கொண்டனர். திருட்டுத்தனமாக மணல் கொள்ளையடிப்பதைத் தடுக்க, அக்குற்றத்தில் ஈடுபடும் குற்றவாளிகளை குண்டர்கள் தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய அதிகாரிகளுக்கு வழியேற்படுத்திக் கொடுக்கும்விதமாக 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 14—ஐ, 2006 ஆம் ஆண்டின் அவசரச் சட்டம் எண் 2—ன்மூலம் அரசு திருத்தம் செய்துள்ளது.

புதிதாகப் பணியில் சேருவதற்கும், காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கும் விதிக்கப்பட்ட தடையை அரசு நீக்கியுள்ளது இதன்மூலம், காவல் துறையில் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் காலியாக உள்ள எண்ணற்ற பணியிடங்களை நிரப்புவதற்கு வழி ஏற்படுவதுடன், உயர்ந்துவரும் தேவைகளைக் காவல் துறை சந்திக்கும் வகையில் அதன் திறன் மேம்படுத்தப்படும்.

சாலையில் விபத்தின் அதிகரிப்பு, அதன் விளைவாக மனித உயிர் மற்றும் சொத்துகளுக்கு ஏற்படும் இழப்பு குறித்து அரசு பெரும் கவலையடைந்துள்ளது. நெடுஞ்சாலைகளில் உயர் வேகத்தில் செல்லும் வாகனங்களைக் கண்காணிக்க ராடார் துப்பாக்கிகள், குடிபோதையில் வாகனம் ஓட்டுவோரைக் கண்டுபிடிக்க சுவாசத்தைச் சோதனையிடும் கருவி போன்றவற்றை நெடுஞ்சாலை ரோந்துக் காவல் படையினருக்குக்



2006 ஆகஸ்ட் 29]

கொடுத்து, அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. வெளிப்படையாக, வேண்டுமென்றே போக்குவரத்து விதிகளை மீறி வாகனங்களை ஓட்டுபவர்களுக்கு வாகன உரிமங்களை ரத்து செய்தல் அல்லது செயல்படாமல் நிறுத்தி வைத்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதத்தில் போக்குவரத்து விதிகளைக் கண்டிப்புடன் செயல்படுத்த வேண்டுமென அனைத்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களுக்கும், மாநகரக் காவல் ஆணையர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலைப் பொறியியல், போக்குவரத்துக் கல்வி மற்றும் போக்குவரத்து விதிகளை நடைமுறைப்படுத்துவதை மேம்படுத்த பிற துறையினரோடு ஒருங்கிணைந்து செயல்பட காவல் துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சீரிய முறையில் வாகன சோதனைகளை நடத்தவும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், சென்னை மாநகரில் காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் கூடுதல் எண்ணிக்கையில் உட்சுற்று கண்காணிப்பு கேமராக்களையும், சோதனைச் சாவடிகளையும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

புலன் விசாரணை முறைகளை மேம்படுத்தவும், நவீனப்படுத்தவும் புதுமையான புலனாய்வு யுக்திகள் மற்றும் தேவையான சிறப்பு உபகரணங்கள்/கருவிகள் ஆகியவற்றைக் காவல் அதிகாரிகளுக்கு அரசு வழங்கும். மாநிலத் தடய அறிவியல் ஆய்வகத்தையும், வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களையும் மேம்படுத்த ரூபாய் 2.27 கோடி செலவில் சிறப்பு உபகரணங்கள்/கருவிகள் வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

### முடிவுரை

திறமையும் கடமை உணர்வும் மிகுந்த காவல் துறை, நல்லாட்சிக்கு இன்றியமையாத தேவையாகும். மாநிலம் முழுவதற்குமான விரைவான வளர்ச்சிக்குப் பொது அமைதி உறுதி செய்யப்படவேண்டும்; எனவே மாறிவரும் சமூகப் பொருளாதார சூழ்நிலையில், காவல் துறையின் பங்கு முக்கியத்துவம் பெறுகிறது. புதிதாக உருவாகும் அச்சுறுத்தல்களையும் சவால்களையும் சந்திக்க, குற்ற நிகழ்வுகளைத் தடுப்பதும், சட்டம் ஒழுங்கைப் பேணுவதும் மிக அவசியம் என்பதுடன், சாதாரண மனிதனின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்திடப் பின்பற்றப்படும் உத்தியிலும், அணுகுமுறையிலும் மாற்றம் தேவை. அத்தகைய சவால்களையும், அச்சுறுத்தல்களையும் சமாளிக்க நம்மை நாம் தயார்படுத்திக் கொள்ளவில்லையென்றால், எதிர்காலம் நமக்குக் கடுமையானதாக அமைந்துவிடும். இக்கொள்கைக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவற்றை நிறைவேற்ற, காவல் துறையினருக்கு வழிகாட்டிடவும், உதவி செய்திடவும் நமது அரசு உறுதி பூண்டுள்ளது. நாட்டுமக்கள் அனைவரது நலனுக்காகவும் வழிகாட்டுதலும், உதவிபுரிதலும் தொடர்ந்து நிகழ்ந்து வரும்.

2006 ஆகஸ்ட் 29]

## பின் இணைப்பு

# தமிழ்நாடு காவல் துறையின் நிர்வாக அமைப்பு – 2006

AS on 14 07 06



2006 ஆகஸ்ட் 29]

## இணைப்பு II

*(392 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 23 – உள் துறை – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### 1. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை – ஒரு கண்ணோட்டம்

தீயினால் ஏற்படக்கூடிய அபாயங்களும், தீ விபத்து நிகழ்வுகளும் குடிமக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் தொடர்ந்து அச்சுறுத்தலையும், பேராபத்தையும் உருவாக்கி வருகின்றன. தீ விபத்துகளினால் ஈடுசெய்ய முடியாத இழப்புகளும், சேதங்களும் சொல்ல முடியாத சோகங்களும் ஏற்படுகின்றன. தொடர்ந்து அதிகரித்து வருகிற தொழிற்சாலைகள், குறிப்பாக எண்ணெய், இரசாயன, மின் உற்பத்தித் தொழிற்சாலைகள், நகரமயமாகுதல், புதிய சந்தைகளின் வளர்ச்சி மற்றும் பல மாடிக் கட்டடங்கள் போன்றவற்றால் தீ விபத்து ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. இரசாயனத் தொழிற்சாலைகளினால் ஏற்படும் தீ விபத்து மற்றும் எரிவாயு போன்றவைகளாலும் பேராபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இத்தகையச் சூழ்நிலையில், தீத்தடுப்பு மட்டுமல்லாது, தீயின் அழிவிலிருந்து மனித உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் தேவையான பாதுகாப்பு அளிப்பதும் அவசியமானதாகும். தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, மாநிலத்தில் சிறந்த முறையில் செயல்பட்டுவருவது போற்றத்தக்கதாகும். தீத்தடுப்பு மற்றும் தீ அபாயங்களைக் கட்டுப்படுத்துவதிலும் இத்துறை பாராட்டத்தக்க வகையில் தொண்டாற்றி வந்துள்ளது.

தீயின் அழிவிலிருந்து மனித உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்றுவதுடன் இத்துறையின் பணி முடிவடைவதில்லை. இயற்கைச் சீற்றங்கள் மற்றும் இதர பேரழிவுகளான கட்டட இடிபாடுகள், வெடிபொருள் விபத்துகள், வெடிகுண்டு வெடித்தல் போன்ற சம்பவங்களின்போதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இத்துறை அவசர உதவி மற்றும் மீட்புப் பணிகளைச் செய்து வருகிறது. இவ்வாறு, தமிழக அரசின் தனித்திறன் பெற்ற நிறுவனமாக இத்துறை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி என இருவிதமான பணிகளைச் செயது வருகிறது. அதிவேகமாக நவீனமயமாகி வரும் சமுதாயத்தின் தேவையினை மனதில்கொண்டு, இத்துறை தனது பணித்திறனை நவீனப்படுத்துவதில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 29

## II. குறிக்கோள்கள்

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, "காக்கும் பணி எங்கள் பணி" என்ற குறிக்கோளுடன் மக்களுக்காகச் செயலாற்றும் ஒரு சேவைத் துறையாகும். இதன் பணிகள் பல்வகையானதும், முக்கியத்துவமானதுமாகும். சேவைப் பணிகளுடன், இத்துறை சட்டப்பூர்வமான ஆலோசனை மற்றும் வரையறுக்கும் பங்கினையும் வகிக்கிறது. பொதுமக்களுக்கிடையே தீத்தடுப்புப் பிரச்சாரத்தின் மூலமாகவும், விளம்பரம்மூலம் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்வாயிலாகவும், பள்ளிகள், கல்லூரிகளில் ஒத்திகைப் பயிற்சி ஆகியவற்றை நடத்துவதன்மூலமாகவும் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீ பாதுகாப்பு நடவடிக்கைக்களை உறுதிசெய்யும் பொருட்டு, உரிமம் வழங்க உத்தேசிக்கப்பட்ட வளாகங்கள், வர்த்தக மையங்களை ஆய்வு செய்வதற்காக பல்வேறு உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதன்மூலமாகவும் தீத்தடுப்பு நடவடிக்கையில் இத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. இது தவிர, இத்துறையின் பணிகள், தேர்தல், இனக்கலவரம், பொருட்காட்சிகள் மற்றும் விழாக் காலங்களில் காவல் துறையினருக்கு உதவும் வகையிலும் விரிவுபடுத்தப்படுகின்றன. இத்துறையில் உள்ள நோயாளர் ஊர்திகள், உடல் நலம் குன்றியோருக்கும், காயமடைந்தவர்களை உடனடி மருத்துவச் சிகிச்சை அளிக்க மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. முக்கியப் பிரமுகர்கள் வருகையின்போதும் பெரிய அளவில் பந்தல்கள் அமைக்கப்படுகின்ற முக்கியமான மாநாடுகள், கூட்டங்கள்/விழாக்களின்போதும் தீத்தடுப்புப் பணிகளுக்கான ஏற்பாடுகளை இத்துறை தயார் நிலையில் வைக்கிறது. தனியார் விழாக்களுக்கும், இத்துறை வரையறுக்கப்பட்ட கட்டண அடிப்படையில், தீத்தடுப்புப் பணிகளுக்கான ஏற்பாடுகளைத் தயார் நிலையில் மேற்கொள்கிறது.

தமிழக அரசினால், தலைமைச் செயலாளரது தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள உயர்நிலைப் பேரிடர் மேலாண்மை அதிகார அமைப்பில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர், குழுவின் ஓர் உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். மேலும், தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களை அமைத்து, அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் பொறுப்புகளை இந்த அதிகார அமைப்பு இத்துறைக்கு அளித்துள்ளது. எனவே, இவ்வாறு திட்டமிடுதல், தயார்படுத்திக்கொள்ளுதல்மூலம், பெரிய பேரழிவுகளைச் சமாளிப்பதில் இத்துறையின் திறமை மேலும் உயர்ந்துள்ளது. மாவட்டங்கள்தோறும் ஓர் உதவிக் கோட்ட அலுவலர் தலைமையின்கீழ் இத்துறைப் பணியாளர்களைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ள தேடுதல் மற்றும் மீட்புக் குழுவில், பொதுப் பணித்



2006 ஆகஸ்ட் 29]

துறை பொறியாளர்கள் மற்றும் மருத்துவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இந்தத் தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்கள் கூட்டாக மாதந்தோறும் ஒத்திகைப் பயிற்சிகளை நடத்தி வருகின்றன. அவ்வாறு ஒத்திகைப் பயிற்சிகள் பல்வேறு மாவட்டங்களிலுள்ள பெரிய பள்ளிகளில் நடத்த முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

## III. நிர்வாக அமைப்பு

அரசின் உள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை செயல்பட்டு வருகிறது. இந்தியக் காவல் பணியினைச் சேர்ந்த கூடுதல் காவல் துறை இயக்குநர் பதவித் தரத்தில் ஒருவர், இத்துறையின் இயக்குநர் பொறுப்பில் உள்ளார். ஒவ்வொரு மண்டலத்திற்கும் பொறுப்பாளராக ஒரு துணை இயக்குநர்வீதம் நான்கு துணை இயக்குநர்கள் இயக்குநருக்கு உதவி வருகின்றனர். இந்த மண்டலங்கள் 29 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும் ஒரு கோட்ட அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றது. கோயம்புத்தூர்–நீலகிரி மற்றும் இராமநாதபுரம்–சிவகங்கை கோட்ட அலுவலர்களைத் தவிர, மற்றவர்களுக்கு ஒரு வருவாய்க் கோட்டமே அதிகார வரம்பில் உள்ளது. ஒவ்வொரு கோட்டத்திலும் 4 முதல் 16 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையமும் ஒரு நிலைய அலுவலரின் பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. 12 கோட்டங்களில் தீத்தடுப்புப் பிரிவுகள் உள்ளன. மேலும், துணை இயக்குநர் பதவி தரத்தில் இயக்குநர் (பயிற்சி) ஒருவர் கட்டுப்பாட்டின்கீழ் தாம்பரத்தில் மாநிலப் பயிற்சி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையமானது துறையில் உள்ள பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதுடன் மற்றவர்களுக்கும் குறைவானக் கட்டணத்தில் பயிற்சிகள் அளித்து வருகிறது. சென்னையில் ஒரு மாநிலப் பணிமனை, இயக்குநர் (பயிற்சி) மேற்பார்வையின்கீழ் இயங்கி வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிர்வாக அமைப்பு குறித்த விளக்கப் படம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

## IV. ஒருங்கிணைந்த செயல்பாட்டு அணுகுமுறை ஏற்பாடுகள்

துறையின் அடிப்படைப் பிரிவு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமாகும். தமிழ்நாடு மாநிலம் 282 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களையும், இது தவிர ஒகேனக்கல்லில் ஒரு மீட்புப் பணி நிலையத்தினையும் கொண்டுள்ளது. 25 கி.மீ சுற்றளவுள்ள இடத்திற்குள் குறைந்தபட்சம் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம், 50,000-க்குக் குறையாத மக்கள் தொகை மற்றும் 50,000 ரூபாய் மதிப்பிற்குக் குறைவில்லாத சேதத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ள தீ விபத்து அபாயங்கள் ஆகிய அளவுகோல்களைப் பின்பற்றி, தேவைப்படும்

[2006 ஆகஸ்ட் 29

இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படுகிறது.

## V. உள் கட்டமைப்பு வசதிகள்

### (அ) மனித ஆற்றல்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல் மற்றும் நிருவாகப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 6643 ஆகும். கோட்ட அலுவலர்கள், தானியங்கிப் பொறியாளர் (மாநிலப் பட்டறை), நிலைய அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளை வகிப்போர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு நேரடி நியமன முறை மூலம் நியமிக்கப்படுகிறார்கள். தீயணைப்போர் பதவி வகிப்பவர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியம், தீயணைப்போர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 678 பேர் அடங்கிய பட்டியல் ஒன்றினை அளித்துள்ளது. அதில், காவல் துறையினால் நடத்தப்படும் பரிசோதனை மற்றும் மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பிறகு இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்ட 582 பேருக்குத் தீயணைப்பாளர் நியமனம் வழங்கப்பட்டு, 3–7–2006 முதல் தீயணைப்போர் பதவிக்கான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

### (ஆ) ஊர்திகள் மற்றும் சாதனங்கள்

இத்துறையானது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளில் சிறப்பாகச் செயல்படுவதற்காகப் பலவிதமான நவீன ஊர்திகளைக் கொண்டுள்ளது. இத்துறை 338 நீர்தாங்கி ஊர்திகளும், 80 நோயாளர் ஊர்திகளும், 13 சிறு நுரை தகர்வு ஊர்திகளும், 5 அவசரக் கால மீட்பு ஊர்திகளும், நீராற்றலால் இயங்கும் மேடை கொண்ட (இங்கிலாந்து–சைமன் ஸ்நார்கல்) ஊர்தி ஒன்றும், சுழல் மேஜை ஏணி ஊர்தி (இசுசூ மோரிடா ஜப்பான் தயாரிப்பு) ஒன்றும், 37 மீட்டர் மற்றும் 42 மீட்டர் உயரம் செல்லக்கூடிய நீராற்றலால் இயங்கும் மேடை கொண்ட மற்றும் சுழல் மேஜை ஏணி ஊர்திகள் 2 (பிராண்டோ ஸ்கைலிப்ட்–பின்லாந்து தயாரிப்பு), நீர்விடு குழாய் பதிக்கும் ஊர்தி ஒன்று, 53 தண்ணீர் லாரிகள், மீட்பு ஊர்தி ஒன்று, 2 நடமாடும் பழுது பார்க்கும் ஊர்திகள், 228 அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செலலக்கூடிய பம்புகள், 93 மிதவைப் பம்புகள் ஆகியவைகளைக்கொண்டு இயங்கி வருகிறது. இவை தவிர, கம்பியில்லாத் தந்திக் கருவி பொருத்தப்பட்ட சீருந்துகள், ஈப்புகள், பேருந்து, விசை மிதிவண்டிகள் ஆகிய 62 துணை ஊர்திகளும் துறையின் செயல்பாட்டில் உள்ளன.



2006 ஆகஸ்ட் 29]

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளைத் திறமையாக கையாளும்பொருட்டு, நவீன உபகரணங்களான, தூக்கும் பைகள், புகை வெளியேற்றும் கருவிகள், நச்சு வாயுக் கண்டுபிடிப்பான்கள், மின் ஆக்கிக மற்றும் மீட்புப் பணிக்கான அனைத்து உபகரணங்களையும் கொண்ட பெட்டி ஆகிய மீட்புக் கருவிகள் தேவையான நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. புயல் மற்றும் வெள்ளக் காலங்களில் உபயோகப்படுத்துவதற்காக இத்துறையில் 8 கண்ணாடி இழை விசை படகுகளும், 36 மிதவைப் படகுகளும் உள்ளன. அனல்வழி உருவ அறியும் நிழற்படக் கருவி பொருத்திய தலைக் கவசம்–1, கையில் எடுத்துச் செல்லக்கூடிய அனல்வழி உருவம் அறியும் நிழற்பட கருவிகள்–2, உயிர் உள்ளவர்கள் சிக்கியுள்ள இடங்களை கண்டுபிடிக்கும் கருவிகள்–2, பல்வகை வாயுக் கண்டுபிடிப்பான்கள்–2 தீ பாதிக்காத உடைகள்–81, இரசாயனப் பாதுகாப்பு உடைகள்–83 மற்றும் தீ பாதிக்காத 222 இணை கையுறைகள் ஆகியவையும் இத்துறையில் உள்ளன.

## VI. தகவல் தொடர்பு வசதிகள்

### (அ) தொலைபேசிகள் மற்றும் கம்பியில்லாத் தொலைத் தொடர்புக் கருவிகள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளைக் குறித்த நேரத்தில் மேற்கொள்வதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திலும் ஒரு தொலைபேசி இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. '101' என்ற இலவச தொலைபேசி இணைப்புகள் சில மாவட்டத் தலைநகரங்களில் உள்ளன. சென்னை மாநகர், திருவள்ளூர் மாவட்டம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் குறைந்த வேக உயர் அலைவரிசை கம்பியில்லாத் தொலைத் தொடர்பு வசதிகளைக்கொண்ட வாக்கிடாக்கிகள் மற்றும் மறு அஞ்சல் கருவிகள் இயங்கி வருகின்றன. மேலும், மாநிலத் தலைநகரமானது அனைத்து மாவட்டத் தலைநகரங்களுடனும் மற்றும் சில முக்கியப் பகுதிகளுடனும் உயர் அலைவரிசைக் கருவிகள்மூலம் இணைக்கப்பட்டுள்ளன மொத்தத்தில், 42 உயர்அலை வரிசைக் கருவிகள் பொருத்தப்பட்டுப் பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

### (ஆ) பதில் செயல்பாட்டு நேரம்

விபத்து அழைப்பு பெறப்பெற்ற கணத்திலிருந்து முதல் தீயணைப்பு ஊர்தி விபத்து நடந்த இடத்தைச் சென்று அடைய எடுத்துக்கொள்ளும் நேரமே பதில் செயல்பாடு நேரமாகும். தீ விபத்து அல்லது மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலைகளில் பதில் செயல்பாட்டு நேரத்தைக் குறைக்க இத்துறை தொடர்ந்து முயன்று வருகிறது.

[2006 ஆகஸ்ட் 29

சென்னை மாநகரில் இந்தப் பதில் செயல்பாட்டு நேரத்தினை 10 நிமிடங்களுக்கும் குறைவாகக்கொண்டு வருவதில் இத்துறை வெற்றி கண்டுள்ளது. இந்தப் பதில் செயல்பாடு நேரம் அனுசரிக்கப்படுவதினைக் கண்காணிக்கும் வகையில் தகவல்களை விரைந்து அளிப்பதற்கெனத் தனியே ஒரு தகவல் தொடர்பு மையமும், '101' மற்றும் '102' எண்கள்கொண்ட தொலைபேசி இணைப்புகள் மற்றும் வான் தந்தி கருவி இணைப்புகள் பொருத்திய ஒரு கட்டுப்பாட்டு அறையும் சென்னையில் இயங்கி வருகின்றன. சென்னை நகரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தகவல் தொடர்பினை உயர் அலைவரிசை வான் தந்திக் கருவிகள்கொண்டு மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், பதில் செயல்பாட்டு நேரத்தினைக் குறைக்கும் வகையில் தகவல் பரிமாற்றத்தை விரைந்து மேற்கொள்ள இயலும். பதில் செயல்பாட்டு நேரத்தை மாவட்டங்களில் மேலும் குறைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**(இ) துறை இணைய தளம்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கென இணைய தளம் ஒன்று தேசியத் தகவல் தொடர்பு மையத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் முகவரி—**http://www.tn.nic.in/fireservice** என்பதாகும். இது தீத்தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், விதிகள், உரிம நிபந்தனைகள் குறித்தும் பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து விவரங்களையும் கொண்டதாகவும், இதனைப் பயன்படுத்திக் கொள்பவர்களுக்கு ஒரு நல்ல நண்பனாகவும் செயல்பட்டு வருகிறது.

**VII. பயிற்சி வசதிகள்**

பொதுமக்களுக்குச் சேவை புரிந்திடும்வகையில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது தீயணைப்பு தொழில்நுட்பம் மற்றும் மீட்புப் பணி தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள நவீன மாற்றங்களுக்கு ஏற்ப, இதன் பணியாளர்களுக்குப் பணியில் சேரும்போது அளிக்கப்படும் பயிற்சிகளுடன் வெவ்வேறு காலக்கட்டங்களில் அளிக்கப்படும் நினைவுகூர் பயிற்சிகளும் அனைத்துப் பதவி நிலைகளில் உள்ளவர்களுக்கும் அளிக்கப்படுகின்றன. இதற்கென தாம்பரத்தில் நன்கு பராமரிக்கப்படும் மாநிலப் பயிற்சி மையம் ஒன்றில் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இது தவிர, தொழிற்சாலைகள், பொதுத் துறை நிறுவனங்கள், ஏனைய அரசு அமைப்புகள், ஏனைய மாநில, மத்திய அரசு அமைப்புகளிலிருந்து அனுப்பப்படும் பணியாளர்களுக்கும் இம்மாநிலப் பயிற்சி மையமானது, ஒரு குறைவான கட்டணத்தில் பயிற்சிகளை அளித்து வருகிறது. தாம்பரத்தில் அமைந்துள்ள மாநிலப் பயிற்சி மையமானது, பயிற்றுவிப்பிற்குத் தேவையான அவசரகால மீட்பு ஊர்தி, இழுத்துச் செல்லும் வசதி கொண்ட நீட்டிப்பு ஒளி தாங்கி சாதனம், கணினிகள், இரசாயனப் பாதுகாப்பு உடைகள், நீர் மூழ்கு உடைகள், மல்டி மீடியா புரொஜெக்டர்கள், நடமாடும் பழுதுபார்க்கும் ஊர்திகள் மற்றும் உடற்கட்டு பராமரிக்கும் கருவிகள் ஆகிய நவீன சாதனங்களைக் கொண்டுள்ளது. வெளிப் பயிற்சிக்கு அனைத்துப் பருவ காலங்களுக்கும் ஏற்ற பயிற்சி மைதானம், புகை உருவாக்கும் கூடம் மற்றும் 'வி நாச்' தொட்டிகள் ஆகியவற்றுடன், போதுமான இடவசதியுள்ள பயிற்சி வகுப்பறைகள், சிறந்த நூலகம், மாதிரி வடிவமைப்புகள், நல்ல உணவுக்கூடம் மற்றும் தங்குமிட வசதிகள் அனைத்தும், அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தினை மேலும் உயர்த்துகின்றன. இந்தப் பயிற்சி மையமானது, நாகபுரியில் உள்ள தேசிய தீயணைப்புக் கல்லூரிக்கு இணையாக உள்ளது. இந்திய அரசின் உள் துறை அமைச்சகம், புது தில்லி, நாகபுரியிலுள்ள தேசிய தீயணைப்புக் கல்லூரியினால் வழங்கப்பெறும் பயிற்சியினை வழங்கும் மண்டலப் பயிற்சி மையங்களில் ஒன்றாக, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாநிலப் பயிற்சி மையத்தினை நியமித்துள்ளது.



2006 ஆகஸ்ட் 29]

அனைத்துக் கோட்டங்களுக்கும் பயிற்சியினை மேம்படுத்திடவும் நிர்வாகத் திறமையினை மேம்படுத்திடவும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. பேரழிவு மேலாண்மையின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சிறப்புமிக்க தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களுக்கு மாநில அளவில் பயிற்சி அளிக்கும் நிறுவனமாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மாநிலப் பயிற்சி மையம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**VIII. பணிமனை**

துறை ஊர்திகள் மற்றும் சாதனங்களில் ஏற்படும் பழுதுகளைச் செப்பனிடுவதற்காக சென்னையில் இத்துறையின்கீழ் மாநிலப் பணிமனை ஒன்று இயங்கி வருகிறது. ஊர்திகளின் பழுது செப்பனிடும் தொகை ரூ.20,000/—வரை உள்ள இனங்களில் மதிப்பீடுகளைப் பரிசீலித்துத் தொழில்நுட்பச் சான்று வழங்க இப்பணிமனையின் தானியங்கிப் பொறியாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**IX. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல்**

மாநிலத்தில் தற்பொழுது 282 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் மற்றும் 1 மீட்புப் பணி நிலையம் ஒகேனக்கல்லில் செயல்பட்டு வருகிறது. இவற்றுள், 161 நிலையங்கள் சொந்தக் கட்டடங்களிலும் 30 நிலையங்கள் ஓரளவு நிரந்தரக் கட்டடங்களிலும், 91 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

[2006 ஆகஸ்ட் 29

## X. ஆற்றிய பணிகள்

### (அ) தீத்தடுப்பு

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் முதன்மைப் பணி தீத்தடுப்பு ஆகும். பொதுமக்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கென 12 கோட்டங்களில் தீத்தடுப்புக் குழுக்கள் உள்ளன. இக்குழுக்கள் தீத்தடுப்பு முறைகளை ஊரக மற்றும் நகரப் பகுதி மக்களிடம் எடுத்துரைப்பதால் தீயினால் ஏற்படும் ஆபத்துகள் பெருமளவு குறைக்கப்படுகின்றன. பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், கிராமங்கள் மற்றும் குடிசைப் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட குழுவினருக்குச் சொற்பொழிவுகளும் மற்றும் செயல்முறை விளக்கங்களும் தீத்தடுப்புப் பாதுகாப்பு முறைகள் குறித்து இக்குழுக்கள் அறியும் விதத்தில் அளிக்கப்படுகிறது. 2005 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் இக்குழுக்கள் 3,897 இடங்களில் தீத்தடுப்பு முறைகள் குறித்து பயிற்றுவித்துள்ளன. ஏழு நோயாளர் ஊர்திகள் திரைப்படக் கருவிகள் (புரொஜெக்டர்கள்), குறுந்தட்டு இயக்கி மற்றும் ஒலி பெருக்கிகள், மின் தொடர் பிணைப்புப் பலகை, மின் கம்பிகள் போன்ற பிற சாதனங்கள் பொருத்தி, நடமாடும் திரையரங்குகளாக மாற்றியமைக்கப்பட்டு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களுக்குத் தீ பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த பயன் படுத்தப்பட்டு வருகின்றன. பள்ளிகளில் போதுமான எண்ணிக்கையில் நுழைவாயில், வெளியேறும் வாயில் மற்றும் அவசரக் கால வெளியேறும் வாயில் ஆகியவை அமைந்திருப்பதை உறுதி செய்யும்பொருட்டு, தீ பாதுகாப்பு ஆய்வினைக் கட்டாய அடிப்படையில் நிலைய அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். சமுதாயத்தில் பாதுகாப்பு உணர்வினை ஏற்படுத்தும் வகையில் பொதுமக்கள் பங்கேற்பு ஆர்வத்தை ஒருமுகப்படுத்தும் நடவடிக்கையாக சென்னையில் பாதுகாப்பு தன்னார்வலர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். நாளடைவில் இத்திட்டமானது மாநிலத்தின் பிற இடங்களுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 வீரர்களைக் கொண்ட ஓர் அதிரடிப்படை உருவாக்கப்பட்டு அவர்களுக்குத் தீவிரப் பயிற்சி அனைத்துவிதத்திலும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பேரழிவுக் காலங்களில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளது.

### (ஆ) புறத் தீயணைப்பு நிலையங்கள்

ஒவ்வொரு ஆண்டும் கோடைக் காலத்தில் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளை விரைவாகச் சமாளிக்க புறத் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அதேபோன்று, உயர்



2006 ஆகஸ்ட் 29]

கொள்ளளவு கொண்ட செயற்கை இழை நீர்த்தொட்டிகள் அல்லது சுருங்கும் நீர்த்தொட்டிகள், எளிதில் தூக்கிச் செல்லத்தக்க நீர்விடு குழாய்களுடன்கூடிய பம்புகள், வான்தந்திக் கருவிகள் ஆகியவற்றுடன்கூடிய புறத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் இந்தக் கோடைக் காலத்தின்போது 19 இடங்களில் சென்னை மாநகரில் அமைக்கப்பட்டன. இவை தீ விபத்து வாய்ப்புள்ள பகுதிகளைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றன.

### (இ) திரையரங்குகள்/கட்டடங்களில் தீத்தடுப்பு

திரையரங்குகள், அதிக அளவு தீ விபத்துக்கு வாய்ப்புள்ள இடங்களாக உள்ளன. எனவே திரையரங்குகளில் தீப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. திரையரங்குகளில் தீப்பாதுகாப்பை உறுதி செய்யும்வகையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளை பல் துறைக் குழு ஒன்று ஆண்டுதோறும் ஆய்வு செய்து வருகிறது. இக்குழுவானது திரையரங்குகளை ஆய்வு செய்து உரிம நிபந்தனை மீறல்கள் ஏதுமிருப்பின், அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க அதனை உரிமம் வழங்கும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்கிறது. 2005 ஆம் ஆண்டில் 915 திரையரங்குகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் 2005 ஆம் ஆண்டில் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின்கீழ் கிட்டத்தட்ட 19,728 கட்டடங்கள் தீயணைப்புப் பணி அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

### (ஈ) தீ விபத்து குறித்த அழைப்புகள்

2005 ஆம் ஆண்டில் 14,819 தீ விபத்து அழைப்புகள் வரப்பெற்றன. அவ்விபத்துக்களில் 87 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. 234 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. உடைமைகளின் இழப்பு மதிப்பு ரூ.14.05 கோடியும், மீட்கப்பெற்ற உடைமைகளின் மதிப்பு ரூ. 94.20 கோடியும் ஆகும். சென்னை மாநகரில் தீ விபத்து நிகழ்வு இடங்களில் மாநகரக் குடிநீர் வாரியத்தினரால் தண்ணீர் லாரிகள்மூலம் மீண்டும் நீர் நிரப்பப்பட்டு தீயணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தீயணைப்புப் பணிகளைத் தங்கு தடையின்றி மேற்கொள்ளவும் இதன்மூலம் மிகப் பெரிய அளவில் உயிர்களையும் மற்றும் பொதுமக்களின் உடைமைகளையும் தீயின் அழிவிலிருந்து காப்பாற்றவும் உதவிகரமாக இருந்தது.

[2006 ஆகஸ்ட் 29

**(உ) மீட்பு அழைப்புகள்**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையால் பெறப்படும் மீட்பு அழைப்புகள் பெரும்பாலும் சாலை விபத்து, இரயில் விபத்துகளில் சிக்குண்டவர்கள், கிணறுகளில் தவறி விழுந்தவர்கள், நச்சுப்பூச்சிகளின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள், நச்சு வாயுக்களைச் சுவாசித்தவர்கள், கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்கள், இயற்கையான மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் பேரிடர்கள் போன்றவற்றில் சிக்குண்டவர்களைக் காப்பாற்றக்கோரும் அவசர அழைப்புகளாகவே உள்ளன.

**(ஊ) கட்டண அழைப்புகளும் நோயாளர் ஊர்தி அழைப்புகளும்**

80 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. சாத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ஒரு நோயாளர் ஊர்தி வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தீ விபத்து மற்றும் இதர விபத்துகளின்போது காயமடைந்த நபர்கள் உடனடி மருத்துவச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள். மேலும் நோயாளிகளும், காயமடைந்தோரும் அழைப்பின்பேரில் குறைந்த வாடகையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். 2005 ஆம் ஆண்டில், 1,421 அழைப்புகளை ஏற்று, நோயாளர் ஊர்திகள் செயல்பட்டுள்ளன. இவற்றுள் 1,060 அழைப்புகள் வாடகைக் கட்டண அழைப்புகளாகும். நோயாளர் ஊர்திகள்மூலம் வாடகைக் கட்டண அழைப்புகளை மேற்கொண்டவகையில் ரூ.2.24 இலட்சம் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

**(எ) பொது நலன் கருதி ஆயத்த நிலைப் பணி**

முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போதும், முக்கியக் கருத்தரங்குகள் மற்றும் பொதுக்கூட்டங்கள்/விழாக்களின்போதும் பெரிய பந்தல்கள் அமைக்கப்படும் தருணங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் வாகனங்கள் தயார் நிலையில் அங்கு நிறுத்தி வைக்கப்படுகின்றன. மேலும், பாதுகாப்புப் பணிக்காகவும், ஆயத்த நிலை நிறுத்தப் பணிக்காகவும் தீயணைப்பு மீட்புப் பணி ஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன. இது தவிர தனியார்களின் விழாக்களுக்கு அதற்கான கட்டண அடிப்படையில் தீயணைப்பு ஊர்திகள் ஆயத்த நிலைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2005 ஆம் ஆண்டில் ரூ.25.03 இலட்சம் ஆயத்த நிலைப் பணி கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

இத்துறை மேற்கொண்டுள்ள குறிப்பிடத்தக்க பாதுகாப்புப் பணியானது, நாகப்பட்டினத்தில் கொடிய சுனாமியின் பேரழிவினால்



2006 ஆகஸ்ட் 29]

பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கொட்டகைகள் அமைந்துள்ள இடங்களில் இத்துறை தொடர்ந்து பாதுகாப்புப் பணி மேற்கொண்டு வருவதாகும். நாகப்பட்டினம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் உள்ள 2 நீர்தாங்கி வண்டிகள் தவிர, 14 நீர்தாங்கி வண்டிகளுடன் நூற்றுக்கணக்கான தீயணைப்பு மீட்புப் படை வீரர்கள் தொடர்ந்து இன்றுவரை மேற்குறிப்பிடப்பட்ட தற்காலிகக் கொட்டகைகள் அமைந்துள்ள இடங்களில் பாதுகாப்புப் பணி மேற்கொண்டு வருகிறார்கள்.

**XI. ஊக்குவித்தலும் ஊக்கத் தொகைகளும்**

இத்துறைப் பணியாளர்களை மேலும் திறம்படப் பணிபுரிய ஊக்குவிக்கும் வகையிலும் விரும்பிய இலக்குகளையும் நோக்கங்களையும் அடைவதற்கு ஏதுவாகவும், பின்வரும் விருதுகள் வழங்கப்படுகின்றன, மற்றும் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:—

**(அ) விருதுகள்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் கடமை உணர்வுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும் ஆற்றிய பணியினை அங்கீகரிக்கும் வகையில், மாநில அரசால் பின்வரும் விருதுகள் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**1. தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்)**

இப்பதக்கம் பெற்றவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ரூ.2,000/— முதல் ரூ.5,000/— வரை ஒட்டுமொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவார்கள். 2005 ஆம் ஆண்டில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர்களுக்கு, 10 பாராட்டத்தக்க பணிகளுக்கான பதக்கங்களும் மற்றும் 8 வீரப் பதக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**2. தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (பொங்கல் தினத்தன்று வழங்கப்படுகிறது)**

இப்பதக்கம் பெறும் தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ளவர்களுக்கு மாதந்தோறும் ரூ.40/—ம், முன்னணித் தீயணைப்போர்/இயந்திரக் கம்மியர் ஓட்டுநர், தீயணைப்போர் ஓட்டுநர், தீயணைப்போர்—இயந்திரக் கம்மியர் ஆகியவர்களுக்கு மாதந்தோறும் ரூ.50/—ம் ரொக்கப்படியாக வழங்கப்படுகிறது. 2006 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம், 80 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 29

**3. சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சர் தீயணைப்புப் பணி பதக்கம்**

இந்தப் பதக்கமானது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் திறனறிந்து அவர்களை ஊக்குவிக்கும்பொருட்டும், அவர்கள் தங்கள் கடமையைத் திறமையுடனும், ஊக்கத்துடனும் ஆற்றிட உற்சாகம் அளிக்கும்வகையிலும் அளிக்கவும் ஏற்படுத்தப்பட்டது. நிலைய அலுவலர், முன்னணித் தீயணைப்பாளர், தீயணைப்பாளர் ஆகியோருக்கு, பதவிக்கு ஒன்று வீதம் ஆண்டுதோறும் மூன்று பதக்கங்கள் தீத்தொண்டு நாளான ஏப்ரல், 14 ஆம் நாள் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் ஒவ்வொன்றும் 8 கிராம் எடையில் 22 காரட் தங்கத்தில் செய்யப்பட்டதாகும். மேலும், பல்வேறு பதவித் தரத்திற்கு ஏற்ப இப்பதக்கத்துடன் சேர்த்து ஒட்டுமொத்த மானியத் தொகையும் வழங்கப்படுகிறது. அதாவது, நிலைய அலுவலருக்கு ரூ.3,000/-, முன்னணி தீயணைப்போருக்கு ரூ.2,500/–, தீயணைப்போருக்கு ரூ.2,000/- ஒட்டுமொத்த மானியமாக வழங்கப்படுகிறது. இப்பதக்கம் முதுநிலை அடிப்படையில் வழங்கப்படுவதில்லை, மாறாக, அவர்களுடைய பணியில் விஞ்சிய சாதனை படைத்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

4) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மாநில விருதுகள் தவிர, பணியாளர்களுக்கு மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட பின்வரும் விருதுகளும் வழங்கப்படுகின்றன:

(அ) சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்;

(ஆ) குடியரசு தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்;

(இ) வீர தீரச் செயல்களுக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்;

**(ஆ) நலத் திட்டங்கள்**

**1. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நல நிதி**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சேர்ந்த துயருற்ற பணியாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்கென 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை நல நிதி ஏற்படுத்தப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. உறுப்பினர்களின் நலனுக்காகப் பின்வருமாறு நிதியுதவி அளிக்கப்படுகிறது:–

(அ) தீயணைப்புப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போர் காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பின் ஊட்டச் சத்துள்ள உணவு வாங்கிக்கொள்ளவும்;

(ஆ) உறுப்பினர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விச் செலவுக்காகவும்;



2006 ஆகஸ்ட் 29]

(இ) மரணமுற்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கிடவும்;

(ஈ) உறுப்பினர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்கு செலவுக்காகவும்; நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஒவ்வாரு ஆண்டும் இந்நல நிதிக்கு ரூ. 4 இலட்சம் அரசு மானியமாக வழங்கி வருகிறது. இத்திட்டத்தில் தற்போது 5,014 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களிடமிருந்து சந்தாத் தொகையாக ரூ.6.51 இலட்சம் 2005-2006 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிவாரணத் தொகை ரூ. 7.99 இலட்சம் ஆகும்.

**2. குடும்ப நல நிதித் திட்டம்**

பணியிலிருக்கும்போது மாணமடையும் பணியாளர் குடும்பத்தினருக்கு குடும்ப நல நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக ரூ.1,00,000/– வீதம் அரசால் அளிக்கப்படுகிறது.

**3. கருணைத் தொகை**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கருணைத் தொகை விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| அ | பணியில் ஈடுபட்டிருக்கும்போது மரணமடையும் பணியாளர்களின் குடும்பத்திற்கு | ரூ.5,00,000/– |
| ஆ | பணியாற்றும்போது நிரந்தர ஊனம் ஏற்பட்டவர்களுக்கு | ரூ.1,00,000/– |
| இ | பணியாற்றும்போது கடுமையான காயமடைந்தவர்களுக்கு | ரூ. 20,000/– |
| ஈ | பணியாற்றும்போது சிறு காயம் அடைந்தவர்களுக்கு | ரூ. 10,000/– |

**4. குழுக் காப்பீட்டுத் திட்டம்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் இயக்குநர் முதல் தீயணைப்போர் வரையிலான பணியாளர்களில் (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) எவரேனும் பணியில் ஈடுபடும்போது உயிர் இழக்க நேரிட்டால் அவரது குடும்பத்திற்கு உதவுவதற்காக குழுக் காப்பீட்டுத் திட்டம் ஒன்று நடைமுறையில் உள்ளது. இறந்த பணியாளரின்

[2006 ஆகஸ்ட் 29

குடும்பத்திற்கு, இத்திட்டத்தின்கீழ் 1 இலட்சம் ரூபாய் நிவாரணம் அளிக்கப்படுகிறது.

**5. உணவுப் பொருட்களை மானிய விலையில் வழங்கும் திட்டம்**

உதவிக் கோட்ட அலுவலர் பதவி வரையிலான பணியாளர்களுக்கு அரிசி, கோதுமை, ரவை/மைதா, துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு மற்றும் இதர உணவுப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டொன்றுக்குச் சராசரியாக ரூ.55 இலட்சம் அரசு செலவிடுகிறது.

**6. குடியிருப்புகள் கட்டுதல்**

அவசரக் காலங்களில் உடனடியாக ஆட்களைத் திரட்டவும், செயல்திறனைக் கூட்டவும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களை அவர்களது பணியிடத்திற்கு அருகிலேயே குடியமர்த்துவது அவசியமாகும். இத்துறையில் வாடகையில்லா குடியிருப்புகள் பெறத் தகுதி பெற்ற மொத்தம் 6,323 களப் பணியாளர்கள் இருப்பினும், இத்துறையில் 973 குடியிருப்புகள் மட்டுமே உள்ளன. தற்சமயம் 40 இடங்களில் 504 குடியிருப்புகள் கட்டுவதற்கான நிலம் உள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் பணி முடுக்கிவிடப்படும்.

**7. பிற நலத் திட்டங்கள்**

விழுப்புரம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தினைச் சேர்ந்த தீஅ 1122 திரு. ஜி.பக்கிரி என்பவர், நாகப்பட்டினத்தில் அயல்பணியில் பணிபுரிந்து வருகையில், தேத்தி என்ற இடத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள தற்காலிக தங்குமிடத்தில் 10-7-2006 அன்று ஏற்பட்ட தீ விபத்தினை அணைக்கும் பணியில் தனது குழுவினருடன் ஈடுபட்டு தீயினை அணைத்து முடித்தவுடன் மயங்கி விழுந்துவிட்டார். அவ்விடத்திலிருந்து இவரை மருத்துவமனைக்கு எடுத்துச்சென்று அனுமதித்தபோது, அங்கு இவர் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்தச் செய்தியினைக் கேள்விப்பட்டவுடன், காலஞ்சென்ற தீயணைப்பாளர் திரு. ஜி. பக்கிரி என்பவரது மனைவி திருமதி பி.செல்லி என்பவருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ 1 இலட்சம் வழங்க அறிவிக்கப்பட்டதுடன், வாரிசுதாரர் ஒருவருக்குக் கருணை அடிப்படையில் முன்னுரிமை அளித்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணி நியமனம் வழங்கவும் அறிவித்ததன் அடிப்படையில், அவ்வாறே, அரசு ஆணை (நிலை) எண் 623, உள் (காவல்-17) துறை, நாள் 13-7-2006-ல் ஆணைகள் வெளியிடப்பட்டன. கருணை மிகுந்த இப்பரிவு, இத்துறையின் பணியாளர்களிடையே அவர்களது மனோதிடத்தினை என்றும் தொடர்ந்து காப்பதாக அமையும்.



2006 ஆகஸ்ட் 29]

**XII. புதிய முயற்சிகள்**

தீயணைப்போர் பதவியில் உள்ள காலியிடங்களை நிரப்பும் வகையில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு குழுமத்தினர்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 582 பேர், 3–7–2006 முதல் தீயணைப்போராக நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் நிரப்பப்படாமல் உள்ள 300 தீயணைப்போர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

2006–2007 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.250.97 இலட்சம் செலவில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன:–

(அ) தீயணைப்போர்களின் பயன்பாட்டிற்காக 57 மூச்சுக் கருவிகள் வாங்க ரூ. 37.05 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது.

(ஆ) பழைய நீர்தாங்கி வண்டிகளுக்குப் பதிலாக புதிய நீர்தாங்கி வண்டிகள் வழங்கும்பொருட்டு 10 நீர்தாங்கி வண்டிகள் வாங்க ரூ. 157 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது.

(இ) பழைய சீருந்து மற்றும் ஜீப்புகளுக்குப் பதிலீடு வழங்கும்பொருட்டு 4 சீருந்துகள் மற்றும் 4 ஜீப்புகள் வாங்க ரூ 32.72 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது.

(ஈ) விருதுநகரில் உள்ள கோட்ட அலுவலகத்திற்கு ரூ. 24.20 இலட்சம் செலவில் ஒரு கட்டடம் கட்டுதல்.

**முடிவுரை**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தொழில்நுட்பப் பயிற்சிபெற்ற மற்றும் தகுதியான பணியாளர்களைக் கொண்டு நன்கு நிறுவப்பட்ட ஒரு துறையாகும். இத்துறைப் பணியாளர்கள் தமிழக மக்களின் உயிர் மற்றும் உடைமைகளை, தீ, இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பேரழிவுகளிலிருந்து காப்பதற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர். இத்துறையின் அத்தியாவசியச் சேவையினை அதற்குரித்தான மற்றும் எதிர்பார்க்கும் வகையில் செயல்படுத்துவதற்கும், புதிய சவால்களைச் சமாளிப்பதற்கும் ஏற்றவகையில், இத்துறையின் செயல்பாட்டினைப் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றின்மூலம் மேலும் உயர்த்துவதற்கும் இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

2006 ஆகஸ்ட் 29]

## பின் இணைப்பு

### நிருவாக அமைப்பு

**இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**

**மாநில பயிற்சி மையம், தாம்பரம்**

- இயக்குநர் (பயிற்சி) துணை இயக்குநர் நிலையில்
  - துணை இயக்குநர் (பயிற்சி) கோட்ட அலுவலர் நிலையில்
  - பயிற்சி ஆலோசகர் கோட்ட அலுவலர் நிலையில்
  - கோட்ட அலுவலர், மாநிலப் பணிமனை
  - விரிவுரையாளர் உதவிக் கோட்ட அலுவலர் நிலையில்
    - நிலைய அலுவலர் (2)
    - நிலைய அலுவலர் (போக்குவரத்து)

**துணை இயக்குநர், வடமண்டலம், சென்னை**

கோட்ட அலுவலர் → உதவிக் கோட்ட அலுவலர் → நிலைய அலுவலர்

| | தீமீநி | தீதகு | மற்றவை |
|---|---|---|---|
| 1. வடசென்னை | 14 | 1 | 1* |
| 2. தென்சென்னை | 11 | 1 | 1* |
| 3. காஞ்சிபுரம் | 9 | 1 | — |
| 4. திருவள்ளூர் | 13 | — | — |
| 5. வடமண்டலம் | — | — | 2** |
| மொத்தம் | 47 | 3 | 4 |

**துணை இயக்குநர், மத்திய மண்டலம், திருச்சி**

கோட்ட அலுவலர் → உதவிக் கோட்ட அலுவலர் → நிலைய அலுவலர்

| | தீமீநி | தீதகு |
|---|---|---|
| 1. திருச்சி | 8 | 1 |
| 2. புதுக்கோட்டை | 12 | 1 |
| 3. தஞ்சாவூர் | 9 | — |
| 4. நாகப்பட்டினம் | 9 | — |
| 5. கடலூர் | 14 | — |
| 6. விழுப்புரம் | 11 | — |
| 7. கரூர் | 4 | — |
| 8. பெரம்பலூர் | 6 | — |
| 9. திருவாரூர் | 11 | — |
| மொத்தம் | 84 | 2 |

**துணை இயக்குநர், தென்மண்டலம், மதுரை**

கோட்ட அலுவலர் → உதவிக் கோட்ட அலுவலர் → நிலைய அலுவலர்

| | தீமீநி | தீதகு |
|---|---|---|
| 1. மதுரை | 9 | — |
| 2. திருநெல்வேலி | 13 | — |
| 3. கன்னியாகுமரி | 7 | — |
| 4. தூத்துக்குடி | 9 | — |
| 5. விருதுநகர் | 8 | 1 |
| 6. இராமநாதபுரம் —சிவகங்கை | 16 | — |
| 7. தேனி | 8 | — |
| மொத்தம் | 70 | 1 |

**துணை இயக்குநர், மேற்கு மண்டலம், கோயம்புத்தூர்**

கோட்ட அலுவலர் → உதவிக் கோட்ட அலுவலர் → நிலைய அலுவலர்

| | தீமீநி | தீதகு |
|---|---|---|
| 1. கோயம்புத்தூர் —நீலகிரி | 14 | 1 |
| 2. ஈரோடு | 10 | 1 |
| 3. சேலம் | 8 | 1 |
| 4. தர்மபுரி | 4+1@ | 1 |
| 5. கிருஷ்ணகிரி | 6 | — |
| 6. திண்டுக்கல் | 8 | 1 |
| 7. வேலூர் | 15 | 1 |
| 8. திருவண்ணாமலை | 12 | — |
| 9. நாமக்கல் | 4 | — |
| மொத்தம் | 81+1@ | 6 |

**துணை இயக்குநர், நிருவாகம்**

**மொத்த தீயணைப்பு மீட்புப் பணி நிலையங்களின் எண்ணிக்கை 282 +1 @**

**பிற நிறுவனங்கள்**

| | |
|---|---|
| மாநில பயிற்சி மையம் | 1 |
| மாநிலப் பணிமனை | 1 |
| இசைக் குழு | 1 |
| மீட்புப் பணி நிலையம் | 1 @ |

குறிப்பு— தீமீநி : தீயணைப்பு மீட்புப் பணி நிலையம்

தீதகு: தீத்தடுப்புக் குழு

மற்றவை: *புகைப்படப் பிரிவு

**தீக்கட்டுப்பாட்டறை மற்றும் வான்தந்தி பிரிவு

[2006 ஆகஸ்ட் 29

# இணைப்பு III

*(392 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 37- மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007

### முன்னுரை

பொது ஒழுங்கினை நிலைநிறுத்துவது மற்றும் மாநிலத்தின் வருவாயைப் பெருக்குவது என்ற இரு நோக்கங்களைக் கருத்தில்கொண்டு தமிழ்நாட்டின் மதுவிலக்குக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. அண்டை மாநிலங்கள் தங்களது மதுவிலக்குக் கொள்கையை முற்றிலும் தளர்த்திவிட்ட நிலையில், தமிழ்நாட்டில் மட்டும் முழு மதுவிலக்கு என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பது என்பது நடைமுறையில் சாத்தியம் இல்லை. எனவே, சில்லறை விற்பனைக் கடைகளின்மூலமாக, அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள் விற்பனை செய்வது என்ற கொள்கை தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகின்றது.

**2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பு, நிர்வாக மற்றும் செயல்பாடுகள்**

தலைமைச் செயலகத்தில் அரசுச் செயலாளரின் அலுவலகத் தலைமையின்கீழ் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை இயங்கி வருகிறது. அரசுச் செயலாளருக்கு உதவியாக ஓர் இணைச் செயலாளரும் மற்றும் ஐந்து சார்புச் செயலாளர்களும் மற்றும் இதர அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின்கீழ் பின்வரும் மூன்று பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன:

1. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்
2. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
3. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

(மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பு விவரங்கள் இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளன.)

## 3. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆணையாளர் இத்துறையின் தலைவர் ஆவார். தலைமையிடத்தில் இவருக்கு உதவியாக இரண்டு இணை ஆணையாளர்கள், நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் ஒருவர் (நிதித் துறையின் அரசு இணைச் செயலாளர் பதவி தரத்தில்) மற்றும் நான்கு உதவி ஆணையாளர்கள் ஆகியோர் உள்ளனர். இதைத் தவிர, ஓர் உதவி ஆணையாளர் தலைமையின்கீழ் உள்ள பறக்கும் படை திடீர் சோதனைகளைச் செய்து வருகிறது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர், மதுவிலக்குக் கொள்கைகளை உருவாக்குவதிலும் அவற்றைச் செயல்படுத்துவதிலும் அரசுக்கு உறுதுணையாகச் செயல்பட்டு வருகிறார். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளை அமல்படுத்துவதற்குப் பொறுப்பாளராக உள்ளார். வடிசாலைகள் அமைப்பதற்கும், சாராவி தயாரிப்பதற்குரிய உரிமைகள் மற்றும் உரிமங்களை அரசின் முன்அனுமதியுடன் வழங்கும் அதிகாரம் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதைப்போலவே, சட்ட விதிகளுக்குட்பட்டு அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகளுக்கான தொழிற்சாலைகளை அமைப்பதற்கும் உரிமைகள் மற்றும் உரிமங்களை அரசின் முன்அனுமதியுடன் வழங்குவதற்கும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. (மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் அலுவலக அமைப்பு விவரங்கள் இணைப்பு-2-ல் அளிக்கப்பட்டுள்ளன.)

### மாவட்ட ஆயத்தீர்வை நிர்வாக அமைப்பு

மாவட்ட அளவிலான ஆயத்தீர்வை நிர்வாகத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணிக்கிறார். மதுவிலக்குச் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் வழங்கப்பட்டுள்ள பல்வேறு சட்ட வழியான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் அவரிடம் உள்ளன. சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் துணை ஆட்சியர் நிலையில் ஓர் உதவி ஆணையர் (கலால்) மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றார். சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு துணை ஆணையர் (கலால்), மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவியாக பணியாற்றி வருகின்றார். வடிசாலைகள் மற்றும் அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள் மற்றும் பீர் தயாரிக்கும் நிறுவனங்களில் வருவாய்த் துறை அதிகாரிகள், வடிசாலை அலுவலர்களாகவும், கலால் மேற்பார்வை அலுவலர்களாகவும்,





நியமிக்கப்படுகிறார்கள். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டு மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படி, இரசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் ஆயத்தீர்வைக்குட்பட்ட தயாரிப்புக் கிடங்குகள் ஆகியவற்றில் சாராவியினை முறையாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும் மற்றும் ஆயத்தீர்வை விதிக்கப்பட வேண்டிய பொருள்களுக்கு ஆயத்தீர்வை விதித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காகவும், வருவாய்த் துறை அலுவலர்கள், வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் நிலையில் உள்ள கலால் மேற்பார்வை அலுவலர்கள், ஆயத்தீர்வைக்குட்பட்ட தயாரிப்பு அலுவலர்களாகப் பணிபுரிகின்றனர்.

துணை ஆட்சியர் பதவி நிலையில், வடிசாலைகளில் 13 வடிசாலை அலுவலர்களும், அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள் மற்றும் பீர் உற்பத்தி நிறுவனங்களில் 9 ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும், தற்போது பணிபுரிந்து வருகின்றனர். டி.எல். உரிமம் பெற்ற பிரிவுகளில் (இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்தும் இரசாயனத் தொழிற் பிரிவுகளில்) வட்டாட்சியர் பதவி நிலையில் 4 கலால் மேற்பார்வை அலுவலர்களும் மற்றும் துணை வட்டாட்சியர் பதவி நிலையில் 4 கலால் மேற்பார்வை அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். தெளிந்த சாராவியைப் பயன்படுத்தும் இரசாயனப் பிரிவு ஒன்றில் வட்டாட்சியர் பதவி நிலையில் ஒரு கலால் மேற்பார்வை அலுவலரும், ஆயத்தீர்வைக்குட்பட்ட தயாரிப்பு கிடங்குகளில் வட்டாட்சியர் நிலையில் 3 ஆயத்தீர்வைக்குட்பட்ட தயாரிப்பு அலுவலர்களும் உள்ளனர்.

### சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

தமிழகத்தில் உள்ள 38 சர்க்கரை ஆலைகள் (தனியார் பிரிவு 19, கூட்டுறவுப் பிரிவு 16, பொதுப் பிரிவு 3) சர்க்கரை தயாரிப்பின்போது துணைப்பொருளாக கருப்பஞ்சாற்றுக் கசண்டை உற்பத்தி செய்கின்றன. (சர்க்கரை ஆலைகள் மற்றும் அவற்றின் கொள்திறன் பற்றிய விபரங்கள் இணைப்பு-5-ல் அளிக்கப்பட்டுள்ளன.)

தெளிந்த சாராவி வடிப்பதற்கு, பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருள், கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆகும். கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டதைத் தொடர்ந்து சர்க்கரை ஆலைகள், உரிமத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளைப் பொறுத்து உரிமம் பெற்ற நுகர்வோருக்கு, கருப்பஞ்சாற்றுக் கசண்டினை விற்பனை செய்யலாம். கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு விலைக் கட்டுப்பாடு ஏதுமில்லை என்ற நிலையில், கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வைத்திருத்தல், விற்பனை

செய்தல், பயன்படுத்துதல், கொண்டு செல்லுதல் மற்றும் ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றினை 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டுக் கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்கீழ் உள்ள எம்.எல்.2, எம்.எல்.4, எம்.எல்.5, எம்.எல் 6 போன்ற உரிமங்கள் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கு வழங்கப்படும் அனுமதியின் மூலம் முறைப்படுத்தப்படுகின்றன.

**வடிசாலைகள் மற்றும் சாராவி**

அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள், வேதியியல் பொருள்கள் மற்றும் வார்னிஷ் தயாரிப்பதற்கு, சாராவி மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. கல்விக் கூடங்கள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் ஆராய்ச்சிக் கூடங்கள் ஆகியவற்றில் சாராவி சிறிய அளவில் பயன்படுத்தப்படுகின்றது. 12 தனியார் வடிசாலைகளும் 2 கூட்டுறவு வடிசாலைகளும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிலிருந்து சாராவியை உற்பத்தி செய்கின்றன. (வடிசாலைகளின் சாராவி உற்பத்தி விவரங்கள் இணைப்பு-6-ல் உள்ளன.)

2000 ஆம் ஆண்டின் தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகள் மற்றும் 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மற்றும் பிரஞ்சு பாலிஷ் (வார்னிஷ்) விதிகள் ஆகியவற்றின்படி, பல்வேறு உபயோகங்களுக்காக சாராவியின் பயன்பாடு ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்றது.

**எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டம்**

தமிழகத்தில் எத்தனால் கலந்த பெட்ரோலை எரிபொருளாக அறிமுகப்படுத்த மத்திய அரசு எடுத்த முடிவினைத் தொடர்ந்து, எத்தனால் (Anhydrous Alcohol) உற்பத்தி செய்து எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்க ஐந்து சாராவி வடிசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஒன்பது மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் எத்தனால் கலந்த பெட்ரோல் திட்டத்தினை விரிவுபடுத்த எண்ணெய் நிறுவனங்கள் தற்போது உத்தேசித்து உள்ளன. அதனடிப்படையில், அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் எத்தனால் உற்பத்தி செய்வதற்கான வசதியை ஏறபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள் மற்றும் பீர் வடிசாலைகள்**

இம்மாநிலத்தில், அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகளை உற்பத்தி செய்ய 1981 ஆம் ஆண்டு அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள் (தயாரிப்பு) விதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களும் மற்றும் 1983 ஆம் ஆண்டு பீர்





வடிப்பாலைகள் விதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட பீர் தயாரிக்கும் நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. அவை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள் மற்றும் பீர் வகைகளை, விநியோகம் செய்து வருகின்றன. இந்நிறுவனங்கள் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு அயல்நாட்டு மதுவகையின் 90 உள்நாட்டுத் தயாரிப்புகள் மற்றும் 13 பீர் வகைகளையும் விற்பனை செய்து வருகின்றன.

**மாநில ஆயத்தீர்வை வில்லைகள்**

இரண்டாம் முறையாகப் பயன்படுத்த முடியாத அதிக பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட பாலியஸ்டைரைடு ஹோலோகிராம் ஆயத்தீர்வை வில்லைகள் பயன்படுத்துவது நடைமுறையில் உள்ளதால், கள்ளத்தனமாக சாராவியினைக் கொண்டு செல்வது/போலி மது விற்பனை செய்வது ஆகியவை தடுக்கப்படுகின்றன. இதனால், மாநில அரசின் ஆயத்தீர்வை வருவாய் பாதுகாக்கப்படுகிறது. இந்த ஆயத்தீர்வை வில்லைகள் இயந்திரத்தின்மூலம் அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள் மற்றும் பீர் பாட்டில்களின் மீது ஒட்டப்படுகின்றன.

**ஆயத்தீர்வைத் துறையில் கணினிமயம்**

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம், ஈரோடு, காஞ்சிபுரம் ஆகிய எட்டு மாவட்டங்களில் உள்ள உதவி ஆணையர் (கலால்) அலுவலகங்களில் மட்டும் கணினி வசதி உள்ளது. எஞ்சிய மாவட்டங்களில் உள்ள உதவி ஆணையர் (கலால்) அலுவலகங்களிலும் மற்றும் தலைமை இடத்தில் உள்ள கணினி வசதிகளை மேம்படுத்தவும், நடப்பு நிதி ஆண்டிலேயே ரூ.13.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வழங்க அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

**4. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு**

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல், வைத்திருத்தல் மற்றும் போலி இரண்டாம் தர மதுவகைகளை விற்பனை செய்தல் மற்றும் மதுபானங்களை பிற மாநிலங்களிலிருந்து கடத்திவந்து விற்பனை செய்தல் போன்றவற்றைத் தடுக்க, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இந்த அமலாக்கப்பிரிவு, கூடுதல் காவல் துறை இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. அவருக்கு உதவியாக, காவல் கண்காணிப்பாளர் மத்திய புலனாய்வுப் பிரிவு மற்றும் சென்னை, சேலம், மதுரை ஆகிய இடங்களில் மூன்று காவல் கண்காணிப்பாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். மதுவிலக்கு மத்திய புலனாய்வுப் பிரிவு காவல கண்காணிப்பாளரின் தலைமையில் செயல்பட்டுவரும் மத்திய புலனாய்வுப் பிரிவில் 2 துணைக் காவல் கண்காணிப்பாளர்களும்,

6 ஆய்வாளர்களும், 8 உதவி ஆய்வாளர்களும், மற்றும் 1 தலைமைக் காவலரும் பணிபுரிகின்றனர். (மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் அமைப்பு விவரங்கள் இணைப்பு 3-ல் அளிக்கப்பட்டுள்ளன.)

மாநிலம் முழுவதும் காவல் ஆய்வாளரின் தலைமையின்கீழ் 94 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. மேலும், இந்தப் பணியை முனைப்புடன் கவனிக்கவும், மேற்பார்வையிடவும், 38 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களும், 38 துணைக் கண்காணிப்பாளர்களும் மாநிலம் முழுவதும் பணியாற்றி வருகின்றனர். மதுவிலக்கு அமலாக்கத்தில் பெரும் பொறுப்பு கொண்டுள்ள மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் துறை ஆணையர்கள் ஆகியோரது கட்டுப்பாட்டின்கீழ் மேற்கூறிய பிரிவுகள் மற்றும் அதிகாரிகள் செயல்பட்டு வருகின்றனர். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு ஏதுவாக மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மதுவிலக்குக் குற்றவாளிகள் மற்றும் கள்ளச் சாராயம், தெளிந்த சாராவி மற்றும் அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள் - போலி/தீர்வை செலுத்தப்படாதவற்றைக் கடத்துபவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கர்நாடகம், பாண்டிச்சேரி மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத/போலி அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள், கள்ளச் சாராயம், தெளிந்த சாராவி ஆகியன கடத்தப்படுவதை முழுவதும் தடுக்க தற்போது இயங்கிவரும் 21 சோதனைச் சாவடிகள் மற்றும் 6 நடமாடும் சோதனைக் குழுக்கள் முனைப்புடன் செயல்பட முடுக்கி விடப்பட்டுள்ளன. தேவைக்கேற்ப தற்காலிகச் சோதனைச் சாவடிகளும் அமைக்கப்படும்.

1982 ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டம் 14-ன்படி கடுமையான மதுவிலக்குக் குற்றங்களில் ஈடுபடும் மதுவிலக்குக் குற்றவாளிகள் தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்றனர். கள்ளச் சாராயம் கடத்துதலில் ஈடுபடும் வாகனங்கள் மற்றும் கடத்தி வரப்படும் கள்ளச்சாராயம் ஆகியவற்றைப் பறிமுதல் செய்ய முழுவேகத்துடன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. குறிப்பாக, ஏழை, எளிய மக்களின் குடும்பங்களைக் கடுமையாகப் பாதிக்கும் கள்ளச் சாராய நடமாட்டத்தினைத் தடுக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

கள்ளச் சாராயத்தைத் தடுப்பதில் பாராட்டத்தக்கவகையில் பணிபுரியும் காவல் துறை பணியாளர்களுக்கு உத்தமர் காந்தியின் பெயரில் காவலர் விருதுகள் வழங்குவது 1996 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.





இந்த விருதானது ஒவ்வொரு குடியரசு தினமன்றும் நடைபெறும் அரசு விழாவில் வழங்கப்பட்டு வருகின்றது. இது "காந்தியடிகள் காவலர் விருது" என்ற பெயரில் பதக்கத்துடன் வழங்கப்படும். இதுகாறும் வழங்கிவந்த ரொக்கப் பரிசான ரூ.10,000/-ஐ ரூ.20,000/- ஆக உயர்த்தி இந்த ஆண்டு முதல் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

தாமாக முன்வந்து திருந்தி வாழ விரும்பும் மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும்வகையில், மாவட்டந்தோறும் மறுவாழ்வுக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த குழுக்கள் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் இயங்கி வருகின்றன. முன்னர் கள்ளச் சாராயம் வடித்து விற்பனை செய்து வாழ்க்கை நடத்தியவர்கள் திருந்தி வாழ்வதற்காக, மாற்று வாழ்க்கை முறையினை ஏற்படுத்த நடப்பாண்டின் நிதி நிலை அறிக்கையில் ரூபாய் 2.50 கோடி மறுவாழ்வு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. போதை மருந்துகள் நுண்ணறிவுப் பிரிவு**

போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவை தொடர்பான செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தவும், போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவற்றின்மூலம் அல்லது அவற்றைக் கள்ளத்தனமாகக் கொண்டுசெல்வதின்மூலம் பெறப்பட்ட சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வகை செய்யவும், போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருள்கள் குறித்த பன்னாட்டு ஒப்பந்தங்களின் விதிகளைச் செயல்படுத்தவும், மத்திய அரசு 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தை (மத்திய சட்டம் 61/1985) இயற்றியது. இச்சட்டமும், இதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் 14-11-1985 முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. இச்சட்டத்தின்கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் ஒவ்வொன்றும் பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றங்களாகும்; மற்றும் ஜாமீனில் விடுதலை செய்ய முடியாதவை ஆகும்.

மத்திய அரசு, 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்களின் கள்ள வியாபாரத் தடுப்புச் சட்டம் (மத்தியச் சட்டம் 46/1988) என்ற மற்றொரு சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் 1-7-1988 முதற்கொண்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இதன்படி, போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்களைக் கள்ளத்தனமாக வியாபாரம் செய்யும் நபர்களைத் தடுப்புக் காவலில் வைக்கப்படும் நாளிலிருந்து குறைந்தது ஓர் ஆண்டுக் காலமும், அதிகபட்சமாக இரண்டாண்டுக் காலமும் காவலில் வைக்க, மாநில, மத்திய அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மாவட்டக் காவல் துறை, இரயில்வே காவல் துறை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு ஆகியவையும் மத்திய அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, சுங்கத் துறை கலெக்டர், வருவாய் உளவுத் தகவல் இயக்ககம் ஆகியவையும் போதைப் பொருள் தடுப்புச் சட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

குற்றப் புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் மாநில நுண்ணறிவுப் பிரிவிற்குக் காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக, காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவர், 12 காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 17 காவல் உதவி ஆய்வாளர்கள் ஏனைய பதவி நிலைகளில் உள்ள காவலர்கள் 126 பேர் உள்ளனர். இம்மாநிலத்தில், குற்றப் புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் நுண்ணறிவு, பிரிவுகள் 15 உள்ளன. அவை, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திண்டுக்கல், தேனி, விழுப்புரம், தூத்துக்குடி, வேலூர், இராமநாதபுரம், கோயம்புத்தூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு உள்ளன.

தமிழ்நாட்டில் போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்கள் பயன்படுத்தப்படுவதைக் கண்டறிந்து, அதனைத் தடுப்பதற்கு, தமிழ்நாடு குற்றப் புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் குற்றப் புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, 308 குற்றங்களைக் கண்டறிந்து, 321 நபர்களைக் கைது செய்து, 636.650 கி.கிராம் உலர்ந்த கஞ்சா, 700 கிராம் ஹெராயின், 400 கிராம் அம்ப்டாமைன்ஸ், 500 கிராம் மெத்தாகுலோன், 30 வயல்ஸ் டையஸிபாம், 50 வயல்ஸ் புப்ரிநார்பைன், 500 கிலோ பச்சை கஞ்சா ஆகியவற்றைக் கைப்பற்றியது. கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்ட போதைப் பொருள்களின் தோராயமான மொத்த மதிப்பு ரூ.131 கோடியாகும்.

## 6. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 23-05-1983 அன்று பதிவு செய்யப்பட்ட, மாநில அரசுக்கு முழுவதும் சொந்தமான, அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் பதிவு அலுவலகம் சென்னையில் உள்ளது. இது மாநிலம் முழுவதிலும் அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகள் மற்றும் பீர் வகைகளின் கொள்முதல் மற்றும் விற்பனையைச்





செய்துவருகிறது. அலுவல் வழித் தலைவர், மேலாண்மை இயக்குநர் மற்றும் மூன்று அலுவல் வழி இயக்குநர்கள் உள்ளடக்கிய குழுமத்தின்மூலம் இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் வழிநடத்தி நிர்வகிக்கப்படுகின்றன. (தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அமைப்பு விவரங்கள் இணைப்பு-4-ல் அளிக்கப்பட்டுள்ளன.) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) பிரிவுகள் 17-C(1-A)(a) மற்றும் 17-C(1-B)-ன்படி அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகளை, மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்ய தனித்த சிறப்புரிமையைப் பெற்றுள்ளது.

### மண்டலங்கள் மற்றும் கிடங்குகள்

மாவட்ட வருவாய் அலுவலர்கள் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் தலைமையின்கீழ் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஐந்து இடங்களில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மண்டல அலுவலகங்கள் செயல்படுகின்றன. மாநிலம் முழுவதும் 41 மதுபானக் கிடங்குகள் உள்ளன.

### மாவட்ட மேலாளர் / அலுவலகங்கள்

இம்மாநிலத்தில், மொத்தம் 33 மாவட்ட மேலாளர் அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 3 அலுவலகங்கள் சென்னையிலும், 2 அலுவலகங்கள் கோயம்புத்தூரிலும், ஏனைய 28 அலுவலகங்கள் மாவட்டத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில், அந்தந்த மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. முன்பு மாதம் ரூ.10,000/- என்ற தொகுப்பூதியத்தில், ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மாவட்ட மேலாளர் பணியிடங்களை வகித்து வந்தனர். மாவட்ட மேலாளருக்கான பொறுப்புகளைக் கருத்தில்கொண்டும், பணப் புழக்கத்தின் அளவு அதிகமாக உள்ளதாலும், தொகுப்பூதிய மாவட்ட மேலாளர்களுக்குப் பதிலாக அந்தப் பணியிடங்களில் தற்போது துணை ஆட்சியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### விநியோகம் மற்றும் விற்பனை

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகமானது, மதுபான வகைகளை அதன் கட்டுப்பாட்டில் உள்ள 41 மொத்த விற்பனைக் கிடங்குகள்மூலமாக விநியோகம் செய்கிறது. இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 6,697 சில்லறை விற்பனைக் கடைகள்மூலம் மதுபான வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றுள் 3,264 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் நகரப் பகுதிகளிலும், 3,433 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் ஊரகப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கடைகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 6,652 கடை

மேற்பார்வையாளர்களும், 17,326 விற்பனையாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். நகரப் பகுதிகளில் அமைந்துள்ள 2,963 கடைகளிலும், ஊரகப் பகுதிகளில் செயல்பட்டுவரும் 2,223 கடைகளிலும் மது அருந்தும் கூடங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இம்மது அருந்தும் கூடங்களில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 1,424 bar மேற்பார்வையாளர்களும், 4,766 மது பரிமாறுபவர்களும் பணியாற்றி வருகின்றனர்.

மதுபான பாட்டில்களின்மீது ஒட்டப்படும் மதுவகை வில்லைகளில் 'அதிகபட்ச விற்பனை விலை' குறிப்பிடப்பட வேண்டும் என்பதை அரசாங்கம், முதல்முறையாக 1-12-1997 அன்று கட்டாயமாக்கியது. நிர்ணயிக்கப்பட்ட விலையைவிடக் கூடுதலான விலைக்கு மதுபானங்கள் விற்கப்படுகின்றன என்ற முறையீடுகள் வருவதை முற்றிலுமாகத் தவிர்ப்பதற்கு இது உதவுகிறது.

## நவீன கிடங்குகள் கட்டுதல்

இம்மாநிலத்தில், அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புக் கிடங்குகள் மொத்தம் 41 உள்ளன. முன்னதாக இக்கிடங்குகள் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வந்தன. தற்போது 21 மதுபானக் கிடங்குகள் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் இயங்கி வருகின்றன. கிடங்குகளில் இடப் பற்றாக்குறை காரணமாக, வேகமாக விற்பனையாகக்கூடிய மதுபானங்களின் இருப்புக் குறைவைத் தவிர்க்கும்பொருட்டும், அதிகமான சரக்கு லாரிகள் காத்திருக்கும் நிலைமையைப் போக்கும்பொருட்டும், இன்னும் சில இடங்களில் மதுபானக் கிடங்குகளைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சரக்குகளைச் சுமை தூக்குபவர்கள் எளிதாகக் கையாளுவதற்காகப் பயன்மிகுந்த கருவிகள் மதுபானக் கிடங்குகளுக்கு வழங்கப்படும். இதனால் சரக்குகளைக் கையாளுவதில் கிடங்குகளில் ஏற்படும் இழப்பு குறைக்கப்படும். மேலும், மதுபான வகைகளை முறையான வகையில்/இடத்தில் வைப்பதன்மூலம் சரியான இருப்பு மேற்பார்வைக்கு வழிவகுக்கப்படும்.

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான சில்லறை விற்பனைக் கடைகளின் வணிக நடவடிக்கைகளை படிப்படியாக கணினிமயமாக்கும் கருத்துரு தீவிர பரிசீலனையில் உள்ளது. விற்பனை செய்யப்படும் மதுவகைகளுக்கான பற்றுச் சீட்டுகளைத் தானாகத் தயாரித்து அளிப்பதற்காக கணினிகள் மற்றும் சென்சார்கள் (Sensors) சில்லறை விற்பனைக் கடைகளில் அமைக்கப்படும். விற்பனையாகும் சரக்குகளுக்கான விற்பனைத் தொகை சம்பந்தப்பட்ட, சரியான கணக்குகள்



பராமரிக்கப்படுவதை உறுதி செய்துகொள்வதற்கும் மற்றும் நுகர்வோருக்கு விரைவாகச் சரக்குகளை வழங்குவதற்கும் இது உதவியாக இருக்கும். சில்லறை விற்பனைக் கடைகளின் விற்பனை பற்றிய புள்ளி விவரங்களை சம்பந்தப்பட்ட மதுபானக் கிடங்குகளுக்கு நாள்தோறும் அனுப்புவதற்கு கணினிமயமாக்குதல் பயனுள்ளதாக இருக்கும். இதனால் பணம் கையாடல் செய்வது தடுக்கப்படும். இந்த ஒருங்கிணைந்த கணினி இணைப்பால் கிடங்குகள் மற்றும் சில்லறை விற்பனைக் கடைகளில் உள்ள இருப்பு நிலவரங்களை உடனுக்குடன் கண்காணிக்க இயலும்.

## அரசு வருவாய்

அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகளின் விற்பனை, 2005-2006 ஆம் ஆண்டில் 229.22 இலட்சம் பெட்டிகளாகும். 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை முடிய மதுபான விற்பனையின்மூலம் கிடைத்த ஆயத்தீர்வை மற்றும் விற்பனை வரி வருவாய் ரூபாய் 2,293.09 கோடியாகும். சென்ற ஆண்டு இதே காலக்கட்டத்தில் ரூபாய் 1,961.90 கோடி வருவாய் மட்டுமே அரசுக்குக் கிடைத்தது. நடப்பு ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், அரசு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின்மூலமாக ஈட்டிய வருவாயானது, வரவு செலவு மதிப்பீட்டில், இவ்வினத்தின்கீழ், எதிர்பார்க்கப்படும் வருவாய் அளவு நிச்சயமாக எய்தப்படும் என்பதற்கு நம்பிக்கை ஊட்டக்கூடியதாக இருக்கின்றது.

## மணல் திருட்டுக் குற்றவாளிகளின் தடுப்புக் காவல்

மணல் குற்றவாளிகள் மணலை அனுமதியின்றி திருடுவதும், எடுத்துச் செல்வதும், சேமித்து வைப்பதும் பொது ஒழுங்கு பராமரிப்புக்கு ஊறுவிளைவிக்கும் செயலாகும். இவ்வாறு அனுமதியின்றி, மணலை ஒழுங்கற்ற முறையில் தோண்டி எடுத்து திருடுவதால், ஆற்றுப்படுகைகள் ஆழமாகுதல், ஆற்றின் கரைகள் அகலமாகுதல், கட்டட அமைப்புகள் சேதப்படுதல், நிலத்தடி நீர் அளவு பாதிப்படைதல், நிலத்தடி நீரின் தன்மை கெடுதல், கடலோரப் பகுதிகளில் கடல்நீர் உட்புகுதல், ஆற்றின் அமைப்பு சேதமடைதல், சுற்றுப்புறச் சூழல் சீர் கெடுதல் மற்றும் சுகாதாரக் கேடு விளைவித்தல், ஆகியவற்றிற்குக் காரணமாக அமைகிறது. இவ்வாறான மணல் திருடர்களால், சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பையும், கள்ளத்தனமாக மணல் தோண்டி எடுப்பவர்கள், கொண்டு செல்பவர்கள் மற்றும் மணலைச் சேமித்து வைக்கும் மணல் குற்றவாளிகளைப் பிடிக்க முற்படும்போது அரசு அலுவலர்கள் உயிருக்கு ஏற்படும் ஆபத்தையும் மற்றும் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பையும் கருத்தில்கொண்டு, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில்

குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலி (வீடியோ திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் சட்டத்தில் (1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் எண் 14) "மணல் குற்றவாளிகளை"யும் சேர்த்து, உரிய திருத்தம் செய்து, பொது ஒழுங்கினைப் பேணிக்காக்கும்வகையில், மணல் குற்றவாளிகளைத் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் காவலில் வைப்பதற்கு, இயலும்வகையில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், 5-7-2006 அன்று அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துள்ளார்கள். இந்த அவசரச் சட்டம் 5-7-2006 தேதியிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. நடைபெற்றுவரும் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே இந்த அவசரச் சட்டத்திற்கு மாற்றாக சட்டத் திருத்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 7. முடிவுரை

கள்ளச்சாராயம் வடித்தல், தவறான காரணங்களுக்குச் சாராவியைப் பயன்படுத்துதல், போலி/இரண்டாந்தரச் சாராவியினை எடுத்துச் செல்லுதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றை ஒழித்திடும் திறமையான ஆயத்தீர்வை நிர்வாகத்தினை அளிப்பதே இந்த அரசின் முக்கியமான நோக்கமாகும். இது, கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் உயிர் இழப்புகளைத் தடுக்க உதவியாக இருக்கும். மேலும், அரசின் ஆயத்தீர்வை வருவாயினை அதிகரிக்க ஏதுவாகவும் இருக்கும். தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் செயல்பாடுகள் நிர்வாகக் கோட்பாடுகளின்படி ஒருங்கிணைக்கப்பட்டு வெளிப்படையான கண்ணோட்டத்துடன் நெறிமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகளின் உற்பத்திக்குத் தேவையான கருப்பஞ்சாற்றுக் கசண்டின் உற்பத்தியில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்று விளங்குகிறது. மாநிலத்தின் அயல்நாட்டு மது வகையின் உள்நாட்டுத் தயாரிப்புகளின் விற்பனையின் அளவினையும், மாநிலம் முழுவதும் எத்தனால் உற்பத்திக்குத் தேவையான கருப்பஞ்சாற்றுக் கசண்டின் அளவையும், மேலும் கருப்பஞ்சாற்றுக் கசண்டின் பிற உபயோகங்களுக்கான தேவையின் அளவையும் கருத்திற்கொண்டு, சர்க்கரை ஆலைகள், வடிசாலைகள், எத்தனால் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் அயல்நாட்டு மதுவகையின் உள்நாட்டுத் தயாரிப்புகளை விநியோக ரீதியில் ஒருங்கிணைக்கும் ஒரு கொள்கையை உருவாக்குவது பயனளிக்கக்கூடியதாக இருக்கும். அரசாங்கத்தின் இந்தக் கொள்கையானது, கரும்பாலைகள், வடிசாலைகள், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மற்றும் கரும்பு உற்பத்தியாளர்கள் ஆகியோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து, அனைவருக்கும் மனநிறைவு அளிக்கும்வகையில் அமையும்.





## பின் இணைப்பு – 1

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பு வரைபடம்




| | |
|---|---|
| • ஆ.ம.ஆ | ஆணையர், மதுவிலக்கு–ஆயத்தீர்வை |
| • த.மா.வா.க | தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் |
| • ம.அ.பி | மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு |

[2006 ஆகஸ்ட் 29

## பின் இணைப்பு – 2

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் அலுவலக அமைப்பு வரைபடம்




- இ.ஆ. — இணை ஆணையர்
- நி.க.அ — நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்
- து.ஆ — துணை ஆணையர்
- ஆ.மே. — ஆயமேற்பார்வையாளர்
- உ.ஆ. — உதவி ஆணையர் (பறக்கும் படை)
- வ.அ. — வடிசாலை அலுவலர்
- ப.ப. — பறக்கும் படை
- உ.க.அ. — உதவி கணக்கு அலுவலர்



2006 ஆகஸ்ட் 29]

## பின் இணைப்பு – 3

### மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் அமைப்பு வரைபடம்




- கா.க. — காவல் கண்காணிப்பாளர்
- கா.க. (அ) — காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்)
- ம.பு.பி — மத்தியப் புலனாய்வுப் பிரிவு
- மா.கா.க. — மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்
- கூ.கா.க. — கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
- து.கா.க — துணை காவல் கண்காணிப்பாளர்
- ம.அ.பி. — மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு
- கூ.து.ஆ. — கூடுதல் துணை ஆணையர்
- உ.ஆ. — உதவி ஆணையர்

[2006 ஆகஸ்ட் 29

## பின் இணைப்பு — 4

## தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்






2006 ஆகஸ்ட் 29]

## பின் இணைப்பு — 5

### இம்மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் மற்றும் அவற்றின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் பற்றிய விவரங்கள்

| தொடர் எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| | **கூட்டுறவுத் துறை** | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 11,000 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | - |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 4 | தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 21,400 |
| 5 | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 17,000 |
| 7 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,500 |
| 8 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 17,620 |
| 9 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 21,000 |
| 10 | செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 16,000 |
| 11 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் அலகு-1 | 15,000 |
| 12 | எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 13 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் அலகு-2 | 12,000 |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 19,000 |
| 15 | என்.பி.கே.ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 18,000 |
| 16 | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| | மொத்தம் | **2,32,520** |

| | பொதுத் துறை | |
|---|---|---|
| 17 | மதுரா சுகர்ஸ் | 6,000,000 |
| 18 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை நிறுவனம் | 16,502,922 |
| 19 | பெரம்பலூர் சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000,000 |
| | மொத்தம் | 34,502,922 |
| | தனியார் துறை | |
| 20 | எஸ்.வி.சுகர் மில்ஸ் நிறுவனம் | 30,100,000 |
| 21 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம், தேனி | 12,000,000 |
| 22 | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் அலகு 1 | 12,600,000 |
| 23 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் அலகு 2 | 12,000,000 |
| 24 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 12,194,750 |
| 25 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 19,278,000 |
| 26 | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் நிறுவனம், துகிலி | 20,170,712 |
| 27 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம், நெல்லிக்குப்பம் | 18,600,000 |
| 28 | ராஜஸ்ரீ சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், முண்டியம்பாக்கம் | 16,500,000 |
| 29 | பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் | 13,755,000 |
| 30 | திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு 1 | 12,000,000 |
| 31 | திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு 2 | 17,333,725 |
| 32 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம், பெட்டவாய்த்தலை | 7,000,000 |
| 33 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம், புகலூர் | 16,273,000 |
| 34 | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 10,459,000 |
| 35 | தரணி சுகர்ஸ் அலகு 2 | 9,599,660 |
| 36 | அம்பிகா சுகர்ஸ் நிறுவனம், பெண்ணாடம் | 38,000,000 |
| 37 | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம், குறும்பூர் | 10,000,000 |
| 38 | அருணாசலம் சுகர்ஸ் | |
| | மொத்தம் | 2,87,863,847 |
| | ஒட்டு மொத்தம் | 5,54,886,769 |



## பின் இணைப்பு–6

### வடிசாலை – சாராவி உற்பத்தி

### (சாராவி ஆண்டு: டிசம்பர்–நவம்பர்)

| தொடர் எண் | வடிசாலையின் பெயர் | கருப்பஞ் சாற்றுக் கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட அளவு (மெட்ரிக் டன்களில்) | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிக்கும் திறனளவு (மெட்ரிக் டன்களில்) | 2004 2005 ஆம் சாராவி ஆண்டில் சாராவி உற்பத்தி அளவு (லிட்டர்கள் –கோடியில்) | டிசம்பர் 2005 முதல் ஜூன் 2006 வரை சாராவி உற்பத்தி அளவு (லிட்டர்கள் –கோடியில்) |
|---|---|---|---|---|---|
| | **தனியார் துறையிலுள்ள வடிசாலைகள்**<br>திருவாளர்கள் | | | | |
| 1. | திரு ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் | 82,500 | 24,725 | 1.46 | 0.90 |
| 2. | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 64,000 | 22,800 | 1.49 | 0.91 |
| 3. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், மரிகம்பள்ளி, அலகு 1 | 60,000 | 15,046 | 0.00 | 0.00 |
| 4. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், காடம்புலியூர், அலகு 2 | 1,10,000 | 28,167 | 0.70 | 0.93 |
| 5. | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 36,000 | 4,200 | 0.78 | 0.52 |
| 6. | இ.ஐ.டி.பாரி (இந்தியா) நிறுவனம் | 60,000 | 14,077 | 1.03 | 0.66 |
| 7. | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 60,000 | 13,752 | 0.96 | 0.74 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 12,480 | 0.61 | 0.62 |
| 9. | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் | 25,000 | 10,217 | 0.46 | 0.22 |
| 10 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 1,19,260 | 18,600 | 2.95 | 1.74 |
| 11 | திருச்சி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 1,06,000 | 26,500 | 0.44 | 0.70 |
| 12 | மோகன் புரூவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் நிறுவனம் | 45,000 | 11,642 | 0.79 | 0.51 |
| | கூட்டுறவுத் துறைகளிலுள்ள வடிசாலைகள் | | | | |
| 13 | சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 0.48 | 0.36 |
| 14 | அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 0.44 | 0.39 |
| | மொத்தம் | 9,17,760 | 2,26,206 | 12.59 | 9.20 |





**2005-2006 திருத்த மதிப்பீட்டின்படி மாநிலத்தின் மொத்த வருவாயும் மதுபானம் மூலம் அரசு வருவாயும் (ரூபாய் கோடியில்)**




**2006-2007 வரவு செலவு திட்டத்தின்படி மாநிலத்தின் மொத்த வருவாயும் மதுபானம் மூலம் அரசு வருவாயும் (ரூபாய் கோடியில்)**




227434